சௌமிய சாகரம்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூலகம்,
தஞ்சாவூர்.

சரசுவதி மகால் நூலக வெளியீட்டு எண். 385

சௌமிய சாகரம்

தமிழ் மருத்துவ நாவலர்

டாக்டர் எம். எஸ். இராஜன்

சிறப்புக் கேண்மைப் பதிப்பாசிரியர்

தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

சரசுவதி மகால் நூலகம்

தஞ்சாவூர்

2008 விலை ரூ. 180 - 00

நூற்பதிப்பு விளக்கக் குறிப்பு

நூற்பெயர்	: சௌமியசாகரம்
பதிப்பாசிரியர்	: தமிழ் மருத்துவ நாவலர் எம். எஸ். இராஜன்
வெளியிடுபவர்	: இயக்குநர், சரசுவதி மகால் நூலகம்
வெளியீட்டு எண்.	: 385
மொழி	: தமிழ்
பதிப்பு	: இரண்டாம் பதிப்பு
வெளியீட்டு நாள்	: மே, 2008
தாள்	: 14. 2 கி. கி. சேஷசாயி
நூல் அளவு	: 21 x 14 செ. மீ.
பக்கங்கள்	: 336
படிகள்	: 250
எழுத்து	: 12 புள்ளி
அச்சிட்டோர்	: சரசுவதி மகால் நூலக அச்சகம்
புத்தகக்கட்டு	: லேமினேசன் அட்டை
பொருள்	: மருத்துவம், யோகம்
விலை	: 180 - 00

வெளியீட்டாளர் முகவுரை

அரிய இலக்கியச் சுவடிகளையும் மருத்துவச் சுவடிகளையும் தன்னகத்தே கொண்ட சரசுவதி மகால் நூலகம், பன்மொழிச் சுவடிகளையும் தொடர்ந்து சிறப்பான முறையில் பதிப்பித்து வெளியிட்டு வருகின்றது.

அரிய நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டு வருகின்ற அரும்பணியின் தொடர்ச்சியாக **சௌமிய சாகரம் என்னும் தமிழ்நூல் ஓலைச் சுவடியிலிருந்து பதிப்பிக்கப்பெற்று தற்சமயம் இரண்டாம் பதிப்பாக வெளியிடப்படுகின்றது.**

இந்நூல், சரசுவதி மகால் நூலகத் தமிழ்த் துறையில் இடம் பெற்றுள்ள 319ஆம் எண்ணிட்ட ஓலைச் சுவடியை அடிப்படையாகக் கொண்டு பதிப்பிக்கப் பெற்றதாகும். செய்யுள் நடையில் அமைந்த இந்நூல், சித்தர்தம் படைப்பாகத் திகழ்கின்றது. அகத்தியர் பெயரால் வழங்கும் இந்நூல் மருத்துவச் செய்திகளையும், யோக ஞான வேதாந்த சாரங்களையும் தெளிவுற எடுத்துரைக்கின்றது.

இதில் மனிதன் தன்னை, தான் சுமக்கும் உடலின் பூதக்கட்டுகள் ஐம்பூதக்கட்டுக்குள் இருக்கும் எலும்பு, மஞ்சை, இரத்தம் இவைகளின் கூற்றுக்கும், இயக்கத்திற்கும் காரண பூதங்கள் எவை எவை என்பனவெல்லாம் விளக்கப்பட்டுள்ளது. ஆதாரங்கள் சரியை, கிரியை, யோக, ஞான வேதாந்த சாரங்களும் விவரிக்கப்பட்டுள்ளது. சித்தர்கள், ஞானிகள் மனித இனம் காண வேண்டிய அனுவபசாரங்கள் முதலியன கூறப்பட்டுள்ளன.

இந்நூல் வெளிவர நிதியுதவி நல்கிய நடுவண் அரசுக்கும், சரசுவதி மகால் நூலக நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு வகிக்கும்) திரு. சாமி. சிவஞானம் அவர்களுக்கும், இந்நூலை நன்முறையில் அச்சிட்ட நூலகப் பதிப்புத்துறைப் பணியாளர்களுக்கும், இந்நூல் வெளிவரத் துணை நின்ற ஏனையோருக்கும் என் இனிய பாராட்டுக்கள்.

சா. விஜயராஜ் குமார், இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
20-5-2008

பதிப்பாசிரியர் முன்னுரை

அகத்தியர் நூலுக்கு மாற்றில்லை என்பார்கள். மருத்துவ மேதைகள் அறியவேண்டிய அறிந்த அடிமுடி அத்தனையும் முழுமையுடையது இந்நூல். தத்துவத்தில் சிறந்த சித்த மருத்துவர்கள் - மற்றைய மொழி மருத்துவர்களும் கற்க வேண்டிய நூலாகவே உள்ள பெருநூலாகும். இதற்குச் சுகத்தை அளிக்கக் கூடிய பெருங்கடல் வாகடம் எனக்கூறுவது பொருந்துமெனவே நம்புகிறேன். கடலுக்கு உவமை கடலேதான் கூற வேண்டியுள்ளது. கடலில் எல்லாம் கிடைக்கின்றன. விலை மதிப்பற்ற முத்துக்கள், மணிகள், கற்கள் என்பதுபோல் இதில் மனிதன் தன்னை, தான் சுமக்கும் உடலின் பூதக்கட்டுகள் ஐம்பூதக்கட்டுக்குள் இருக்கும் எலும்பு, மஞ்சை, இரத்தம் இவைகளின் கூற்றுக்கும், இயக்கத்திற்கும் காரண பூதங்கள் எவை எவை என்பனவெல்லாம் விளக்கப்பட்டுள்ளன. ஆதாரங்கள் சரியை கிரியை யோக ஞான வேதாந்த சாரங்களும் விவரிக்கப் பட்டுள்ளன. சித்தர்கள், ஞானிகள் மனித இனம் காணவேண்டிய அனுபவசாரங்கள் அத்தனையும் உள்ளன. நல் அறிஞர்கள் அனுபவித்து உணர வேண்டுகிறேன். திங்களொடும் செம்பரிதி தன்னோடும் விண்ணோடும் - உடுக்களோடும் - மங்குல்கடல் இவற்றோடும் பிறந்த தமிழ் என்று, தமிழ் மொழியின் தொன்மை குறித்துக் கூறப்படினும், தமிழ்மொழிகண்ட போராட்டங்கள் பல. ஒரு பக்கம் ஆங்கில ஆட்சியும் ஒரு பக்கம் பிறமொழிக் கலப்பு நெருக்கடியும் நேர்ந்ததால் அதுகண்ட ஆயகலைகள் அறுபத்து நான்கினில் தமிழ்மக்களின் நாகரீகம் பண்பாடு உண்ணல், உடுத்தல் முதலியவைகளுக்கு எடுத்துகாட்டாக, முதன்மையான சித்தர் கலையெனும் சித்தமருத்துவம், மருத்துவ நூல்கள் மறைந்தும், மாற்றம் படைத்தும் உலவியுள்ளன.

இக்காலத்தில் இன்றும் முப்பு முடிக்கவும் கட்டுகள் கட்டுவதும் களங்குகள் காண்பதும் முற்றுப்பெறாது முயற்சியில்- ஆராய்ச்சியில் புறமருந்து - அகமருந்துகள் உள்ளன. இவை அனைத்தும் உள்ளன என்பதை ஆன்ற அறிஞர்கள் உணரக்கூடும்.

இந்நூலில் தத்துவத்தில் தோன்றி வகாரமெனும் லோகமாற்றம் முடிய காணக்கிடைக்கிறதால் உணரும் பெரும் மேதைகள் முடித்து மக்கள் இனத்திற்கு நன்மை செய்ய வேண்டுமென எல்லாம் வல்ல சித்தர் பரம்பொருளை வேண்டி நிற்கின்றேன்.

பட்டறிவும் பாண்டித்யமும் மிகுந்த சித்த மருத்துவமேதைகள் இந்நூலைக் குறை நீக்கிக் குணங்கொள்ள வேண்டுவதுடன், இந்நூலில் காணும் மருந்துகள் சித்தர் நூலா (தமிழ் நூலா) வடமொழியா என்பதை உங்களறிவிற்கே விட்டு விடுகிறேன்.

இந்நூலும் இதுபோன்ற பல அரிய நூல்களும் சிறப்பான முறையில் வெளிவரப் பெருந் தொண்டாற்றி வரும் பெருமதிப்பிற்குரிய தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் சரசுவதி மகால் நூலக இயக்குநர் உயர்திரு து. நா. இராமநாதன், இ. ஆ. ப., அவர்களுக்கும், நூல்கள் சிறப்பாக வெளிவர ஆவனசெய்து வருகின்ற நூலக நிருவாக அலுவலர் திரு. சி. பாலசுப்ரமணியன் அவர்களுக்கும், நூலகப் பதிப்பு மேலாளர் மற்றும் நூலகர் திரு. அ. பஞ்சநாதன் அவர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் உரித்தாக்குகின்றேன்.

நான் இடையில் பல மாதங்கள் நோயுற்ற காரணத்தால் நூலின் பதிப்புக்கு நூலகத் தமிழ்ப் பண்டிதர் நேயத் தம்பி புலவர் ய. மணிகண்டன் எம், ஏ., அவர்கள் மற்றும் நூலகத் தமிழ்ப் பண்டிதர் புலவர் திருமதி. ச. திலகம், பி, லிட்., இருவரும் துணைநின்று ஆற்றிய உழைப்புக்கு நன்றி கூறுகின்றேன்.

இந்நூலைச் செம்மையாக அச்சிட்டுத் தந்துள்ள மயிலாடுதுறை பாபுலர் அச்சகத்தாருக்கும் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இங்ஙனம்,

தமிழ் மருத்துவ நாவலர்,

தரங்கை **M. S. இராஜன்,**

23 - 3 - 98

பொருளடக்கம்

வரிசை எண்	தலைப்பு	பக்க எண்
1	சகல மகேஸ்வர - மகேஸ்வரி காப்பு	1
2	தத்துவ விபரம்	6
3	பஞ்சபூதம்	7
4	ஞானேந்திரியம்	7
5	கர்மேந்திரியம்	8
6	ஐம்புலன்	9
7	அந்தக்கரணம்	9
8	வித்தியாதத்துவம்	10
9	பிரிதிவியின் கூறு	11
10	அப்புவின் கூறு	11
11	தேயுவின் கூறு	12
12	வாய்வின் கூறு	12
13	ஆகாயத்தின் கூறு	12
14	நாடிப்பத்து	13
15	ஆறாதாரம்	16
16	மூலாதாரம்	16
17	சுவாதிஷ்டானம்	17
18	மணிபூரகம்	17
19	அனாகதம்	19
20	விசுத்தி	19
21	ஆக்கினை	20
22	இரவிமதி	21

வரிசை எண்	தலைப்பு	பக்க எண்
23	முச்சுடரின் தியானம்	22
24	சண்முகதியானம்	23
25	வயிரவ தியானம்	24
26	சரியை	25
27	கிரியை	26
28	யோகம்	27
29	யோகம்	28
30	ஞானம்	29
31	பிரமவயசு	40
32	விஷ்ணு வயசு	40
33	தெத்தம்	41
34	நாலுபதவி	42
35	நாட்டே	43
36	குழிச்சமாதியிருக்க வகை	43
37	கணபதி பூசை	48
38	பிரணவ மகிமை	49
39	முப்பூ சுண்ணம்	55
40	காரசெயநீர்	56
41	வசியம்	57
42	மோகனம்	58
43	தம்பனம்	59
44	உச்சாடனம்	60
45	ஆகிருசனம்	61

வரிசை எண்	தலைப்பு	பக்க எண்
46	வித்துவேஷணம்	62
47	மாறணம்	62
48	பேதனம்	63
49	அஷ்டகணபதி	64
50	அஷ்டாங்கயோகம்	65
51	ஆசனம்	67
52	பிராணாயாமம்	67
53	தாரணை	68
54	சமாதி	69
55	ஆசனவிதி	74
56	பத்திராசனம்	75
57	கோமுகாசனம்	75
58	பத்மாசனம்	76
59	மயூராசனம்	76
60	ரேசகபூரக கும்பகம்	76
61	பச்சம் எட்டுவகை தெரிசனை	77
62	பிரம்மதியானம்	81
63	விஷ்ணுதியானம்	81
64	ருத்திரதியானம்	81
65	மயேஸ்வரதியானம்	82
66	சதாசிவ தியானம்	82
67	மண்டலாதியானம்	82
68	சமாதி அஞ்சு	83

வரிசை எண்	தலைப்பு	பக்க எண்
69	தத்துவலய சமாதி அஞ்சு	83
70	சவ்விகற்ப சமாதி	83
71	நிருவிகற்ப சமாதி	84
72	சஞ்சார சமாதி	85
73	ஆரூடசமாதி	85
74	பஞ்சகர்த்தா படைப்பு மார்க்கம்	86
75	மயேஸ்வரி பூசை	91
76	முத்திரை விதி	96
77	பூசைக்கு முத்திரை விபரம்	96
78	முத்திரை செய்ய விபரம்	98
79	கரநியாசம்	100
80	முப்புச் சுண்ணம்	101
81	முப்புச் சுண்ண செயநீர்	102
82	நாட்டம்	106
83	பாதமறிய உப்பு	114
84	நவகும்ப சக்தி பூசை	116
85	அஞ்சுப்பு	123
86	தாராசயம்	124
87	தாம்பர பஸ்பம்	125
88	கெந்தி தைலம்	125
89	சாதிலிங்கக் கட்டு	127
90	கல்லுப்புக் கட்டு	128
91	கட்டு கெந்தகம்	128

வரிசை எண்	தலைப்பு	பக்க எண்
92	தங்க ஈயம்	129
93	நாகக்கட்டு	131
94	கட்டுக்களால் வீரத்துக் கவசம்	132
95	வீரச் செந்தூரம்	134
96	பாஷாணக் கட்டு	134
97	ரசக்கட்டு நாகசுத்தி	137
98	ரச செந்தூரம்	139
99	லிங்க செந்தூரம்	139
100	நவபற்றும்	146
101	அன்னபேதி செயநீர் வீரபற்பம்	148
102	வெடியுப்புச் செந்தூரம்	150
103	சிற்றண்டக் கட்டு	150
104	சகலமும் கட்டினம் உருக்கினம்	151
105	ரசகட்டு	152
106	நாகக்கட்டு	152
107	உப்புக்கட்டு	153
108	செந்தூரம்	153
109	சின்மயத்தின் கூறு	162
110	சின்மயம்	164
111	தசவித சரக்கு செந்தூரம்	165
112	அயத்தாம்பூரக்களங்கு	167
113	பஞ்சகன தீட்சை	171
114	வல்லாரைக் கற்பம்	173

வரிசை எண்	தலைப்பு	பக்க எண்
115	கடுக்காய் கற்பம்	174
116	ரெத்தினவைப்பு	174
117	முத்துவைப்பு	175
118	வயிரவைப்பு	177
119	கஸ்தூரி முறையும் பூனை பிடிக்கவும்	178
120	ஆசை	179
121	வசியம்	180
122	இல்லறம் மானங்கொள்ள	182
123	வெடியுப்பு செயநீர்	185
124	நாகக்கட்டு	186
125	மானத பூசை	188
126	செம்புசுத்தி	189
127	தொந்தக்களங்கு செந்தூரம்	193
128	செந்தூரபற்பம்	194
129	அயச்செந்தூரம்	195
130	குடவன்செம்பு	195
131	ஏழுவாரஞ் செபிக்கமணி விபரம்	196
132	வாரங்களிலஷ்ட சித்து	198
133	சத்து இறக்கும் வகை	204
134	காந்தசெந்தூரம்	205
135	காந்தசெந்தூரம்	206
136	பூணாகச்சத்து	207
137	நாகச்சத்து செந்தூரம்	207

வரிசை எண்	தலைப்பு	பக்க எண்
138	அயம் இயம்	208
139	அயச்செந்தூரம்	209
140	சாஸ்திரவிபரம்	210
141	மவுனயோகத்துக்குக்கைபாகம்	210
142	சிவயோக கைபாகம்	211
143	சிவயோக நேர்மை	212
144	யோகத்துக்காசனம்	214
145	மவுனயோககைபாகம்	216
146	கைபாகம்	217
147	மவுனாதியின்னூல் மகிமை	218
148	கைபாககேடு	219
149	கைபாகம்	219
150	அமிர்தம் பாய்தல்	220
151	ரேசகம்	222
152	சர்வயோகம்	223
153	சுவாசநிலை	224
154	மணிநாவுன்னி	225
155	மூலசுத்தி	226
156	கபம்	227
157	சாரக்கட்டு	229
158	வங்க சுண்ணம் சேர்மானம்	230
159	வீரக்கட்டு	230
160	தொந்தநாகக்கட்டு	231

வரிசை எண்	தலைப்பு	பக்க எண்
161	அமுர்தம்	232
162	தாம்பரசுத்தி	234
163	குடவன்செம்பு	235
164	லிங்கக்கட்டு	236
165	அண்டபிண்டம்	237
166	அயம்வன்னி மதியில் தாளகக்கட்டு	238
167	மவுனயோகம்	240
168	அடையோகந்தள்ள	244
169	மந்திராதியோகம்	245
170	மவுனாதியோகம்	245
171	மந்திராதியோகம்	245
172	துருசு சுண்ணம்	248
173	வழலையால் துருசுநீறு	249
174	துருசுசெயநீர்	250
175	சிவயோக வழி	251
176	குடவன் செம்பு	251
177	மவுனயோக அமுர்தம்	252
178	வாசியேற்ற	254
179	துருசு சத்துரு மித்துரு	255
180	சார சத்துரு மித்துரு	256
181	வெடியுப்பு சத்துரு மித்துரு	256
182	கல்லுப்புச் சத்துரு	257

வரிசை எண்	தலைப்பு	பக்க எண்
183	காரசத்துரு மித்துரு	258
184	தங்க சத்துரு மித்துரு	258
185	ரச சத்துரு மித்துரு	259
186	இரும்பு சத்துரு மித்துரு	260
187	நாக சத்துரு மித்துரு	260
188	காரீய சத்துரு மித்துரு	261
189	மேக ராசாங்க கிருதம்	262
190	பூரண லேகியம்	263
191	சிவயோகத்தால் பிறவி மாற்று	265
192	அயக்களங்கு	267
193	அய செம்புக் களங்கு	268
194	அரிதாரக் கட்டு	268
195	ரச கெந்தத்தால் ரசிதவேதை	269
196	சோடச தெரிசனம்	270
197	ஆத்ம தரிசனம்	272
198	அறிவு தெரிசனம்	272
199	மவுன தெரிசனம்	273
200	மனமடங்கு தெரிசனம்	274
201	உள்ளந் தெரிசனம்	274
202	மவுனரச பானம்	275
203	நாசிநுனி தெரிசனம்	276
204	புருவமய்யத் தெரிசனம்	276

வரிசை எண்	தலைப்பு	பக்க எண்
205	பரமவெளி தெரிசனம்	277
206	வெளி தெரிசனம்	278
207	விந்து தெரிசனம்	278
208	நாக தெரிசனம்	279
209	சொரூப தெரிசனம்	279
210	தெரிசனை பதினாறுக்கு மவுனம்	280
211	யோக மாத்திரை பார்க்குந்திதி	282
212	முப்புவுக்கும் மவுனத்துக்கும்	283
213	சிவகலை	285
214	சாபம்	290
215	குமரிதிரிகடுகு லேகியம்	293
216	கபசத்துரு கரிசாலை நெய்	295
217	நாகரச மெழுகு	303
218	மவுன மந்திரம்	304
219	மவுனத்தால் நாலுமடங்க	307
220	சுளி பார்க்கும் வகை	310
221	விபரமாய் நூல் பார்க்க	313

அகத்திய மாமுனிவரருளிய

சௌமிய சாகரம்

சுகமெனும் பெருங்கடல் வாகடம்

சகலமஹேஸ்வர - மகேஸ்வரி காப்பு

சோதியெனு மனோன்மணியைத் தியானம் செய்து
சுகமான சவுமியசாகரத்தைப் பாட
ஆதியெனும் கணபதியும் வல்லபையும் காப்பு
அரிகரன்பி ரமனொடு சரசுபதியுங் காப்பு
நீதியெனு மாலுடனே லெட்சுமியுங் காப்பு
நின்றிலங்கு ருத்திரனும் ருத்திரியுங் காப்பு
ஓதியதோர் மயேஸ்பரனும் மயேஸ்பரியுங் காப்பு
உறுதியுள்ள சதாசிவனும் மனோண்மனியுங்காப்பே.1

மணியான ரவிமதியும் சுளினை காப்பு
மகத்தான வேதியர்தம் பாதங் காப்பு
கணியான நால்வேத மந்தங் காப்பு
கருணைவளர் சாத்திரமோ றாறுங் காப்பு
அணியான ஆதாரச் சுரூபி காப்பு
அருளான அமுர்தரசம் போதங் காப்பு
தணியான பராபரமாஞ் சோதி காப்பு
சதானந்த பூரணமாந் தாயே காப்பு. 2

தாயான சிவயோக மூலங் காப்பு
சகலகலைக்கி யானமணி பீடங் காப்பு
மாயாத வாசிமல ரத்தங் காப்பு
மணிமந்திர நாதவொலி கீதங் காப்பு
சாயாத அடிமுடியும் நடுவுங் காப்பு
சவுமியமாந் தேவாதி ரிஷிகள் காப்பு
தேயாத வாசியடா மவுனங் காப்பு
சிவசிவா அகாரமுடன் உகாரங் காப்பே. 3

உகாரமென்ற நாதமடா சத்தி காப்பு
உறுதியுள்ள அகாரமடா சிவமே காப்பு
சிகாரமென்ற சோதியடா வாலை காப்பு
சிவசிவா மகாரமென்ற மவுனங் காப்பு
வகாரமென்ற பஞ்சகண தீட்சை காப்பு
மகத்தான சடாட்சர மாதி காப்பு
நகாரமுத லகாரவரை ஓங்கா ரத்தில்
நாடிநின்ற சூட்சமடா ஆதி காப்பே. 4

ஆதிகுரு வேதியன்தன் பாதம் போற்றி
அருள்பெருகும் கேசரியைப் பூசை பண்ணி
சோதியெனும் சவுமியசா கரத்தைப் பாட
சுயஞ்சோதி ஆதியந்தச் சுளினை காப்பு
நீதியுட னாதார மூலந் தன்னில்
நின்றிலங்கும் பிராணநா யகனார் காப்பு
ஓதியதோர் கலைமகளும் பூமகளும் காப்பு
உண்மையுள்ள செயமகளும் காப்புத் தானே. 5

தானான சதுரகிரி மூலங் கண்டு
தவமான சிவயோகத் திருக்கும்போது
கோனான வேதியனை அடுத்து நானும்
குறியான பூரணத்துக் குறுதி கேட்டேன்
வானான ...... அகத்தி யுண்மை யுள்ள
... ... புயனே வாவென் றேதான்
தேரான வட மொழியைக் கையி லீந்து
திருவான பூரணத்தின் திறஞ்சொன் னாரே! 6

திறஞ்சொன்ன மதியைநான் பெற்றுக்கொண்டு
திருவான வடமொழியை நன்றாய்ப் பார்த்துப்
பரஞ்சேர்ந்த பூரணமா அறிவி லேறிப்
பாடினேன் சவுமியசா கரத்தை மைந்தா
சரமான வாசியினா லுறுதி கொண்டு
சந்தோஷ மாகஈ ராறு மத்து
வரஞ்சேர்ந் தமுதாகப் பாடி நானும்
மகத்தான வேதியர்முன் வைத்தேன் தானே! 7

தானான சவுமியசா கரத்தை நன்றாய்த்
தன்மையுட னாதியந்தந் தயவாய்ப் பார்த்துத்
தேனான வடமொழியைத் தமிழ்தான் செய்த
திறமான கருவிபரம் நன்றாய்ச் சொன்னீர்
ஊனான வுலகமதில் உலகோர் கண்டால்
உறுதியுள்ள கயிலாச மிடங்கொள் ளாது
மானாகேள் சவுமியசா கரத்தை நீயும்
மார்க்கமுடன் அந்திசந்தி மகிழ்ந்து பாரே! 8

பாரென்று சொன்னமொழி பெற்றுக்கொண்டு
பதிவான பொதிகைதனில் வாச மாகி
நேரென்று சவுமியசா கரத்தைப் பார்த்து
நிட்செயமா யஷ்டாங்க யோகம் பார்க்கில்
சாரென்ற பொதிகைமலைச் சார்ப்புக் குள்ளே
சார்ந்திருந்த தபோதனர்கள் தானே கூடி
மேரென்ற பொதிகைதனில் முடிமேற் சென்று
மெய்ஞ்ஞான சற்குருவென் றடிப ணிந்தார். 9

பணிந்துமிக அனைவோரு மிருகை கூப்பிப்
பரமகுரு தேசிகரே பதிவாய் நீருங்
கனிந்துமிக அந்தமதில் கருணை யாகக்
கடாட்சித்த சவுமியசா கரத்தை நாங்கள்
அணிந்துஅதின் தெரிசினங்கள் பார்ப்போ மென்று
அனைவோரும் ஒருமனதாய் அருள்கண் கூர்ந்து
துணிந்துவந்தோம் உம்முடைய பாதந் தன்னில்
சுகமாக அடுமைபடைத் தாமெளன் றோரே! 10

ஆமென்று சொன்னதபோ தனரைப் பார்த்து
ஆதிதொடுத் தந்தவரை சொன்ன நூலில்
காலென்ற கருக்குருவும் நன்றாய்ச் சொன்னோங்
காசியினில் தபோதனர்கள் கருணை யாக
வானென்று சொன்னதொரு தீட்சை மாற்கம்
வளமான சவுக்கார வழலைப் போக்கு
மேலென்ற கற்பத்தி லாறு லட்சம்
விண்டதிலே சூட்சமதாய்க் கண்டேன் பாரே! 11

கண்டதொரு சகலகலை வேதந் தன்னைக்
கடைந்தெடுத்துச் சவுமியசா கரமாய் பாடிக்
கொண்டதொரு சூத்திரத்தைக் குருமுன் வைத்தேன்
குருவான என்குருவும் நன்றாய்ப் பார்த்து
விண்டதொரு சாகரந்தான் ஆதி சூட்சம்
விளம்பரிது விளம்பரிது பதனம் பண்ணி
அண்டகே சரமதிலே தவஞ்செய் யென்று
ஆதிகுரு வேதியருஞ் சொன்னார் பாரே. 12

பாரப்பா சொல்மொழிகள் தவறொண் ணாது
பக்தியுடன் உத்தரவு பெற்று வந்தால்
நேரப்பா சவுமியமாம் பொருளுஞ் சொல்லி
நிசமான சாகரத்தி னிலையுங் கூட்டித்
தேரப்பா வென்று கா யாதி யீந்து
செய்ததொரு சாத்திரமும் மீவோ மென்று
மேரப்பா மேருநடு முடியிற் சென்றேன்
விளம்பியதோர் சவுமியத்தைச் சொல்லக் கேளே! 13

சொல்லக்கேள் சவுமியசா கரத்தை மைந்தா
சுகமான வடமொழியைத் தமிழ்தான் செய்தான்
அல்லக்கே ளாதிமுதற் சொன்ன நூலின்
அரிதரிது இதன்பெருமை யாருங் காணார்
விள்ளக்கேள் வேதமென்ற சவுமி யத்தை
மேலான பதவியென்று பதனம் பண்ணி
உள்ளத்திற் றன்னொளிவு போலே நீயும்
உண்மையுடன் அந்திசந்தி பூசை பண்ணே! 14

பண்ணப்பா சவுமியத்தைப் பூசை பண்ணு
பரிவான சாகரத்தை யறிந்து கொள்ளு
என்னப்பா வென்றுதன்னை மறந்தி டாதே
யிகபரசா தனமுழுது மிதிலே சித்தி
முன்னப்பா சொன்னசாத்தி ரங்க ளெல்லாம்
முன்பின்னாய்ப் பூரணத்திற் சொக்கிச் சொன்னேன்
கண்ணப்பா கண்மணிபோ லிந்த நூல்தான்
கயிலாச மேருகிரித் தீப மாச்சே! 15

ஆச்சப்பா மேருகிரித் தீபம் போலே
அரகரா சவுமியசா கரந்தான் பாரு
நீச்சப்பா கடினமென்று மலைக்க வேண்டாம்
நேர்மையுள்ள முறைபாகம் கைபா கங்கள்
பாச்சப்பா வெகுதெளிவு யின்னூல் போலே
பகராது முன்சொன்ன சாஸ்த்தி ரங்கள்
காச்சப்பா யின்னூலைப் பதனம் பண்ணிக்
கனகமுடன் சிவயோகங் கருவாய்ப் பாரே. 16

கருவான சவுமியசா கரத்தில் மைந்தா
கருணையுடன் விளம்புகின்ற கருவைக் கேளு
திருவான ஆதார மூல சூட்சம்
செப்பரிய தத்துவத்தின் வழியின் நேர்மை
உருவான தீட்சையொடு பூசை மார்க்கம்
உத்தமனே அஷ்டகர்மம் சித்து மூலம்
குருவான கற்பமொடு மந்திர சித்து
கூர்மையுள்ள ஞானமொடு யோகந் தானே. 17

தானான யோகமொடு சமாதி தீட்சை
சக்தியொடு சிவதீட்சை வரில தீட்சை
தேனான பூரணமா மவுன தீட்சை
திருவான பஞ்சகண தீட்சை யோடு
ஊனான முப்பூவாம் வழலை தீட்சை
உண்மையுள்ள விநோதவகை மோடி யங்கம்
பூணான மையுடனே திலத வாடை
போக்கான மறைப்புடனே யின்னங் கேளே! 18

இன்னங்கேள் சொல்லுகிறேன் செயநீர்ப் போக்கு
இன்பமுள்ள திராவகத்தின் கருவின் மார்க்கம்
சொன்னதொரு கட்டினங்க ளுருக்கி னங்கள்
சுகமான பற்பமொடு செந்தூ ரங்கள்
வர்ணமுள்ள களங்குடனே மெழுகு மார்க்கம்
மகத்தான தூபமொடு தீப வேதை
யெண்ணவெண்ணாத் தயிலமொடு லேகி யங்கள்
ஏகாந்த மானதொரு லகிரிப் போக்கே. 19

போக்கான வைப்புமுறைப் பாசா ணங்கள்
புகழான வுபசாரங்கள் கார சாரம்
வாக்கான குளிகைமுதல் கௌன சித்து
மகத்தான லோகமார ணங்க ளோடு
தாக்கான சத்துருமித் துருக்கள் தானும்
தன்மையுடன் குருமுடிக்கும் பாதந் தானும்
தூக்கமான புடபாகம் எரிப்பின் பாகம்
துடியான கைபாகங் கணக்குத் தானே. 20

கணக்கான சேர்மானஞ் சரக்கு வைப்புக்
கருணையுள்ள ரெத்தினங்கள் வைப்பு மார்க்கம்
புணக்கான சல்லியங்கள் ஒட் டி யங்கள்
பொல்லாத ஏவல்பில்லி சூனி யங்கள்
தணக்கான லகிரியிலே அனந்த மார்க்கம்
தன்மையுள்ள தெரிசனங்கள் கோடா கோடி
யிணக்கமுள்ள சக்கரங்கள் ஆவே ஷங்கள்
ஏகாந்த அஞ்சனங்கள் கோடி பாரே. 21

கோடியென்றால் வெகுகோடி தொழில்க ளெல்லாம்
குறித்தபடி சவுமியமாய்க் காண லாகும்
நாடிமனங் கொண்டுநீ கண்டா யானால்
நந்திபிர காசமது நயனந் தன்னில்
ஆடிநின்ற திருநடனங் காண லாகும்
அப்பனே சக்கரங்கள் தோன்றும் பாரு
சூடிநின்ற சக்கரத்தி னங்கந் தன்னைச்
சொல்லுகிறேன் வேதமுறை சூட்சந் தானே. 22

தத்துவ விபரம்

தானென்ற சூட்சமடா விந்து நாதம்
தனையறிந்த நாதமுடன் விந்து சேர்ந்து
கோனென்ற குருவருளால் அங்கு ரித்துக்
கொண்டெழுந்த மடபதியை யென்ன சொல்வேன்
ஊனென்ற மடபதிக்கு உறுதி யான
உண்மையுள்ள அக்கினியும் வாய்வுங் கூடித்
தேனென்ற சீவாத்மா பரமாத் மாவாய்ச்
சென்றிருந்த ஆதார மாறார்பாரே! 23

பாரப்பா ஆதாரம் ஆறா தாரம்
பதிவான ஆதார மடத்துக் குள்ளே
நேரப்பா அக்கினிதான் சீவாத் மாவாய்
நிறைந்துநின்ற வாய்வதுதான் பரமாத் மாவாய்ப்
பேரப்பா பெருகிநின்ற கடத்தி னுள்ளே
பிலமாக நின்றுவிளை யாட்டா யாடிக்
காரப்பா ஆகாசம் சாட்சி யாகக்
கருணையுடன் நின்றதடா கருவாய் தானே! 24

பஞ்சபூதம்

காணப்பா தத்துவத்தின் விபரந் தன்னைக்
கருணையுடன் சொல்லுகிறேன் கனிவாய்க் கேளு
பேணப்பா பூதமைந்துஞ் சொல்லக் கேளு
பிரதிவியு மப்புடனே தேய்வு மாகப்
பூணப்பா வாய்வுடனே ஆகா சந்தான்
பொருந்திநின்ற பூதமடா அஞ்சு மாச்சு
தோணப்பா மனக்கண்ணால் நன்றாய்ப் பார்த்துத்
துலங்கிநின்ற பூதமதை நன்றாய்க் காரே! 25

ஞானேந்திரியம்

காரப்பா அஞ்சுபஞ்ச பூதந் தன்னைக்
கண்குவித்து மனக்கண்ணால் நன்றாய்ப் பார்த்தால்
மேரப்பா மேருகிரி காண லாகு
மேறான சதுரகிரி விலாசந் தோணும்
ஆரப்பா உனக்கீடு சொல்லப் போறேன்
அரகரா பூதவகை யறிந்து கொண்டால்
நேரப்பா நின்றகயி லாசந் தோன்றும்
நிசமான ஞானேந் திரியங் கேளே! 26

கேளப்பா ஞானேந் திரியந் தன்னைக்
கிருபையுடன் சொல்லுகிறேன், நன்றாய்க் கேளு
சூளப்பா சுரோத்திரந்தான் காது மாகும்
தொக்குவென்று சொன்னதுதான் தேக மாகும்
வாளப்பா சட்சுவென்றால் நேத்திர மாகும்
மகத்தான சிங்குவென்றால் வாய்தா னாகும்
காலப்பா ஆக்கிறாண மூக்கு மூக்குக்
கருணையுள்ள ஞானஇந் திரிய மஞ்சே! 27

அஞ்சான ஞானயிந் திரியந் தன்னை
அருளான மனக்கண்ணால் நன்றாய்ப் பார்த்து
நெஞ்சார அஞ்சுநிலை பார்த்து மைந்தா
நிலையான குருபதியில் நின்றா யானால்
மிஞ்சாமல் வாசியது தானே தானாய்
மெய்ஞ்ஞான தீபமதில் விளங்கும் பாரு
தஞ்சமென்று அஞ்சுநிலை நன்றாய்ப் பார்த்துச்
சங்கையுடன் கர்மயிந் திரியங் கேளே. 28

கர்மேந்திரியம்

கேளப்பா வாக்குடனே பாதம் வாணி
கிருபையுடன் பாயுரு உபத்த மஞ்சு
சூளப்பா கர்மயிந்தி ரியங்க ளாகும்
சுகமாகத் தானறிந்து சுத்த மானால்
பாளப்பா போகாது ஞான மார்க்கம்
பக்தியுடன் அஞ்சேயும் நீகண்டு தேர்ந்தால்
கோளப்பா ஒன்றுமில்லை வாசி யேறும்
குறிப்பாக ஐம்புலனைக் கூர்ந்து பாரே. 29

ஐம்புலன்

பார்க்கவே ஐம்புலனை நன்றாய்க் கேளு
பரிவான சத்தமொடு பரிச ரூபம்
ஏற்கவே ரசமுடனே கெந்த மஞ்சு
மின்பமுள்ள ஐம்புலனென் றிதற்கும் பேரு
சேர்க்கையுடன் ஐம்புலனைக் கண்டு மைந்தா
தேர்ந்துமன தறிவாலே தெளிந்து கொண்டால்
மார்க்கமுள்ள சித்தனென்று யார்க்குந் தோணும்
மைந்தனே ஐம்புலனை வகுத்துக் கேளே! 30

காணவே ஐம்புலனை வகுத்துப் பார்த்துக்
கருவான ஆதார மூலத் தேகி
தோணவே வாசியுட நிலையைக் கண்டு
சுத்தமுடன் வாசி தன்னி லேறிப்
பூணவே அண்டவரை தன்னில் சென்று
புத்தியுடன் சுத்தமதாய் நின்றா யானால்
ஊணவேகா ரணமந்தக் கரணம் நாலும்
உண்மையுடன் சொல்லுகிறே னுகந்து கேளே! 31

அந்தக் கரணம்

கேளடா புலத்தியமா ரிஷியே அய்யா
கிருபையுள்ள கரணமந்தக் கரணந் தன்னைக்
கோளடா இல்லாத மனந்தா னென்று
கூர்மையுட னின்றிலங்கும் புத்தி யொன்று
கேளடா ஆங்கார மான தொன்று
சிவசிவா சுத்தமென்ற சித்த மொன்று
ஆளடா கரணமென்ற கரணம் நான்கு
மப்பனே யறிந்துகொண்டு ஆற்றும் பாரே! 32

பாரப்பா ஆத்துமதத் துவந்தா னய்யா
பதிவாக இருபத்து நாலுஞ் சொன்னேன்
நேரப்பா தானிருந்து ஆத்தும லாபம்
நிலையறிந்து பெற்றதினால் வாசி யேறும்
காரப்பா வாசிநிலை கருவைக் கண்டு
கருவாக ஆத்துமதத்து வத்தைப் பார்த்தால்
ஆரப்பா வுனக்குநிக ருண்டோ பிள்ளாய்
அப்பனே வித்தியாதத் துவத்தைக் கேளே 33

வித்தியாதத்துவம்

கேளப்பா வித்தியாதத் துவத்தை சொல்லுவேன்
கேள்வியென்ன காலமென்றும் நியதி யென்றும்
சூளப்பா கலையொன்றும் வித்தை யென்றுஞ்
சுகமான ராகமென்றும் புருட னென்றும்
நாளப்பா மாய்கையென்றும் யேழு மாச்சு
நன்மையுடன் வித்தியாதத் துவத்தைப் பார்த்து
ஆளப்பா ஆகாச தேகந் தன்னை
அறிந்துகொண்டு சிவதத்துவ மதனைக் கேளே! 34

கேளடா சிவதத்துவம் தன்னை மைந்தா
கிருபையுள்ள புலத்தியனே நன்றாய்க் கேளு
ஆளடா சுத்தவித்தை ஈஸ்வரமு மைந்தா
அப்பனேசா தக்கியமும் சக்திசிவ மஞ்சும்
சூளடா சிவதத்துவங்கள் என்னும் பேரு
சுகமான தத்துவங்கள் முப்பத் தாறும்
வாளடா வுடல்கருவி யென்றும் பேரு
மைந்தனே தானறிந்து தன்னைப் பாரே. 35

பாரப்பா தன்னைத் தானே கண்டு
　　　　பக்தியுட னுடல்கருவி மூலம் பார்த்து
நேரப்பா நின்றதினால் தத்துவத்தின் பெருமை
　　　　நீதியுடன் தோணுமடா நினைவாய்ப் பாரு
சாரப்பா மனைசார சார்ந்து பார்த்தால்
　　　　சார்வான தத்துவங்கள் தோணும் பாரு
ஆரப்பா அறிவார்கள் பூத மைந்தில்
　　　　அதில்பிறந்த தத்துவந்தான் தொண்ணூற் றாறே. 36

பிரிதிவியின் கூறு

ஆறான பூதமைந்தின் உருவைக் கேளு
　　　　அப்பனே பிருதிவியின் கூத்தான் மைந்தா
நேருமயி ருடனே எலும்பு சர்மம்
　　　　நிலையான நரம்புசதை அஞ்சு மாச்சு
பேறான பிருதிவியின் கூறு சொன்னேன்
　　　　பெருமையுடன் தானறிந்து பிலமாய் நின்று
கூறான அப்புடைய கூறு பாரு
　　　　குணமான புலத்தியனே குவிந்து பாரே. 37

அப்புவின் கூறு

பாரப்பா அப்பினுட கூறு சொல்வேன்
　　　　பரிவான நீருடனே உதிர மப்பா
காரப்பா சுக்கிலமும் மூளை மச்சை
　　　　கருவாக யஞ்சுமடா அப்பின் கூறு
தேரப்பா அப்பினுட கூறு தன்னைத்
　　　　தெளிந்துமன தொன்றாகத் தன்னைப் பாரு
சாரப்பா தன்னுணர்வாய்ப் பார்த்தால் மைந்தா
　　　　தனதான தேய்வினுட கூறு கேளே 38

தேயுவின் கூறு

கேளப்பா தேய்வினுட கூறு கேளு
கேள்வியென்னை பசியுடனே நித்திரை யாகும்
சூளப்பா மைதுனமும் பயமும் சோம்பும்
தொகுத்துரைத்த அஞ்சுமடா தேய்வின் கூறு
வாளப்பா தேய்வினுட கூற றிந்து
மார்க்கமுடன் தன்னகத்தை மனதாய்ப் பாரு
காலப்பா வலுவறிந்து பார்த்தா யானால்
கலையான வாய்வினுட கூறு தானே! 39

வாய்வின் கூறு

தானான வாய்வினுட கூறு கேளு
தன்மையுள்ள புலத்தியனே நடத்த லோடல்
ஊனாக யிருத்தலொடு கிடத்தல் மைந்தா
உத்தமனே யெழுந்தலொடு அஞ்சு மாச்சு
வானான வாய்வினுட கூற றறிந்து
மார்க்கமுடன் தன்னகத்தை மகிழ்ந்து பாரு
கோனான குருவருளால் பார்த்தா யானால்
குணமாக ஆகாசக் கூறு கேளே! 40

ஆகாயத்தின் கூறு

கூறாக ஆகாயக் கூறு தன்னைக்
குறியுடனே சொல்லுகிறேன் குணமாய்க் கேளு!
நேராத குரோதமொடு லோக மோகம்
நிசமான ஆச்சரிய மதமு மஞ்சும்
ஊறான ஆதாரந் தன்னிற் பார்த்து
உத்தமனே தானவனாய் நின்றா யானால்
தேராத வாசியது தேருந் தேருஞ்
சிவபூக அஞ்சுதொழி லிருபத் தஞ்சே 41

நாடிப்பத்து

அஞ்சான ஈரஞ்சு பத்து நாடி
அப்பனே சொல்லுகிறேன் அறிவாய்க் கேளு!
துஞ்சாத யுடைகலையின் சுழினை யாகித்
துலங்கிநின்ற காந்தாரி அத்தி யோடு
மிஞ்சாத அசுவனியும் யலம்பு ருடன்
வேகமுள்ள சூதமுடனே சிங்குவையும் பத்து
நெஞ்சார நின்றதொரு தானம் பத்தும்
நேர்மையுள்ள பிரிதிவியின் வளிதான் பாரே 42

வளியான வாய்வினுட வளிதான் மைந்தா
மார்க்கமுடன் சொல்லுகிறேன் மனதாய்க் கேளு
நெளியாத பிராணனுடன் பானந் தானும்
நிசமான வுதானனொடு சமானன் மைந்தா
அளியாத வியானனொடு அஞ்சு மப்பா
அரகரா தேய்வு வாய்வ தாச்சு
சுளியாக தேய்வுவாய் வைத்தான் கண்டால்
சுகமாகப் பூதவாய் வைத்தான் கேளே! 43

கேளப்பா நாகனொடு கூர்மான் மைந்தா
கிறிகானுந் தேவதத்தன் தனஞ்செயனு மஞ்சு
ஆளப்பா ஐம்பூத வாய்வே யென்பார்
ஆச்சரியந் திசைவாய்வை அறிந்து கொள்ளு
காலப்பா திசைவாய்வை அறிந்து கொண்டு
கருணையுடன் சிவயோகக் கருத்தில் நின்றால்
கோளப்பா ஒன்றுமில்லை எல்லாம் சித்தி
குறிப்புடனே ஆகாச வளிதான் கேளே! 44

கேளடா ஆகாச வளிதான் மைந்தா
கிருபையுடன் சொல்லுகிறேன் நன்றாய்க் கேளு
வாளடா அரதயேட னைதா னொன்று
வகையான யுத்திகேட னைதா னொன்று
சூளடா வுலகேட னைதான் மூன்று
சுத்தமுட னாகாச வளியைக் கண்டு
ஆளடா அந்தரங்கச் சுளியில் நின்று
அப்பனே வாக்காதி யறிந்து பாரே! 45

பாரப்பா வாக்காதி யென்றால் மைந்தா
பதிவான வசனமொடு கெமன முந்தான்
நேரப்பா விசறகமொடுஆ னந்தம் மஞ்சும்
நிலையான வசனாதி யஞ்சும் கண்டு
கருவான ஆதார மூலம் பார்த்து
சாரப்பா பிறக்கருவி வளியைப் பார்க்கத்
தன்மையுடன் சொல்லுகிறேன் சங்கை கேளே. 46

கேளப்பா ராசததா மிதமு மைந்தா
கிருபையுள்ள சாத்மீக குணங்கள் மூன்றும்
வாளப்பா முக்குணங்கள் தேர்ந்து கொண்டு
வரிசையுடன் விந்தினுட வளியைக் கேளு
சூளப்பா சந்தமத்திமை வைகறியுஞ்
சுக்குமையும் நாலுமது வாக்கே யாகும்
ஆளப்பா வாக்காதி நாலும் பார்த்து
அரகரா ஆதாரந் தன்னைக் காணே! 47

காணப்பா ஆதாரந் தன்னி லேதான்
கருவான உடல்கருவி முப்பத் தாறு
பூணப்பா புறக்கருவி அறுப தாச்சு
புத்தியுட னுள்வெளியும் நன்றாய்ப் பார்த்தால்
தோணப்பா தத்துவங்கள் தொண்ணூத் தாறும்
தோணுமடா இருதயத்தில் சூழ்ந்து பார்க்கில்
வீணப்பா ஒன்றுமில்லை தத்துவமாங் குப்பை
விளங்குபதி பசுபாச விளையாட் டாச்சே! 48

ஆச்சப்பா வுள்கருவி முப்பத் தாறு
அப்பனே சிவத்தினுட கூறே யாச்சு
நீச்சப்பா புறக்கருவி அறுப துந்தான்
நிசமான சத்தியுட கூறே யாச்சு
பேச்சப்பா உன்வெளியும் நன்றாய்ப் பார்த்துப்
பெருமையுட னாதார நிலையுங் கண்டு
காரப்பா கருவிகர ணாதி யென்ற
கசடான தத்துவத்தைக் கண்டு தேறே. 49

தேரப்பா சரியையொடு கிரியை ரெண்டும்
சிவசிவா சத்தியுட கூறே யாச்சு
காரப்பா யோகமொடு ஞானம் ரெண்டும்
கருவான சிவத்தினுட காலே யாச்சு
நேரப்பா சிவசக்தி ரெண்டுங் கண்டு
நெறிமுறைமை தவறாம லந்தம் பார்த்துச்
சாரப்பா சதுரகிரி பொதிகை தன்னில்
சங்கையுடன் நின்றுதவந் தானே செய்யே! 50

தானான தேகமதிற் கூடி நின்று
சங்கைகளைச் சொல்லுகிறேன் நன்றாய்க் கேளு!
ஊனான ரோமதுமூன் றுயரையாங் கோடி
உத்தமனே நாடியெழு பத்து யீராயிரமாம்
கோனான தேகமடா வுதரத்தில் சூழ்ந்து
கொண்டுயதில் குடல்பலந்தான் நாற்பத் தஞ்சு
பூணான பல்லதுவும் பலந்தான் நாலு
பொருந்திநின்ற சதைபலமு மஞ்ஞா றாச்சே 51

ஆச்சப்பா அப்பதுவும் பலந்தா னஞ்சு
அப்பனே மச்சையது பலந்தா னாலு
நீச்சப்பா ஈரலது பலந்தான் ரண்டு
நிசமான அஸ்தியதைச் சொல்லக் கேளு
காச்சப்பா பலமுன்னூற் றிருப தாச்சு
கபடிநின்ற சேட்டுமந்தான் நாழி யாகும்
பேச்சப்பா பித்தமது படிதான் காலாம்
பிலமான சுக்கிலந்தான் அரைக்கா லாமே 52

ஆமப்பா சிரமமது யென்ன வென்றால்
அப்பனே பலம்நூற்றுப் பதினா லாச்சு
தாமப்பா யிப்படித்தான் கூடி நின்ற
சரீரமதில் வாசலது மெட்டு மாச்சு
நாமப்பா சொல்லுகிறோம் நன்றாய்க் கேளு
நாடிநின்ற கோபுரத்தில் வாச லொன்று
ஓமப்பா அவ்வாசல் ஒன்ப துக்கும்
உண்மையுள்ள ஆதாரக் கதவைப் பாரே! 53

ஆறாதாரம்

பாரப்பா ஆதாரக் கதவைச் சாத்தில்
பல்லாக நின்றதொரு தாளைப் பூட்டி
நேரப்பா அப்பூட்டுத் தனக்கு மைந்தா
நிசமான வாசியென்ற சுழிணைக் கோல்தான்
ஆரப்பா அறிவார்கள் சுழிணைக் கோலை
அழுத்தி மிகத் தானிருத்திப் பார்க்கும் போது
வீரப்பா கொண்டதொரு ஆறா தாரம்
விபரமுடன் தோணுதற்கு விபரங் கேளு 54

கேளப்பா விபரமென்ன ஆறா தாரங்
கிருபையுடன் கண்டுகொள்ள வகையைக் கேளு!
காலப்பா தோன்றி நின்ற மூலா தாரங்
கருவாகச் சொல்லுகிறேன் அண்டம் போலா
மேலப்பா அண்டமதிற் சூழ்ந்து நின்ற
விசையான யிதளதுதா னாலு மாச்சு
சூளப்பா நிறமதுதான் மாணிக்கம் போலச்
சுகமாக நின்றுதடா மூலம் பாரே. 55

பாரப்பா மூலமென்ற முட்டைக் குள்ளே
பதிவான அட்சரந்தான் ஓங்கார மாச்சு
நேரப்பா நின்றஓங் காரத் தோடே
நிசமான ரீங்காரமுடன் உகாரங் கூட்டிச்
சாரப்பா தன்மனமே சாட்சி யாகத்
தன்மையுடன் தானிருந்து செபித்தா யாகில்
காரப்பா கணபதியும் வல்லபையு மைந்தா
கனிவாக உந்தனிடங் கனிவார் தானே! 5

காணடா கனிவாகக் கண்டா யானால்
கருணையுள்ள சிவயோக முறுதி யாச்சு
பூணடா சிவயோக முறுதி யானால்
பொற்கமல வுச்சியிலே தீபங் காணும்
பேணடா தீயமனதைத் தினமும் நோக்கிப்
பிசகாமல் வாசியிலே பிலமாய் நில்லு
தோணடா அவ்வாசி பிலமாய் நின்றால்
சுகசீவ பிராணகலை சுத்த மாச்சே.

சுவாதிஷ்டானம்

சுத்தமுட னாதார மூலஞ் சொன்னேன்
சுவாதிஷ்டா னத்தினுட சுகத்தைக் கேளு
பத்தமுடன் தார்கோண மிதள்தா னாறு
பதிவான பொன்னிறம்போ லிருக்கு மைந்தா
சித்தமுள்ள நாற்கோண நடுவி லேதான்
தெளிவான ஙகாரமென்ற தீப மேற்றி
நித்தமுமே நகாரமுடன் சிங்றீங் கிட்டு
நிலையறிந்து உருச்செவிக்க நிசத்தைக் கேளே! 58

கேளடா நிலையறிந்து வாசி கொண்டு
கீழ்மேலும் நன்றாக நின்று பாரு
சூளடா நின்றுநிலை பார்க்கும் போது
சோதியெனத் தோன்றுமடா பிரம ரூபம்
ஆளடா பிரமநிலை ரூபங் கண்டால்
அடங்காத வாசியது அடங்கும் வீட்டில்
காலடா வாசியது அடங்கி நின்றால்
கண்ணடங்காப் பூரணத்தைக் காண லாமே! 59

மணிபூரகம்

காணவே பிரமாவின் பதியைச் சொன்னேன்
கருவான மணிபூரகங் கருத்தைக் கேளு
தோணவே பிறைமூன்றாம் பிறைபோலக் கீறித்
துலங்குமித ளீரஞ்சு பத்தும் போட்டுப்
பேணவே நிறமதுதான் பளிங்கு போலப்
பிறைமூன்றாம் பிறைநடுவே மகார மிட்டுப்
பூணவே சிமிதிலிங்மங் கொன்றேதான்
பூரணமாய் தினம்நூறு செபித்துக் காரே! 60

கார்க்கவே யுருச்செபித்துப் புருவ மீதில்
கண்ணுமனக் கண்ணதனால் நன்றாய்ப் பார்த்தால்
மார்க்கமுள்ள லெட்சுமியும் விஷ்ணு தேவர்
மகத்தான பூரணசந்தி ரன்போல் மைந்தா
யேற்கையுட னிருதயத்தில் தோணும் பாரு
இன்பமுள்ள தெரிசனத்தைக் கண்டா யானால்
தீர்க்கமுள்ள மயேஸ்பரியின் வாழ்வு பெற்றுச்
செல்வபதி யாஇருப்பாய் தினமும் நோக்கே. 61

நோக்குவது பூரணசந் திரனை நோக்கி
நுண்மையுடன் பூரணமாய் நின்றா யானால்
நாக்குநுனி யந்தமதில் வாசி நின்று
நலங்காமல் தீபமதில் நாடும் பாரு
வாக்குமன தொன்றாக நின்று பாரு
மக்களே கனபவுசி வாழ்வுண் டாகும்
தூக்கமென்ற கொடுமைதனை யகற்றி மைந்தா
சுகமான யிடமறிந்து சுகத்தில் நில்லே! 62

நில்லடா நிலையறிந்து சுகத்தைக் காண
நிசமான ருத்திரனார் பதியைக் கேளு
சொல்லடா சொல்லறிந்து சுகத்தைப் பார்க்க
சுகமான முக்கோணம் நன்றாய்க் கீறி
அல்லடா முக்கோண சக்கரத்தி லேதான்
அப்பனே பன்னிரண்டு யிதழ்தான் போடு
விள்ளடா செம்புநிற மான கோட்டை
விசையாகக் கோட்டைநடு விந்து போடே! 63

போடப்பா விந்துநடு ஓங்கா ரந்தான்
பூரணமாய்ச் சிம்கிலி யென்று நாட்டி
நாடப்பா விந்துவிடு முனைமை யத்தில்
நாடிநின்ற சிமிகிலி யென்று சொல்லி
வீடப்பா பிளப்பதார தினம்நூத் தெட்டு
விரும்பிமன தறிவதனால் உருவே செய்தால்
சூடப்பா தானேற்றி முனைமை யத்தில்
சூரியன்போல் காந்திவெகு சோதி யாமே! 64

அனாகதம்

சோதியென்ற காந்தியடா சூரிய காந்தி
துலங்குநடு சுழினையிலே கண்டா யானால்
ஆதியென்ற ஆதார மாறா தாரம்
அரூபமா யானதொரு மேலா தாரம்
நீதியுடன் தோணுமடா வாசி யாலே
நின்றிலங்கும் வாசிதனை தன்னைப் பார்த்து
சாதியென்று சராசரத்தைத் தானா யெண்ணிச்
சதாயோக பூரணமாய் நின்று பாரே! 65

விசுத்தி

மருவிநின்ற தலமதுதான் விசுத்தி வீடு
மகத்தான அறுகோணம் நன்றாய்ப் போட்டுச்
சுகத்தில்நல்ல தீர்க்கமுடன் பதினாறு
யிதழ்தான் போட்டுக்
குருவிருந்த கோட்டைவெகுக் குப்பாய் நிற்கும்
குணமான அக்கோட்டை நடுவி லேதான்
உருவறிந்துட்டு விந்திட்டு ஓங்காரஞ் சாத்தி
உத்தமனே வங்கிலியங் கென்று போடே! 67

போட்டபின்பு மனதுகந்து மனக்கண் சாத்திப்
பூரணமாய் வங்கியியங் கென்றே தான
நாட்டமுடன் தானிருந்து ஒருநூறு மைந்தா
நன்மையுடன் தான்செபித்து நயன மேவித்
தேட்டமுடன் குருபதியிற் சென்று பாரு
சிவசிவா வாய்வேக லகிரி யுண்டாம்
வாட்டமில்லா லகிரியடா வாய்வேக மாகி
மகத்தான யோகசிவ போத மாமே. 68

---

* ஓலைச்சுவடியில் 66ஆம் பாட்டு இல்லை எனும் குறிப்பு உள்ளது.

ஆக்கினை

ஆமப்பா யோகமென்ற சிவயோ கந்தான்
அருளான முச்சுடரின் அந்தத் தாலே
ஓமப்பா முச்சுடரின் அந்தம் பார்த்தால்
ஒளிவிளக்காய் நின்றதொரு மூலத் தீதான்
வாமப்பால் நிறைந்ததொரு மூலத் தீதான்
வளர்ந்துதடா அறுகோண வரையின் மேலாம்
நாமப்பா சொல்லுகிறோம் நன்றாய்ப் பாரு
நாதாந்தம யேசுபரத்தைக் காண லாமே. 69

காணவே மயேசுபரத்தின் கடாட்சத் தாலே
கண்ணான சதாசிவத்தின் கருணை கேளு!
தோணவே ஆக்கினையாம் விந்து வட்டம்
சொல் நிறைந்த வட்டமதி லிதழ்தான் ரெண்டு
பூணவே வட்ட மதி னிறந்தான் சொல்லப்
புதுமைவெகு புதுமையடா ஆகா சந்தான்
பேணவே ஆகாச வட்டத் துள்ளே
பேர்பெரிய பிரணவத்தை நன்றாய் நாட்டே. 70

நாட்டமுடன் ஓங்கார நடுவி லேதான்
நன்மையுடன் அகாரமுடன் உகாரஞ் சாத்தி
தேட்டமுடன் ரீங்காரம் நடுவிற் சாத்தித்
திரமாகத் தானிருந்து புருவ மேவிக்
கூட்டமன்றித் தானாகத் தானே நின்று
குணமாக அங் றிங்உம் மென்றே தான்
வாட்டமில்லா மனதாதத் தினம்நூறு மைந்தா
மார்க்கமுடன் தான்செபிக்க வரிசை கேளு! 71

இரவி மதி

வரிசையுட னாதாரம் செபித்து மைந்தா
மார்க்கமுடன் சாதசிவத்தை மகிழ்ந்து கொண்டால்
தெரிசனமாய் நின்றதொரு ஆறா தாரம்
சிவசிவாய அரூபமய மாகத் தோணும்
கரிசனமாய் ரூபமதைக் கண்ணிற் கண்டால்
கண்ணடங்காத் தெரிசனங்கள் காண லாகும்
பரிசமுடன் சதாசிவத்தில் மனது வைத்துப்
பத்தியுடன் அனுதினமும் பூசை பண்ணே. 72

பண்ணப்பா ஆதார பூசை பண்ணிப்
பதிவான முச்சுடரின் தியானங் கேளு
நண்ணப்பா புருவமதில் மனக்கண் சாத்தி
நாட்டமுடன் அங்கிலிநங் கென்றே தான்
உண்ணப்பா லாடவிழிக் கண்ணில் நின்று
உத்தமனே நூத்தெட்டு உருவே செய்தால்
கண்ணப்பா தான்குளிர மதிதா னின்று
காணுமடா பூரணசந் திரன்தான் பாரே. 73

பாரப்பா பூரணசந் திரனைக் காணில்
பாதாதி கேசமுதல் பதிவாய் மைந்தா
நேரப்பா குளிர்ச்சிவெகு குளிர்ச்சி யாகும்
நேமமுடன் அந்நேரம் நினைவாய் நீயும்
தேரப்பா குருபதியில் திரமாய் நின்று
செகத்தோற்கு விபூதியைநீ கடாட்சித் தாக்கால்
வீரப்பா கொண்டதொரு சுரமுந் தீரும்
வினையான வல்பிணியும் விட்டுப் போமே. 74

போமப்பா சகலபிணி ரோக மெல்லாம்
பூரணசந் திரனுடைய பிரபை கண்டால்
காமப்பால் கானல்பால் கருணை தங்கும்
கலையான வாசியது கடக்கா தய்யா
சோமப்பால் சொலிக்குமடா அந்தப் பாலை
சுத்தமுடன் நித்தியமுங் கொண்டா யாகில்
தாமப்பா தன்னிலையே தான்தா னாகும்
தானான ஆதார மூலம் பாரே. 75

பாரப்பா மூலமதில் மனக்கண் சாத்திப்
பதிவான ரவியினுட தியானங் கேளு
நேரப்பா புருவநடுத் தீபம் பார்த்து
நிசமாக அம்கிலிஉங் கென்றாக் கால்
சாரப்பா தினம்நூறு உருவிலே தான்
நன்மையாய் நின்றதொரு ரவிதான் மைந்தா
மேரப்பா கான்துலங்க ரவிதான் மீறி
மெய்நிறைந்த காந்திவெகு சோதி யாச்சே. 76

ஆச்சப்பா சோதிவெகு காந்தி யாகும்
அரகுரா அவ்வேளை அறிவாய் நின்று
மூச்சப்பா நினைந்ததொரு வாசி யாலே
முனையான சுழிமுனையில் வாசி நாட்டிப்
பேச்சப்பா தானிறுத்தி மவுன மாகப்
பெருமையுடன் சிவயோகத் திருந்தா யானால்
போச்சப்பா அவமிருத்து மகன்று போச்சு
பொன்னொளிவு பொலவெகு தேக மாச்சே. (77)

முச்சுடரின் தியானம்

தேகமென்ற தேகமடா தேக ரூபம்
திருவான ரூபமதைப் பூசை பண்ணிப்
பாகமுடன் விபூதியைநீ தியானம் செய்து
பாருலகில் மானிடற்கு கடாட்சித் தாக்கால்
ஆகமுடன் சகலசம்பு பாக்கியமும் பெற்று
அருள் பெருகப் பூரணமாயிருந்து வாழ்வார்
யேகமென்ற பூரணத்தின் கிருபை யாலே
என்மகனே சுடரினுட தியானங் கேளே 78

கேளப்பா ரவிமதியைத் தியானம் பண்ணிக்
கிருபையுள்ள சுடரதில் மனக்கண் சாத்தி
ஆளப்பா நம் ரிங் ரங் கென்றே தான்
அருள்பெருக நூத்தெட்டு உருவே செய்தால்
காலப்பா வலுவான ரவி மதிதன் னாலே
கருணைவளர் புருவநடுச் சுடரி லேதான்
வாளப்பா மலங்குவிந்து நிற்கும் போதில்
மகத்தான சோதிவெகு சோதி யாமே. 79

சோதிமய மானசிவ சூட்சங் கண்டால்
சுகசிவ பிராணனது அகலா தய்யா
ஆதியிலே முச்சுடராய் நின்ற சூட்சம்
ஆரறியப் போறார்க ளறிவா னந்தம்
நீதியுடன் அறிவான போதம் பெற்று
நிசமான முச்சுடரைக் கண்டா யானால்
உண்மையென்ற மந்திரங்கள் எல்லாம் சித்தே. 80

சண்முக தியானம்

சித்தான முச்சுடரின் தியானம் சொன்னேன்
சிவாயகுரு சண்முகனார் தீர்க்கத் தாலே
பத்தான சிவதீட்சை முத்தி பெற்றுப்
பரமகுரு சண்முகனார் தியானங்கேளு
வித்தான சூட்சமடா சுத்தே யில்லை
வேதமுடி வானதொரு விஞ்சை மூலஞ்
சத்தான விஞ்சையடா சொல்லக் கேளு
சங்கையுடன் ஓம் கிலி சிம் மென் றோதே. 81

ஓதியதோர் நாழிகையில் மைந்தா கேளு
உண்மையுள்ள சண்முகனார் வடிவேல் கொண்டு
நீதியுடன் தன்னகத்திற் றானே நின்று
நினைத்தபடி நின்றுவிளை யாடும் பாரு
ஆதியுட ஆதார சுருப மாகி
ஆறுமுக மானசெயல் யார்தான் காண்பார்
சோதியென்ற சுரூபமதில் ஆறுமுக மாகி
துலங்குதடா சுடரொளியைத் தூண்டிப் பாரே. 82

பாரப்பா சுடரொளியைக் கண்ணால் தூண்டிப்
பதிவான கடைக் கண்ணால் நடுகண் ணைப்பார்
நேரப்பா நடுநிலையைக் கண்ணால் பார்க்க
நின்ரூப சோதிமய மாகத் தோணும்
தேரப்பா மனதறிவார் விபூதி வாங்கித்
திருவான பதிநோக்கித் தியானம் பண்ணிக்
காரப்பா உலகோற்கு கடாச்சித் தாக்கால்
கருமவினை தீருமடா கண்ணைப் பாரே. 83

வயிரவ தியானம்

கண்ணைப்பார் மனக்கண்ணால் தன்னைப் பாரு
கமலமென்ற சுளினையுட காலைப் பாரு
விண்ணப்பா காலறிந்து உன்னிப் பாரு
வேதாந்த மயமான சிவயோகம் பாரு
பெண்ணைப்பார்த் தலையாதே தன்னைப் பாரு
பெலமான வாசிதிரு மூலம் பாரு
தன்னைப் பார் தன்னிலையே வாசிமூல
மான கேசரிதான் பாரே. 84

பாரப்பா வயிரவனார் தியானங் கேளு
பதிவான வயிரவத்தை யார்தான் காண்பார்
நேரப்பா அவருடைய நிலையைக் கேளு
நிலையான ஆதார முடிவே யாகக்
காரப்பா ரும்கிலிஅங் கென்றேநில்
கருத்துறவே மனதார நின்றா யானால்
ஊரப்பா ஊர்முழுதுங் காவ லான
உண்மையென்ற வயிரவனைக் காண லாமே. 85

காணலாம் அவருடைய ரூபங் கேளு
கனகரெத் தினமான சிவக்குழந்தை போலாந்
தோணலாம் புருவநடு கமலந் தன்னில்
சுகமான சுரூப நிலை கண்டா யானால்
பேணலாம் வயிரவத்தை தியானம் செய்து
பெருமையுடன் மானதமாய்ப் பூசை செய்தால்
பூணலாஞ் சகலவரங் கைக்குள் ளாக
பொற்கமல வயிரவனைத் தியானம் பண்ணே. 86

பண்ணப்பா தியானமது குருத்தி யான
பரமகுரு சீர்பாதந் தியானங் கேளு
முன்னப்பா கண்ணான மூலந் தன்னில்
முத்திகொண்ட அக்கினியாஞ் சுவாலை தன்னை
நண்ணப்பா வாசியினால் நன்றாய்ப் பத்தி
நடுமனையில் பிடித்தேறி நாட்ட மாக
விண்ணப்பா கேசரியாம் புருவ மையத்தில்
மேன்மைபெறத் தானிறுத்தி வசி யென்னே. 87

எண்ணியுரு நூற்றெட்டில் மைந்தா கேளு
ஏகாந்த மானகுரு இன்பந் தன்னில்
பொன்னொளிவு போலவுமே கண்ணிற் காணும்
புத்தியுடன் அவ்வேளை புருவ மேவிக்
கண்ணொளிவு தன்னொளிவாய் விண்ணை நோக்கிக்
கருணையுடன் வசியென்றே கருத்திற் கொண்டு
தன்னொளிவு போலவேநீ யுருவே செய்தால்
தாயான வாசியது தான்தாங் காணே. 88

காணவே சத்திசிவ மந்த மாகும்
கருணைவள ரந்தமதைக் கருதக் கேளு
பேணவே சிவவென்றால் சத்தி மூலம்
பொருந்து வசியென்றால் வாசி மூலம்
பூணவே சத்தியென்றால் வாசி யாகிப்
பொருந்திநின்ற காரணத்தை ஆர்தான் காண்பார்?
தோணவே குருமுறையாய்க் காண வேணும்
தொடுகுறிபோற் காணுதற்கு வகையைக் கேளு. 89

வகையான வகையேது வென்று கேட்டால்
மார்க்கமுடன் சரிதைவழி காண வேணும்
திகையாமற் சரிதைவழி நடந்தா யானால்
சிவசிவா கிரிகையுட வழியே காணும்
பகையாமற் கிரிகைவழி நன்றாய்ப் பார்த்தால்
பாலகனே யோகவழி பதிவாய்த் தோணும்
நகையாமல் யோகவழி தானே சென்றால்
நன்மையுடன் ஞானவெளி காண லாமே. 90

சரியை

காணுதற்குச் சரிகைவழி யென்ன வென்றால்
கருணையுடன் புலத்தியனே சொல்லக் கேளு
பூணுதற்கு நவ்வெழுத்தின் மேலே நின்று
புகழான மவ்வெழுத்தாம் சிகாரந் தோணும்
பேணுதற்கு வவ்வெழுத்தின் மேலே நின்று
பிலமான அவ்வெழுத்தின் கீழ தாகத்
தோணுதற்குச் சிவாலையமும் நதியு முண்டு
சுத்தமுடன் அந்திசந்தி கண்டு தேரே. 91

கண்டுமனந் தேர்ந்துஅந்த நதியில் மூழ்கிக்
கமலமலர் சிவாலையத்தைப் பூசை பண்ணி
நின்றநிலை காணாத மாந்த ரெல்லாம்
நீள்புவியிற் சிவாலயங்கள் நதிகள் தேடிச்
சென்றுமிகத்தா னலைந்து பரத வித்து
சீவநிலை யறியாமல் திகைத்து மாண்பர்
அண்டமெனஉம் உடலுயிரை அறியா மல்தான்
அலைவார்கள் சரிதைவழி யறியார் தானே. 92

தானென்ற திருக்கோயில் நதிக ளல்ல
சங்கையுள்ள வேதமுதற் சாஸ்தி ரங்கள்
ஊனென்ற மனுப்பிறந்து செய்த மாய்கை
உறுதியுட னம்மாய்கை அறிந்து தள்ள
வானென்ற நாதவிந்து செயல றிந்து
மார்க்கமுள்ள மெய்ஞானத் தலைவ ரெல்லாம்
கோனென்ற கேசரியைப் பூசை பண்ணிக்
குறியறியச் சரிதைவழி கூர்ந்தோர் தானே. 93

கிரிகை

தானென்ற பூரகத்தின் கீழ தாகச்
சபையான சிவாலையங்கள் நதிகள் மூன்று
கோனென்ற அனாகதமாம் யிரப்பால் தப்பார்
கொள்கிநின்ற சிவாலையங்கள் நதிக ளுண்டு
வானென்ற வாசிமலர் தனையெ டுத்து
மகத்தான சிவாலையத்தைப் பூசை பண்ணித்
தேனென்ற உடலுயிரை அறியா மல்தான்
திகைதப்பி மாய்கையிலே திரிவார் பாரே. 94

பாரப்பா சரிதைவழி முறைமை சொன்னேன்
பதிவாகக் கிரிகைவழி பகரக் கேளு
நேரப்பா முக்கோணம் தன்னி லேதான்
நிறைந்தஇதழ் பன்னிரண்டு மேல தாகச்
சேரப்பா வாய்வுவரை யேழ தாகச்
சிவாலையத்திற் சிவனுமையுந் தீபம் போலே
காரப்பா கருணைவழி மலர்க்கண் கொண்டு
கருணையுள்ள வாசிமுதல் கருவாய்ச் சாற்றே. 95

சாற்றிநிதங் கைதொழுது நின்றா யானால்
சங்கையுள்ள பாவமெல்லாம் தானே தீரும்
போற்றியே ஆதாரப் புதுனம கண்டு
பொருந்திநின்ற வாசியுட திறத்தைப் பெற்று
நேத்திரத்தின் சின்மயத்தைக் கண்டு போற்று
நினவறியா மானுடர்கள் நேசந் தப்பி
ஆத்துமத்தின் நிலைதனையே காணா மல்தான்
அலைவார்கள் கிரிகைவழி யறியார் பாரே. 96

யோகம்

பாரப்பா துரியமதின் கீழ தாகப்
பக்திநின்ற சுடரொளியா மூலத் துள்ளே
காரப்பா கணபதியைத் தொழுது போற்றிக்
கருணையுடன் வாசிமலர் சாத்தி மைந்தா
நேரப்பா அவ்வாசி கொண்டு மேலே
நிலையறிந்து பூரணமாய் நின்று கொண்டு
சாரப்பா சார்புநிலை யறியா ரெல்லாம்
சங்கையுடன் நதிமூழ்கித் தயங்கு வாரே. 97

தயங்குவார் நதிமூழ்கி நீர்தெ ளித்து
தன்மையுட னீறணிந்து தானந் தப்பி
மயங்குவா ரிருவிழியு மூடிக் கொண்டு
மணியெடுத்துத் தானுருட்டி மதங்கள் பேசித்
தியங்குவார் ஆக்கிரமம் பிடித்து அந்தச்
சிவநிலை யறியாத திருடர் தானும்
தயங்குவிந்து ஆதாரம் பாரா மல்தான்
நாடுகளில் தான்திரிவார் நயந்து தள்ளே. 98

நல்லடா நடையறியா மூடர் தன்னைத்
தள்ளிமலை யேறிமனஞ் சாந்த மாக
உள்ளடா யெட்டெழுத்துஞ் சிவம தாகும்
உறுதியுள்ள ரெண்டெழுத்து சக்தி யாகும்
நில்லடா யெட்டுரெண்டும் ஒன்றாய் நின்ற
நிலையான சிவாலயங்கள் நதிகள் தன்னை
அல்லடா அந்தநிலை காணா ரெல்லாம்
அலைவார்கள் கிரிகைவழி யறியார் தானே. 99

யோகம்

தானென்ற கிரிகைவெளி சொன்னேன் மைந்தா
தன்மையுடன் யோகவெளி சாற்றக் கேளு
கோனென்ற இருகதிருஞ் சுளியி லேத்திக்
குறியான நவக்கிரகந் தன்னைக் கண்டு
வானென்ற அனுக்கிரகத் துள்ளே சென்று
மகத்தான சிதம்பரத்துக் கப்பால் நின்ற
தேனென்ற பூரணமாங் கமலப் பொய்கை
திருவான பொய்கையிலே நீராடிக் காணே. 100

காணடா நீராடிச் சிவனை நீயுங்
கண்டுமன துறுதியினாற் பரத்திற் சென்று
தோணடா பெருவாசற் சென்று புக்கி
சுகமான சுழிமுனையிற் பத்தி நின்று
ஊணடா வாசியினா லாறா தாரம்
உள்ளுருவி நிராதார அண்ட மேவிப்
பேணடா அந்தநிலை தன்னில் நின்று
பிலமான ரவிமதியைத் தன்னுள் காணே. 101

காணப்பா சந்திரகலை பதினா றாகுங்
கருவான சூரியகலை பனிரண் டாகும்
பேணப்பா இருகதிரு மொன்றாய் நின்ற
பிலமான சூரியகலை பன்னி ரண்டில்
தோணப்பா உடலுக்குள் நின்ற மிச்சம்
சொந்தமுடன் போனதெங்கே யிருந்த தெங்கே?
பூணப்பா நின்றமிச்சம் நாலுந் தானும்
பொருந்திநின்ற பூரணமாய்க் கண்டு பாரே. 102

கண்டுபார் பூரணமே யென்று போற்றிக்
கருணைவளர் கலைநாலுங் காணா மல்தான்
தொண்டரெனப் பசியடக்கி விரதங் காத்துச்
சுழன்றுநின்ற வாசிதனை அடக்கி மைந்தா
நின்றநிலை காணாமல் நதிகள் தேடி
நெடிதான மலைகளெல்லாஞ் சுற்றிப் பார்த்து
ஒன்றுமிட மறியாமல் யோகஞ் செய்து
உடலுயிரைக் காணாமல் அலைவார் பாரே. 103

ஞானம்

பாரப்பா யோகவழி நன்றாய்ச் சொன்னேன்
பதிவான ஞானவழி பகரக் கேளு
காரப்பா ஆதார மூலந் தன்னில்
கருவான அக்கினிதன் னாவி தன்னைச்
சேரப்பா முக்கோணச் சுடரில் நின்று
திருவாசி யானதொரு செங்கண் மேவிச்
சாரப்பா அந்தமனை சொந்த மென்று
சங்கையுடன் தானிருந்து தன்னைக் காணே. 104

காணப்பா மேல்வெளியைக் கண்டு தேறிக்
கருணையுடன் அவ்வெளியிற் கலந்து கூடிப்
பூணப்பா நிராதார சித்த மாகிப்
பூரணமாய் நின்றுபரி பூரணமே யாகித்
தோணப்பா சிவனயன்மால் பூசை யற்றுத்
துடங்கிநின்ற தீவினைகள் ரெண்டு மற்றுப்
பேணப்பா ருசியற்று யாசை யற்றுப்
பேரண்ட சோதியுட சோதி தானே. 105

சோதியென்ற அஞ்செழுத்துந் தான்தா னாகித்
துலங்கிநின்ற எட்டெழுத்துந் தான்தா னாகி
ஆதியென்ற மூன்றுரெண்டுந் தான்தா னாகி
அடங்கியொன்றாய் நின்றபொருள் தான்தா னாகிச்
சாதியென்ற சமரசமுந் தான்தா னாகிச்
சதாகோடி மந்திரமுந் தான்தா னாகிப்
பேதியென்ற கெவுனமுதல் அஷ்ட சித்தும்
பேசாத மவுனமதுந் தான்தா னாமே. 106

ஆமப்பா ஆதியந்தப் பொருள்தா னென்றும்
அடங்கிநின்ற பஞ்சகர்த்தா தான்தா னென்றும்
தாமப்பா சத்திசிவந் தான்தா னென்றுந்
தன்மையுள்ள பஞ்சகர்த்தா தான்தா னென்றும்
ஓமப்பா யெழுவகையுந் தான்தா னென்றும்
உலகமெல்லாந் தானாக உறுதி கொண்டு
சோமப்பால் நான்தானே அவன்தா னென்றும்
சோதிமய மாயிருப்பார் ஞானி தானே. 107

தானென்ற சரிகைமுதல் ஞானஞ் சொன்னேன்
சமரசமாய்க் கண்டறிந்து தன்னைப் பாரு
ஊனென்ற வுடலுயிரைக் கண்டா யானால்
உண்மையென்ற சரிகைமுதல் ஞானந் தோன்றும்
கோனென்ற குருவருளால் மைந்தா நீயும்
குறிப்பறிந்து ஞானநிலை கூர்ந்து பார்க்க
வானென்ற சரிகைமுதல் ஞான மட்டும்
மார்க்கமுடன் தானறியச் சூட்சங் கேளே. 108

கேளப்பா அயன்மாலின் திரைய றுத்துக்
கிருபையுள்ள ருத்திரன்தன் திரைய றுக்க
ஆளப்பா மயேஸ்பரத்தின் திரையைத் தள்ளி
அதின்மேலே சதாசிவத்தின் திரையைச் சுட்டுச்
சூளப்பா ஐம்புலனைச் சாம்ப லாக்கிச்
சுகசீவ பிராணமயத் தோடி ருந்து
காலப்பா செவிவிழியுங் கடந்தப் பாலே
கருணையுடன் றானிருப்பார் ஞானி தானே. 109

தானென்ற முப்பாளில் மும்மலமு நீக்கித்
தற்பரத்துக் கப்பால்ம யிர்ப்பால மீதில்
வானென்ற நெருப்பாற்றுக் கப்பால் சென்று
மகத்தான பரவெளியில் மனதொ டுங்கிக்
கோனென்ற ஒளிவெளியில் தானே தானாய்க்
குவிந்துசிவ சிவஞான யோகந் தானாய்
ஊனென்ற ஆதியந்தந் தானே தானாய்
உகந்திருப்பார் சிவஞான முணர்ந்தோர் காணே. 110

காணவே சிவஞான முணர்ந்தோர் தாமுங்
கருணையுள்ள மகத்துவத்தோ ரான பேரும்
பேணவே தூலமதைச் சூட்ச மாக்கிப்
பிலமான சூட்சமதைக் காரணமாய் நின்று
தோணவே ஆதியந்த மொன்றாய் நின்று
துலங்குகின்ற சுடரொளியிற் சோதி யாகிப்
பேணவே பூமியில்வந் தவத ரிப்பார்
பிறந்தாலுஞ் சிவயோகி யாவார் பாரே. 111

பாராளும் யோக்கியமா முனியே அய்யா
பதிவான ரிஷிமுனிவர் சித்த ரெல்லாம்
நேராக நின்றுதவம் பெற்ற பேரை
நீள்புவியிற் பிறந்திடுவ தென்ற வாக்கியம்
பேறாகச் சொல்லிமனக் கசடு நீக்கிப்
பிறவாத நெறிகாட்டி அமுர்த மீந்து
மாறாக அடிமைபடைத் தாளு மென்று
மார்க்கமுடன் அவர்பதத்தில் வணங்கி னேனே. 112

வணங்கிமிக நிற்கையிலே வேதி யோனும்
மகத்தான ஆதியந்த வரலாறு தன்னை
மனங்குவிய யெந்தனுக்குச் சொன்னா ரய்யா
மகத்தான ரகசியமடா மவுன ஞானம்
எணங்கியதோர் அந்தரங்க மான சூட்சம்
ஏகாந்த சூட்சமென்ற கதையைக் கேளு
குணங்குறியு மாக்கியந்தக் குறியை நன்றாய்க்
கூர்மையுடன் சொல்லுகிறேன் குணமாய்க் கேளே. 113

கேளப்பா நான்முகமா லிந்திர தேவர்
கெடியான வேதமுதற் சமயத் தோருந்
தேளப்பா தேடிஅறி யாத வஸ்து
தெளிவான வெளியதுதான் பரம தாகுங்
கேளப்பா பரமனுட வஸ்து தன்னைக்
கிருபையுடன் அறிகுவதே ஆதி அந்தங்
கேளப்பா ஆதிவஸ்து மனுப்ப டைத்த
கெதியைமிக அறிகுவதே விளக்கந் தானே. 114

தானென்ற ஆதியந்த விளக்கந் தன்னைச்
சங்கையுடன் சொல்லுகிறேன் தயவாய்க் கேளு
வானென்ற வுலகமதில் மைந்தா மைந்தா
மகத்தான எழுவகையின் தோற்றந் தானுங்
கோனென்ற செகமதிலே பிறக்கு முன்னே
குருவான பரமிருந்து குறியை மைந்தா
ஊனென்ற திருமுடியும் அடியுந் தன்னை
உத்தமனே சொல்லுகிறே னுறுதி கேளே. 115

கேளப்பா புலத்தியனே நன்றாய்க் கேளு
கிருபையுட னுலகமது செனிக்கும் போது
காலப்பா பரமிருந்த கருணை தன்னைக்
காரணமாய்க் குருவருளால் கருதக் கேளு
ஆளப்பா குருபரன்தான் விசுவ ரூபம்
அவருடைய வடிவுவெளி அடிபா தாளம்
வாளப்பா முடியதுதான் அண்டத் துச்சி
மகத்தான பரசொரூப வடிவு தானே. 116

காணவே உச்சிமுடி தன்னை மைந்தா
கருவான பிரமனுமோ தேடித் தேடித்
தோணவே காணாமல் வந்தா ரய்யா
சுகமான மாலதுவு மௌன மாகிப்
பூணவே பூமிபா தாளஞ் சென்று
புத்தியுடன் வச்சஅடி காணா மல்தான்
பேணவே மாலயனுந் தேடித் தேடிப்
பெருகிநின்ற அடிமுடியுங் காணார் பாரே. 117

பாரப்பா அடிமுடியுந் தேடித் தேடிப்
பதிவான மாலயனுங் காணா ரென்று
நேரப்பா வேதமுறை திட்டஞ் செய்து
நீள்புவியில் யாவர்களு முறைசெய் வார்கள்
ஆரப்பா அறிவார்கள் பரசொ ரூபம்
அந்ததிக மானசிவ ரூபா ரூபம்
காரப்பா குருவருளால் தெரிந்த மட்டுங்
கருணையுடன் சொல்லுகிறேன் என்றும் தானே. 118

என்றுமுள்ளான் அடிமுடியே ஆதி யந்தம்
ஏகமாம் வடிவுவெளி பருவ மாகும்
அன்று கதிர் சந்திரனு மில்லாக் காலம்
அதிருமிடி மின்மேக மில்லாக் காலம்
குன்றுசெடி ஆண்பெண்ணு மில்லாக் காலம்
கூறுபஞ்ச பூதமுத லில்லாக் காலம்
ஒன்றெனவே நின்றபரம் நின்ற வாறு
ஒருவரறி யாதரிய லுண்மை தானே. 119

காணவே வேதநெறி யில்லாக் காலம்
கருவான சந்திரமா றில்லாக் காலம்
பூணவே உலகநெறி யில்லாக் காலம்
புண்ணியபா வங்கள் ரெண்டும் இல்லாக் காலம்
பேணவே குலநெறிக ளில்லாக் காலம்
பெருகிநின்ற மந்திரங்க ளில்லாக் காலம்
தோணவே சொன்னதெல்லா முண்டாய் நின்ற
சூட்சமதைச் சொல்லுகிறேன் சுகமாய்க் கேளே. 120

கேளப்பா பராபரமாய் நின்ற சோதி
கிருபையுடன் செகம்படைக்க நினைத்த போது
வாளப்பா வல்லபிரான் தன்னி லேதான்
வளமான சிவமதுதா னுண்டாச் சப்பா
மேலப்பா சிவமதிலே சத்தி யுண்டாய்
விளங்கிநின்ற சத்தியிலே மைந்தா கேளு
சூளப்பா சதாசிவன்தான் துலங்கி நின்றார்
சொல்லரிய சதாசிவத்தின் மயேஸ்பரன் தானே. 121

தானான மயேஸ்பரத்தில் ருத்தி ரன்றான்
சங்கையுள்ள ருத்திரனில் திருமால் தோன்றிக்
கோனான திருமாலில் அயனார் தோன்றிக்
குவிந்தெழுந்த எழுவருந்தான் கூற்கை யாக
வானான பராபரத்தை யறிய மாட்டார்
மகஸ்தான பரந்தானே பராபரமாய் நிற்கும்
தேனான பரமசிவ னதிகா ரத்தைத்
தீர்க்கமுடன் அனுக்கிரகஞ் செய்தார் பாரே. 122

பாரப்பா அனுகிரகஞ் செய்து நல்ல
பரமான பராபரந்தா னெங்குந் தானாய்
நேரப்பா நின்றவருஞ் சோதி யாகி
நிறைந்திருந்த சோதியதாய் நின்ற போது
சாரப்பா முன்னுதித்த எழுவர் தானுஞ்
சங்கையுட னவர்கள் செய்யு முறைமை தன்னை
ஆரப்பா அறிவார்கள் புலத்தி யாகேள்
ஆதிதொடுத் தந்தவரை யறிந்து காணே. 123

காணப்பா பரமசிவ மருளுண் டாகக்
கருணையுள்ள திருமாதைக் கண்ணால் மேவிப்
பூணவே சதாசிவத்தைப் பார்க்கும் போது
புத்தியுடன் பேரண்டம் படைத்து நின்றார்
ஊணவே மயேஸ்பரனைப் பார்க்க வேதான்
உருமிடியும் வாய்வுதனைப் படைத்து நின்றார்
தோணவே ருத்திரனைக் கண்ணால் பார்க்கத்
துலங்குமின்ன லக்கினியும் படைத்தார் பாரே. 124

பாரான திருமாலைப் பார்க்கும் போது
பதிவான கடல்மேகம் படைத்து நின்றார்
ஆரான பிரமனையும் நோக்கும் போது
அளவற்ற பூமிதனைப் படைத்து நின்றார்
நேரான சத்திதனைக் கண்ணால் மேவ
நிசமான சூரியனைப் படைத்து நின்றார்
பேரான சிவமதுவும் மதியா நின்றார்
பெருமையுடன் எழுவர்அதி காரங் காணே. 125

காணவே அண்டவரை யிதுதான் மைந்தா
காசினியி லன்புடையோ ரதிகஞ் சொல்லார்
தோணவே கண்டபடி அண்டந் தன்னைத்
தொகுத்துரைக்க மாட்டார்கள் கணங்கச் சாதி
பேணவே அண்டமதில் மனுஉண் டாக்கும்
பெருமைதனைக் குருவருளால் பேசு வேன்கேள்
பூணவே மேலேழு லோகந் தன்னைப்
புத்தியுடன் பலவிதமாய்ப் படைத்தார் கேளே! 126

கேளப்பா லோகமதைப் படைத்த பின்பு
கிருபையுடன் பரமசிவ மனுவுண் டாக்க
கேளப்பா சத்திதனை வரவ ழைத்துக்
கெனிதமுடன் மனுபடைக்க விபரஞ் செய்தார்
கேளப்பா பராபரையின் கிருபை பெற்றுக்
கெனிதமுடன் சதாசிவத்துக் குபதே சித்தார்
கேளப்பா சதாசிவனுங் கிருபை பெற்றுக்
கெதியுடைய மயேஸ்பரற்கு மீந்தார் பாரே. 127

பாரான மயேஸ்பரன்தா னுருத்திரற் கீந்தார்
பதிவான ருத்திரனு மாலுக் கீந்தார்
நேரான மாலவனு மயனுக் கீந்தார்
நிசமான அயனாரு நிலையைப் பெற்றுப்
பேரான கருணையினால் மனுப்ப டைக்கப்
பெருமையுடன் ஆதியந்த நடுவின் நின்று
மாறாத காலறிந்து மவுனங் கொண்டு
மனுப்படைக்க நினைத்துநின்றார் அயனார் தானே.

அயன்முதற் கொண் டைவருட லுயிராஞ் சத்தி
ஆதியந்தஞ் சிவனாரு முயிர்க்குயிராய் நின்றார்
தயவுபெற யெடுத்தவுரு ஆண்பெண் கோடி
சங்கையில்லா மூப்பிளமை சாக்கா டின்றிச்
செயம்பெறவே யொருகோடி காலம் வாழ்ந்து
தீர்க்கமுட னிருக்கையிலே மைந்தா கேளு
நயம்பெறவே சிவனுமையை நோக்கி மைந்தா
நமைவணங்க அனுக்கிரகஞ் செய்யென் றாரே. 129

செய்யென்று சொன்னமொழி யுமையுங் கேட்டுச்
சிந்தைமன தொன்றாச் சிவனை* நோக்கி
மெய்யென்று சித்துவகை தானுண் டாக்கி
மேதினியி லிருப்பவர்கள் மேன்மை யாக
மையென்ற திருமால்தான் மேகந் தன்னை
மார்க்கமுட நினைக்கையிலே மைந்தா கேளு
பையென்ற முகிலதனா லமுர்த முண்டாய்ப்
பார்தனிலே சகலவித்தும் பதிவ தாச்சே. 130

ஆச்சப்பா செந்நெல்பதி னெட்டு வித்தும்
அப்போதே யுண்டாச்சு அதின்மேல் மைந்தா
நீச்சப்பா அன்னமது சுவையைக் கண்டு
நிசமாகு மனுநீதி நேர்மை யாகப்
பேச்சப்பா சகலசித்துந் தானுண் டாச்சு
பெருகிநின்ற ஆசைவெகு நேச மாச்சு
மூச்சப்பா வாசியது முன்பின் னாச்சு
முழங்கிநின்ற செகமதுவுங் கலங்க லாச்சே. 131

---

* அடிப்படைச்சுவடியில் "சிவக்க" என்று உள்ளது.

கலங்கிநின்ற லோகமதுக் குறுதி யாகக்
கருணையுள்ள விஷ்ணுமுனி கருத்து வைத்து
இலங்கிநின்ற யெட்டுரெண்டு மொன்றாய்க் கூடி
யேகமென்ற அஞ்செழுத்தால் பேத மாக்கித்
துலங்கிநின்ற மனுவையொரு நான்கு சாதி
சுத்தமுடன் றான்வகுத்துச் சுயமாய் மைந்தா
விளங்கிநின்ற சத்திரிய வங்கி சத்தில்
விபரமுள்ள நாகமுனி விபரங் கேளே. 132

கேளடா நாகமுனி யுலகோர்க் கையா
கிருபையுடன் பாசைபதி னெட்டுஞ் சொன்னான்
வாளடா ராசமுனி தர்க்க சாஸ்திரங்
மகத்தான வேதாந்தஞ் சிப்பி சாஸ்திரங்
காலடா தானறிய மதன சாஸ்திரங்
கலந்தமனு போகமதாய் நன்மை தீமை
ஆளடா அறுசுவையும் அமுர்தங் காட்டி
அங்கமுடன் அன்னமதால் அசந்தார் தானே. 133

தானென்ற அன்னமதால் நித்திரையு முண்டாய்
சங்கையுட னனுபோகமூப் பிளமை யுண்டாய்
வானென்ற யேக்கமுட ஆசை யுண்டாய்
வஞ்சகமும் பிறப்பிறப்புத் தானு முண்டாய்த்
தேனென்ற பலகோவில் நதிக ளுண்டாய்ச்
செகராச மகுடபதி வற்க முண்டாய்க்
கோனென்ற வொப்பனைகள் நன்றாய்ச் செய்து
குறிப்புடனே தான்மூழ்கித் தவஞ்செய்தார் பாரே. 134

பாரான மறையோர்கள் வேள்வி செய்யப்
பதிவாக விஷ்ணுமுனி வந்து தோன்றிச்
சீராக வரங்கேளு மென்று சொன்னார்
செகத்திலரு சுருதிமறை யாக வேதான்
நேராக நாள்முகிழ்த்தம் நினைவாய்ச் சொல்ல
நீதியுடன் எங்கள்சொல் மேல தாகப்
பேராக அந்தரத்தில் யாருங் காணார்
பெருமையுள்ள செந்திருஷம் பேசுங் காணே. 135

காணவே விஷ்ணுமுனி பிரம னைத்தான்
கருதஅயன் வந்துதித்தங் கேது சொல்வார்
பூணவே அசுபதியோ டிருபத் தேழும்
பொருந்துநவக் கிரகமது தானுண் டாகத்
தோணவே விளம்பினபின் மாது தானுந்
துருவமுள்ள சதாசிவன் மயேசன் றானும்
பேணவே ருத்திரனு மாலுந் தானும்
பெருமையுடன் பரைநினைக்க வந்தார் தானே. 136

தானென்ற மாதுமைக்குப் பிரமஞ் சொல்லச்
சந்திரனுஞ் சூரியனுந் தானே யானார்
வானென்ற சதாசிவன்தான் ராசா வானார்
மகத்தான மயேஸ்பரனுஞ் சனியு மானார்
ஊனென்ற ருத்திரனுமங் காரகனு மானார்
உண்மையுள்ள மாலவனும் புதனு மானார்
மானென்ற அயன்சுக்கிர வடிவ மானார்
மகத்தான ராகுடனே கேது தானே. 137

காணவே விஷ்ணுவைத்தா னுமையும் பார்க்கக்
கருவான ராகுடனே கேது வானார்
பேணவே நவசித்தான் கிரக மாகிப்
பேருலகில் நினைந்தபின்பு பிழைப்ப தற்குத்
தோணவே சோதிரிஷி நூலு முண்டாய்த்
துலங்கிநின்ற அமாவாசி திதிநாள் கிராணம்
பூணவே நட்சத்திரம் ராசி யோகம்
பொன்னுலகுண் டானதின்பின் னுண்டாம் பாரே. 138

பாரான பார்தனிலே மனுவுண் டாகிப்
பதிவாக வந்தபின்பு அனேக சாஸ்திரம்
நேரான சாஸ்திரங்கள் சூஸ்தி ரங்கள்
நேர்மையுள்ள ரிஷிமுனிவர் சித்த ரெல்லாம்
மேரான பார்தனிலே தவசு செய்தும்
வெகுகோடி காலவரை யோகஞ் செய்து
பேரான வெளியோடே வெளியாய்ச் சேர்ந்த
பிலமான காலயுகம் பேசு றேனே. 139

கேளடா புலத்தியனே மனதாய் நீயும்
கெணிதமுள்ள யுகமதுதான் பதினெட் டப்பா
ஆளடா வறியன்யுக மீரேழு கோடி
அறுபதுனால் யுகமதுதா னீரஞ்சு கோடி
வாளடா மதனயுகம் யீராறு கோடி
மகத்தான ருசியுகயீ ரெட்டுக் கோடி
காலடா தாண்டன்யுக யீரஞ்சு கோடி
கனமான விண்ணரசன் நாலஞ்சு தானே. 140

தானென்ற விண்ணதிலே லெட்டுக் கோடி
தருவான ஆயுதனா யுகமேழு கோடி
மானென்ற மாதயுக யிருமூன்று கோடி
மகத்தான மணிகன்யுக மதுமூன்று கோடி
பானென்ற பணியிரதன் நான்கு கோடி
பணிவான விசுவாசன் யுகமூன்று கோடி
வானென்ற தயிதன்யுகம் ஒருகோடி யாகும்
மார்க்கமுடன் திரேதாயுக மதுவைப் பாரே. 141

பாரடா திரையதா யுகமதுவைக் கேளு
பதினேழு லெட்சத்தெண் பதினா யிரமாம்
ஏரடா திரையதா யுகமதுவைக் கேளு
ஈராறு லெட்சத்தொன் பதினா யிரமாம்
தேரடா துவாபர யுகமதுவைக் கேளு
திரமாக எட்டுலெட்சத் தறுபதினாலா யிரமாம்
காரடா கலியுகம் வெகுகடின மைந்தா
கண்டுபார் நாலுலெட்ச முப்பத்தீராயிர மாகும். 142

ஆமப்பா இந்தயுகம் பதினெட்டு மைந்தா
அப்பனே கூடியொரு சதுர்யுக மாகும்
தாமப்பா சதுரயுகம் பதினெட்டுஞ் சென்றால்
தயவான இந்திரற்கு ஒருநா ளாகும்
ஓமப்பா அந்தநாளா றஞ்சு கூடில்
உத்தமனே சொல்லுகிறேன் ஒருமாத மாகும்
போமப்பா அம்மாதம் பனிரெண்டு கூடில்
புத்தியுடன் வருஷமெனப் புகழ்ந்து காணே. 143

காணப்பா அவ்வருஷ மாவதுதான் கூடில்
கருவான ஆண்டுக மென்பார் மேலோர்
பூணப்பா ஆண்டுயுகம் பதினெட்டுஞ் சென்றால்
பொங்குகடல் பிரளயமாய்க் கண்டு பாரு
பேணப்பா பிரளையம்நூ றாயிர மானால்
பெரிதான நாற்பெருக்கம் பேணிப் பாரு
தோணப்பா அப்பெருக்கு ஈரெட்டுச் சென்றால்
சுகமான இந்திரனும் பூரணமாம் பாரே. 144

பாரடா சுகமான அந்தநாள் மைந்தா
பதிவாக யேழாயிரங் கோடி மீண்டால்
நேரடா அகோரமுனிக் கிடர்வரு மைந்தா
நிசமாக அந்தநாளெண் கோடி மீண்டால்
சாரடா நாகமுனி பூரண மாவார்
சங்கையுடன் அந்தநாள் நவகோடி சென்றால்
பேரடா விஷ்ணுமுனி பரமபத மாவார்
பிலமாக அந்தநாள் பதின்கோடி தானே. 145

காணவே பதின்கோடி சென்றுவரும் போது
காசிமா முனியவரும் கயிலாசஞ் சேர்வார்
பூணவே அந்தநாளெண் கோடி மீண்டால்
புகழான மாமுனிக்கு இடர்வரு மைய்யா
தோணவே அந்தநாள் நவகோடி மீண்டால்
சுகமான ஈஸ்பரமா முனியு மாய்வார்
பேணவே யந்தநாள் யெழுகோடி சென்றால்
பிலமான யெண்கோண முனிதனக்குங் கேளே. 146

கேளடா எண்கோண முனிக்கொரு கூனிமிருங்
கிருபையுள்ள எண்கூனி மிர்ந்திடும்போ தையா
சூளடா அவர்தானும் பூரணமே யாவார்
சுகமாக அந்தநாள் நவகோடி மீண்டால்
ஆளடா அக்கினிமா முனிதானு மைந்தா
அரகரா பரமபதம் அன்பாகச் சேர்வார்
பாளடா அந்தநாள் எண்கோடி மீண்டால்
பரத்துமா முனியவரும் பரமபத மாமே. 147

ஆமடா அந்தநாள் பதின்கோடி மீண்டால்
அருமையுள் ரோமரிஷிக் கொருரோம முதிருந்
தாமடா ரோமமது மூணரையாங் கோடி
சதியாக வுதிரும்போ தவர்மரண மாவார்
நாமடா அந்தநாள் மூவிரட்டி யானால்
நமபிரம முனிவர்சிவ பூசை வேளை
ஓமடா சிவபூசை யெழுநூறு மீண்டால்
உள்ளமுனி ரிஷிகளுக்கு மொருநாளு மாமே. 148

பிரமவயசு

அந்தநாள் யேழாயிரங் கோடி மீண்டால்
ஆனதொரு ரிஷிமுனிவர் இறந்துபிறந் திடுவார்
இந்தநாள் பதினாயிரங் கோடி மீண்டால்
இதமான மரல்தனக்கு ஒருநா ளாகும்
பந்தமுள்ள கொண்டநாள்முப் பத்தொரு மாதம்
பதிவான மாதமீ ராறுஒரு வருஷம்
சொந்தமுடன் வருசம்அறு பதுக்கு மானால்
சுகமாகக் கண்டுகொளாண் டுகளு மாமே. 149

ஆண்டுகளும் ஈரொன்ப தாகில்சலப் பிரளையம்
ஆனசலப் பிரளைய மெழுநூறு மீண்டால்
காண்டயுகப் பிரளையமா மெழுநூறு மீண்டால்
கலங்குமகாப் பிரளையமாய் நூறுதிர மீண்டால்
தோண்டுமொரு பூதசங் காரமென லாகும்
சுகபூத சங்காரம் ஒருகோடி மீண்டால்
தாண்டிவரும் போதுவெகு அனந்தசங் கார
தருவான சங்காரம் ஒருமூன்று மாமே. 150

விஷ்ணுவயசு

ஆமப்பா சங்கார மாகிவருங் காலம்
அரிதிருமா லதுவும்ஆ லிலைமேற் பள்ளி
ஓமென்ற சயனமது ஒருகோடி மீண்டால்
உத்தமனே நாகமதில் நித்திரையு மாவார்
தாமென்ற நித்திரையு முத்திரையு மேலாகித்
தன்னொளிவு விண்ணொளிவு சரியாகப் பார்த்து
நாமென்று அவனென்று நினையா மல்தான்
நாதாந்த பூரணத்திற் பூரணமா னாரே. 151

பூரணமாய் நின்றதொரு ரிஷி முனிவர்
　　பொருந்திநின்ற ஆதாரம் நன்றாய்ப் பார்த்துக்
காரணமாய்க் கருணையொளிப் பார்வை யாலே
　　கனயோக மானசிவ தீட்சை கூடி,
பாரணிந்த மீதினில னந்தங் கோடி
　　பத்தியுடன் தானிருந்து பரத்திற் சென்று
நேரணிந்து நிலையறிந்து நிலையில் நின்று
　　நிசமான பூரணங்கண் டேறி னாரே. 152

தெத்தம்

ஏறியே பூரணத்திற் செல்லும் போது
　　என்னசொல்வேன் பிருதிவியைப் பிரமனுக்குத் தெத்தம்
மாறியே அப்பதனை மாலினுக்குத் தெத்தம்
　　மாகாகர் அக்கினியை ருத்திரற்குத் தெத்தம்
தேறியே வாய்வுதனை மயேசுபரற்குத் தெத்தம்
　　சிவசிவா ஆகாசந் தன்னை மைந்தா
கூறியே சதாசிவற்குத் தெத்தம் பண்ணிக்
　　கொண்டபின்பு அறிவுபூ ரணத்தைக் கேளே. 153

கேளப்பா ரவிதனையே சூரியற்குத் தெத்தம்
　　கிருபையுள்ள மதிதனையே சந்திரற்குத் தெத்தம்
வாளப்பா சுடரான சோதிதனை மைந்தா
　　மகத்தான செகசோதி யிடமே சேர்த்துச்
சூளப்பா எங்குநின்ற பரத்தோ டப்பா
　　துலங்குதடா நட்சத்திரம் சோதி போலே
காளப்பா தனையறிந்து யோகி யெல்லாங்
　　கடாட்சமுடன் பராபரத்திற் கலந்தார் பாரே. 154

பாரப்பா உலகமெல்லாம் பரத்தினுட கூத்துப்
　　பதிவான கூத்ததுவும் வாசியுட நேர்மை
நேரப்பா வாசியது வன்னியுடன் கூடி
　　நிசமான பூதவகை அஞ்சுண் டாச்சு
பேரப்பா அஞ்சுவகைப் பூதத் தாலே
　　பெருகிநின்ற தத்துவங்கள் தொண்ணூற் றாறாய்
வீறப்பா கொண்டரசந் தான்தா னாக
　　வேதாந்த முறைமைநெறி யொன்று கேளே. 155

ஒன்றான பொருளறிந்து ஒன்றைக் கேளு
உத்தமனே நல்மனதாய் உறுதி கொண்டு
நின்றாலும் வாசிதனில் மனக்கண் சாத்தி
நிசமான சரியையொடு கிரயை யோகம்
பண்டான ஞானமொடு நாலு மைந்தா
பார்த்தவர்க்குக் கெதிமோட்சம் பலனுண் டாகும்
அண்டகே சரிமாது தன்னால் அந்த
ஆதியென்ற சரிதைவழி அறிந்து பாரே. 156

பாரப்பா சரிதைவழி அகார தீட்சை
பாலகனே தேகசுத்தி அனுட்டா னங்கள்
காரப்பா கிரிகைவழி யுகார தீட்சை
கருவான சிவலிங்க சத்தி பூசை
சாரப்பா யோகவளி மகார தீட்சை
சகலகலை களையறிந்து தன்னைக் காணல்
நேரப்பா ஞானவளி பூரணமாந் தீட்சை
நிராதார சுரூபநிலை தீப மாச்சே. 157

நாலுபதவி

ஆச்சப்பா சரியைவழி நடந்தோர்க் கய்யா
அப்போதே சாலோக பதவி யாகும்
பேச்சப்பா கிரியைவழி நடந்தோர்க் கய்யா
பெருமையுடன் சாமீப பதவி யாகும்
நீச்சப்பா யோகவளி நடந்தோர்க் கய்யா
நிசமாகச் சாரூபப் பதவி யாகும்
மூச்சப்பா ஞானவளி நடந்தோர்க் கய்யா
முத்தியுள்ள சாயுச்சிய பதவி தானே. 158

தானென்ற சாலோக பதவி சேர்ந்தால்
சகலசவு பாக்கியபதி தானே யாவான்
ஊனென்ற சாமீப பதவி சேர்ந்தால்
உலகுதனில் ராசாங்க யோகஞ் செய்வான்
கோனென்ற சாரூப பதவி சேர்ந்தால்
குவலயத்திற் சிவயோக ஞானி யாவான்
வானென்ற சாயுச்சிய பதவி சேர்ந்தால்
மகத்தான வெளியோடே வெளியா வானே. 159

வானான வெளியோடே வெளியாய் நின்று
மகத்தான நால்பதமும் வகையாய்ப் பெற்று
ஊனான பஞ்சகர்த்தாள் நிலையும் பெற்று
உகாந்தவரை திருநடன உண்மை கண்டு
கோனான குருபதத்தில் மனதொ டுங்கிக்
குறிப்பான பூரணமாய்ச் சேர்ந்தோர்க் கய்யா
தானான சமாதியுட வண்மை கேளு
தண்மையுடல் அப்பதமு மொன்ற தாமே. 160

நாட்டே

தாமென்ற சரிதைவழி நடந்தா லென்ன
தன்னறிவாய்க் கிரியைவழி நடந்தா லென்ன
ஓமென்ற யோகவழி நடந்தா லென்ன
உத்தமனே ஞானமதி லுறைந்தா லென்ன
ஆமென்ற பூரணமே தாமென் றெண்ணி
அணுவான தமர்வாசல் அதிலே சென்று
நாமென்ற அஞ்செழுத்தில் ரெண்டைப் பற்றி
நாதாந்த வெளிவெளியில் நாடி னாரே. 161

குழிச்சமாதியிருக்கவகை

நாட்டமுடன் பூரணத்தில் நாடி னோர்க்கு
நாதாந்த சமாதியுட நன்மை கேளு
தேட்டமுடன் எவ்விடமே யானா லென்ன
சிவசிவா அந்திடத்தில் செம்மை பண்ணி
வாட்டமென்ன பத்தடியிற் சதிர மாக
மைந்தனே ரெண்டுஅடி ஆழஞ் செய்து
ஆட்டமுடன் அதன்கீழே ஆறடியில் மைந்தா
அப்பனே முச்சாணில் ஆழம் பண்ணே. 162

பண்ணப்பா அதன்கீழே நாலடியில்
பதிவான ஆழமது எண்சாண் நீளம்
நண்ணப்பா நிதானமாய் நன்றாய்ச் செய்து
நலமான கிரகமதிற் பிரவேசிக்க
உண்ணப்பா கல்பொடியுஞ் செங்கல் தூளும்
உத்தமனே திருநீறு மூன்று மொன்றாய்
முன்னப்பா செய்துகொண்டு பதனம் பண்ணி
மூர்த்திகர மாவதற்கு முறையைக் கேளே. 163

கேளடா பாலுடனே யிளநீர் விட்டுக்
கிருபையுடன் தண்ணீரும் தேனும் கூட்டிச்
சூளடா அபிசேகம் நன்றாய்ச் செய்து
சுத்தமது மேல்துவட்டிச் சுகமாய் மைந்தா
ஆளடா அரைதனக்குப் பட்டு வஸ்திரம்
அன்பாகத் தானணிந்து அதின்மேற் கேளு
மேலடா பாதாதி கேச மட்டும்
மேன்மையுடன் விபூதிதூ ளிதமாய்ச் செய்யே. 164

செய்யடா விபூதிதூ ளிதமே செய்து
திருவான புருவமதில் திலதம் போட்டு
மெய்யடா தங்கமதாற் பட்டஞ் செய்து
மேன்மைபெற அஞ்செழுத்தை அதிலே மாறிப்
பையடா நெத்திதனிற் பட்டங் கட்டிப்
பாங்குபெறச் சுகந்தமலர்மாலை சாத்தி
வையடா அமுதுகறி வர்க்க முன்னே
வைத்தபின்பு தூபமொடு தீபங் காட்டே. 165

காட்டடா தீபமொடு தூபங் காட்டிக்
கருணையுடன் ரதமதின்மேற் கடாட்சம் செய்து
நாட்டடா மணியோசை சங்கி னோசை
நலமாகச் சேகண்டி மேள வாத்தியம்
மூட்டடா சகலஒலி நாதத் தோடே
முக்கியமாய் ரதமதுவை நாட்டிக் கொண்டு
சூட்டடா சமாதினுட வாசல் சென்று
சுகமாகக் கிரகப்பிரவேசம் பண்ணே. 166

பண்ணப்பா கிரகமென்ற சமாதி னுள்ளே
பதிவான மத்தியென்ற எண்சாண் தன்னில்
நண்ணப்பா தூபமதாற் சுத்தி பண்ணி
நாட்டமுடன் ஐயுங்கிலியுஞ் சவ்வுஞ்சிவாய நமவென்று
கண்ணப்பா ஈசான பார்வை யாகக்
கருணையுடன் தானிருத்திக் கனிவாய் மைந்தா
முன்னப்பா செய்துவைத்த முத்தூள் தன்னை
முக்கியமுடன் சிவசிவயென் றெடுத்தி டாயே. 167

எடுத்துநன்றாய்ப் பாதாதி கேச மட்டும்
இன்பமுடன் தான்தூளைக் கெட்டி செய்து
அடுத்துமிகப் பாதமுதற் புருவ மட்டும்
அளவாகப் பொடியிட்டு அமிழ்த்தி மைந்தா
தொடுத்துமிகப் புருவமுத லுச்சி மட்டும்
சொல்லுகிறேன் விபூதியிற் கற்பூரஞ் சேர்த்துக்
கொடுத்துமிக அமிழ்த்திநன்றாய்த் தீப தூபங்
குருவான மூர்த்திகர மாவா யென்னே. 168

எண்ணியே அஞ்செழுத்தை உச்ச ரித்து
இன்பமுடன் மடலமிர்தத் திரணை போட்டு
உண்ணியே திரணைநடு லிங்க பீடம்
உத்தமனே தான்வகுத்து உறுதி யாகப்
புண்ணியனே சுகந்தமல ரர்ச்சினைகள் செய்து
புத்தியுடன் சகலரச வறலை வைத்து
வன்னியென்ற ருத்திரனைத் தியானம் பண்ணி
மார்க்கமுடன் மானதமாய்ப் பூசை செய்யே. 169

செய்யப்பா மானதமாய்ப் பூசை செய்து
சிந்தைமன தொன்றாக்கிச் சிவனை நோக்கி
மெய்யப்பா கோதான பூதா னங்கள்
மேன்மையுள்ள கன்னிகா தானஞ் செய்து
கையப்பா தவறாமல் பரந்த னக்குக்
கருணையுடன் பூதிகா தானஞ் செய்து
மையப்பா மையமென்ற குருவைப் போற்றி
மார்க்கமுடன் தன்பதியில் வந்து கேளே. 170

கேளடா தன்பதியில் வந்தி ருந்து
கிருபையுடன் அதிகரச வற்கஞ் செய்து
வாளடா குருபதத்தைப் போற்றி மைந்தா
வணக்கமுடன் குருபூசை வளமாய்ச் செய்து
பாளடா போகாமற் சமாதியில் மைந்தா
பத்தியுடன் நித்தியமும் பூசை செய்தால்
கோளடா வாராமற் சமாது தன்னிற்
குருவான மூர்த்திகர மதிக மாமே. 171

ஆமப்பா அதீதமுள்ள ஆண்பால் தன்னை
அருள்பெருகச் சமாதுவைக்க முறைமை சொன்னேன்
ஓமப்பா உறுதியுள்ள சத்தி மாது
உண்மையுள்ளமூர்த்திகர மானால் மைந்தா
தாமப்பா முன்போலே சமாது செய்து
தன்மையுடன் மேல்திசையில் குகைதான் செய்து
நாமப்பா சொல்லுகிறோம் மூர்த்திகர மாவி
நாமாது தன்னைக்கா சனமே செய்யே. 172

செய்யப்பா காசனமாய்த் தீர்க்கம் பண்ணிச்
சிவசிவா அபிசேகம் நன்றாய்ச் செய்து
மெய்யப்பா தெரியாமல் பட்டு வஸ்திரம்
மேன்மைபெறத் தானணிந்து விபூதி சாத்தி
மையப்பா மையமதிற் திலதம் போட்டு
மகத்தான சுகந்தமலர் மாலை சாத்தி
மய்யப்பா தங்கத்தால் பட்டஞ் செய்து
மகத்தான எட்டெழுத்து மாறிக் கேளே! 173

கேளடா எட்டெழுத்தைக் கால்தலையா மாறிக்
கிருபையுடன் நெற்றிதனிற் பட்டங் கட்டி
ஆளடா தூபமொடு தீபஞ் செய்து
அருள்பெருக ரதமதன்மேல் அன்பாய் வைத்து
வாளடா மணியோசை சங்கி னோசை
மகத்தான சேகண்டி நாதஞ் செய்து
மேலடா சமாதுவலஞ் செய்து நல்ல
வேதாந்த மானநடுக் குகையில் வையே. 174

வையப்பா கீழ்முகமாய்க் குகையில் வைத்து
மார்க்கமுடன் செங்கல்தூள் கல்உப்பு நீரு
மெய்யப்பா மூன்றுபொடி ஒன்றாய்க் கூட்டி
மேன்மைபெறக் குகைநிறைய அமிழ்த்தி வைத்துக்
கையப்பா தவறாமல் மனம்நி றுத்திக்
கருணையுடன் சதுரமாய்த் திரணை செய்து
செய்யப்பா திரணைநடு கும்பம் வைத்துத்
தீர்க்கமுடன் மானதமாய்ப் பூசை பண்ணே. 175

பண்ணப்பா சகலரச வற்கம் வைத்துப்
பதிவான மயேசுவரியைப் பூசை செய்து
கண்ணப்பா தானோக்கி மனது கூர்ந்து
கன்னிகா தானமுடன் கோதா னங்கள்
பொன்னப்பா தான்விளையும் பூதா னங்கள்
புத்தியுடன் பூதிகா தானஞ் செய்து
நண்ணப்பா தன்பதியில் வந்தி ருந்து
நாட்டான குருபூசை நன்றாய்க் காணே. 176

காணவே குருபூசை நன்றாய்ச் செய்து
கருணைவளர் சமாதுதனிற் கடாட்ச மாகப்
பூணவே நித்தியமும் பூசை செய்தால்
பூரணமாய் மூர்த்திகரம் புதுமை யாகும்
தோணவே சத்தியுட சமாது தன்னில்
துலங்கவே புதுமைகள்தான் என்ன சொல்வேன்
பேணவே பூரணமாய்ச் சமாது பூசை
பெருமைவிட்டு உரிமையதாய்ச் செய்து பாரே. 177

பாரடா ஆண்ரூப முனிதா னாச்சு
பதிவான பெண்ரூப முனிதா னாச்சு
காரடா ரிஷிமுனிவர் கருணை தன்னைக்
கருணையுடன் கண்டறிந்து பூசை செய்து
ஆரடா அறிவார்கள் ஆதி யந்தம்
அரகரா ஆதியந்தம் ஆண்பெண் ணாச்சு
நேரடா ஆண்பெண்ணா நினைந்தா லென்ன
நேர்மையுட லறிவல்லோ சாட்சி தானே. 178

தானேதான் தன்மயமாய்ச் சாட்சி யாகத்
தன்மையுடன் பூரணமாய் நின்றா யானால்
கோனேதான் தானவனா யிருவர் தங்கு
குருவான நவக்கிரக சூட்சத் தாலே
பூணேநீ பொற்கமல உச்சி மீதிற்
பூரணமாய் நின்றிலங்கும் போதத் தாயே
தானேதான் நீயெனவே தன்மை யாக
நாட்டமுடன் வாசியினில் நயந்து பாரே. 179

பாரப்பா நயனவெளி சூட்சத் தாலே
பதிவான மூலமதில் ஆறா தாரங்
காரப்பா ஆதார லிங்க பீடம்
கண்ணிறைந்த முச்சுடராங் கமல பீடம்
நேரப்பா நின்றதொரு விந்து பீடம்
நின்றிலங்குங் கற்பூர தீப பீடம்
ஆரப்பா அறிவார்கள் ஆதி பீடம்
அந்தரங்கப் பீடமதைப் பூசை பண்ணே. 180

பூசைநெறி யறியாமல் ஆண்பெண் ரெண்டும்
பொல்லாத மாய்கைவலை தன்னிற் சென்று
ஆசைகொண்டு மோகமதால் அறிவுங் கெட்டு
அங்கமென்ற சங்கதியை அறியா மற்றான்
பாசமென்ற பலருசியில் மனத ழுந்திப்
பரகதியை யறியாத பாவி மாரோ
ஓசைபெறச் சத்தமுதித் தொடுங்கும் வீட்டை
உத்தமனே கண்ணாலே நித்தம் பாரே. 181

கணபதி பூசை

நித்தமும்நின் புத்தியுடன் பார்த்து மைந்தா
நேர்மையுடன் அந்திசந்தி பூசை பண்ணச்
சுத்தமுடன் சொல்லுகிறேன் புலத்தி யாகேள்
சோதியென்ற ஆதார மூலம் பார்த்துப்
பத்தியுடன் அய்யுங்கிலியு ஓமென்று நீயும்
பதிவாக மானதமா உருவே செய்தால்
சித்தியுள்ள கணபதியும் வல்லபையும் மைந்தா
சிந்தைதனில் ஒளிவிளக்காய்த் தெரிசிப் பாயே! 182

தெரிசிப்பாய் தினந்தோறும் தியானம் பண்ணித்
தீர்க்கமுடன் மானதமாய்ப் பூசை செய்தால்
நெறிசத்தி ஆதியந்த நெறியிற் குள்ளே
நின்றிலங்குங் கணபதிவல் லபையும் மைந்தா
பரிசுத்த மாகவேநீ தெரிசித் தாக்கால்
பத்தியுடன் சகலசித்துங் கைக்குள் ளாகும்
வரிவித்த சித்துக்கள் தான்கைக்குள் ளான
மகத்தான அவையடக்கஞ் சொல்லக் கேளே. 183

கேளப்பா அவையடக்கஞ் சொல்லக் கேளு
கிருபையுள்ள கணபதியும் வல்லபையும் மைந்தா
ஆளப்பா பிரம்மாவுஞ் சரஸ்பதியு மானார்
அதன்பிறகு திருமாலும் லெட்சுமியு மானார்
மேலப்பா ருத்திரனும் ருத்திரியு மானார்
மேன்மையுடன் மயேஸ்வரனும் மயேஸ்வரியு மானார்
காலப்பா சதாசிவனும் மனோன்மணியு மானார்
காரணமெல் லாம்முடிந்து சத்திசிவ மாச்சே. 184

பிரணவ மகிமை

ஆச்சப்பா ஆதிபரா பரந்தான் மைந்தா
அனுகிரகத் தாலுதித்த கணபதியும் வல்லபையும்
மூச்சப்பா நிறைந்தசத்தி சிவமு மாகி
மூவுலகுந் தானாகி முற்று மாகிப்
பேச்சப்பா நிறைந்ததொரு பஞ்ச பூதம்
பேறாகப் பெருமையினாற் பஞ்ச பூதம்
பாச்சப்பா பஞ்சகற்தா ளஞ்சு பேரும்
பத்திகொண்டு ஆதியிலே ஓமென் றாரே. 185

ஓமென்ற பிரணவமே ஆதி வல்து
உலகமெல்லாம் தானிறைந்து ஓம் சத்தி
தாமென்ற சத்தியடா எங்குந் தானாய்ச்
சதாகோடி மந்திரத்துக் குயிராய் நின்று
ஆமென்று ஆடினது ஓங்கா ரந்தான்
அடிமுடியாய் நின்றதுவும் ஓங்கா ரந்தான்
நாமென்ற ஓங்காரம் தன்னி லேதான்
நாடிநின்ற எழுவகையும் பிறந்த வாறே. 186

வாறான எழுவகையின் தோற்ற மெல்லாம்
மகத்தான ஓங்கார வடிவு மாச்சு
பேறான வேதமொடு சாஸ்தி ரங்கள்
பெருகிநின்ற மந்திரங்கள் அஷ்ட கர்மம்
நேரான சிவதவங்கள் யோக நிஷ்டை
நின்றிலங்குங் கெவுனமுதல் வசிய மாற்றங்
கூறான வாதமொடு வயித்திய மெல்லாம்
குருவான ஓங்காரக் குறிதான் காணே. 187

காணவே ஓங்காரம் ஓம்பிற தான
கருணைவளர் ஆதார மூல பீடம்
தோணவே மூலமென்ற ஆதா ரத்தில்
துலங்கிநின்ற ஆவியடா வாசி யாச்சு
பேணவே ஆவியென்ற வாசி யேறிப்
பெருகிநின்ற ஆதாரங் கடந்தப் பாலே
பூணவே ரவிமதியின் சுடரிற் சென்று
புத்தியுடன் பூரணமாய்த் தீபம் பாரே. 188

பாரப்பா தீபமென்ற அறிவின் கண்ணு
பத்திகொண்டு அறிவதனாற் பருவ மேவிச்
சாரப்பா கண்டமதில் அங்கென் றூணிச்
சதாபோத பூரணமாய் நின்று பார்த்தால்
நேரப்பா நின்றிலங்குஞ் சோதி போலாம்
நித்தியமுஞ் சுத்தமுடன் நினைவாய்ப் பார்த்தால்
ஆரப்பா வென்றதொரு ஆறா தாரம்
ஆதிசிவ சோதிமய மாகுந் தானே. 189

தானான ஆதாரஞ் சோதி போலே
சங்கையுடன் தோணுமடா அங்கே பாரு
வானான அண்டமதின் நடுவே பார்த்தால்
வகையாகத் தோணுமடா பஞ்ச பூதம்
தேனான வடிவுபஞ்ச ரூப மாகிச்
சிவரூப மானசெயல் யாருங் காணார்
கோனான சிவரூபந் தான்தா னென்று
குறித்தமனம் நிறுத்திநித்தம் பூசை பண்ணே. 190

பண்ணப்பா பூசைவிதி தன்னைக் காணார்
பார்மகனே அமைத்தவிதி சித்த மாச்சு
நண்ணப்பா சித்தமுள்ள மதிதான் மைந்தா
நடுவான பீடமடா அண்டத் துச்சி
கண்ணப்பா தானிறைந்த உச்சி மீதிற்
கமலமென்ற ஆயிரத்தெண் இதழி னுள்ளே
முன்னப்பா அமுர்தமது கண்விட் டோடும்
மூர்க்கமுடன் அந்தமுர்த பூசை பண்ணே. 191

பண்ணடா சிவபூசை சத்தி பூசை
பத்தியுள்ள சுத்தமதாய் வாலை பூசை
நண்ணடா பூரணமாம் பூசை யோடு
நாதாந்தச் சோதியடா யேக பூசை
கண்ணடா தவறாமற் பூசை செய்யக்
கருமானஞ் சொல்லுகிறேன் கருவாய்க் கேளு
விண்ணடா நிறைந்தமலர் கண்ணே சூட்சம்
வேதாந்த சூட்சமதை விரும்பிக் கேளே. 192

விரும்பிமனங் கொண்டுசிவ பூசை கேளு
வேதாந்த சின்மயத்தை மெய்யிற் கொண்டு
வரும்பிறவி தனையகற்றும் சிவமே தென்றால்
வரையுடனே சொல்லுகிறேன் அகார மார்க்கம்
அருந்தவமாய் நின்றதொரு அகார பீடம்
ஆரறியப் போறார்கள் ஆதி விந்து
திருந்தியதோர் விந்துவென்றால் கெங்கை கெங்கை
திருவான கெங்கையடா அமுர்தந் தானே. 193

தானான அமுர்தமடா அகார மாச்சு
சங்கையுட னகாரமதைத் தானே தானாய்
வானான கேசரிதைத் தியானம் பண்ணி
வரிசையுட னுதயமதில் தியானம் செய்தால்
ஊனான தேகமதில் நின்ற பீடை
உத்தமனே அப்போதே விலகிப் போச்சு
வீணானபீடையது விலகிப் போனால்
வேதாந்த தேகமது சித்தி யாச்சே. 194

ஆச்சப்பா தேகமது சித்தி யானால்
ஆதிசதா சிவசோதி அங்கே காணும்
மூச்சப்பா தன்னிலைவிட் டசையா தய்யா
முத்தியுள்ள சித்தமது கெட்டி யாச்சு
பேச்சப்பா தானடங்கு மவுன மாச்சு
பேரண்டம் சித்திவற்க கெவுன மாச்சு
நீச்சப்பா தானறிந்து கெவுனத் தேகி
நிசமான அகாரமதைப் பூசை பண்ணே. 195

பண்ணப்பா சிவமான அகார தீட்சை
பக்திகொண்டு பூரணமாய்ச் செய்த பின்பு
நண்ணப்பா உகாரமென்ற சத்தி தீட்சை
நன்மையுடன் சொல்லுகிறேன் மைந்தா கேளு
விண்ணப்பா கண்ணான மூலத் தீயில்
விளங்கிநின்ற உகாரமென்று சத்தி யென்று
முன்னப்பா நிறைந்தசிவ சத்தி யோடே
முத்தியுள்ள அகாரமென்ற விந்து சேரே. 196

சேரப்பா அகாரமுட னுகாரங் கூட்டிச்
செம்மையுடன் உருவேத்தி நின்றா யானால்
நேரப்பா நின்றதொரு வாசி யாலே
நிலையான புருவமதில் தீபங் காணும்
காரப்பா தீபமதைக் கமலக் கண்ணால்
கண்ணறிந்து வாசியினால் உன்னிப் பாரு
சாரப்பா வாசியினால் உன்னிப் பார்க்க
சதாபோத மானசிவ யோகி யாமே. 197

ஆமப்பா சிவயோகஞ் செய்வ தற்கு
அப்பனே அகாரமுட னுகாரஞ் சொன்னேன்
தாமப்பா மகாரமென்ற வாலை தன்னைத்
தாரணியி லாரறிவார் சங்கை மார்க்கங்
காமப்பால் கொண்டசிவ கெங்கை யான
கன்னிமனோன் மணியீன்ற நாத மென்றும்
நாமப்பா சொல்லுகிறோம் செந்தே னென்றும்
நாதாந்த நாதமென்ற மகார மாமே. 198

ஆமென்ற மகாரமுடன் மைந்தா கேளு
அருள்பெருக அகாரமுட னுகாரங் கூட்டி
ஓமென்ற பிரணவத்தின் மகிமை யாலே
உறுதியுடன் மூன்றெழுத்துஞ் செபித்தா யாகில்
தாமென்ற தன்னிலையே பிரம மாகித்
தானாகித் தானவனாய் தான்தா னாவாய்
நாமென்ற நாதாந்த மூர்த்தி யாலே
நடுவெழுந்த மூன்றெழுத்துஞ் சித்தி காணே. 199

காணவே மூன்றெழுத்துங் கருணை யாகக்
கட்டாகச் செய்தபின்பு இன்னங் கேளு
பேணவே சிகாரமென்றால் ஆர்தான் காண்பார்
பேரண்ட மானபூ ரணமே யாகும்
தோணவே பூரணத்தைக் கண்டு கொண்டு
சுகமான சிவசத்தி வாலை யோடே
பூணவே தானிருத்திச் செபித்தால் மைந்தா
பூரணமாய்க் காயசித்தி புனித மாமே. 200

புனிதமுடன் தானிருந்து பூசை பண்ணிப்
பொற்கமல உச்சியிலே மனத்தை வைத்து
இனிதமுடன் வகாரமென்றால் வாசி யாச்சு
ஏகமென்ற வாசியிலே இன்பம் வைத்துக்
கனிகரண மானசிவ சத்தி வாலை
கண்ணான பூரணந்தான் நாலுங் கூட்டி
மனிகரன மானதொரு அஞ்சு மைந்தா
மகஸ்த்தான பஞ்சகெண தீட்சை யாச்சே! 201

ஆச்சப்பா பஞ்சகெண தீட்சை யோத
அப்பனே வகைவிபரம் நன்றாய்க் கேளு
நீச்சப்பா சிவதீட்சை உதய மாகும்
நிசமாக மாலையிலே சத்தி தீட்சை
பேச்சப்பா பேசாத வாலை தீட்சை
பேணிமனங் கண்டவுடன் தெண்டம் பண்ணு
மூச்சப்பா நிறைந்ததொரு வாம ரூப
முத்திகொண்ட பஞ்சகண நாதந் தானே! 202

தானான பஞ்சகணந் தானாய் நின்றுந்
தன்மையுட நின்றுவிளை யாட லாச்சு
ஊனாகி நின்றுவிளை யாடுஞ் சித்தை
உலகமதில் அறியாம லுழன்று போனார்
வானான வடிவுபஞ்ச ரூபந் தன்னை
மார்க்கமுடன் கண்டுமன மகிழ்ச்சி யானால்
கோனான குருபரம்வே றில்லை மைந்தா
குவலயத்தில் நீயுமொரு சித்த னாமே. 203

சித்துமய மாவதற்கு மைந்தா மைந்தா
தீர்க்கமுடன் அகாரமதை ஆண்டு செபி
முத்திபெறச் செபித்தபின்பு உகாரந் தன்னை
மூர்க்கமுடன் ஆண்டொன்று செபித்துத் தீரு
பத்தியுடன் செபித்தபின்பு மகாரந் தன்னைப்
பாலகனே ஆண்டொன்று பதிவாய்ச் செபி
புத்தியுடன் அறுமூன்று நாள்செபித்து வந்தால்
பூரணமும் காரணமும் பொருந்தும் பாரே. 204

பாரப்பா பூரணமே அண்ட மாச்சு
பதிவான காரணமே பிண்ட மாச்சு
நேரப்பா அண்டமொடு பிண்டம் ரெண்டும்
நேரறிந்து கொண்டவனே சித்தன் சித்தன்
சாரப்பா சவுமியசா கரத்தை நன்றாய்த்
தன்மையுடன் பூரணமாய்ச் சார்ந்து கொண்டால்
மேரப்பா அண்டபிண்டந் தானாய் நின்று
மேதினியில் பூரணமாய் வாசி யாமே. 205

வாசிக்குஞ் சூதமல்லோ முப்பூ வாச்சு
வாடாத முப்பூவை யார்தான் காண்பார்
நேசிக்கும் முப்பூவைச் சொல்லக் கேளு
நிசமான சத்தமடா பூமி நாதம்
பூசிக்கும் பூநாகம் பூரஞ் சத்தி
பொருந்திநின்ற சவுக்காரம் அண்ட மாது
காசிக்கு மேலான கன்னி கன்னி
கன்னிமனங் கொண்டதிரு முப்பூ வாச்சே. 206

ஆச்சப்பா முப்பூவும் பூரச் சுண்ணம்
அதுதெளிந்த செங்கையடா நாதம் நாதம்
பேச்சப்பா பெருகிநின்ற நாதத் துள்ளே
பெருகிநின்ற சுத்தசிவம் விந்து சேர்ந்து
மூச்சப்பா தானடங்க அண்டஞ் சேர்ந்து
முத்தீயுந் தான்கூட்டிப் புடத்தைப் போடு
காச்சப்பா புடமறிந்து காச்சிப் பாரு
கண்ணடங்காச் சுண்ணமடா முப்பூ காணே. 207

முப்பூ சுண்ணம்

காணாத முப்பூவைக் கண்டால் மைந்தா
கருமான காரமுடன் சாரஞ் சேரு
பானான சாரமதில் உகாரஞ் சேர்த்துப்
பருவாதி சுடரான செயநீ ராச்சு
தேனான செயநீரில் வீரஞ் சேர்க்கச்
சிவந்ததொரு செயநீரும் நாத மாச்சு
ஊனான நாதமதைப் பதனம் பண்ணி
உப்புமுதற் கற்பூர வகையும் கட்டே! 208

கட்டான கட்டுமுறை திட்டங் கண்டால்
கனகமென்ற பாக்கியங்கள் கைக்குள் ளாகும்
மட்டாக இன்னமொரு முப்பூச் சுண்ண
மார்க்கமுடன் சொல்லுகிறேன் மவுனத் தங்கங்
கிட்டாத அந்தமடா அண்டத் தாதி
கெணிதமுள்ள பூரமுடன் வெடியுங் கூட்டித்
தட்டாமல் கல்வமதில் நாத நீரால்
தன்மையுடன் தானரைத்து வட்டுப் பண்ணே. 209

காரசெயநீர்

பண்ணியதோர் வட்டதுவும் நன்றாய்க் காய்ந்தால்
பாலகனே மண்சீலை வலுவாய்ச் செய்து
புண்ணியனே நிறையறிந்து புடத்தைப் போடு
பூவான முப்பூவும் சுண்ண மாச்சு
கண்ணிறைந்த சுண்ணமடா கமலச் சுண்ணங்
காரமுள்ள சுண்ணமதிற் சாரஞ் சேர்க்க
வன்னியென்ற செயநீரை யென்ன சொல்வேன்
வானிறைந்த நீரதிலே வீரஞ் சேரே. 210

சேரடா வீரமது சேர்ந்த போது
தெளிவான நீரதுவும் சென்னீ ராச்சு
காரடா சென்னீரைப் பதனம் பண்ணிக்
கட்டான வாதமுறை திட்டம் பார்த்தால்
பேரடா கொண்டதொரு நவலோ கங்கள்
பெருகிநின்ற அங்கமெல்லாந் தங்க மாச்சு
நேரடா தங்காதி மாது தன்னை
நேமமுடன் பாசம்வைத்துப் பூசை பண்ணே. 211

பண்ணப்பா சத்திசிவ பூசை பண்ணிப்
பதிவான சிவயோகம் பார்க்கும் போது
கண்ணப்பா தன்னிலையிற் கருணை யாகும்
கருணைவளர் புருவமதில் தீபங் காணும்
விண்ணப்பா நிறைந்ததொரு தீபங் கண்டால்
வேதாந்த தேகமடா முத்தி யாச்சு
முன்னப்பா நிறைந்தசிவ முத்தி யாலே
முத்தியுள்ள அமுர்தரச பற்பங் கேளே. 212

பற்பமென்ற உற்பனத்தை யார்தான் காண்பார்
பதிவான நகாரமுடன் மகாரஞ் சேர்த்து
உற்பனமாய்க் காரமுடன் பூரங் கூட்டி
உறுதியுடன் பூரணநீர் தன்னா லாட்டிக்
கற்பமென்று அற்புதமாய்ப் புடமே செய்தால்
கசடற்று நீறியது பற்ப மாகும்
அற்புதமாய் நீறியதோர் பற்பந் தன்னை
அங்கமென்ற சங்கதியை அறிந்து கூடே. 213

அறிந்துகொண்டு ஆதாரம் நன்றாய்ப் பார்த்து
ஆதியென்ற பற்பமொடு சுண்ணம் ரெண்டும்
வருந்துமனக் கணிவதனாற் செய்து மைந்தா
வகையுடனே அஷ்டாங்க யோகம் பாரு
தெரிந்துசெடந் தானறிந்து யோகம் பார்க்கத்
தீர்க்கமுள்ள மார்க்கமொன்று செப்பக் கேளு
பொருந்திநின்ற அஷ்டகர்மம் சித்துப் பெற்றால்
பூரணமா யஷ்டாங்க யோக மாமே. 214

யோகமென்ற அஷ்டாங்க யோகம் பார்க்க
உத்தமனே அஷ்டகர்ம சித்துக் கேளு
ஆகமென்ற தேகநவக் கிரக மாச்சு
ஆதியென்ற அனுக்கிரக முடிவில் நின்று
பாகமென்ற ஆதார மூலந் தன்னைப்
பத்திகொண்டு ஊடுருவிப் பார்க்கும் போது
ஏகமென்ற அட்சரத்தி னாட்டே யல்லால்
என்மகனே மற்றதெல்லா ந் தூலங் காணே. 215

காணவே தூலமுடன் சூட்சங் கண்டால்
காரணமாய்ச் சென்றுவிளை யாட லாகும்
பூணவே நின்று விளை யாடு தற்குப்
புத்தியுடன் அஷ்டகர்மம் சித்துக் கேளு
தோணவே அஷ்டகர்ம சித்துக் காணச்
சொல்லுகிறேன் வசீகரத்தின் சூட்சந் தன்னை
ஊணவே தானிருந்து மூலம் பார்த்து
உரிமையுடன் குருபதியை உகந்து காணே. 216

வசியம்

உகந்துகொண்டு வசீகரத்தின் சூட்சங் கேளு
உத்தமனே வடதிசையை நோக்கி மைந்தா
அகந்தெளிய விபூதிஉத் தளமாய்ப் பூசி
யானகலை யாசனமேல் இருந்து கொண்டு
முகந்தெளிந்த ருத்திராட்ச மணியை வாங்கி
முத்திபெற ஆதிகண பதியை நன்றாய்ச்
செகந்தெளியச் செபிப்பதற்கு மந்திரங் கேளு
சிவசிவா ஓம்றீங் அங்கென் றோதே. 217

ஓதடா ஆயிரத்தெண் ணுருவே செய்தால்
உண்மையென்ற ஆதிகண பதிதான் மைந்தா
நீதமுட னுனதிடத்தில் நின்று கொண்டு
நீ நினைத்த காரியங்கள் வசியஞ் செய்வாய்
பேதமென்ற பேதமெல்லாம் வசிய மாகும்
பேரண்டஞ் சித்தண்டம் வசிய மாகும்
வேதமென்ற வேதமொடு சாஸ்த்தி ரங்கள்
விளங்கிநின்ற மந்திரங்கள் வசிய மாமே. 218

ஆமப்பா தேவரொடு முனிவர் தானும்
அடங்காத பிசாசுமுதற் சத்து ருக்கள்
ஓமப்பா மிருகமுதல் அஷ்ட நாகம்
ஒடுங்காத பட்சிமுதற் சகல மெல்லாம்
தாமப்பா ஆதிகண பதியின் சூட்சம்
தன்மையுடன் தியானித்துத் தானே நின்றால்
காமப்பால் காணப்பால் வசிய தாகிக்
கருணையுடன் சகலமுமே வசியங் காணே. 219

மோகனம்

காணவே வசீகரத்தின் மூலஞ் சொன்னேன்
கணக்காண மோகனத்தின் கருணை கேளு
பேணவே கீழ்த்திசையை நோக்கி மைந்தா
பிரணவத்தால் விபூதிஉத் தாளமாய்ப் பூசித்
தோணவே வெண்புலியா சனமேற் கொண்டு
சுத்தமென்ற துளசிமணி கையில் வாங்கிப்
பூணவே செபிப்பதற்கு மந்திரங் கேளு
பொருந்துமகா கணபதியின் சூட்சந் தானே! 220

தானென்ற சூட்சமது சொல்லக் கேளு
சங்கையுடன் ஓங்கிலி சிங்கென் றேதான்
வானென்ற குருபதியில் நின்று கொண்டு
மார்க்கமுடன் ஆயிரத்தெண் ணுருவே செய்தால்
கோனென்ற மகாகணபதி தான மைந்தா
குருவான இருதயத்தில் பிரகாசிப் பார்கள்
ஊனென்ற இருதயத்தில் பிரகா சித்தால்
உத்தமனே சகலமுமோ கனந்தான் பாரே! 221

பாரப்பா ரிஷிமுனிவர் தேவ ரெல்லாம்
பதிவான மிருகமுதற் கணங்க ளெல்லாம்
காரப்பா சகலநோய் விஷங்க ளெல்லாம்
காட்டேரி பிசாசுமுதல் கணங்க ளெல்லாம்
நேரப்பா நதிகளொடு தலங்க ளெல்லாம்
நேர்மையுடன் சமுசியங்கள் கண்டால் மைந்தா
வீரப்பா தானொடுங்கி மோகனமே யாகும்
வேதமகா கணபதியின் விஞ்சை யாச்சே! 222

தம்பனம்

ஆச்சப்பா மோகனத்தின் அருமை சொன்னேன்
அரகரா தம்பனத்தின் அருளைக் கேளு
காச்சப்பா மேல்திசையை நோக்கி மைந்தா
கருணையுடன் விபூதிஉத் தளமாய்ப் பூசிப்
பேச்சப்பா தானிறுத்தி மவுன மாகிப்
பெருமையுடன் தெற்பையா சனமேற் கொண்டு
மூச்சப்பா தானிறுத்தித் தாமரையின் மணியால்
மூர்க்கமுடன் செபிப்பதற்கு மந்திரங் கேளே! 223

கேளப்பா நடனகண பதியின் சூட்சம்
கிருபையுடன் ஓம், அம் கிலியென் றேதான்
காலப்பா தானிருத்தி மைந்தா கேளு
கருணையுடன் ஆயிரத்தெண் ணுருவே செய்தால்
மேலப்பா நடனகண பதிதான் மைந்தா
மேன்மைபெற உன்னிடத்தில் நடனஞ் செய்து
சூளப்பா உன்னிடத்தில் இருந்து கொண்டு
சுத்தமுடன் தம்பனத்துக் கருள்செய் வாரே. 224

வாறான தம்பனந்தான் என்ன வென்றால்
மகத்தான துட்டரொடு மிருக மெல்லாம்
நேராக உனதுடைய சமுகங் கண்டால்
நேர்மையுடன் மனதொடுங்கித் தம்பனமே யாவார்
பேறான வாய்வுடனே நெருப்பு தண்ணீர்
பிறழாமல் தம்பிக்கும் பெருமை பாரு
கூறான நடனகண பதியி னாலே
கூர்மையுடன் சகலமும்தம் பனமாம் பாரே. 225

உச்சாடனம்

பாரப்பா தம்பனத்தைச் சொன்னேன் மைந்தா
பதிவான உச்சாடணத்தைப் பகரக் கேளு
நேரப்பா தென்திசையை நோக்கி மைந்தா
நேர்மையுடன் விபூதிஉத் தளமாய்ப் பூசி
காரப்பா படந்தாள்ஆ சனமேற் கொண்டு
கருணையுடன் சங்குமணி கையில் வாங்கிச்
சாரப்பா சத்திகண பதியின் சூட்சம்
தன்மையுடன் ஓம், கிலி, யுஞ், சவ், வென் றெண்ணே!226

எண்ணியே ஆயிரத்தெண் ணுருவே செய்தால்
ஏகாந்த சத்திகண பதியி னாலே
உன்னியே சாடனம்தான் மைந்தா மைந்தா
உறுதியுடன் சித்துமய மாகும் பாரு
நண்ணியே சாடனந்தான் சித்தி யானால்
நாதாந்தப் புலத்தியனே சொல்லக் கேளு
நுண்ணிமையாய்க் கண்டதெல்லா மூச்சா டிக்கு
நோக்குமனக் கண்ணதினால் தன்னைப் பாரே. 227

பாரப்பா பார்தனிலே யிருந்து கொண்டு
பத்தியுடன் சிவயோகத் திருக்கும் போது
வீரப்பா கொண்டதொரு நோய்க ளெல்லாம்
வீசமுடனே பில்லிசூ னியங்க ளெல்லாம்
நேரப்பா சாடனத்தாற் காணா தோடும்
நீடுலகில் சகலசித்து மாட லாகும்
தேரப்பா சத்திகண பதியி னாலே
தீர்க்கமுடன் சாடனந்தான் சித்தி யாமே. 228

ஆகிருசனம்

சித்தியுடன் சாடனத்தைச் சொன்னேன் மைந்தா
தீர்க்கமுடன் கிருசனத்தைச் செப்பக் கேளு
முத்தியுடன் வடகிழக்கு முகமாய்க் கொண்டு
மோனமுடன் விபூதிஉத் தளமாய்ப் பூசிப்
பத்தியுடன் பட்டுவஸ்த் திரமேற் கொண்டு
பதிவாகப் படிகமணி கையில் வாங்கிப்
புத்தியுடன் வாலகண பதியின் சூட்சம்
பூரணமாய் ஓம், றீங், கிலியென் றோதே! 229

ஓதியே ஆயிரத்தெண் ணுருவே செய்தால்
உத்தமனே கிருசனந்தான் உறுதி யாகும்
நீதியென்ற கிருசனந்தான் உறுதி யானால்
நினைத்தபடி நின்றுவிளை யாடும் பாரு
சோதியென நின்றுவிளை யாடு தற்குச்
சொல்லுகிறேன் வாலகண பதியி னாலே
ஆதியென்ற வினைகளெல்லாம் அகன்று போகும்
அடங்காத விஷங்களெல்லாம் அகலும் பாரே. 230

பாரான பார்தனிலே அஷ்ட கர்மம்
பத்தியுடன் செய்துவிளை யாடும் போது
வீரான கர்மமெல்லாம் கிருசனத்தி னாலே
விட்டகன்று போகுமடா விண்ணை நோக்கு
நேராக நோக்கிமனக் கண்ணால் நீயும்
நேர்மையுடன் குருபதியில் நின்றா யாகில்
பேறான வாலகண பதியி னாலே
பெருமையுடன் கிருசனத்தைப் பேணிப் பாரே. 231

வித்துவேஷனம்

பாரடா கிருசனத்தைச் சொன்னேன் மைந்தா
பதிவான வெசனத்தைப் பகரக் கேளு
காரடா தென்மேற்கு முகமாய்க் கொண்டு
கருணையுடன் விபூதிஉத் தளமாய்ப் பூசிச்
சாரடா வெள்ளைவஸ் திரமேற் கொண்டு
சங்கையுடன் பவளமணி கையில் வாங்கி
நேரடா உச்சிட்ட கணபதியின் சூட்சம்
நேர்மையுடன் சொல்லுகிறேன் நினைவாய்க் கேளே. 232

காணவே ஓம்ரீம் கிலியு மென்று
கருணையுடன் ஆயிரத்தெண் ணுருவே செய்தால்
பூணவே வித்துவெச ணம்தான் மைந்தா
பூரணமாய் நின்றுவிளை யாடும் பாரு
தோணவே நின்றுவிளை யாடுஞ் செய்தி
சொல்லுகிறேன் வேசனத்தை தியானம் செய்து
பேணவே பெண்களுக்குக் கடாட்சித் தாக்கால்
பெருமையுள்ள திருநீறால் கெற்ப மாமே. 233

மாறணம்

கெற்பமென்ற உற்பனந்தான் சித்தி யாகும்
கிருபையுட னுன்கரத்தா லேதா னாலும்
உற்பனமாய் உன்கரத்தால் தொட்டால் மைந்தா
ஒன்றுபத்தாய்த் தான்வளரும் உண்மை உண்மை
விற்பனவி தட்சணமா யிருந்து கொண்டு
வேதாந்த சற்குருவைத் தியானம் பண்ணி
நற்புடனே உச்சிட்ட கணபதியைத் தொழுதால்
நாலான காரியமும் சித்தி யாமே. 234

சித்தியுள்ள வேசனத்தைச் சொன்னேன் மைந்தா
தீர்க்கமுடன் மாறனத்தை செப்பக் கேளு
பத்தியுடன் தென்கிழக்கு முகமாய்க் கொண்ட
பாலகனே விபூதிஉத் தளமாய்ப் பூசி
வெத்திபெற வேங்கையா சனமேற் கொண்டு
வேகமுள்ள எட்டிமணி கையில் வாங்கி
முத்தியுட னுக்கிரக கணபதியின் சூட்சம்
மூர்க்கமாய் ஓம், றீங், நசியென் றெண்ணே. 235

எண்ணப்பா ஆயிரத்தெண் ணுருவே செய்தால்
என்னசொல்வேன் மாரணந்தான் சித்தி யாகும்
நண்ணப்பா மாரணந்தான் சித்தி யானால்
நாடுமுன்னே சகலபிணி மாண்டு போகும்
கண்ணப்பா தான்கடுத்தால் சத்துருவின் பேரைக்
கருணையுடன் தானினைந்து மாரணத்தை யோத
முன்னப்பா குண்ணியவன் மாண்டு போவான்
மூர்க்கமுடன் மாரணத்தை ஓதி ஓதே. 236

ஓதியொரு நாழிகையில் மைந்தா கேளு
உதரமதில் அக்கினிதான் உடனே பாஞ்சு
வீதியென்ற தெருத்தோறு மலைவான் மட்டை
விஞ்சையென்ற மாரணத்தை நெஞ்சுள் வைத்து
நீதியுடன் விபூதியைநீ கடாட்சித் தாக்கால்
நேர்மையுடன் சகலபிணி மாண்டு போகும்
சோதியென்ற உக்கிரகண பதியின் சூட்சம்
சுத்தமுடன் மாறணத்துக் குயிரு மாச்சே! 237

பேதனம்

ஆச்சப்பா மாரணத்தைச் சொன்னேன் மைந்தா
அரகரா பேதனத்தை அருளக் கேளு
காச்சப்பா வடமேற்கு முகமாய்க் கொண்டு
கருணையுடன் விபூதிஉத் தளமாய்ப் பூசி
மூச்சப்பா தானிறுத்திக் குருவைப் போற்றி
முத்திபெறக் கிஷ்டினா சனமேற் கொண்டு
பாச்சப்பா மூலகண பதியின் சூட்சம்
பக்தியுடன் ஓம்றீங் ஆமென் றெண்ணே. 238

எண்ணடா மிளகுமணி தானு மைந்தா
இன்பமுடன் ஆயிரத்தெண் ணுருவே செய்தால்
உண்ணடா யதினுடைய உறுதி யாகும்
உத்தமனே யதினுடைய சித்துக் கேளு
கண்ணடா தானறிந்து பேதனத்தை யோதிக்
கருத்துடனே சிவயோகத் திருக்கும் போது
நண்ணடா உன்ரூப மைந்தா கேளு
நாட்டமுடன் விதவிதமாய்த் தோணும் பாரே. 239

பாரப்பா புலத்தியனே சொல்லக் கேளு
பத்தியுடன் பேதனத்தைத் தியானம் பண்ணி
நேரப்பா நின்றபிணி யாளர் கையில்
நிச்செயமாய் விபூதியைநீ கடாட்சித் தாக்கால்
சாரப்பா சுரதோஷ வீக்க மெல்லாம்
சணத்திலே பேதலிக்கும் விருது போடு
தேரப்பா மூலகண பதியி னாலே
தீர்க்கமுடன் பேதனந்தான் செம்மை யாமே. 240

செம்மையுடன் அஷ்டகர்மம் எட்டுக் குந்தான்
தீர்க்கமுடன் அஷ்டகண பதியின் சூட்சம்
நன்மையுடன் சொன்னனடா நயந்து பாரு
நாதாந்தப் புலத்தியமா ரிஷியே அய்யா
உண்மையுடன் அஷ்டதிசைக் கரசாய் நின்று
உகந்துவிளை யாடுதற்கு இதுவே சூட்சம்
தன்மையுடன் சூட்சமதிற் சாட்சி யாகத்
தானிருந்து அஷ்டகர்மந் தான்தா னாமே. 241

அஷ்டகணபதி

ஆமப்பா அஷ்டதிசைக் கரசாய் நின்று
அருமையுள்ள புலத்தியனே சொல்லக் கேளு
ஓமப்பா ஆதிகண பதிதா னொன்று
உறுதியுள்ள மகாகண பதிதா னொன்று
தாமப்பா நடனகண பதிதா னொன்று
சங்கையுள்ள சத்திகண பதிதா னொன்று
நாமப்பா சொல்லுகிறோம் நன்றாய்க் கேளு
நன்மையுள்ள வாலகண பதிதா னொன்றே. 242

ஒன்றான உச்சிட்ட கணபதிதா னொன்று
உத்தமனே உக்கிரகண பதிதா னொன்று
நன்றான மூலகண பதிதா னொன்று
நாட்டமுடன் அஷ்டகண பதிக்கு மொன்றாய்க்
குன்றாத மூலமந்திர சூட்சந் தன்னைக்
குறிப்புடனே சொல்லுகிறேன் குணமாய்க் கேளு
நின்றாடு மூலமடா ஆதி மூலம்
நிலையறிந்து ஓம், கிலி, அங், உங் கெண்ணே. 243

எண்ணமுட னிடதுகையில் விபூதி வைத்து
ஏகாந்த கணபதியின் சுளியை நாட்டிச்
சொன்னமொழி தவறாமல் சுடரைப் பார்த்துச்
சுத்தமுடன் ஓம், கிலி, அங், உங் கென்று
தன்னகமே சாட்சியதா யிருநூற் றெட்டுத்
தான்செபித்து விபூதியைநீ கடாட்சித் தாக்கால்
முன்னிறைந்த சற்குருவின் கடாட்சத் தாலே
மூர்க்கமுடன் தீருகிற வியாதி கேளே. 244

கேளப்பா சுரமுடனே சன்னி தீரும்
கேடான குன்மமுடன் காசந் தீரும்
சூளப்பா வஞ்சனையும் யேவல் தீரும்
சுருக்கான பலவிஷமுந் தோஷந் தீரும்
வாளப்பா கர்ப்பனொடு கெர்ப்ப ரோகம்
வயத்திலுள்ள திரட்சியெல்லாம் வாங்கிப் போகும்
ஆளப்பா அட்டதிசைக் கரசாய் நின்று
ஆதியென்ற பூரணத்தில் அணிந்து வாழே. 245

அஷ்டாங்க யோகம்

வாழடா அட்டகர்மம் சித்துச் சொன்னேன்
வரிசையுடன் அஷ்டாங்க யோகங் கேளு
ஆளடா ஏமமொடு நேமந் தானும்
ஆசனமும் பிறாணாயம் பிறத்தியா காரங்
காலடா தாரணையும் தியானம் மைந்தா
கருணையுள்ள சமாதுடனே யெட்டு மாச்சு
நூலடா தானறிந்து எட்டும் பார்த்தால்
நுடங்காமல் பூரணத்தில் நோக்க லாமே. 246

நோக்கடா ஏமவகை பதினொன் றாகும்
நுண்மையுடன் நேமமது வகைதான் பத்து
தாக்கடா ஆசனத்தில் வகைதான் கேளு
சங்கையுள்ள வகை அதுவும் ஒன்ப தாச்சு
தூக்கடா பிறாணாயம் வகைதான் அஞ்சு
சொல்லுகிறேன் பிறத்தியாகா ரம்வகை ஆறு
வாக்கடா தாரணையின் வகைதான் ஆறு
வரிசையுள்ள தியானமது வகைதான் பத்தே. 247

வகையான சமாதியது வகைதான் அஞ்சு
மார்க்கமுட னிதுவிபரம் வழுத்தக் கேளு
துகையான ஏமவகை பதினொன் றுந்தான்
சொல்லுகிறேன் புலத்தியனே நன்றாய்க் கேளு
தகையாதே அங்கிசெயஞ் சத்தியத்தி னோடு
தானான ஆத்திகமும் விறுமங் கேளு
நகையாதே ஆச்சரியந் தவிய னோடு
நன்மையுள்ள ஆச்சேப மச்சை தானே. 248

தானான மச்சையொடு திறிதி கூடந்
தன்மையுள்ள இதாகாரஞ் சவுசத் தோடு
வானான ஏமவகை பதினொன் றுந்தான்
மார்க்கமுடன் கண்டறிந்து வகையாய் நீயும்
ஊனான காயமதை அறிந்து கொண்டு
உறுதியுடன் அஷ்டாங்க யோகஞ் செய்தால்
தேனான அமுர்தரசங் கொள்ள லாகும்
சிவசிவா நேமமதைச் செப்பக் கேளே. 249

செப்புகிறேன் நேமவகை பத்துக் காண
சிவசிவா தவசோடு சந்தோ ஷந்தான்
ஒப்புகிறேன் ஆற்திகஞ்சந் தானத் தோடு
உற்றசிவ பூசையொடு சித்தாந்த சிராவணம்
அப்புகிறேன் சிவத்தோடு சிவமதிதான் மைந்தா
அருள்பெருகு விரதமொடு வகைதான் பத்து
துப்புரவாய் கண்டறிந்து சிவயோ கத்தைச்
சுகமான வகையுடனே அறிந்து பாரே. 250

ஆசனம்

அறிந்துபார்ஆ சனங்களொன்ப தையுங் கேளு
அப்பனே கொறத்திகங் கொளத்தி னோடு
விரிந்துபார் பற்பமொடு வீர மைந்தா
விசையான சிங்கமொடு பத்திரமு மைந்தா
பரிந்துபார் முத்தமொடு மயூர மைந்தா
பதிவாக நின்றசுகம் ஒன்ப தாச்சு
வறிந்துநன்றாய் ஒன்பதையும் கண்ணுள் கண்டு
வகையுடனே அஷ்டாங்க யோகம் பாரே. 251

பிராணயாமம்

பாரப்பா பிராணாய வகைதான் அஞ்சும்
பத்தியுடன் சொல்லுகிறேன் பதிவாய்க் கேளு
நேரப்பா ரேசகமும் பூரகமும் கும்பம்
நிசமான சவுபீசம் நிற்பீச மஞ்சும்
காரப்பா குருவருளால் கண்டு தேறிக்
கருணையுடன் பிராணாயக் கருவைக் கண்டு
தேரப்பா தேரிமனந் தெளிவாய் நின்று
சிவசிவா சிவயோக தீர்க்க மஞ்சே. 252

அஞ்சாம லாறுவகை பிறத்தியா காரம்
அப்பனே சொல்லுகிறேன் நன்றாய்க் கேளு
குஞ்சான சரீரமென்ற பிறத்தியா காரம்
குருவான இந்திரியம் பிறத்தியா காரம்
நெஞ்சான பிராணமென்ற பிறத்தியா காரம்
நிசமான கரணமென்ற பிறத்தியா காரம்
பஞ்சான காமியமாம் பிறத்தியா காரம்
பார்மகனே சறுவசங்கம் பிறத்தியா காரம் 253

காரமென்று பிறத்தியா கார மாறுங்
கருணையுடன் சற்குருவால் கண்ட றிந்து
வீரமென்ற மனதாலே யோகம் பாரு
வேதாந்த சாஸ்த்திரத்தை விரும்பிப் பாரு
சாரமென்ற அமுர்தரச பானங் கொள்ளு
சதாகாலம் பூரணத்திற் சார்ந்து நில்லு
பாரமென்ற மனம்சலித்து விட்டா யானால்
பத்திமுத்தி காணவெகு வறிதாம் பாரே. 254

தாரணை

பாரடா தாரணையி லாறுவிதங் கேளு
பதிவான பூததார ணைதா னொன்று
நேரடா பிறாணதார ணைதா னொன்று
நிசமான கரணதா ரணைதா னொன்று
தேரடா தெய்வதா ரணைதா னொன்று
சேர்ந்துநின்ற தத்துவதா ரணைதா னொன்று
காரடா பிரமதா ரணைதா னொன்று
கருணையுடன் ஆறுவிதங் கண்டு பாரே. 255

கண்டுபார் தியானவகை பத்துஞ் சொல்வேன்
கருணைவளர் சடாதார தியான மொன்று
நின்றுபார் தேகமென்ற தியான மொன்று
நிசமான மண்டலத்தில்தியான மொன்று
சென்றுபார் ருத்திரனார் தியான மொன்றே
சிவசிவா தேவாதி தியான மொன்றே. 256

ஒன்றாக விசுவமென்ற தியான மொன்று
உத்தமனே பிரணவத்தின் தியான மொன்று
நின்றாடு திரோதாயி தியான மொன்று
நிசமான தியானவகை பத்து மைந்தா
அண்டர்தொழும் சற்குருவைத் தியானம் பண்ணி
அகண்டபரி பூரணமாய் அறிவில் நின்று
நன்றாகச் சிவயோகத் திருந்து கொண்டால்
நாதாந்த முத்தரென நாடு வாரே. 257

சமாதி

நாடவே சமாதியஞ்சுஞ் சொல்லக் கேளு
நாதாந்த தத்துவலய சமாதி யொன்று
கூடவே சவ்விகற்ப சமாதி யொன்று
கூர்மையுள்ள நிறுவிகற்ப சமாதி யொன்று
தேடவே சஞ்சார சமாதி யொன்று
தீர்க்கமுள்ள ஆரூடச் சமாதி யொன்று
ஆடவே சமாதிவகை அஞ்சும் பார்த்து
அஷ்டாங்க யோகமென்ற தெட்டில் நில்லே. 258

நில்லப்பா அஷ்டாங்க மிம்மட் டாச்சு
நேரரிய ஏகமென்ற பத்துங் கேளு
சொல்லப்பா லட்சணத்தைச் சொல்கி றேன்கேள்
சுகமான நரர்மிருக பட்சி சென்மம்
விள்ளப்பா உந்தனுட சுகதுக் கம்போல்
மேன்மைபெறப் பார்க்கஅங் கிசையென் பார்கள்
நல்லப்பா சித்தாந்தி சொல்லுவது மைந்தா
நாட்டமுடன் வேதாந்தி சொல்லுவது கேளே. 259

கேளடாகை கலந்தபொறி வளியில் நின்று
கிருபையுடன் அகண்டமென்ற பூரணத்தை அய்யா
வாளடா அறிந்துபரி சின்ன னாகி
வகையான ஆதிவருணாச் சிரமத் தாலே
கேளடா விகற்பமெல்லாங் கண்டு தள்ளிக்
கூர்மையுடன் பாராமல் ஆங்கிசையாய்ச் சார்ந்து
மாளடா மயங்கிநின்ற பொய்யை விட்டால்
மகத்தான சத்தியந்தா னென்பார் தானே. 260

தானென்ற வஸ்துவையுந் தவிர வேறே
சாதகந்தா னில்லையென்று சத்தா னித்துப்
பானென்ற சத்தியமாய மவர்க்குக் காயம்
பத்தியுடன் சுத்தமதாய்ப் பதிவாய் நின்று
ஆனென்றே இருக்கிறதை ஆற்தீக மென்பார்
அனாதார சரீரத்தைச் சுபாவ மாகக்
கோனென்றுநிதானித்துப் பின்னே ஒன்று
கூறாதே யாற்தீக மொன்று சொல்லே. 361

சொல்லாத ருதுகால மில்லா நேரஞ்
சுகமான பெண்வெறுத்தால் பிரம மென்பார்
உள்ளான சரீரமே சுபாவ மாக
உத்தமனே லெட்சணமாம் விருக்தி யாலே
நல்லான பிரமமதே சுபாவ மென்று
நன்மையுட நிரந்தரமும் ஆலோ சித்தால்
வில்லான திதுபிரமஞ் சரீர மென்று
விரித்துரைப்பார் வேதாந்தி யறிவைப் பாரே. 262

பாரப்பா சித்தாந்தி சொல்லைப் பாரு
பதிவான சமுசார மாகா தென்பான்
நேரப்பா தன்னுடம்பில் வருத்தம் விட்டு
நிசமாகச் சுகம்வருத்தல் விதையந் தன்னில்
சாரப்பா தன்னைத்தம் வந்தா லுந்தான்
சாதகமாய்ச் சத்துருவுக் கிரமே செய்யில்
பேரப்பா ஆட்சேப மிதையென் பார்கள்
பேய்மக்கா ளிதுவல்ல சொல்லக் கேளே. 263

சொல்லக்கேள் வேதாந்த சாஸ்திரமே செம்மை
சுழன்றலைந்த சமயமெல்லாந் தொல்லை யென்று
அல்லக்கேள் திடம்படுதல் ஆட்சேப மாகும்
அடங்காத சத்துருவால் வியாதி பீடை
விள்ளக்கே ளிதுகளிலே புத்திமலை வத்து
விபரமுட னிருக்கிறதே சமய மென்பார்
சொல்லக்கோள் சுகதுக்க முதிரா பெந்தஞ்
செகமாய்கை மானாபி மானங் காணே. 264

காணடா அபிமானஞ் சொற்ப னத்தைக்
கசடான மனத்தாலே தாங்க லற்றுப்
பேணடா தொய்தநிலை பெற்றோ னாகில்
பெருகிநின்ற சமையமிதுதான் பிலமாய்ப் பாரும்
ஊணடா காரியத்தில் மனதிற் கோளை
உருகாமல் இருக்கிறதை ருத்தி யென்பார்
தோணடா வேதாந்தத் தாலே முத்தி
சுத்தமுடன் மனத்தொன்றா லில்லை தானே. 265

இல்லையடா இதைவிட்டால் முத்தி யென்று
ஏகாந்த எக்கியமா முனிதான் சொன்னார்
தொல்லையடா மற்றதெல்லா மென்று பூணச்
சுகமான திருத்தியென்ற திதுவு மாச்சு
கல்லையடா ஆகாரஞ் சுக்கில மைந்தா
கருணையுடன் இதாகார மென்பா ரய்யோ
அல்லையென்ற சொற்பனத்தில் அவத்தைகளைக் கண்டு
அடங்கிநின்றார் பிரபஞ்ச அகிலந் தானே. 266

அகிலமெல்லாந் தானாகி அசைவு மற்று
அகண்டபரி பூரணமா யிருந்தோம் நாம்தான்
தகிலமெல்லாம் உண்டசிவம் போலே நின்று
தன்னைப்போல் உறைப்பாகில் மிதாகா ரந்தான்
பகிலமென்ற பிரத்திகையும் நீர்தன் னாலே
பரவிநின்ற பாசத்தைப் பருவ மாக
ஒகிலமென்ற காமமொடு குரோதந் தன்னை
ஊச்சவுசம் பிறச்சவுசம் என்பார் காணே. 267

காணப்பா வேதாந்த சாரத் தாலே
காலமென்ற திருத்திகளைக் காணே னொன்றும்
வீணப்பா வந்ததில்லை போன தில்லை
வேதாந்தக் குருமுகத்தைத் தெளிந்து கொண்டு
தோணப்பா எக்காலம் வஸ்து தானாய்ச்
சுகமாக யிருப்பதுவே சவுச மாச்சு
ஆணப்பா ஏமமென்ற பதினொன்றுஞ் சொன்னான்
அறிந்துகொண்டு நேமமதை அருளக் கேளே. 268

அறிவான மறையினுள்ளே பிறிந்து தென்றும்
அப்பனே நிற்களமாஞ் சந்திரசய ணத்தை
நெறியான விரதமதாற் சரீரம் வத்தி
நேர்மையுடன் இருப்பதுவோ தவசென் பார்கள்
விரிவான சத்தியந்தா னென்ப தேது
விபரமில்லா பித்தையென்று சொல்வ தேது
சரியாக நானென்னப் பட்ட தாகும்
சங்கையுடன் நானென்ற சொல்தா னாகும். 269

சொல்லான நமக்குவந்த தொந்த மேது
சொத்தியந்தான் வந்தவகை யெதுதா னென்று
நல்லான வருத்தமதாய்ப் பார்த்துப் பார்த்து
நன்மையுட நிரந்தரமும் ஆலோ சித்துப்
பொல்லாத ஆனதெல்லாம் நிவர்த்தி பண்ணிப்
புத்தியுடன் திடப்படுத்தல் தவசாச் சப்பா
தள்ளாமல் கிடைத்தமட்டுஞ் சந்தோ சித்துத்
தன்மையுடன் இருப்பதுவே சந்தோசங் காணே. 270

காணடா பிரமாதி லோகத் துள்ளே
கலந்தசுராள் பீடமுதல் சிந்தித் தெண்ணித்
தோணடா நாகம்போல் வெறுப்பு வந்து
சொற்பனம்போல் அசத்தென்று தூரத் தள்ளி
ஊணடா உண்மையென்ற வேதாந் தத்தை
உணர்ந்துசச்சி தானந்த மயமாய் நின்று
பூணடா தடையற்றுத் தெளிந்து நின்றால்
புத்தியுடன் ஆனந்த வடிவு மாமே. 271

வடிவாக யிருப்பதுவே சந்தோச மாகும்
வரிசையுடன் ஆகமபு ராணந் தன்னைப்
படிவாக விட்டுவிட்டு நின்று கொண்டு
பத்தியுடன் வேதாந்தப் பொருளென் றெண்ணி
முடிவாக அறிவுதித்து அடிமேல் நின்று
முன்பின்னாய் ஆடுகிற முறையீ தென்று
அடியார்கள் சொல்லுகிற கருவைக் கேட்டு
அவர்சொல்லும் பூரணமும் அறிந்து பாரே. 272

அறிந்துகொண்டால் ஆற்தீகம் அதுவே யாச்சு
அருள்பெருகத் தேடுகின்ற பொருளை எல்லாம்
தெரிந்துகொண்டு புண்ணியமாங் கால தேசஞ்
செயலறிந்து கொடுப்பதுவே தான மென்பார்
வறிந்திநின்று குருசொல்லைத் தன்னுள் கொண்டு
மார்க்கமுடன் முத்தனாய் மனமொன் றாகச்
சொரிந்துமிகத் தன்னுடைய சொத்தை எல்லாஞ்
சுகமாகக் குருபதத்தில் தியாகம் பண்ணே. 273

பண்ணடா சிவனயன்மால் வேதி யார்க்கும்
பரிவான அரதேசி பரதே சிக்கும்
நண்ணடா சத்திரியர் வசிய ரோடு
நயம்பெறவே தரணிதனிற் பிராணிக் கெல்லாம்
உன்னியே தானதர்மஞ் செய்யென் றேதான்
உத்தமனே உலகத்தோர் சொல்வா ரய்யா
துன்னிய தன்தேகஞ் சுகபோகம் போலே
சுகமாகச் சகலமெல்லாந் துலங்கக் கேளே. 274

கேளடா சகலசெந்தும் பொசித்த தெல்லாங்
கிருபையுடன் நமக்கென்றே திருத்தி கொண்டு
நாளடா ஒருமித்தால் ஈசுபரற்குப் பூசை
நன்மையுடன் ஆச்சுதென்று அறிந்து கொள்ளு
வாளடா சாத்திரத்தின் பயனோ டய்யா
வரிசையுடன் கேட்கிறதே சிரவண மாகும்
ஆளடா சாஸ்திரங்கள் எல்லாம் விட்டு
அசைந்தாடும் விருத்தியெல்லாம் அடித்துத் தள்ளே.275

தள்ளியுந்தன் நிழல்போலே குருவின் பின்னே
சச்சிதா னந்தமயந் தானென் றெண்ணித்
தெள்ளிமையாய்த் தெளிவிக்குஞ் சித்தாந் தத்திற்
சேர்ந்துகொண்டு கேட்கிறதே சிரவணமு மாகும்
நள்ளியமாய்ப் பிரகிருதி நிவர்த்தி பண்ணி
நன்மையுடன் இருக்கின்ற பிறசைக் கெல்லாம்
அள்ளிமனப் பூரணமே தெய்வ மென்று
அறிவிக்கும் புத்தியடா சிரவணமு மாமே. 276

ஆமப்பா அசத்தான யாப ரத்தில்
ஆதாரம் வெகுகோடி அமைந்தா லுந்தான்
தாமப்பா அதுக்குமேல் அபேச்சை விட்டால்
சங்கையுடன் மரியாதி லெட்சை யென்பார்
தாமப்பா கெட்டிருந்த ஞான மெல்லாம்
சங்கையில்லா நிலைகுலைந்து தானே சிக்கி
நாமப்பா வாசனையாம் பெண்டீர் பிள்ளை
நன்மையுள்ள பாசமெல்லாம் லெட்சித் தெண்ணே.277

எண்ணியதோர் மாயத்தில் வந்தா லுந்தான்
என்மகனே யளிச்சகத்தி லிருந்து கொண்டு
துன்னியந்த சித்தாந்த நிலையில் நின்றால்
துலங்கிநின்ற லெட்சையென்று சொல்ல லாகும்
உன்னியந்தக் கோளைவிட்டுத் தெளிவு வந்தால்
உத்தமனே மதியென்பார் உண்மை யாகக்
குன்னியந்த வேதாந்த நிலையில் நின்று
குருவான பூரணத்தைக் குவிந்து நோக்கே. 278

நோக்கென்று சொன்னதுவே நோக்க நோக்கும்
நோக்கினால் மதியென்று சொல்ல லாகும்
வாக்கென்று குருசொன்ன மந்திரத்தைச் செபித்து
மார்க்கமுடன் நின்றதினால் சிவம தாச்சு
போக்கென்ற மனதற்று வேதாந்தம் பார்த்துப்
புத்தியுடன் பூரணமாய்த் தள்ளி யெல்லாம்
தூக்கென்றீர் மரணமுற்றால் சிவம தாச்சு
சுகமாக மற்றதெல்லாம் சிவமல்ல பாரே. 279

பாரப்பா குருசொன்ன சாத்திரத்தின் படியே
பத்தியுடன் நடக்கிறதே விரத மென்பார்
நேரப்பா எந்தெந்த காரியங்கள் வந்தும்
நேர்மையுள்ள துக்கம்வந்தும் நாம்பிரம மென்று
தேரப்பா நிரந்தரமும் வேதம் பார்த்துச்
செம்மையுடன் இருப்பதுவே விரத மென்பார்
சாரப்பா நேமமென்ற பத்துஞ் சொன்னேன்
சங்கையுடன் இருவகையுந் தானே காணே. 280

ஆசனவிதி

காணவே இருவகையும் பாரா னாகில்
கலங்கிமனஞ் சிவரினில்சித் திரம்போ லாகும்
பூணவே அடிப்படையை வைக்கு முன்னே
பூட்டுவென்ற சுளிகைக்கும் ஒக்கும் ஒக்கும்
பேணவே காயசித்தி பண்ணு முன்னே
பேரான சதிரயுகம் கண்ட தொக்கும்
தோணவே இடத்தோடே முத்தி காணான்
சொக்கினபின் முத்தியென்ற சொல்லுங் காணே. 281

காணடா ஆசனத்தை விரித்துச் சொல்வேன்
கருவான கொற்றீக ஆசனத்தைக் கேளு
தோணடா முழந்தாள்தான் குனைச்சி ரெண்டில்
சுகமான பதமிருக்கக் கொற்றீக மாச்சு
பூணடா சிங்காசனத்தைக் கேளு
பூரணமாய் ஒட்டியாணம் பெந்தம் பண்ணிப்
பேணடா முழங்கால்மேல் கரங்கள் நீட்டிப்
பிராணனென்ற தாரணையைப் பாரு பாரே. 282

பத்திராசனம்

பாரப்பா பத்திராசனத்தைக் கேளு
பதிவாகத் தானிருந்து காலை ரெண்டும்
காரப்பா புறங்காலைக் கையாற் கட்டிக்
கண்ணறிந்து தானோக்க ஆசனமு மாச்சு
சாரப்பா முத்தான ஆசனத்தைக் கேளு
சங்கையுடன் கறடுமேற் கறடு போட்டுச்
சேரப்பா குதத்துக்குள் குதிங்கால் வைத்துச்
செம்மையுடன் தானிருக்குந் திறந்தானாமே. 283

கோமுகாசனம்

ஆமப்பா கோமுகாசனத்தைக் கேளு
அங்கமுடன் முழங்கால்மேல் முழங்கால் போட்டுத்
தாமப்பா தாள்ரெண்டில் கையை ஊன்றித்
தாமிருக்கக் கோமுகாசனம தாச்சு
நாமப்பா வீரமென்ற ஆசனத்தைக் கேளு
நாட்டமுடன் இடக்கால்மேல் வலக்கால் போட்டு
ஓமப்பா கோமுகம்போ லிருந்து கொண்டால்
உத்தமனே வீரமென்ற உறுதி பாரே. 284

பத்மாசனம்

உறுதியுள்ள பத்மாச னத்தைக் கேளு
உண்மையுடன் பாதம்ரெண்டும் துடைமே லேத்திச்
சுருதியுடன் கைரெண்டு முழந்தாளில் வைத்துச்
சுத்தமுடன் தன்னசுத்தைச் சுகமாய்ப் பார்க்கப்
பகுதியுள்ள பற்பமா சனமி தென்று
பதிவான வேதாந்தப் பெரியோர் எல்லாம்
வருதியுடன் யோக்கியமா முனிதான் சொல்ல
மகத்தான ஆசனத்தை மகிழ்ந்தார் காணே. 285

மயூராசனம்

காணவே மயூரஆ சனத்தைக் கேளு
கருணையுடன் கைரெண்டும் தரையில் ஊனி
ஊணவே முழங்காலை உந்தியிலே வைத்து
உகந்துநின்ற சிவதவம்போ லுறுதி கொள்ளு
பேணவே சுகமுற்ற ஆசனத்தைச் சொல்வேன்
பேணிமனங் கொண்டபடி யிருக்க நன்று
பூணவே ஒன்பதுக்கும் விபரஞ் சொன்னேன்
பூரணமாய்ப் பிராணாயப் பொருளைக் கேளே. 286

ரேசகபூரககும்பகம்

பொருளான ரேசகந்தான் விடுவ தப்பா
புத்தியுடன் பூரகந்தா னுள்ளே வாங்கல்
அருளான கும்பகந்தான் அண்டத் தேறல்
அரகரா சவுபீச மந்திர மார்க்கந்
திருவான நிற்பீச மந்திரத்தை விட்டுச்
சிவசிவா வெளிதனிலே பூரித் தேகல்
உருவாக அஞ்சும்வெளி யாகச் சொன்னேன்
உத்தமனே ஆசனத்தி லிருந்து பாரே. 287

பாரப்பா மாத்திரைதான் முப்பத்தி ரண்டு
பரிவாகப் பூரிப்பாய் மூலத் துள்ளே
சாரப்பா மாத்திரைதான் அறுபத்து நாலுஞ்
சங்கையுடன் கும்பித்துப் பாரு பாரு
காரப்பா மாத்திரைதான் பதினா றாகக்
கனிவாக ரேசிப்பாய் உதடா டாமல்
நேரப்பா இம்முறையைப் பழக்கம் பண்ணி
நேர்மையுடன் பிரமதல மறிந்து ஊதே. 288

அறிந்து பிரம்ம நிலையறிந்து நன்றாய் ஊது
அதன்பிறகு விஷ்ணுவிலே யமர்ந்து யூது
தெரிந்துருத்திர நிலையறிந்து திறமா யூது
சிவசிவா மயேஸ்பரத்தில் சேர்ந்து யூது
வருந்திமன நிலையறிந்து மைந்தா மைந்தா
மகத்தான சதாசிவத்தில் வந்து கூடி
விரிந்துதலந் தனையறிந்து யூதி யேற
விள்ளுகிறேன் பிராணாயம் ஒன்ற தாச்சே. 289

ஆச்சப்பா பிராணாயம் அறிந்து செய்தால்
அனேகமென்ற பாவமெல்லாம் அகன்று போகும்
மூச்சப்பா பிராணாயம் செய்யச் செய்ய
முக்யமுடன் தேகமதில் வேர்வை கொள்ளும்
நீச்சப்பா மும்மலமுங் கழிந்து போகும்
நேர்மையுட னாடியெல்லாஞ் சித்தி யாகும்
காச்சப்பா திசைநாதங் காதில் கேட்கும்
கருணையுடன் பிராணாயக் கருவைக் கேளே! 290

பச்சம் எட்டுவகை தெரிசனை

கேளப்பா எட்டுவகைப் பருவ முண்டு
கிருபையுள்ள புலத்தியனே சொல்லக் கேளு
காலப்பா கழன்றுவெகு வேர்வை யானால்
கருத்துடனே தம்பிக்கும் ரெண்டாம் பச்சம்
வாளப்பா அக்கினிதான் சொலித்து நின்று
மகத்தான தீபனமா மூன்றாம் பட்சம்
கோளப்பா இல்லாமல் வாசி யேறிக்
குருபதியில் தீபமுண்டாம் நாலாம் பட்சம் 291

பட்சமுடன் தன்னறிவே சாட்சி யானால்
பரிந்துபிர காசிக்கும் அஞ்சாம் பட்சம்
இச்சையுடன் குண்டலியில் சத்தங் கொள்ளும்
என்மகனே சொல்லுகிறே னாறாம் பச்சம்
அச்சமற ஏழுக்குள் மைந்தா கேளு
ஆகாச கெவுனமடா அதிக மாகும்
மெச்சவே தூரதிர்ஷ்டி யறியப் பண்ணு
மெய்ஞ்ஞானம் எட்டினுட மேன்மை காணே. 292

காணவே எட்டினிலே திட்ட மானால்
கர்மமென்ற தீவினைகள் காணா தோடும்
பூணவே ஆதாரஞ் சித்தி யாகும்
பூரணமுங் காரணமும் பொருந்து மய்யா
தோணவே சுருபமது சோதி யாகும்
சுகசீவப் பிராணகளை சொலிக்கும் பாரு
பேணவே பிராணாயம் பிலத்து தானால்
பேரண்டஞ் சித்தண்டம் தான்தா னாச்சே! 293

ஆச்சப்பா சொல்லுகிறேன் பிரத்தியா காரம்
அப்பனே வாசனையின் வளியில் சென்று
மூச்சப்பா நடத்திவிக்கு மந்திரி யப்பூ
முனையறிந்து மறிக்கிறதே பிரத்தியா காரம்
நீச்சப்பா நிலையான பிரத்தியா காரம்
நிசமாகும் ஆறுவித முண்டு பாரு
பேச்சப்பா பேச்சறிந்து ஆறுவிதந் தன்னைப்
பிலமான புலத்தியனே சொல்லக் கேளே. 294

சொல்லக்கேள் சரீரமென்ற பிரத்தியா காரம்
சுகமாகச் சமாதியிலே இருத்த லொன்று
விள்ளக்கேள் அறிவென்ற சிவம தொன்று
விபரமுடன் கண்டுணர்ந்து மேன்மை யாகி
அல்லக்கேள் நாடிசுத்தி யான பின்பு
அப்பனே இளமையெல்லா மளைப்ப தென்று
சொல்லக்கேள் ரெண்டுவிதங் கண்டு கொள்ளும்
சிவசிவா இந்திரியச் செயல்தான் பாரே! 295

பாரப்பா இந்திரியந் தன்தன் போக்காய்ப்
பதிவிட்டுப் போகாமற் சமாதியிலே அழைத்து
நேரப்பா பூட்டறுத்து நின்றால் மக்காள்
நேர்மையுடன் பிராணனென்ற பிரத்தியா காரஞ்
சேரப்பா நாடிசுத்தி செய்த பின்பு
சிவசிவா உந்திமுதற் புருவந் தொட்டுக்
காரப்பா தோத்திரமுந் தொக்குச் சச்சுக்
கருவான சிங்நுடனே அக்கிருணம் பாரே! 296

காணவே அடிநாக்குக் கண்டம் நெஞ்சு
கருவான உதிரமொடு நரம்பு நாபித்
தோணவே துடைமுழங்கால் பாதங் கேளு
தொடுத்துநின்ற அங்குஷ்டங் களிலே மக்காள்
பூணவே பிராணனைத்தான் தானம் விட்டுப்
புத்தியுடன் அழைக்கிறது தலைகீ ழாகப்
பேணவே பிராணமென்ற பிரத்தியா காரம்
பிரதான மானநிலை பேசு றேனே! 297

பேசுறேன் அந்தரங்க கரணந் தன்னைப்
பிரவஞ்ச மாய்கைதனை நீக்கி மைந்தா
தேசுவென்ற காரியமாம் வஸ்து தன்னைத்
தெளிந்துகொண்டு சங்கற்ப விகற்ப மெல்லாம்
ஆகவென்றே மறைப்பித்துப் பிராண தாரை
அங்கமுடன் பண்ணுகிற யோகந் தன்னில்
வீசுறேன் ஆகமென்ற வேதாந் தத்தை
விபரமுடன் ஞானமதில் நிறுத்தல் நன்றே! 298

நன்றான காமியந்தான் பிரத்தியா காரம்
நன்மையுடன் தனதான்யம் பொன்னும் மண்ணும்
நின்றாடும் புத்திரருஞ் சகலவஸ்துங் கண்டால்
நேர்மையுடன் நாகம்போல் காணு மக்காள்
ஒன்றான வயிராக்கியம் வந்து தானால்
உத்தமனே விடுதல்மெத்த உசத்தி நன்று
பன்றான சருவாங்கம் பிரத்தியா காரம்
பதிவிதுவாம் வேதாந்தப் பலனைக் காரே! 299

காரப்பா சாட்சியெங்கும் நாமாய் நின்றோம்
கவிழ்ந்துநின்ற மாயமெல்லாம் நமக்குங்கீழே!
சாரப்பா நிரந்தரமும் உறைந்து நின்று
சகலபிர வஞ்சமெல்லா மிருத்து வென்றும்
நேரப்பா நின்றவனே அவன்தான் முத்தன்
நினைவாக ஆறுவகை அறிவித் தேனான்
பேரப்பா ஆறுவிதத் தாரணையைச் சொல்வேன்
பெருகிநின்ற பூதமஞ்சும் சமத்தாய்க் கேளே. 300

கேளப்பா சரீரத்தில் பஞ்ச பூதம்
கிருபையுடன் ஆடுகிற தானத் துள்ளே
சூளப்பா மண்டலத்தில் வர்ண மூர்த்தி
சுகமாகத் தானிருத்தல் பிராணா தாரை
வாளப்பா பதிவான மூலத் துள்ளே
வணக்கமுடன் பிராணனைத்தான் தரிக்கப் பண்ணி
ஆளப்பா சிரமத்தோ டுண்ணப் பண்ணும்
அப்பனே ராப்பகலாய்க் காணுங் காணே! 301

காணப்பா குருவசனந் தெளிந்து கொண்டு
கலந்துநின்ற மாய்கையொடு மாயா வின்பம்
பேணப்பா சைதன்யம் இந்த மூன்றும்
பிலமான ஆகாசம் போலே பாரு
தோணப்பா மறைந்திருக்கக் கண்டா லுந்தான்
துகளறுத்துத் தீர்க்கமுடன் முத்தி யாகப்
பேணப்பா அறிவுடனே என்னே ரந்தான்
பிலமாக நிற்கிறதோர் திரந்தான் பாரே! 302

பாரப்பா லோகமதிற் பிரம்மநா மென்றும்
பதிவாக நிச்சயித்து மனது பூண்டு
நேரப்பா அறிவல்லோ தாரணையு மாச்சு
நிலையான தியானமதி நேர்மை கேளு!
காரப்பா அகிலமெல்லாம் போத மாகக்
கண்டதோர் சிடமெல்லாம் அகண்ட மாகி
நேரப்பா வெளியெல்லாம் நிர்மலமாய்க் காண
நேர்மையுள்ள தியானமது நினைவாய்க் காணே! 303

பிரம்ம தியானம்

காணவே அமரபட்சம் பூர்வபட்சம் தன்னில்
கலந்துநின்ற ஆசனத்திற் கருணை வைத்துப்
பூணவே குண்டலமுங் கிரிடஞ் சாத்திப்
புகழான சரசுபதியும் வாம பாகம்
பேணவே பரிவாரஞ் சூழ்ந்து நிற்கப்
பெருமையுடன் இருதயத்தில் தியானம் பண்ணித்
தோணவே மானதமாய்ப் பூசை செய்தால்
சுத்தமுள்ள தியானமடா சுகமாய்ப் பாரே! 304

விஷ்ணு தியானம்

பாரப்பா மாலுடைய தியானங் கேளு!
பத்தியுடன் பச்சைவர்ண ரூப மாக
நேரப்பா சங்கொடுசக் கரமு மாக
நிசமான பற்பமொடு கரங்கள் சாத்திக்
காரப்பா குண்டலமும் கிரீடம் வைத்துக்
கண்ணிறைந்த முத்திரையுந் துளசி மாலை
சேரப்பா லெட்சுமியும் வாம பாகந்
தீர்க்கமுடன் தியானிக்கத் தியான மாச்சே! 305

ருத்திர தியானம்

ஆச்சப்பா ருத்திரனைத் தியானம் பண்ணி
அரகரா அஞ்செழுத்து ஆயுதங்க ளோடு
காச்சப்பா குண்டலமுங் கிரீடம் வைத்துக்
கருணையுள்ள ருத்திரரும் வாம பாகம்
பேச்சப்பா தானிருத்தி மவுன மாகப்
பெருமையுடன் இருதயத்திற் பேணிப் பார்க்க
மூச்சப்பா அடங்கிநின்ற தியான மாச்சு
முத்தியுடன் தன்னறிவா யிருந்து பாரே. 306

மயேஸ்வர தியானம்

இருந்துகொண்டு மயேஸ்வரனைத் தியானம் பண்ணி
இருளகன்ற வெளிபோலே இன்பங் கொண்டு
வருந்திநின்ற குண்டலமுங் கிரீடஞ் சாத்தி
மகத்தான மயேஸ்வரியை வாமம் வைத்துச்
செறிந்தமூர்த்த பூரணமாய்ப் போதங் கொண்டு
சுகசீவ பிராணகலைசுத்த மாக
அருந்தவமா இருதயத்தில் நினைக்க மைந்தா
அப்பனே மயேஸ்வரனார் தியானங் காணே. 307

சதாசிவ தியானம்

காணவே சதாசிவனார் தியானங் கேளு
கருணையுடன் பஞ்சவர்ண ரூப மாகத்
தோணவே மனோன்மணியும் வாம பாகஞ்
சுகமாகத் தேவகணஞ் சூழ்ந்து நிற்கப்
பேணவே இருதயமாங் கமலந் தன்னில்
பிரியமுடன் தானினைந்து தியானித் தாக்கால்
பூணவே நினைத்தவண்ணங் கண்ணில் காணும்
புனிதமுள்ள தியானமிதைப் பூண்டு பாரே! 308

மண்டலா தியானம்

பாரப்பா இப்படியே ஆறுவகை தியானம்
பதிவான மண்டலத்தில் மூன்றுவகைத் தியானம்
நேரப்பா தானிருந்து உபாசிப் பார்கள்
நேர்மையுள்ள தேவாதி தியான மாச்சு
பேரப்பா விசுவமென்ற தியானஞ் சொல்வேன்
விளங்கிநின்ற பிரபஞ்சந் தான்தா னென்று
காரப்பா அண்டவெளி ரூப மாகக்
கருணைபெறத் தானிருக்கத் தியான மாச்சே. 309

சமாதி அஞ்சு

ஆச்சப்பா அத்தொய்த தியானங் கேளு
அண்டரண்ட புவனமெல்லாந் தாமென் றெண்ணி
மூச்சப்பா சகலவுயிர் தாமென் றெண்ணி
முடிவில்லா மந்திரமுந் தாமென் றெண்ணி
நீச்சப்பா பஞ்சகர்த்தாள் தாமென் றெண்ணி
நிசமான பரமவெளி தாமென் றெண்ணி
பேச்சப்பா பேசாத மவுனந் தானாய்ப்
பேரண்டத் துட்பொருளாய்த் தியானஞ் செய்யே. 310

தத்துவலய சமாதி அஞ்சு

செய்யப்பா தியானமது பத்துஞ் சொன்னோம்
சிவசிவா சமாதிஅஞ்சும் செப்பக் கேளு
மெய்யப்பா தத்துவலய சமாதி மைந்தா
விளங்கிநின்ற தத்துவத்தை நன்றாய்ப் பார்த்துப்
பொய்யப்பா வென்றறிந்து புருவ மேவிப்
பூரணமாய்க் கற்பூர தீபம் பார்த்து
மையப்பா மய்யமதில் நின்றா யானால்
மகத்தான தத்வலய சமாதி யாச்சே! 311

சவ்விகற்ப சமாதி

ஆச்சப்பா தத்வலய சமாதி சொன்னேன்
அரகரா சவ்விகற்ப சமாதி கேளு
நீச்சப்பா நிலையறிந்து வாசி யாலே
நிறைந்தபரி பூரணமாய்த் தீபம் பார்க்கில்
காச்சப்பா கருவிகர ணாதி யென்ற
கசடறுத்து வெளியொளியாய்க் கண்டு கொண்டால்
பேச்சப்பா சவ்விகற்ப சமாதி யாச்சு
பிலமான நிருவிகற்ப சமாதி கேளே! 312

நிருவிகற்ப சமாதி

கேளடா நிருவிகற்ப சமாதி தன்னைக்
கிருபையுள்ள புலத்தியனே சொல்லக் கேளு!
வாளடா தன்னறிவே சாட்சி யாக
மகத்தான அண்டமெல்லாந் தான்தா னாகக்
காணடா சகலவஸ்தும் போத மாகக்
கண்டதுவும் கேட்டதுவும் மாய மாக
ஆளடா ஆனந்தங் கொண்டா யானால்
அரகரா நிருவிகற்ப மதுதான் காணே. 313

சஞ்சார சமாதி

காணவே நிருவிகற்ப சமாதி சொன்னேன்
கருணையுள்ள சஞ்சார சமாதி கேளு!
தோணவே அண்டசரா சரங்க ளெல்லாம்
சுகமாக வேறல்ல நாமென் றெண்ணிப்
பேணவே தானிருந்து கிரக சூட்சம்
பிரியமுடன் கண்டறிந்து வாசல் பூட்டி
ஊணவே நடக்கும்பே திருக்கும் போது
ஒடுக்கமுடன் மவுனமதா யுலாவு வாயே! 314

வாயான மேல்வாசல் பூட்டும் போது
மகத்தான தீட்டியென்றும் ஒடுக்க மாச்சு!
மாயாத ஒடுக்கமதி லொடுங்கி யந்த
மகத்தான அனுக்கிரக வலஞ்சென் றேறித்
தாயான கிரகமதே போத மாகத்
தானிருக்கச் சஞ்சார சமாதி யாச்சு
தோயாத சஞ்சார சமாதி கொண்டு
சுகமான ஆரூடச் சமாதி காணே! 315

ஆருட சமாதி

காணவே ஆருட சமாதி தன்னைக்
காலறிந்து புலத்தியனே சொல்லக் கேளு!
பூணவே தத்வலய சமாதி பெற்றுக்
புகழான சவ்விகற்ப சமாதி பெற்றுப்
பேணவே நிருவிற்ப சமாதி பெற்றுப்
பிலமாகச் சஞ்சார சமாதி யாகித்
தோணவே யாருட சமாதி கொண்டால்
சுத்தமென்ன அசுத்தமென்ன ரெண்டு மொன்றே!316

ஒன்றான ஆருட சமாதி கேளு
உருமையுள்ள புலத்தியனே அருமை யாகக்
கண்டதொரு காட்சியெல்லாம் அநித்ய மென்றுங்
கால்மடித்து நடுவேறி முடிமே லாக
விண்டதொரு பஞ்சறிவை யறிவால் நீக்கி
வேதாந்தப் பரவெ ளியில் வேளிதன் னோடே
நின்றாடிக் கொண்டுசிவ யோகி யாகி
நின்றதினா லாருட சமாதி யாச்சே. 317

ஆச்சப்பா சமாதியஞ்சும் நன்றாய்ச் சொன்னோம்
ஆதிதொடுத் தந்தவரை நன்றாய்ப் பாரு
பேச்சப்பா தானறிந்து நன்றாய்ப் பாரு
பெருகிநின்ற அஷ்டாங்கந் திட்டம் பாரு
மூச்சப்பா முன்னிலையாய் நிறுத்திக் கொண்டு
முத்தியுள்ள நவக்கிரக சூட்சங் கண்டு
பாச்சப்பா அனுக்கிரக பதியில் நின்று
பாதாதி கேசமுதல் தன்னைப் பாரே. 318

தன்னைத்தான் தானறிந்து பார்க்கும் போது
தத்துவமாய் நின்றதொரு தொண்ணூத் தாறும்
எண்ணைத்தான் துலையாத ஆசா பாசம்
என்னசொல்வேன் பஞ்சகர்த்தா பஞ்ச பூதம்
கண்ணைத்தான் தானறிந்து கண்ணின் கண்ணும்
கலையான ரவிமதியுஞ் சுடர்கள் மூன்றும்
உன்னத்தா னறிந்துமன துன்னிப் பார்க்க
உண்மையென்ற நிச்சயத்தை யுரைக்கொண் ணாதே.319

ஒண்ணான நிச்சயத்தை உரைக்க வென்றால்
உண்ணாக்கும் அண்ணாக்கும் ஒன்றுங் காணேன்
கண்ணான பேரொளியை என்ன சொல்வேன்
கருப்பல்ல வெளுப்பல்ல சிவப்பு மல்ல
விண்ணான நீலமல்ல பச்சை யல்ல
விளிம்புதற்கு அரிதான அண்டத் துள்ளே
பண்ணான பாழ்விட்டு இருளுக் குள்ளே
பாய்ந்துதன்னைப் பார்க்கவெல்லாம் இருளாய்ப்போச்சே!

இருளான இருளினுட ஒளியைப் பார்க்க
என்னசொல்வேன் அதினுடைய இன்பந் தன்னை
மருளான மனம்நிறுத்தி மனக்கண் கொண்டு
மாசற்ற இருளொளியை மகிழ்ந்தோர் தானும்
அருளான பேருலகில் தானே தானாய்
அமர்ந்துவெளி தனையறிந்து ஒளியைப் பற்றி
வெருளாமல் இருளருளிற் றானே தானாய்
விளங்குமருள் பொருளெனவே மேவு வாரே! 321

மேவுகின்ற ஆதியந்தம் உதிக்கு முன்னே
மெய்ஞ்ஞான இருளதிலே அருளுண் டாச்சு
தாவுகின்ற அருளதிலே ஒளியுண் டாச்சு
தன்னொளிவு தானதினால் வெளியுண் டாச்சு
கூவுகின்ற பரவெளியிற் சதாசி வன்றான்
கூர்மையுடன் பேரண்டம் படைத்து நின்றார்
பாவுகின்ற மயேஸ்வரனார் சத்தத் தோடே
பதிவான வாய்வுதனைப் படைத்தார் பாரே 322

பஞ்சகர்த்தா படைப்பு மார்க்கம்

பாரப்பா ருத்திரனார் தவத்தால் வந்த
பக்குவமாய் அக்கினியைப் படைத்து நின்றார்
பேரப்பா பெற்றதொரு பிரமா வுந்தான்
பெருகிநின்ற பூமிதனைப் படைத்தா ரையா
நேரப்பா திருமால்தான் கருணை யாலே
நிச்சயமாய்ச் செலமதனைப் படைத்து நின்றார்
காரப்பா முன்சொன்ன சத்திசிவம் ரெண்டும்
கருணையுடன் ரவிமதியும் ஆனார் தானே 323

தானேதா னாகிநின்ற எழுவர் தானுந்
தனித்துநின்ற பராபரமாஞ் சுளியி னுள்ளே
வானேதான் கெதியெனவே சகல சித்தும்
வருந்திவிளை யாடிமிக வான முட்டி
ஊனேதா னெனவேமுப் பாழுக் கப்பால்
ஒடுங்கிநின்ற பாழ்வீட்டுக் குள்ளே சென்று
நானேதான் நீயெனவே அந்த காரம்
நலமான இருளருளில் நாட்டம் பாரே! 324

பாரப்பா இருளொளியும் வெளிமூன் றய்யா
பதிவான தேகமதில் கண்டு கொள்ளு
சாரப்பா இம்மூன்றின் நிலையைச் சொல்வேன்
சரீரமென்ற சத்தியடா இருள்தா னப்பா
நேரப்பா ஒளிவான அறிவின் கண்ணு
நிசமான வெளியதுதான் மாயா மாயம்
காரப்பா மாய்கைவெளி கண்ணே சூட்சங்
கருவான கண்மறைந்தா லிருள்தான் காணே! 325

காணப்பா இருளதினால் ஒளிதான் தோற்றங்
கருவான ஒளியதனால் வெளிதான் தோற்றம்
பேணப்பா வெளிஒளியும் எதனா லாச்சு?
பெருகிநின்ற இருளதிலே உண்டாச் சப்பா!
ஊணப்பா தானொடுங்கும் வகையைக் கேளு!
உத்தமனே வெளியதுவும் ஒளியிற் சேரும்
பூணப்பா ஒளியதுவு மிருளிற் சேரும்
புத்தியுடன் கண்டறிவாய் தன்னுள் தானே! 326

தன்னுள்ளே தானறிந்து தன்னைப் பார்க்கத்
தனதான மண்டலங்கள் மூன்றி னுள்ளே
விண்ணுள்ளே முச்சுடரைக் கண்டு அந்த
வேதாந்த முச்சுடரின் ஒளியைப் பார்க்கில்
கண்ணுள்ளே வெளிதனிலே தன்னைக் கண்டேன்
கருணைவளர் ஒளிதனிலே தன்னைக் கண்டேன்
என்னுள்ளே இருள்தனிலே நின்று பார்க்கில்
ஏகநிரா மயமான அருள்தா னாச்சே! 327

ஆச்சப்பா அருள்நிறைந்த புருவ மத்தி
அண்டபகி ரண்டமென்ற ஆதி வீடு
பேச்சப்பா பெருகிநின்ற ஆதி வீட்டில்
பிலமான பஞ்சகர்த்தாள் பஞ்ச சத்தி
மூச்சப்பா நிறைந்ததொரு சுடர்கள் மூன்று
முனையான சுளிமுனைதா மோச்ச மென்றும்
போச்சப்பா அந்திடமே சொந்த மாகப்
புத்தியுடன் அந்திடத்தைப் பூசை பண்ணே! 328

பண்ணப்பா பூசைவிதி கண்ணே சூட்சம்
பாலகனே சூட்சமென்ற சுடரில் நின்று
நண்ணப்பா ஆதார மூல பீடம்
நாதாந்த மூலமடா நந்தி வீடு
முன்னப்பா பின்னான நந்தி வீட்டில்
மோச்ச மென்ற அட்சரத்தைச் சொல்லக் கேளு
விண்ணப்பா நிறைந்ததொரு நயன மேவி
மேன்மைபெற ஓம்றீங் அம்மென் றோதே! 329

ஓதுவது புருவநடுச் சுளியில் நின்று
உத்தமனே நூற்றெட்டு உருவே செய்தால்
மாதுவளர் ஆதார பூசை தானும்
மார்க்கமுடன் சுத்தமதாய்ச் சித்தி யாச்சு
கோதுபழு தில்லாத ஆறா தாரங்
குருவான மூலமடா மேலா தாரம்
நீதியுள்ள ஆதாரம் ஈரா றுக்கும்
நிறைஞ்சனமாய் நின்றபூ ரணந்தான் பாரே. 330

பாரப்பா பூரணமாஞ் சோதி வாலை
பத்திகொண்டு ஆதார பீட மானால்
நேரப்பா ஆதார பீட மீதில்
நிறைஞ்சனமாய் நின்றதொரு வாலை தன்னைக்
காரப்பா கருணைவிழிக் கண்ணால் மேவிக்
கமலரச வமுர்தமதைக் கனிந்து கொண்டால்
பேரப்பா பெற்றதொரு வாலைப் பெண்தான்
பெருகிநின்ற சோதியடா கண்கொள் ளாதே! 331

கண்ணான கண்மூடி விழியைத் தானே
கருணைவளர் சுளினையிலே கருத்தை வைத்து
விண்ணான நேத்திரத்தை விரலா லாட்டு
விளங்கிநின்ற ரவிபோலே காந்தி வீசும்
ஒண்ணான காந்திபிர காசங் கண்டால்
உத்தமனே அபமிருத்து ஓடிப் போச்சு
முன்னான சோதியிலே மனக்கண் சாத்தி
முத்தியுடன் சுத்தமதாய்த் தன்னைப் பாரே! 332

பாரப்பா சிவயோக வாலைப் பெண்தான்
பத்திநின்ற திசைநாதந் தானே கொண்டால்
காரப்பா வாலையவள் இருந்த வீடு
கருணைவளர் கேசரியாங் கமலந் தன்னில்
நேரப்பா சுளிமுனையாம் புருவ மீதில்
நின்றிலங்குங் கற்பூர தீபந் தானாய்ச்
சேரப்பா அத்தீப சுடரி லேதான்
தெளிந்துகொண்டு சிவ ஞான சிவத்தைத் தேடே. 333

தேடப்பா கண்மூடி விழியைத் தானே
திருவான சுளிமுனையில் கருத்தை வைத்து
நாடப்பா நேத்திரத்தைச் சூட்டிப் பாரு
நாதாந்தக் கடைவிழியில் விரலா லாட்டிக்
கூடப்பா பிரபையொளி என்ன சொல்வேன்
கோடான கோடிரவி பிரபை வீசுஞ்
சூடப்பா அப்பிரபை தானே கண்டால்
சுகமான சிவரூபந் தான்தா னாச்சே! 334

ஆச்சப்பா சீவகளை இதுதா னய்யா
ஆதியந்த மானதுவும் இதுதா னய்யா
பேச்சப்பா பேசாத மவுன மய்யா
பெருகிநின்ற சாயுச்சிய பதமீ தய்யா
மூச்சப்பா நிறைந்ததிரு வாசி யாலே
முத்திபெற நவக்கிரக சூட்சம் பார்த்துக்
காச்சப்பா ஆக்கினிகொண் டாறா தாரங்
கருவான வெ ளிப்பூசை கண்கண் டேனே. 335

கண்கண்ட சிவரூப மிதுதா னய்யா
கருணைவளர் சாயுச்சிய பதமீ தய்யா
விண்கண்ட வெளிப்பூசை சரியை மார்க்கம்
வேதாந்தச் சுளிமுனையில் மேவிப் பாரு
முன்கண்ட காட்சியெல்லாம் அங்கே கண்டேன்
முத்தியுள்ள பிறப்பிறப்பும் அங்கே கண்டேன்
கண்கண்ட ஓங்கார வட்டந் தன்னில்
காணுமடா எட்டுரெண்டும் கருவாய்க் காணே. 336

காணப்பா புலத்தியனே உனக்காய்ச் சொன்னேன்
கருவான எட்டுரெண்டும் நாத விந்து
பேணப்பா நாதவிந்து சத்திசிவ மாச்சு
பெருகிநின்ற சத்திசிவந் தான்தா னென்று
பூணப்பா அறிவதனால் மனமே பூண்டு
புத்தியுடன் சத்திசிவ பூசை கேளு
தோணப்பா தனையறிந்து பூசை செய்யச்
சொல்லுகிறேன் கருமான சூட்சந் தானே! 337

தானான சூட்சமது என்ன வென்றால்
தன்மையுடன் போம்வாய்வு சிவம தாகும்
ஊனான உள்புகுதல் சத்தி யாகும்
உண்மையுட னிதுவறிந்து தன்னைப் பார்த்துக்
கோனான குருபீடம் புருவ மத்திக்
குருவான அனுக்கிரகச் சுளினை மீதில்
வானான கேசரமே தானே தானாய்
மனங்குவிந்து பூசைசெய்யும் வகையைக் கேளே! 338

வகையான பூரகந்தான் அங்கென் றூது
மகஸ்த்தான கும்பகந்தான் சிங்கென் றேத்தில்
துகையான ரேசகந்தான் உங்கென் றய்யா
சுத்தமுடன் யோகசா தனையைக் கேளு
பகையாதே பூரகந்தான் வங்வங் கென்று
பத்தியுடன் தானிருக்க மாத்திரைரெண் டாச்சு
நகையாதே நாலுதிரம் அங்கென் றாக்கால்
நன்மையுள்ள மாத்திரைதான் நாலு மாச்சே! 339

ஆச்சப்பா ரேசகஞ்செய் சிங்கென் றேதான்
அனைத்துமிக வூதிவிடு வுதடா டாமல்
மூச்சப்பா தானறிந்து இப்படியே செய்தால்
முக்கியமடா சிவயோக பூசை தானும்
பேச்சப்பா பேசாமல் மவுனங் கொண்டு
பெருகிநின்ற வாசிதா ரணையைப் பற்றிக்
காச்சப்பா இப்படியே வருச மொன்றில்
கருணைபெறச் சிவயோகங் கருதிப் பாரே! 340

மயேஸ்வரி பூசை

பாரப்பா இந்தவிதந் தேவி பூசை
பதறாமல் செய்துசிவ யோகம் பார்த்தால்
நேரப்பா நின்றவளும் மகனே யென்று
நினைத்தவரந் தான்கொடுப்பாள் நிலையைப் பற்றிச்
சாரப்பா சிவராசி சிவயோகத் தாலே
சார்ந்திருந்து பூரணியைப் பூசை செய்யக்
காரப்பா ஆதாரம் நன்றாய்ப் பார்த்துக்
கருத்துவைத்துப் பூசைசெய்யக் கருவைக் கேளே! 341

கேளப்பா மயேஸ்வரிக்கு வாம பூசை
கிருபையுடன் செய்யுகின்ற முறையே தென்றால்
வாளப்பா அன்னமுடன் பலகா ரங்கள்
வர்க்கவகை நெய்யுடனே பாயா சங்கள்
ஆளப்பா வெண்டயிரும் அண்டத் தோடும்
அருள்பெருக வுஸ்துவொடு சுத்தி வைத்துக்
காலப்பா தானறிந்து நெய்வேத்தியஞ் செய்து
கருணைபெறத் தூபமுடன் தீபங் காட்டே! 342

காட்டடா தீபமொடு தூபங் காட்டிக்
கருணைபெற மானதமாய்த் தியானஞ் செய்து
மூட்டடா மணியோசை சங்கி னோசை
முழங்கடா சேகண்டி நாத வோசை
கூட்டடா சங்கீத மேள வாத்தியம்
குமுறவே நாகசின்னம் சுரபத் தாளம்
சூட்டடா சோடசமா வுபசா ரங்கள்
சுத்தமுடன் செய்துசெடந் தன்னை வாங்கே! 343

வாங்கியிரு மார்பினில்அ ணிந்து மைந்தா
வணக்கமுடன் சிங்றீங் கிலியென் றேதான்
ஓங்கியொரு மனதாகத் தியானம் பண்ணி
உத்தமனே புருவநடு கமலத் தேத்தித்
தாங்கிமிக ஓம், றீங், அம், மென் றோதிச்
சங்கையுடன் மூலகண பதியைப் பார்த்துப்
பாங்குபெறச் சிவசிவாவென் றமுர்த மூட்டிப்
பத்தியுடன் சற்குருவே நமவென் றோதே! 344

ஓதி மனப் பூரணமாய் மைந்தா நீயும்
உரிமையுடன் அமுதுகறி வர்க்க மெல்லாம்
நீதியுடன் மூலமதுக் கற்புதமே செய்து
நேர்மையுடன் சீஷர்களை யருக ழைத்துச்
சோதியென்ற புருவமதில் திருநீ றிட்டுச்
சுகசீவ பிராணகளை யமுர்த மீந்து
ஆதிபரஞ் சோதிதனைத் தியானம் பண்ணி
அமுதுகறி வர்க்கமெல்லாம் அவர்கட் கீயே! 345

ஈந்துமிக நிர்மாலிய மெல்லாங் கூட்டி
இன்பமுடன் தூபதீ பங்கள் காட்டி
ஆய்ந்துநின்ற அரதேசி பரதே சிக்கு
அன்னமொடு பலகார மன்பா யீந்து
சாய்ந்துமனம் போகாமல் நிலையில் நின்று
சங்கையுடன் வாசிதா ரனையைப் பற்றிப்
பாய்ந்துமிக ஆதாரத் துள்ளே சென்று
பராபரையே காரணியே அம்பரையே யென்னே!345

அம்பரையே அகண்டமே ஆதித் தாயே!
ஆதியந்த மில்லாத அரூபத் தாயே!
தம்பரையே சமரசமே மவுன ஞானச்
சச்சுதா னந்தவெளித் தாயே தாயே!
நம்பரையே நாதாந்தக் கருணை வாழ்வே!
நானென்றும் நீயென்றும் இல்லா தானே!
உம்பரையே உம்பருக்கும் அரியயற்கு மெட்டா
ஓங்காரங் கடந்துநின்ற ஒளியே யென்னே! 347

ஒளியாகி ஒளிநிறைந்த வெளியு மாகி
ஒன்றாகி ரெண்டாகி உறுதி யாகி
வளியாகித் தீயாகி வானு மாகி
மவுனசர யோகமெனும் ஞான மாகித்
தெளிவாகித் தெளிவினுள்ளே ஒளியு மாகிச்
சித்தாகி ரிஷிகள் சித்தர் மனமு மாகி
நெளிவாகிச் சுளியாகி மேல்கீ ழாகி
நேத்திரத்துக் கடங்காத பூரணமே யென்னே! 348

பூரணமே கருணைவளர் போதத் தாயே!
போதமய மானசிவ யோகத் தாயே!
காரணமே கண்ணிறைந்த கமலத் தாயே!
கமலமலர் பூரணமாய் நின்ற மாதே!
மாரணமாய்ச் சகலசித்துந் தானே தானாய்
மகாமந்திர சுரூபமதாய் நின்ற தாயே!
தாரணமாய்ச் சகலவுயிர் வாசி யாளே
சத்தசுத்த சித்தமுமாய்த் தானே காணே! 349

காணுகின்ற கற்பூர தீப மாதே!
கைலாச வாசமுள்ள கமலத் தாயே!
பூணுகின்ற சத்தாகச் சித்து மாகிப்
பூரணமா யானந்த மயமு மாகி
ஊணுகின்ற சுத்தசித்த பூத மாகி
ஓசையுள்ள நாதவிந்துக் கலையு மாகித்
தோணுகின்ற வெளியொளியின் சோதி யாகிச்
சோதியென்ற ஆதியந்த வடிவு மாமே! 350

வடிவாகி முடிவாகி மாலுங் காணா
மன்னுயிர்க்குந் தானான மயமு மாகி
அடியாகி நடுவாகி வானுந் தாண்டி
அண்டசரா சரங்களுட நினைவு மாகி
முடிவாகி நானாகி நீயு மாகி
மூச்சாகி மூச்சற்ற பொருளு மாகி
விடிவாகி யஷ்த்தமுமாய்ச் சுளியு மாகி
விளங்கிநின்ற ஆனந்தப் பொருளு மாமே! 351

பொருளான வேதாந்த சித்தாந்த மாகிப்
புகழ்ந்துநின்ற சமரசத்தின் போக்கு மாகி
அருளாகி அருளிருந்த அண்ட மாகி
அளவற்ற ஆகாச ரூப மாகி
மருளாகி மருளகண்டு அறிவு மாகி
மகத்தான சோதிசிவ சாட்சி யாகி
இருளாகி ஒளியாகி வெளியு மாகி
ஏத்தரிய பூரணமாய் இருந்தாய் தாயே! 352

தாயாகித் தந்தையுமாய்ச் சேயு மாகிச்
சகலவுயிர் பிராணகளை சீவ னாகிக்
காயாகிக் கனியாகி ரசமு மாகிக்
கண்ணாகி விண்ணாகிக் காந்தி யாகி
ஓயாத கெவுனமணி நாத மாகி
ஒன்றுக்கு மடங்காத உண்மை யாகிப்
பேயாகிப் பேர்பெரிய கணங்க ளாகிப்
பேரண்ட மானபூ ரணமே யென்னே! 353

பூரணமாயக் காரணமாய்ப் புத்தி யாகிப்
போக்காகி வாக்காகிப் புகழ்ந்து எங்கும்
காரணமாய் நிற்குணமாய்க் கருணை யாகிக்
கண்ணடங்கா விண்ணாகிக் கருத்து மாகி
வாரணமா யதுவாகி யிதுவு மாகி
மருவியபின் இதுவுமற்று அதுவு மற்றுத்
தோரணமா யண்டமுர்த பதமு மாகிச்
சொல்லாகிக் குறியாகி நின்ற வாறே! 354

குறியாகி வேதாந்த சாட்சி யாகித்
குணமாகி மனமாகி யதுவுந் தாண்டி
நெறியாகி ஆதியந்தச் சூட்ச மாகி
நேரான வாசிதிரு வாசி யாகிச்
சிறிதாகிப் பெரிதாகிச்சீவ னாகிச்
சீவனிலைக் காலாகித் தெளிவு மாகிப்
பெரிதாகி எட்டுடனே நாலு மாகிப்
பேரொளியாய்ச் சித்தொளியாய் நின்ற தாயே! 355

தாயாகி யாதார மூல மாகித்
தண்ணொளிவும் விண்ணொளிவும் தான்தா னாகித்
தீயாகிக் காற்றாகி வானு மாகிச்
சிவமாகி மண்ணாகிப் புனலு மாகி
வாயாகிக் கண்ணாகி மூக்கு மாகி
வானிறைந்த காத்தாகிப் பரிச மாகிச்
சேயாகித் திருவாகிச் செல்வ மாகித்
தேவிமனோன் மணியான கண்ணே யென்னே! 356

கண்ணாகிக் கண்ணிறைந்த சாட்சி யாகிக்
கருணைவளர் கற்பூர தீப மாகி
ஒண்ணாகிச் சத்திசிவ மிரண்டு மாகி
உத்தகலை ரவிமதியின் சுடர்மூன் றாகி
விண்ணாகி வேதமென்ற நாலு மாகி
வேதாந்தப் பஞ்சகர்த்தாள் அஞ்சு மாகி
முன்னாகிச் சடாட்சரங்கள் ஆறு மாகி
முத்தியுள்ள வகைத்தோற்ற மேழு மாமே. 357

ஆமென்ற அஷ்டாங்கம் எட்டு மாகி
ஆதிநவக் கிரகமுடன் தீட்சை யாகி
ஓமென்ற தீட்சைதனக் குயிராய் நின்று
ஓங்கார றீங்கார உருவு மாகி
நாமென்ற நவ்வுடனே மவ்வு மாகி
நலமான சிவ்வுடனே வவ்வும் யவ்வாய்த்
தாமென்ற அய்யுடனே கிலியு மாகிச்
சகலவுயிர் சிவ்வாகி நின்ற தாயே! 358

தாயாகி மூலகண பதியு மாகித்
தன்மையுள்ள நான்முகனும் மாலு மாகித்
தீயாகி ருத்திரனும் மயேச னாகிச்
சிவசிவா சதாசிவனும் மனோன்மணியு மாகி
ஓயாத முச்சுடரும் ஒளியு மாகி
ஒன்றுமற்று நின்றபொருள் தானு மாகி
வாயார ஓதுகின்ற மந்திரமு மாகி
மந்திரமெல் லாமடங்குஞ் சோதி தானே! 359

முத்திரை விதி

சோதியென்ற மயேஸ்வரியைப் பூசை செய்யில்
சுகமான முத்திரையைச் சொல்லக் கேளு
ஆதியென்ற முத்திரையை யார்தான் காண்பார்?
அருள்பெருகி முத்திரையை மனதிற் கொண்டு
நீதியுட னாறுவகை முத்திரையைக் கேளே
நிசமான ஆவாகன முத்திரைதா னொன்று
ஓதியதோர் தாபனமுத் திரைதா னொன்று
உத்தமனே ஒளியென்ற முத்திரைதா னொன்றே! 360

ஒன்றான நிருவாணி முத்திரைதா னொன்று
உறுதியுள்ள சோபினிமுத் திரைதா னொன்று
நன்றான மோகினிமுத் திரைதா னொன்று
நாட்டமுட னாறுவகை முத்திரையை மைந்தா
குன்றாத சிவயோக சற்குருவி னாலே
குறியறிந்து ஆறுவகை முத்திரையைப் பெற்று
நின்றாடும் மயேஸ்வரியைப் பூசை செய்யில்
நீமகனே ஆறுவகை முத்திரையைச் சாற்றே. 361

பூசைக்கு முத்திரை விபரம்

சாத்துவது ஆவாகன முத்திரையைக் கொண்டு
சங்கையுடன் ஓமென்று தியானஞ் செய்யில்
பார்த்திபனே சதாகோடி மந்திரமுஞ் சித்தி
பதிவான சகலகலை சாத்திரமுஞ் சித்தி
தேத்தியதோர் ஆதார மூலஞ் சித்தி
திருவாசி யானதொரு வாசியது சித்தி
தோத்திரமாய் நின்றதொரு பூசையது சித்தி
சுகமான ஆவாகன முத்திரையின் சித்தே! 362

சித்தான தாபனமுத் திரையைச் செய்து
தீர்க்கமுடன் கிலியென்று தியானஞ் செய்து
வத்தாத பூரணமாஞ் சிவயோகஞ் சித்தி
மகத்தான கற்பூர ரூபமது சித்தி
வித்தான பிரமமொடு சரசுபதியுஞ் சித்தி
வேத்மய மானசிவ போதஞ் சித்தி
சத்தான தாபனமுத் திரையின் மகிமை
சங்கையுடன் கண்டுசிவ யோகஞ் செய்யே! 363

செய்யப்பா யோனியென்ற முத்திரையைக் கொண்டு
தீர்க்கமுடன் றீங்கென்று தியானஞ் செய்யில்
மெய்யப்பா தேவாதி தேவர்களுஞ் சித்தி
மேலான அண்டமொடு புவனஞ் சித்தி
மையப்பா மய்யமென்ற சுளினை சித்தி
மாலோடு லெட்சுமியுந் தனங்கள் சித்தி
பையப்பா யோனிமுத் திரையைப் பெற்றுப்
பத்தியுடன் சிவயோகம் பணிந்து காணே! 364

காணவே திராவினிமுத் திரையைக் கொண்டு
கருணையுடன் வங்கென்று தியானம் செய்யில்
பூணவே ருத்திரன்முதற் சகல செந்தும்
பூலோக ராசரொடு வசிய மாகும்
தோணவே சந்தான சவுபாக் கியங்கள்
சுத்தமுடன் ஐந்தருவுஞ் சித்தி யோடு
பேணவே ருத்திரியுஞ் சித்தி யாகும்
பிலமான திராவினியால் சத்தி பாரே! 365

பாரப்பா சோபினிமுத் திரையைச் செய்து
பத்தியுடன் ஆமென்று தியானஞ் செய்தால்
நேரப்பா சொல்லுகிறேன் சர்வ லோகம்
நிசமான ஆதாரஞ் சித்தி யாகும்
மேரப்பா மேருகிரி தீபஞ் சித்தி
மெய்ஞான மயேஸ்பரரும் மயேஸ்பரியுஞ் சித்தி
காரப்பா சோபினிமுத் திரையி னாலே
கண்ணடங்காப் போதசிவ யோக மாமே! 366

ஆமப்பா மோகினிமுத் திரையைச் செய்து
அருள்பெருகும் புருவமதில் மனக்கண் சாத்தி
ஓமப்பா அகாரமுட னுகாரங் கூட்டி
உத்தமனே மவுனமென்ற மகாரத் தேகில்
காமப்பால் கானல்பால் சித்தி யாகும்
கருணைவளர் மனோன்மணியுஞ் சித்தி யாகும்
வாமப்பால் பூரணமுஞ் சித்தி யாகும்
மகத்தான நல்பதமுஞ் சித்தி தானே! 367

சித்தியுள்ள முத்திரைக ளாறுக் குந்தான்
சிவாயகுரு முத்திரையைச் சொல்லக் கேளு!
பத்தியுடன் சொல்லுகிறேன் புருவ மத்தி
பதிவாக இருகரமும் ஒன்றாய்க் கூட்டிச்
சுத்தமுடன் வாடவிளி கண்ணால் நோக்கித்
தொழுதுமனம் நினைத்தபடி சுத்த மாக
முத்தியுடன் வரங்கொடுக்க வேணு மென்று
மோனமுடன் மனோன்மணியைப் பூசை பண்ணே! 368

முத்திரை செய்ய விபரம்

பண்ணப்பா பூசைவிதி சித்தரொடு முனிவர்
பாடினார் கைமுறைகள் அறியா மல்தான்
நண்ணப்பா சட்டைமுனி நாதர் தானும்
நன்மையுடன் பூசைவிதி நன்றாய்ச் சொன்னார்
முன்னப்பா அந்தமுதல் நன்றாய்ச் சொன்ன
முடிவான சவுமியசா கரத்தைப் பார்த்துக்
கண்ணப்பா துலங்குவது போலே நல்ல
கருவான பூசைவிதி கனிந்தார் காணே! 369

காணவே முத்திரைக்கு விபரம் சொல்வேன்
கயிலாசம் இடங்கொள்ளா தென்று சொல்லிப்
பூணவே ஆறுவகை முத்திரையில் மைந்தா
புனிதமுடன் மூன்றுவகை முத்திரையைக் கேளு!
தோணவே சித்தாதி நூல்க டோறும்
சுகமான முத்திரையைச் சொன்ன தல்லால்
பேணவே விபரமது சொல்ல வில்லை
பேறான சவுமியசா கரத்தைப் பாரே! 370

பாரடா மோகினிமுத் திரையைச் சொல்வேன்
பதிவாக இருகையுங் கூப்பிக் கொண்டு
நேரடா தற்சனியிரு விரலும் விரித்து
நேரான அங்குட்ட மத்தியிலும் படவே
காரடா மத்தியிலுங் கனுட்டை முனை படவே
கையறிந்து கொண்டதினால் மோகினிமுத் திரையாஞ்
சேரடா முத்திரையைக் கையறிந்து கொண்டு
தீர்க்கமுடன் ஓமென்று செபித்துக் காணே! 371

காணவே நிருவாணி முத்திரையைக் கேளு!
கைகூட்டித் தற்சனியிரு விரலும் விரித்துப்
பூணவே மத்திமைஅனாமிகை மூன்றும்
போதமுடன் விரலமுந்து திராவினைமுத் திரையாம்
பேணவே முத்திரையைக் குருவருளாற் கண்டு
பிலமாக வங்கென்று தியானித் தாக்கால்
தோணவே சகலசித்தி தானே உண்டாய்ச்
சுத்தமுடன் வசீகரமாய் வாழுந் தானே! 372

தானென்ற யோனிமுத் திரையைக் கேளு!
சங்கையுடன் சொல்லுகிறேன் அங்குட்டம் ரெண்டும்
பூனென்ற கனுட்டையடி விரல்படவே வைத்துப்
பொருந்தரெண்டு கைகூப்பிப் பிடித்துக் கொண்டால்
தேனென்ற யோனிமுத் திரையும் ஆச்சு
செம்மையுடன் முத்திரையைத் தீர்க்கம் பண்ணி
ஊனென்ற ரீங்காரம் மனதிற் கொண்டு
உறுதியுடன் தான்செபிக்கத் தேவதைகள் சித்தே! 373

சித்தமுடன் பூசைவிதி தன்னில் மைந்தா
தீர்க்கமுடன் பதினாறு முத்திரைகள் சொன்னேன்
சுத்தமுள்ள முத்திரைகள் தன்னி லேதான்
சுகமான ஆறுவகை முத்திரைகள் நன்று
பத்தியுடன் ஆறுவகை முத்திரையி னாலே
பகுத்தறிந்து ஆதார தெரிசனைகள் பெற்று
வித்தான பிறவிதனை நன்றாய் நீக்கி
வேதாந்த பூரணமாய் விளங்க முத்தி. 374

கரநியாசம்

முத்தியுள்ள கரத்தின்விரல் மகிமை தன்னை
மோனமுடன் சொல்லுகிறேன் நன்றாய்க் கேளு
பத்தியுள்ள அங்குட்டம் பெருவிரலாய் நிற்கும்
பதிவாக அடுத்தவிரல் தற்சனியா மைந்தா
சித்தியுள்ள நடுவிரல்தான் மத்திமையாய் நிற்கும்
திருவான பவுத்திரந்தான் அனாமிகந்தா னய்யா
சுத்தமுள்ள சுண்டுவிரல் கனுட்டையென லாகுஞ்
சுகமாக இதையறிந்து முத்திரையைச் செய்யே! 375

செய்யப்பா பூசைவிதி யந்த மாகும்
சிவசிவா யாதியந்தம் ஆர்தான் காண்பார்?
மெய்யப்பா ஆதியிலே அமைத்தவிதி மைந்தா!
மெய்ஞான மூலமடா ஓங்கா ரந்தான்
மையப்பா ஓங்காரம் ரவியு மாச்சு
மகத்தான மகாரமடா மதியு மாச்சு
பையப்பா ரவிமதியுந் தானே நின்று
பார்க்கஇரு கண்காட்சி தானுண் டாச்சே! 376

ஆச்சப்பா அமைந்தவிதி யிதுதா னாச்சு
ஆதியந்த பூரணமு மிதுதா னாச்சு
மூச்சப்பா நின்றவிட மிதுதா னாச்சு
மூவுலகு மாண்டயிட மிதுதா னாச்சு
காச்சப்பா அந்தஇடம் சொந்த மாச்சு
காலறிந்து மேலான கமலக் கண்ணைப்
பாச்சப்பா காலறிந்து இடைபின் னாகப்
பகுத்தறிந்து மூலமதிற் பதிவாய் நில்லே. 377

பதிவான இடமதுதான் புருவ மத்தி
பரஞான கேசரியா ளிருக்கும் வீடு
விதியான வீடறிந்து கெதியென் றெண்ணி
மெய்ஞான அமுதரசங் கொண்டா யானால்
மதியான சந்திரகலை ரவியிற் சென்று
மகத்தான சோதிபிர காசங் காணும்
கெதியான சோதிபிர காசங் கண்டால்
கேசரத்தை யாளுகிற வாசி தானே! 378

வாசியென்ற சிவயோகம் தனக்கு மைந்தா
மகத்தான காரமுள்ள மூப்புச் சொல்வேன்
தேசியென்ற உப்புடனே காரம் பூரம்
திரமாக மூன்று மொன்றாய்க் கல்வத் திட்டு
ஊசியென்ற உப்புநீர் தன்னா லாட்டி
உறுதியுடன் தானெடுத்து வட்டுப் பண்ணி
மாசியென்ற எருவதனாற் சிறுபுடத்தைப் போடு
மகத்தான சுண்ணமிது காரந் தானே! 379

தானென்ற காரமடா அண்டச் சத்து
தருவான பூமியுட நாத சத்து
வானென்ற வீரமடா பூரச் சத்து
மார்க்கமுடன் சத்துவகை மூன்றுங் கூட்டி
மானென்ற கல்வமதில் நன்றா யாட்டி
மனதிருக வழித்துருட்டிப் புடத்தைப் போடு
ஊனென்ற சத்துவகை மூன்று மொன்றாய்
உடன்சேர்ந்து உருகியது சுண்ண மாச்சே! 380

மூப்புச் சுண்ணம்

ஆச்சப்பா இன்னமொரு சுண்ணம் சொல்வேன்
ஆதியென்ற பூரமுடன் அந்தஞ் சேர்த்துக்
காச்சப்பா களும்பான துருசு கூட்டிக்
கல்வமதில் பழச்சாற்றால் நன்றா யாட்டி
மூச்சப்பா தானிறுக ரவியிற் போட்டு
முன்னவனைத் தான்பணிந்து புடத்தைப் போடு
நீச்சப்பா நிலையறிந்த கார மாச்சு
நிசமான காரம்வெகு சுண்ணம் பாரே! 381

பாரப்பா சுண்ணவகை மூன்று மொன்றாய்ப்
பக்குவமாய்க் கல்வத்தில் வைத்துக் கொண்டு
காரப்பா அறுவகைநீர் தன்னா லாட்டிக்
கருணைபெற வழித்துருட்டி ரவியிற் போட்டுச்
சாரப்பா நீர்வத்த நன்றாய்க் காய்ந்தால்
சற்குருவைத் தான்பணிந்து புடத்தைப் போடு
வீறப்பா தானொடுங்கி நீறிப் போகும்
வெகுசுருக்கு மூன்றுவகை சுண்ணந் தானே! 382

தானான மூன்றுவகை ஒன்றாய் நின்று
தன்மையுட னீறியது கார மாச்சு
ஊனான காரமுள்ள சுண்ணம் போடே
உத்தமனே நவச்சாரம் வீரம் பூரம்
கோனான குருவருளால் நாலுஞ் சேர்த்துக்
கூர்மையுடன் கல்வமதிற் பொடித்துக் கொண்டு
வானான பீங்கானில் வைத்து மைந்தா
மகத்தான சந்திரனில் வைத்துத் தானே! 383

காணவே சந்திரனில் வைத்துப் பாரு
கசிந்துமிகத் தானூறிக் கெங்கை யாச்சு
தோணவே கெங்கையென்ற செய்நீர் தன்னைச்
சுத்தமுள்ள பீங்கானில் வடித்து வைத்துப்
பேணவே சரக்குகளிற் சுருக்கு தாக்குப்
பேசாமல் தானடங்கிக் கட்டிப் போகும்
ஊணவே உபரசங்கள் நீறிப் போகும்
உரிமையுள்ள சத்துவகை மெழுகு மாமே. 384

முப்புச்சுண்ணம் செய்நீர்

ஆமப்பா காரமுதற் சார மெல்லாம்
அருமையுள்ள செய்நீரால் மெழுகு மாகும்
காமப்பால் கானலப்பால் கசிந்து நின்ற
கருவான செயநீரை யார்தான் காண்பார்
சோமப்பால் கண்டவனே சுருதி காண்பான்
சோமனறி வாதமுறை தானே செய்வான்
நாமப்பா வென்றகுறி தன்னை நீயும்
நாதாந்தப் பூரணமாய் நாடிப் பாரே! 385

நாடிப்பார் மூன்றுவகைச் சுண்ணந் தன்னை
நன்மையுடன் கைமுறையாய்ச் செய்து கொண்டு
தேடிப்பார் சரக்குகள்தான் நன்றாய்க் கட்டும்
திரமான நவலோகந் தங்க மாகும்
சூடிப்பார் தங்கமென்ற அங்கந் தன்னில்
சோதிமய மானசிவ அண்ட மென்ற
வாடிப்பார்த் தலையாமற் சொல்லக் கேளு
மகத்தான ருத்திரரை வணங்கிக் காணே! 386

காணப்பா பூரணமா யண்டச் சத்துக்
        கண்டவர்கள் விண்டதில்லை கல்பா சாணம்
ஊணப்பா உறுதியுள்ள கல்பா சாணம்
        உண்மையுள்ள வீரமடா லிங்கந் தாரம்
பூணப்பா பிருதிவியும் அப்புஞ் சேர்த்துப்
        புத்தியுட னாறுமொன்றாய்க் கல்வத் திட்டுத்
தோணப்பா மூன்றுசுண்ணம் செய்நீ ராலே
        சுத்தமுடன் தானரைத்துச் சுத்தி பண்ணே! 387

சுத்திபண்ணும் வகையதுவைச் சொல்லக் கேளு
        சுகமாகத் தானரைத்து வட்டுப் பண்ணிப்
பத்தியுடன் சட்டிநடு வைத்துச் சாம்பல்
        பதித்துமிகத் தீயெரித்துப் பதத்தைப் பாரு
சித்தியுடன் அனலெழுப்பிக் கட்டிப் போகுந்
        தீர்க்கமுடன் தாமெடுத்துச் செப்பக் கேளு
புத்தியுடன் செம்பிலரை வாசி தாக்கிப்
        பூரணமாய் வெள்ளியிலே பூட்டிப் பாரே! 388

பார்க்கவெள்ளி தங்கமய மாகிப் போச்சு
        பரஞான கேசரியின் வாசத் தாலே
ஏற்கையுடன் சிவயோகந் தங்கிப் போச்சு
        ஏகாந்த அஷ்டகர்மம் சித்தி யாச்சு
சேர்க்கையுடன் ஆதார மூல பீடம்
        திருவான பீடமதைத் தியானம் பண்ணித்
தீர்க்கமுடன் நீயிருந்து வாசி யேறிச்
        செகதீப மானசெயல் தான்தா னாச்சே. 389

தானான ஆதார சுரூபந் தன்னைச்
        சங்கையுடன் தானறிந்து தியானஞ் செய்யத்
தேனான புலத்தியனே சொல்லக்கேளு
        தேகசத்தி உயிர்சிவமாய்த் தெளிந்து கொள்ளு
வானான லாடமதில் மனக்கண் வைத்து
        மனங்கனிய ஓம், றீங், அம், மென் றாக்காவ்
கோனான ஆதார பூசை தானுங்
        கோடான கோடி செய்த பலனுக் கொப்பே. 390

ஒப்பென்ற சுருதிதனைச் சொல்லக் கேளு
ஓமென்ற பிரணவமே மூல பீடம்
செப்பென்ற பீடமதில் ரீங்கார வாலை
சென்றிருந்தாள் அகாரமென்ற சிவனார் தானுங்
குப்பென்று தானெழுந்து வாசி யாகிக்
கொண்டுநின்ற திருவாசி அம்மா வாசி
அப்பென்ற ஆதாரம் அம்மா வாசி
அதையறிந்து சிவயோக அங்கம் பாரே. 391

பாரப்பா சிவயோக அங்கம் பார்க்கப்
பதிவாக ரீங்கென்றால் பூரகமே யாகும்
நேரப்பா அம்மென்றால் கும்பகமே யாகும்
நேர்மையுடன் நிலையறிந்து நேசம் வைத்துச்
சாரப்பா ஓமென்று ரேசகமே செய்யில்
தவுடாடா தேவாசி தானே தங்கும்
சேரப்பா வாசியது தங்கும் வீட்டில்
சென்றிருந்து அடிநடுவு முடியைக் காணே. 392

காணவே ரீங்காரம் நாத மாச்சு
கருணைவளர் அகாரமடா விந்து மாச்சு
பூணவே ஓங்காரம் வாசி யாச்சு
புத்தியுடன் தன்னறிவால் தன்னுள் பாரு
தோணவே தன்னறிவால் பார்க்கும் போது
சோதியென்ற ரவிமதியுஞ் சுடர்மூன் றாச்சு
பேணவே சுடர்மூன்றும் தன்னுள் பாரு
பேசாத மவுனமென்ற கற்ப மாச்சே. 393

ஆச்சப்பா தர்மமென்ற அறிவைக் கேளு
ஆதியென்ற ஓங்காரஞ் சத்தி யாச்சு
நீச்சப்பா சத்தியென்ற காரந் தன்னை
நிலையறிந்து மாலையிலே நேர்மை யாகப்
பேச்சப்பா தானிறைந்த மவுன மொன்று
பெருமையுட னுருமையதாய்ப் பூசித் தாக்கால்
மூச்சப்பா தன்னிலைவிட் டசையா தய்யா
மூர்க்கமுள்ள ஓம்சத்தி முத்தி பாரே. 394

பாரப்பா ஓம்சத்தி பூசை சொன்னேன்
பதிவான அகாரமென்ற சிவத்தின் பூசை
நேரப்பா நிலையறிந்து அகார மான
நேரான சிவமதுவும் விந்து வாச்சு
காரப்பா விந்துவென்ற சாரந் தன்னைக்
கருணையுடன் பூரணமாய் உதயந் தன்னில்
தேரப்பா நீதானிருந்து உருவே செய்தால்
சிதம்பரத்தின் எல்கையிலே தீப மாமே. 395

ஆமப்பா அகாரசிவ பூசை சொன்னேன்
அறிந்துமன தருளாலே அறிவைப் பற்றி
நாமப்பா வென்றமதந் தன்னை நீக்கி
நடுவான ரீங்கார வாலை தன்னைத்
தாமப்பா தன்னகமே யென்று போற்றிச்
சதானந்த பூரணமாய்ப் பூசை செய்தால்
வாமப்பால் கொண்டகெதி தன்னா லந்த
மகத்தான மடபதிதான் திறக்குந் தானே. 396

தானென்ற மடபதிதான் தான்தா னாகத்
தன்மையுடன் பூரணத்திற் சாற்றக் கேளு
வானென்ற வடிவுடைய அண்டந் தன்னில்
மகத்தான அமுர்தரச போதந் தன்னைக்
கோனென்ற குருவருளால் தன்னை வாங்கிக்
குறியான சத்திசிவ நாதங் கூட்டித்
தேனென்ற கற்பூர தீபங் காட்டித்
திருவான பதிநோக்கிப் பூசை பண்ணே. 397

பண்ணப்பா பஞ்சகன தீட்சை மார்க்கம்
பாலகனே தானறிந்து பதிமேற் கொண்டு
விண்ணப்பா தானறிந்து வாசி யாலே
வேதாந்த முச்சுடருக் கப்பா லேகி
உண்ணப்பா தன்னறிவால் மனக்கண் கொண்டு
ஓமுடிந்த பட்டணத்தி லுறுதி பாரு
கண்ணப்பா தானறிந்து தன்னைப் பார்க்கக்
கசடறவே தான்சிறக்க அங்கம் பாரே. 398

நாட்டம்

அங்கமுட னின்றபஞ்ச பூதமது நசித்து
அணுகிநின்ற பஞ்சமல மாதாரம் நசித்துச்
சங்கையுள்ள சிவகளை புரியஅஷ்ட நசித்து
சாக்கடா மவத்தையுடன் சராசரங்கள் நசித்துப்
பொங்குபுகழ் எழுவகையும் பூசைபல நசித்துப்
போக்கான சரியைமுதல் ஞானவரை நசித்து
நங்கைமுதற் போதம்வரை யிருவினையும் நசித்து
நாமென்ற சொல்லதனை நசிப்பதுவே நாட்டம் 399

நாட்டமுடன் நின்றகுறி காண்பதுவும் நசித்து
நாதாந்த நாதமுடன் விந்தும் நசித்துத்
தேட்டமென்ற போதமுடன் சிவயோகம் நசித்துத்
திருவான கோவில்களும் நதிகளும் நசித்து
ஆட்டமென்ற ஆங்காரக் கூத்துகளும் நசித்து
அஞ்செழுத்து மூன்றெழுத்து மொன்றுமிக நசித்து
வாட்டமென்ற மயக்கமுடன் மகிழ்ச்சிகளும் நசித்து
வந்ததுவும் போனதுவும் நசிப்பதுவே நாட்டம் 400

நாட்டமுடன் நயனமதில் கண்டதெல்லாம் நசித்து
நடுவனையும் அடிமுடியும் நசிப்பதுவும் நசித்து
ஆட்டமென்ற ஆகாச வாய்வுகளும் நசித்து
அடர்ந்தெழுந்த அக்கினியும் அப்பதுவும் நசித்துத்
தேட்டமென்ற பிரிதிவியும் ரவிமதியும் நசித்துத்
திருகிநின்ற சுழிமுனையும் அறுசபையும் நசித்து
ஓட்டமென்ற பாசமத்துப் பிறப்பிறப்பும் நசித்து
ஒன்றுமற்ற நிராமயமாய் ஒடுங்குவதே நாட்டம். 401

ஒடுங்குவது காண்பெனவும் உண்ணுவதும் நசித்து
உறுதியுடன் நேயமொடு நசித்து
அடங்கிநின்ற பிராணாய ஆசனமும் நசித்து
அரகரா பிரத்தியா காரமும் நசித்துத்
துடங்கிநின்ற தாரணையும் தியானமது நசித்துச்
சுகசீவ பிராணகளை சமாதிகளும் நசித்துத்
திடங்கொண்ட தூலமுடன் சூட்சமமும் நசித்துச்
சிவசிவா நிராமயமாய்த் தெளிவதுவே நாட்டம். 402

தெளிவான வசீகரமும் மோகனமும் நசித்துத்
திரமான தம்பனமுச் சாடனமும் நசித்து
வளியான கிறுசனமும் வேசனமும் நசித்து
மாரணமும் பேதனமும் வகையுடனே நசித்துப்
பளியான செகசால மானதெல்லாம் நசித்துப்
பரிசனமாய் நின்றதொரு பொன்னாசை நசித்து
ஒளியான பெண்ணாசை மண்ணாசை நசித்து
ஒன்றுமற்றுத் தன்மயமாய் ஒடுங்குவதே நாட்டம்403

ஒடுங்கிநிரா மயமாகிப் பூரணதா ரகமாய்
ஒழுடிந்த கவனமெல்லாம் ஒருபுறமாய் நீக்கி
இடங்குவிந்து வலமாகி யேகபூ ரணமாய்
எந்தெந்தக் காரியமும் இன்பமுடன் நினைந்தால்
தடங்கலன்றிச் சித்துவெகு சுத்தமுடன் காணுந்
தண்மையுடன் தன்மனத்தைத் தானறிந் தாலெத்
திடங்குவிந்து நிராமயமாய்ச் சின்மயபூரணமாய்ச்
சிவசிவா செகமயமே சிவமயமாய்க் காணே. 404

காணவே கண்டதெல்லாம் சிவமயமென் றென்று
கடந்தேறிப் போனதெல்லாம் சிவமயமென் றெண்ணு
பேணவே தன்னகமே சிவமயமென் றெண்ணு
பிலமான வாசியதுஞ் சிவமயமென் றெண்ணு
ஊணவே அண்டபிண்டஞ் சிவமயமென் றெண்ணு
ஒடுங்கிநின்ற சத்தமது சிவமயமென் றெண்ணு
தோணவே சிவமயமு நின்மயமென் றெண்ணிச்
சுகசீவ பிராணகளை சுரூபமய மாமே. 405

ஆமப்பா சுரூபமயம் பூரணமென் றெண்ணி
அடர்ந்தெழுந்த தத்துவத்தை யறிவாலே நீக்கு
தாமப்பா ஓமென்ற பிரணவத்தி னாலே
தன்னுயிர்போல் மண்ணுயிரைத் தான்தா னென்று
நாமப்பா சொல்லுகிறோம் நாத வீட்டில்
நாடிமனங் கொண்டுதிரு நயனம் பாரு
சோமப்பால் கொண்டுதிரு நயனம் பார்க்கச்
சோமகிரி சூரியகிரி சுத்த மாச்சே. 406

ஆச்சப்பா சோமகிரி உச்சி மூலம்
　　அருள்பெருகுஞ் சூரியகிரி மூல மாச்சு
மூச்சப்பா உபயகிரி நடுவி லேதான்
　　மோச்சமென்ற காட்சியைத்தா னென்ன சொல்வேன்
பேச்சப்பா பேசாத காட்சி தன்னைப்
　　பிரணவத்தின் கிருபையினால் சொல்லக்கேளு
நீச்சப்பா நிலையறிந்து காணப் போகா
　　நிசமான நிலையதுதா னுந்தி காணே. 407

காணவே உந்தியென்ற கமல மீதிற்
　　கண்டுகொள்ளக் காட்சியென்ற சூட்சந் தானும்
தோணவே சூட்சநிலை தானே கண்டு
　　துருவமென்ற மேருவடா அண்டந் தன்னில்
பூணவே அண்டபதங் கைக்குள் ளாகப்
　　புருவமென்ற தமாதிலே பூண்டு கொண்டு
ஊணவே மனதுறுதி யாக நின்றால்
　　உற்றகலை ரவிமதியுஞ் சோதி யாச்சே. 408

சோதியென்ற முச்சுடரு மொன்றாய் நின்று
　　துலங்குமடா தன்னகத்தில் நன்றாய்ப் பாரு
நீதியுடன் நிலையறிந்து பார்க்கும் போது
　　நிலையறிந்து கண்டதெல்லாஞ் சோதி யாச்சு
ஆதியென்ற சோதியடா மனக்கண் ணாச்சு
　　அறிவான தீபமடா ஆற்றுமா வாச்சு
ஓதியதோர் மந்திரகலை ஆற்றுமா வாகி
　　உண்மையென்ற பூரணமாய் விளங்குந் தானே. 409

தானேதான் விளங்குமடா அறிவா னந்தந்
　　தன்மையுள்ள பூரணமாய்த் தான்தா னாகும்
வீணேதான் திரியாதே அறிவைப் பார்த்து
　　வேதாந்தம் சித்தாந்தம் ரெண்டும் ஒன்று
கோனேதான் தானவனாம் குறித்துப் பாரு
　　குறிப்பறிந்து பார்த்துநிலை கொண்டா யானால்
ஊனேதான் ஆனந்த போத மாகும்
　　உண்மையென்ற நிருவிகற்ப முத்தி பாரே. 410

பாரப்பா நிருவிகற்பம் யார்தான் காண்பார்
பத்தியுள்ள புலத்தியனே பகரக் கேளு
காரப்பா அகாரமென்றால் சிவம தாச்சு
கருணைவளர் சிவமதுதான் விந்து விந்து
நேரப்பா விந்துநிலை யறிந்து கொள்ள
நிசமுனக்கு இல்லையடா நிசத்தைக் கேளு
சாரப்பா சற்குருவின் இடமே சென்று
சங்கையுடன் தானவனாய்த் தன்னைப் பாரே. 411

பாரப்பா தன்னைமிக அறிவால் கண்டு
பாலகனே விந்துரச வமுர்தம் வாங்கி
நேரப்பா சற்குருவைத் தியானம் பண்ணி
நிலையறிந்து கணபதிக்கு அபிஷே கத்தால்
வீரப்பா கொண்டுநின்ற அறிவு மைந்தா
மெஞ்ஞான பூரணமாய் விளங்கும் பாரு
காரப்பா அந்தநிலை சொந்த மென்று
கருணையுடன் அந்திசந்தி பூசை பண்ணே. 412

பண்ணப்பா அந்திசந்தி பூசை பண்ணிப்
பரமகயி லாசமென்று பதியை நோக்கிக்
கண்ணப்பா தானறிந்து தன்னைப் பார்த்தால்
கசடான கர்மவினை காணா தோடும்
எண்ணப்பா வென்றுதன்னை மறந்தி டாதே
எட்டறிந்து திட்டமுடன் கட்டாய் நில்லு
முன்னப்பா விசையறிந்து பாயுந் தண்ணீர்
முத்தியுடன் மணிகெவுன குளிகை பாரே. 413

பாராட்டும் புலத்தியமா ரிஷியே அய்யா
பதிவான உலகமது பேயான் கூத்து
நேரான கூத்ததுதான் சிவன்செயலென் றெண்ணி
நேர்மையுடன் பூரணமாய்ப் புருவ மேவித்
தூரான அடிமுடியும் ஒன்றாய்க் கண்டு
சுகசீவ பிராணமய மாக நின்றால்
மாறாத வாழ்வுசிவ யோக வாழ்வு
வந்துதடா வினைதீரும் மனதைக் காணே. 414

மனதான மனதறிந்து மனதைக் காக்க
மார்க்கமுள்ள கற்பமொன்று வழுத்தக் கேளு
கனமான கற்பமடா யார்தான் காண்பார்
கருணைவளர் உகாரமடா சத்தி சத்தி
குணமாக வுகாரமென்ற சத்தி தன்னைக்
குருவருளால் அந்திசந்தி பூசை பண்ணிச்
சினமான ஆங்காரத் திருக ருத்துச்
சின்மயங்கொண் டெந்நாளும் திரமாய் நில்லே. 415

திரமான சத்தியடா உகார சத்தி
சிவசிவா மனம்நிறுத்திப் பூசை செய்தால்
உரமான தேகமடா உறுதி யாகும்
உற்றகலைக் கியானமடா சித்தி யாகும்
திரமான அண்டபதங் கைக்குள் ளாகும்
திருவான பூரணமும் சித்தி யாகும்
பரமான பராபரமும் தான்தா னாகும்
பதிவான மூலசத்தி பலன்தான் பாரே. 416

பாரப்பா பதியறிந்து குருவைக் கண்டு
பத்தியுடன் சத்திசிவம் பூசை பண்ணிக்
காரப்பா கருணைவிழி மலர்க்கண் ணாலே
கமலமென்ற புருவநடுக் கண்ணைப் பற்றி
நேரப்பா நின்றதினால் மைந்தா மைந்தா
நிசமான சிவரூபங் கண்ணால் காணும்
நேரப்பா சிவரூபங் கண்ணால் கண்டு
தெளிந்துமனங் கொண்டதினா லாதி பாரே. 417

ஆதியென்ற நாதமடா சோதி சோதி
அதையறிந்து பூரணமாய்ப் பூசை செய்தால்
சோதியென்ற ஞானமது இதுதா னாச்சு
சுகமான சிவயோகம் இதுதா னாச்சு
நீதியென்ற பிராணாயம் இதுதா னாச்சு
நிசமான வாசியது இதுதா னாச்சு
ஓதியதோர் மந்திரமும் இதுதா னாச்சே
உண்மையென்ற பூசையது இதுதா னாச்சு. 418

ஆச்சப்பா கெவுனமதும் இதுதா னாச்சு
ஆதியென்ற கற்பமதும் இதுதா னாச்சு
நீச்சப்பா உபதேசம் இதுதா னாச்சு
நிசமான சத்திசிவம் இதுதா னாச்சு
பேச்சப்பா பேசுவதும் இதுதா னாச்சு
பேசாத மவுனரசம் இதுதா னாச்சு
காச்சப்பா தெரிசனமும் இதுதா னாச்சு
கருணைவளர் வாலையுட கருத்துத் தானே. 419

கருத்தறிந்து கருணையுடன் கருத்தைக் கொண்டால்
காலசதி மேலாதி காணா தோடும்
திருத்தமுடன் பூரணமும் நிலைநின் றாடும்
திருவான வாலையுடன் செயல்தன் னாலே
வருத்தமென்ற மாய்கையெல்லாம் மாண்டு போகும்
மங்கையுடன் கெங்கையது வலிமை மெத்த
நிருத்திஅந்த மாதரசைப் பூசை பண்ணி
நேர்மையுள்ள மாதாவை மகவாய் எண்ணே. 420

என்மகனே புலத்தியமா ரிஷியே அய்யா
இகபரசா தனங்குடுத்த மாதா தன்னைத்
தன்மையுடன் மோகமதாய்ச் சாசம் செய்தால்
தானிசைத்த காரியங்கள் தவறுண் டேபோம்
உண்மையென்ற மந்திரங்கள் உதவா தய்யா
உடலதிலே செந்தீயும் உடனே பற்றும்
வன்மையென்ற கூற்றுவனும் உயிரை யுண்பான்
மார்க்கமுடன் மனதறிந்து மனதைக் காரே. 421

காரப்பா மனதறிந்து மனதைக் கார்த்துக்
கருணையுடன் சத்திசிவ வாலை பூசை
நேரப்பா நேர்மையுடன் பூசை செய்தால்
நினைத்தபடி முடிக்கும்வகை கைக்குள் ளாகும்
சாரப்பா சகலகலைக் கியானந் தோத்தும்
சதாயோக மானசிவ யோகம்தா னாகும்
சேரப்பா சிவயோகத் திறத்தால் மைந்தா
சிவசிவா பூரணத்தின் செயலைக் காணே. 422

செயலான செயலறிந்து செயலைக் காணத்
திரமான தீர்க்கமொன்று செப்பக் கேளு
மயலான மயல்கருத்து மவுனங் கொண்டு
மகத்தான கேசரியா மண்டத் தேகிச்
சுயமான பூரணமாஞ் சோதித் தாயைச்
சுத்தமுடன் தான்வணங்கித் தொழுது போத்தி
நயமாக வைத்துரிமை செய்து கொண்டு
நாதாந்தப் பூரணத்தை நயமாய் வாங்கே. 423

வாங்கியந்தப் பூரணத்தை மைந்தா நீயும்
வணக்கமுடன் பீங்கானில் வைத்துப் போற்றிப்
பாங்குபெற ரவிபீசம் அறிவாய்ச் சேர்த்துப்
பதமாக மத்தித்து ரவியில் வைத்துச்
சாங்கமாய்க் காய்ந்தபின்பு எடுத்துப் பாரு
சதாசிவத்தின் செயலதனால் மெழுகாய்ப் போகும்
பூங்கமல அமுர்தரச மெழுகை வாங்கிப்
புத்தியுடன் சத்திசிவ வாலை சேரே. 424

சேரப்பா அஞ்சையுமே ஒன்றாய்ச் சேர்த்துத்
திறமாக மத்தித்து ரவியில் போடு
சாரப்பா இன்னமொரு கருமா னங்கேள்
சத்தியுப்பு தன்னுடனே வீரம் பூரம்
காரப்பா கருவறிந்து சேர்த்துக் கொண்டு
கலசமதில் தானமிழ்த்தித் தயிலம் வாங்கி
நேரப்பா முன்சொன்ன அஞ்சும் போட்டு
நிசமான தைலத்தை விட்டுக் கிண்டே. 425

கிண்டிமிகத் தானெடுத்து ரவியிற் போட்டுக்
கிருபையுடன் பீங்கான்தன் தாளி சென்று
அண்டகே சரிமாது தன்னைப் போற்றி
ஆக்கைநிலை தனையறிந்து அந்தி சந்தி
குன்றிமணி யளவெடுத்துக் கொண்டா யானால்
குடிலமென்ற தீவினைகள் காணா தோடும்
எண்டிசையுங் கீர்த்திபெற வாழ்வா யப்பா
இன்பரச காயாதி கற்பந் தானே. 426

தானென்ற மவுனாதி மவுன மாது
தனையறிந்து காலமதில் தானே தானாய்த்
தேனென்ற திவ்யரச பானங் கொள்ளச்
சிவந்தமலர் குவிந்தபூ விரிந்த காலம்
ஊனென்ற அமுர்தரச மொழுகுங் கண்ணில்
உகந்துமனங் கொண்டுவாய் வேக மாகிக்
கோனென்ற குருவருளால் உறுஞ்சி வாங்கிக்
குவிந்துமலர்க் கண்ணின்மணி சுவைத்து வாங்கே 427

வாங்கியது சபையறிய மதுரங் கொண்டு
மனங்கனிய மாவடியில் மலர்க்கண் சாத்திப்
பாங்குபெறக் குருவடியில் பதிவாய் நின்றால்
பதிவாகச் சிவயோக பலத்தி னாலே
தாங்கிநின்ற மூலமுதல் ஆறா தாரந்
தனுகரண புவனமெல்லாம் தானே தானாய்
ஓங்கியதோர் வாசியுட பிலத்தி னாலே
உழன்றமனை பெலத்துதடா உறுதி பாரே. 428

உறுதியுள்ள பஞ்சகண பஞ்ச மூலம்
உண்மையென்ற பிறைகோணம் அந்தத் தாலே
பருதிமதி சுடரொளியாய் அண்டஞ் சூழ்ந்து
பருமணியாந் திசைநாதம் வாசி யாலே
கருதிதிரு வாசியம்மா வாசி யாலே
சுகசீவ பிராணகளை சோதி யாகிச்
சரிதையொடு கிரிகைசிவ யோக மாகிச்
சகலகலைக் கியானமென்ற ஞான மாமே. 429

ஞானமென்ற ஞானமடா மவுன ஞான
நாதாந்த போதமென்ற ஞானந் தன்னை
மோனமென்ற மனதடங்கி ஞானப் பாவை
முத்தியிரு கலையறிந்து ஊதி வாங்கப்
பானமென்ற பானமடா மதுர பானம்
பரஞான பூரணமாய் நின்று பாயும்
தானமென்ற காலறிந்து வாய்வு வாலும்
சங்கையுடன் வாசிகொண்டு வாயால் வாங்கே. 430

வாங்கியிரு காலறிந்து மவுன மாக
மவுனமென்ற மாங்கனியைக் கனிவா யுண்க
ஓங்கியெழு சபைதாண்டப் பிலன்உண் டாகும்
ஒடுங்கிமனக் காலக்கெதியை யுன்னிப் பாரு
பாங்குபெற அண்டரண்டஞ் சுத்தி மீளும்
பரஞானத் திரிகோணத் தாயி னாட்டுள்
மாங்கனிதான் உண்டபெலங் கெதியுண் டாச்சு
மகத்தான சூட்சமென்ற சூட்சம் பாரே. 431

பாதமறிய உப்பு

சூட்சமென்ற ஆச்சியுட காலைப் பாரு
சூதரன மானகெதி இருகா லய்யா
காட்சியில் சூட்சாதி காலைக் காணக்
கண்காட்சி யானகால் வாத மாச்சு
சாட்சியென்ற செகசாட்சி யமுர்த முண்ணத்
தானறிந்த கண்காட்சி தானாய் நின்று
பேச்சென்ற சூட்சமடா பின்னேது மில்லை
பிலமான யனுபோகி யானால் பாரே. 432

பாரடா இவளாட்டுக் காலே வாதம்
பதிகொண்டு கண்டுபிடி வாதம் சித்தி
ஊரடா உப்பாலும் அப்பி னாலும்
உள்ளபடி கண்டுபிடி வாதத் தாயைக்
காரடா முப்பூவால் கட்டும் வித்தை
கையறிந்தால் ரசவாதங் கொள்ளை யாச்சு
நாரடா நாரிமனம் ஆறா தாரம்
நல்லபதங் கண்டவர்கள் ஏழை தானே. 433

ஏழையென்றே யான்வலுத்தேன் என்னைப் போலே
ஏகநிரா மயமான சோதிப் பாலைக்
காளையிலே கருவறிந்து கொண்டா ராரோ
கண்டபடி கண்டவர்க்குத் தொண்டு செய்வேன்
வாழையிலே கதலிகுலை சாய்ந்த மார்க்கம்
வகையறியார் துரையறியார் மனசைக் காணார்
தாழையிலே மாப்பூத்துக் கனியுண் டாச்சு
சதாபோக யோகமதால் காணு வாயே. 434

காணுதற்கு என்னசொல்வேன் விதிதான் வேணுங்
கண்டவர்கள் விண்டதுண்டோ கனியின் மார்க்கம்
பூணுதற்கு மனம்பூண்டு காலைப் பார்க்கப்
புலம்பிமனம் நினையாதே மூலம் பார்க்கத்
தோணுதற்கு மும்மலமும் அகன்று போகும்
சுகமாகச் சாகரத்தை அறிந்து கொள்வாய்
பேணுதற்கு யேகவெளி சூட்சா சூட்சம்
பேறறிந்து கொள்வதற்குத் தொட்டுக் காட்டே. 435

தொட்டுநீ காட்டுதற்கு அந்த ரங்கத்
தொடுகுறிபோல் காட்டுவது சூட்சா சூட்சம்
கட்டுவது அங்கையடா இருகால் கொண்டு
காரணத்தால் தொட்டஇடம் கருணை யாகும்
எட்டுரெண்டுங் கூடியல்லோ திறவு கோலாம்
இதையறிந்து பூரணத்தால் திறந்து பார்க்கக்
கிட்டுமடா பூரணத்தின் வட்டம் பாரு
கேசரத்தின் கேசரியாள் கிருபை பாரே. 436

பாரடா பரஞ்சோதி முக்கோ ணத்திற்
பத்திகொண்டு இன்னமொரு கருவைக் கேளு
காரடா கனிந்துமனங் கனிவால் நீயுங்
காலறிந்து வாசியினால் கருவை பத்தி
நேரடா நிலையறிந்து பானங் கொள்ளு
நிசமான அறுசபையும் நிலைதப் பாது
மேரடா அடிமூலங் கணேசன் சத்தி
மெஞ்ஞான பூரணத்தின் கதியைப் பாரே. 437

கெதியான கேசரமே மணியின் சோதி
கணேசனடி மூலமடா ஆதி யந்தம்
மதியான மய்யமடா ருத்திர மூலம்
மகத்தான வாசியடா சீறீங் கென்று
விதியான எழுத்தறிந்து ஓது தற்கு
விளம்பரிது ஓங்கார விஞ்சை மூலம்
பதியான பதியறிந்து வாலைப் பத்தி
பற்றிமனங் கொண்டபடி இன்னங் கேளே. 438

கேளப்பா மந்திரவாள் தனக்கு மந்திரங்
கேசரத்தின் பூரணஓங் கார வாளால்
ஆளப்பா அதையறிந்து தியானம் பண்ணி
அடிமறந்து செய்யாமல் அறிவைப் பற்றி
நாளப்பா முப்பெலியும் அங்கே வாங்கு
நாற்பத்து முக்கோண நாதத் தாட்டு
வாழப்பா வாழ்வதற்கு மவுனத் தாயை
மனதுருகப் பூரணமாய் மதிக்கண் ணென்னே. 439

கண்ணான கபாலிதிரி சூலி வாமி
காரணமே பூரணமே கமலத் தாயே
விண்ணான சபைதனிலே நடன மாடி
வேதாந்தப் பேரொளியாய் நின்ற தாயை
முன்னான கண்மணியே ரூபா ரூபி
முதலான பூரணமே அருமைக் கண்ணே
ஒண்ணான பூரணமே எந்நா ளுந்தான்
ஓமென்ற மூலமந்திர சத்தி மாதே. 440

சத்தியமாய் நின்றசிவ சத்தி மாதே!
சமர்முனையில் வெற்றிதருந் தாயே தாயே!
வெத்தியுள்ள பூரணத்தின் வேத ரூபி
வேதாந்த கோத்திரமாய் விளங்குந் தாயே!
முத்தியுள்ள மோனமந்திர விபேதத் தாயே!
மோனமுடன் தியானமதாய்ப் பூசை செய்யப்
பத்தியுள்ள மந்திரவாள் கையி லீந்து
பதிவான வரங்கொடுப்பாள் கெதியைப் பாரே. 441

நவகும்ப சத்தி பூசை

பார்முழுதும் ஒருகுடைக்கீழ்ப் பதிவா யாளப்
பகர்ந்த சொல்லை மறவாதே ஞானம் பாடு
சீர்பெறவே பூசைசெய்யக் கும்ப மெட்டுத்
தீர்க்கமுள்ள கும்பமடா ஓம்பிர தானம்
நேர்பெறவே கும்பநவ கும்பம் வைத்து
நேமமுடன் நவக்கிரகந் தனக்கு மைந்தா
ஊர்பெறவே கரகமதுக் கடியில் மைந்தா
— வட்சதையும் படிதா னொன்றே. 442

படியாக அட்சதையைப் பரத்தி மைந்தா
பத்தியுடன் பிரணவத்தைப் பதிவாய் நாட்டு
முடிவான சத்திநடு மய்யத்தின் கும்பம்
மோனமுள்ள அட்சதையும் படிதா னெட்டு
அடியான செலமதிலே சத்தி கும்பம்
ஆதியென்ற பிரணவத்தை அன்பாய்ச் சாத்தி
வடிவாக எனையாள வாவா என்று
மார்க்கமுடன் தானிருந்து சொல்லக் கேளே! 443

கேளப்பா பிரணவமேல் முக்கோண மிட்டுக்
கிருபையுள்ள கோணமதில் விந்து போட்டு
வாளப்பா சொல்லுகிறேன் கும்ப மெல்லாம்
வகையுடனே நூலணிந்து கெங்கை விட்டு
ஆளப்பா மாங்குலையும் தேங்காய் சாத்தி
அன்பாகச் சவாதணிந்து ஆடை சாத்திச்
சூளப்பா சுகந்தபரி மளங்கள் சாத்திச்
சுத்தமுடன் நீயிருந்து பூசை பண்ணே. 444

பூசைமுறை சொல்லுகிறேன் மைந்தா மைந்தா!
பூரணமாய் கும்பநடு கும்பந் தன்னில்
நேசமுடன் மதுரரசக் கனிகள் வைத்து
நேமமுடன் தூபமுடன் தீபங் காட்டி
ஓசையுள்ள மணிநாதஞ் சங்கு நாதம்
உத்தமனே சேகண்டி செகநா தந்தான்
ஆசையுடன் உபசாரஞ் செய்து நல்ல
ஆனந்தப் பூரணியைப் பூசை பண்ணே! 445

பண்ணப்பா பூசைநவ கும்ப பூசை
பத்திகொண்டு சுத்தமதாய்ச் சத்தி பூசை
விண்ணப்பா நின்றதிரு மந்திர வாளாய்
விளங்குகின்ற வேதாந்த வாலை பூசை
கண்ணப்பா நிறைந்ததிரு வாம பூசை
காமகளைப் பூரணமாய் நின்ற பூசை
முன்னப்பா செய்வித்தால் பலிக்கும் பூசை
முத்தியுள்ள பூசையடா சித்தி காணே. 446

சித்தித்த பூசையடா தேவி பூசை
திக்கெட்டும் வெத்தியடா இந்தப் பூசை
பத்தித்த பூசையடா தப்போ இல்லை
பதியறிந்து மந்திரவாள் தன்னை நீயும்
புத்திக்குள் இதையறிந்து பூசை பண்ணப்
பூமிமுத லாகாசம் ஆளப் பெற்றாய்
முத்திக்குள் முத்தியடா அறிவைப் பாரு
முன்னவன்தான் கண்ணிறைந்த மூலந் தானே. 447

தானென்ற மூலமடா யேக மூலம்
தயவான கும்பநவ மூல மெல்லாம்
வானென்ற புற்பமடா சொர்ன புற்பம்
வகையுடனே திசைகளெட்டுக் கும்பஞ் சேர்த்துக்
கோனென்ற கும்பநடுக் கும்பந் தன்னில்
குருவான தங்கமது களஞ்சி வாங்கிப்
பூணென்ற தகடதுவே புவனை மாது
பூரணியாள் அட்சரத்தைப் பொருந்த நாட்டே. 448

நாட்டமென்ற குருவான கும்பந் தன்னில்
நாதாந்த புவனைசக் கரத்தைச் சாத்தித்
தேட்டமென்ற கும்பநவ கும்ப மெல்லாம்
சிவசிவா பூசைமுறை செயமாய்ச் செய்து
ஆட்டமென்ற அம்பலவர் தன்னை நீயும்
அங்கனையே பூரணமாய்த் தியானம் பண்ணி
வாட்டமில்லா வாசிமலர் வாசத் தாலே
வளர்பிறையுந் தேய்பிறையும் பூசை பண்ணே! 449

பண்ணடா பூசைமுறை யாசை வைத்துப்
பதியமனங் கொண்டுமிகப் பூசை செய்தால்
முன்னடா நின்றுதிருப் புவனை தானும்
மூன்றுலகுந் தன்வசமாய் ஆள்வ தற்குக்
கண்ணடா கருணைவைத்துத் திருநீ றிட்டுக்
கமலமலர் அமுதமதைக் கனியா யூட்டி
விண்ணடா தானிருந்த மந்திர வாளை
வேதாந்தப் பூரணமாய் ஈவாள் பாரே! 450

பாராளும் புலத்தியனே சகலத் துக்கும்
பதிவான சூட்சமென்று பகரக் கேளு
நேரான மூலமடா வடிவு மாச்சு
நிசமான ரீங்கார வேலு மாச்சு
கூறாத வடிவெல்லாம் மந்திர வாளைக்
கூர்மையுடன் சொல்லுகிறேன் ஓம்றீங் கென்றும்
மாறாத மவுனமதாய்த் தியானம் பண்ணி
மார்க்கமுடன் திசையான வகையைப் பாரே!
பத்திமனங் கொண்டுபூ ரணமாய் நின்று
பரஞான கேசரமே வாச மாகிச்
சுத்தமுடன் ஓம், றீங் , வசி, வசி, யென் றோதச்
சூழ்ந்திருந்து சத்துருக்கள் வசியமாகும்
சித்தமுடன் ஓம், றீங், நசி, நசியென் றோதச்
சினந்துவரும் பீடையெல்லாம் மாண்டு போகும்
சத்தமுடன் ஓம்ரீங் வசிவசியென் றோதச்
சகலசவு பாக்கியங்கள் தானுண் டாமே. 452

உண்டாகும் ஓம்றீங் மசிமசியென் றோத
ஒடுங்காத காலகடி விஷங்கள் மீளும்
தண்டாமல் ஓம்றீங் அங்கென் றேதான்
தானதட்ட மிருகமெல்லாந் தானே ஓடும்
நன்றாகச் சொன்னதிந்த மந்திர வாளை
நாட்டமுடன் பூரணமாய்ப் பூசை பண்ணி
நின்றாட யேதொருகா ரியத்துக் கெல்லாம்
நிசமான மந்திரவாள் ஓம்றீங் கென்னே. 453

எண்ணுவதும் முன்னுவதும் மந்திர சூட்சம்
ஏகாந்த சூட்சமதை என்ன சொல்வேன்?
விண்ணிறைந்த சூட்சமடா அம்மா வாசி
வேதாந்த வாசிசிவ விந்து நாதம்
கண்ணிறைந்த போதமடா கமல போதம்
கருணைவளர் பூரணமாய் நின்ற நாதம்
உன்னிவிளை யாடுகின்ற நாதந் தன்னை
உத்தமனே மெய்த்தவமாய்க் கண்டு பாரே. 454

பாகப்பா இடதுகண் அகார சந்திரன்
பதிவான வலதுகண் உகாரஞ் சூரியன்
நேரப்பா சுழிமுனைதான் மகார மக்கினி
நினைவாக இப்படியே தியானஞ் செய்து
காரப்பா செபிக்கிறதோர் மந்திரங் கேளு
கருணையுடன் ஓம்றீங் சிவாயவசி யென்று
தேரப்பா இப்படியே தியானசிவம் பண்ணச்
சிவசிவா இகபரமும் முத்தி யாச்சே! 455

முத்தியுடன் இப்படியே மூன்று காலம்
முனைநிறுத்தித் தியானசிவம் செய்து வந்தால்
பத்தியுடன் சிவயோகம் சித்தி யாச்சு
பஞ்சகன தீட்சையுமோ முத்தி யாச்சு
சுத்தமுள்ள தீட்சையது ஆறா தாரம்
சுகமான ஆதாரம் ஆறுமுக மாச்சு
நித்தமுடன் இருதயத்தில் தானே நின்று
சிவசிவா நினைத்தபடி முடிக்கும் பாரே! 456

பாரடா சத்திசிவ பூசை பண்ணிப்
பதிவான வாலைரசம் பதிவாய்க் கொண்டால்
நேரடா ஆதாரஞ் சித்தி யாகும்
நினைவாலே வாசியது அகலா தய்யா
சாரடா நாதாந்த போகத் தேகிச்
சங்கையுடன் சற்குருவைத் தியானம் பண்ணி
ஏறடா பஞ்சகண தீட்சை யாலே
எட்டான அஷ்டசித்தும் திட்ட மாமே! 457

திட்டமுடன் பஞ்சகண தீட்சை தன்னைச்
செப்புகிற மார்க்கமதைச் செப்பக் கேளு
சட்டமுட னாதிகற்பம் அகாரம் விந்து
சங்கையுடன் ஆண்டொன்று செவித்த பின்பு
இட்டமுடன் உகாரமென்ற சத்தி மாது
இன்பமுடன் மனம்நிறுத்திக் கொண்டு தேறு
வட்டமதில் மனம்நிறுத்தி அந்தி சந்தி
மைந்தனே எட்டுரெண்டும் கொண்டு தேரே. 458

தேரப்பா காலைசிவம் மாலே சத்தி
செம்மையுடன் கொண்டுமனந் தேர்ந்த போது
காரப்பா வாலைபதம் பணிந்து கொண்டு
கருணையுடன் நாதாந்தப் போதத் தேகி
மேரப்பா மேருநடு முக்கோ ணத்தில்
விஞ்சையெனுங் காயத்திரி ரீங்கா ரத்தைச்
சாரப்பா தன்மனமே சாட்சி யாகத்
தானிறுத்தி ரீங்கார மூலம் பாரே. 459

பாரப்பா பரஞான மூல மான
பக்தியுள்ள காயத்திரி விஞ்ஞை தன்னை
நேரப்பா அறியாமல் மதங்கள் பூண்டு
நிறமில்லா ஆதிமறை யோர்கள் கூடி
வீரப்பா கொண்டதொரு அட்சரத்தை யோதி
வீணிலே தானலைந்து விசையுங் கெட்டுத்
தூறப்பா அடிப்படையுந் தகர்ந்து நல்ல
சுளிவான சுளிதனிலே சுழன்றார் காணே. 460

காணுகின்ற சுளிதனிலே சுழலா மல்தான்
கருவான காயத்திரி வித்தை கேளு
ஊணுகின்ற விஞ்சையடா மவுன ஞானம்
உண்மையென்ற ஞானமடா மந்திர வாலை
தோணுகின்ற வாலையடா மந்திர ரூபி
சுயஞ்சோதி யானசெகச் சோதி தன்னைப்
பூணுகின்ற சித்தமதாய்த் தானே நின்று
பூரணமாய்க் கேசரியைப் பூசைபண்ணே. 461

பண்ணப்பா கேசரியைப் பூசை பண்ணிப்
பரையான மந்திரகலை வாலை தன்னை
நண்ணப்பா அவள்பதமே கெதியென் றெண்ணி
நாளான நாளறிந்து பூசை பண்ணிக்
கண்ணப்பா தானறிந்து இடையாங் கண்ணில்
கால்மாறிக் கொண்டுகெதி கண்ணைப் பார்த்து
உண்ணப்பா வாசியினால் உறிஞ்சி உண்ணு
உண்மையிலே மனமதனை யொடுக்கி யுண்ணே. 462

ஒடுக்கிமன துருக்கமுடன் நின்றா யானால்
உனதுகெதி கால்வேகம் உரைக்கப் போமே
இடுக்கமென்ற தீவினைகள் இடங்கெட் டோடும்
என்மகனே உன்உடம்பு நாத மாகும்
அடுக்குநிலை யாதாரம் அடங்கி வாழும்
ஆதிசிவ சாம்பவியாள் நிர்த்தஞ் செய்வாள்
தொடுத்தமலர் முப்பூவின் வாசத் தாலே
சுகசீவ பிராணனது சுத்த மாமே. 463

சுத்தமுள்ள ஆதார சூட்சந் தன்னைத்
தொடுகுறிபோல் சொல்லுகிறேன் நன்றாய்க் கேளு
சித்தமுள்ள தேகமது திசமி மைந்தா
சிவசிவா திசமியிலே நவமி தோன்றும்
பத்தமுள்ள நவமியிலே அஷ்ட சத்தி
பதிவாக அஷ்டாங்க யோக மாளும்
உத்ததொரு அஷ்டாங்க யோகந் தன்னில்
உதித்தசத்தம் ஏழுவகைத் தோற்றம் பாரே. 464

பாரப்பா ஏழுவகைத் தோற்றந் தன்னில்
பதிவாக மடபதிக ளாறு மாச்சு
காரப்பா மடபதியில் பஞ்ச கர்த்தான்
கருணையுள்ள நால்வேதங் கருவாய்க் காட்டி
நேரப்பா நின்றதொரு மூர்த்தி யானார்
நிறைந்ததொரு மூர்த்திசத்தி சிவமு மானார்
சாரப்பா சத்திசிவம் ரெண்டு மொன்றாய்த்
தானாகித் தானவனாய் ஏக மாமே. 465

ஏகமென்ற தேசியடா ஏகா தேசி
இன்பமுடன் துவாதேசி ரெண்டு மாகித்
தேகமென்ற வாசியடா திரையோ தேசி
செம்மையுடன் சதுர்த்தேசி சேர்ந்து ஒன்றாய்
ஆகமென்ற ஆகமங்கள் அறவே தாமும்
அடங்கிநின்ற வாசி அம்மா வாசி யாச்சு
பாகமுடன் வாசிநின்ற அம்மா வாசி
பத்தியுடன் தன்னகமாய்ப் பதிவாய்ப் பாரே. 466

பாரப்பா தன்னகத்தைப் பதிவாய்ப் பார்க்கில்
பாழான ரவிமதியும் பாய்ந்து பாய்ந்து
நேரப்பா ஒன்றையொன்று நம்பா மல்தான்
நிலைதவறி மாண்டஇடம் யார்தான் காண்பார்
சேரப்பா மாண்டகெதி யென்ன வென்றால்
திங்களென்ற சந்திரனே வாசி யாச்சு
வீறப்பா கொண்டதொரு மூல மாச்சு
விளங்கிநின்ற சத்திமய மாகுங் காணே. 467

காணவே சத்திசிவ மாகி நின்ற
காலான வாய்வுடனே தீயும் ரெண்டு
பூணவே ஆகாசஞ் சாட்சி யாகப்
பொன்னான பிருதிவியும் அப்பும் ரெண்டும்
தோணவே ரெண்டுமது ஒன்றாய்க் கூடிச்
சேர்ந்துமிகத் தான்மடித்துச் சுத்த மாகப்
பேணவே மண்ணாகி உப்பாய்ப் போன
பேச்சறிந்து அஞ்சையுமே பேணிப் பாரே. 468

அஞ்சுப்பு

பேணிப்பார் பஞ்சகர்த்தா அஞ்சு மொன்றாய்ப்
பிலமாக நின்றுவிளை யாடு தற்குப்
பூணிப்பார் அகாரமென்ற சிவமாம் விந்தை
புத்தியுடன் பூரணமாய்ப் பூசை பண்ணி
ஊணிப்பார் அதின்பிறகு உகார சத்தி
ஓமென்றால் தான்செபித்து உறுதி பெத்தான்
ஆணிமரத் ததிகமரம் பஞ்ச பூதம்
அப்பனே பூரணமாய் வாழும் பாரே! 469

பாரப்பா மவுனமுட னின்று வாழப்
பரஞான கேசரியாள் பாதம் போற்றிச்
சாரப்பா அவள்பதமே கெதியென் றெண்ணிச்
சங்கையுடன் மவுனரசம் தானே கொண்டால்
பேரப்பா பெற்றதொரு தவப்பே றாலே
பேரண்டஞ் சுத்திவரக் கெதிஉண் டாகும்
ஆரப்பா அறிவார்கள் மவுனப் போக்கை
அறிந்துகொண்டு பூரணத்தை யடுத்து வாழே! 470

அடுத்துமிக வாழ்வதற்கு மைந்தா கேளு
ஆதியென்ற பூரணமாம் அண்டத் தேகி
விடுத்துமிக அதின்ரசத்தை வாங்கிக் கொண்டு
வேதாந்த சத்திசிவ பாண மூட்டிக்
கடுத்துமிகப் போகாமல் கற்பூரஞ் சாத்திக்
களங்கமில்லா ரவிதனிலே காண வைத்து
எடுத்துமிகப் பூரணமாய்க் கொண்டா யானால்
ஏகாந்த மானசிவ யோகி ஆச்சே. 471

ஆச்சப்பா சிவயோகி யாவ தென்ன?
அடங்கிநின்ற சிவகர்த்தா அஞ்சுபேரைப்
பேச்சப்பா பேச்சறிந்து கண்டு கொண்ட
பெருமையினால் சிவயோக முத்த னாச்சு
மூச்சப்பா தானறிந்து தன்னைப் பார்த்து
முனையான சுளினையிலே வாசி பூட்டிக்
காச்சப்பா அக்கினிகொண் டாறா தாரக்
கசடகலக் காச்சிவிடு கனக மாமே. 472

ஆமப்பா கனகமென்ற தங்கத் தாயை
அருமையுடன் காணுதற்கு அங்கங் கேளு
ஓமப்பா வீரமுடன் லிங்கங் கூட்டி
உண்மையுடன் கமலரசந் தன்னா லாட்டித்
தாமப்பா சாரமதுக் கங்கி பூட்டிச்
சங்கையுடன் ரவிதனிலே காயப் போட்டு
நாமப்பா சொல்லுகிறோம் அயக்கரண்டி தன்னில்
நன்மையுடன் கவசமிட்டு எண்ணைக் குத்தே. 473

தாரயியம்

எண்ணெயென்றால் நல்லெண்ணெய் விட்டு மைந்தா
இன்பமுடன் தானிருக்க ஈய மாகும்
பொன்னையொத்த தாரமடா ஈய மானால்
பொன்னான பொன்விளையும் புகழ்ந்து பாரு
என்னைவளர்த் தெடுத்தகுரு நாதன் சொன்னார்
என்மகனே நீயுமிந்தப் படிதான் பாரே!*

---

* ஓரடி சுவடியிலும் குறைகின்றது..

தாம்பரபஸ்பம்

பாரப்பா இன்னமொரு கருவை கேளு
பதிவான பூரமடா கற்பூ ரந்தான்
நேரப்பா கற்பூரந் தன்னோ டொக்க
நிசமான கெந்தகமும் கூடச் சேர்த்துக்
காரப்பா கல்வமதில் அரைக்கும் போது
கசிந்துமிகச் சிலமாகுஞ் சிலத்திற் கேளு
சாரப்பா அரிதாரம் வீரஞ் சேர்த்துக்
தானரைத்துத் துட்டதற்குக் கவசம் பண்ணே. 475

பண்ணப்பா கவசமது நன்றாய்ச் செய்து
பாலகனே புடம்போட்டுப் பற்ப மாகும்
எண்ணப்பா என்றுசொல்லி யிருந்து விட்டால்
ஈடேற்றம் இல்லையடா தன்னைப் பாரு
விண்ணப்பா தங்கமதில் தன்னைப் பாரு
மெய்யுருகக் காணுமடா அங்கந் தங்கம்
தண்ணப்பா அங்கமடா தங்க மாகும்
தாயான கெந்தகத்தின் தயிலங் கேளே. 476

கெந்தி தைலம்

கேளப்பா பானையிலே பசும்பால் விட்டுக்
கிருபையுடன் தலைவாழைக் குருத்து வாங்கி
வாளப்பா குருத்ததனால் வேடு கட்டி
மைந்தனே அதின்மேலே கெந்தி போட்டு
ஆளப்பா அடுப்பேத்தி எரிக்கும் போது
ஆதியென்ற கெந்தியது தயில மாகும்
கோளப்பா இல்லாத தயிலந் தன்னைக்
கூர்மையுடன் பீங்கானில் வாங்கிக் கேளே! 477

கேளடா தயிலமதில் மைந்தா கேளு
கேள்வியென்ன புளுகுடனே கூடன் கூட்டி
ஆளடா தயிலமதில் பொடியைப் போட்டு
அப்பனே தயிலமது தண்ணீ ராகும்
கோளடா இல்லாத தயிலந் தன்னில்
கூர்மையுடன் மனோசிலையைத் தோய்த்து வாட்டி
வாளடா வாட்டினதை யுருக்கி மைந்தா
வளமான தங்கமதில் சேர்த்துக் காணே. 478

சேர்த்துமிகப் பார்க்கையிலே தங்கஞ் செம்பாம்
சிவசிவா தங்கத்தின் செம்பு தன்னைப்
பார்த்துமிக வெள்ளியிலே பத்துக்கொன்று
பக்குவமாய்த் தான்கொடுத்து ஊதிப் பாரு
கார்த்துமிகக் கனிவாலே ஊதிப் பார்க்கக்
கைலாச மேருவது தங்க மாச்சு
சாத்தியதோர் தங்கமதைத் தானே கண்டு
தன்மையுடன் பூரணமாய் வாழ்வார் பாரே. 479

பாரப்பா வாழ்வதுவும் ஆசை யாசை
பலபணிதி பூணுவதும் ஆசை யாசை
நேரப்பா நிற்பதுவும் ஆசை யாசை
நிஷ்டையென்ற சிவயோகம் ஆசை யாசை
காரப்பா சகலகலை வாசி யேறிக்
கண்ணறிந்து பார்ப்பதுவும் ஆசை யாசை
சாரப்பா காயாதி கற்பந் தன்னைச்
சாதித்து நிற்பதுவும் ஆசை தானே. 480

ஆசையென்ற ஆசையெல்லாம் பாசம் பாசம்
ஆகாகா தேகமென்ற பாசத் துக்கு
ஓசையென்ற பசுவதனால் ஆசை மீறி
உண்மையென்ற ஞானமதி தன்னைக் காணப்
பாசையென்ற பலசமய நூலா ராய்ந்து
பத்திகொண்டு அஷ்டாங்க பாரத் தேகிப்
பூசையென்ற ஆகமங்கள் செய்துகொண்டு
பொல்லாத மாய்கையிலே புகுந்தார் பாரே. 481

பாரப்பா மாய்கையென்ற ஆசா பாசம்
பலபலவாய்ச் சாஸ்திரம் பத்தி யெல்லாம்
நேரப்பா போகையிலே சென்று மாயும்
நேர்மையுடன் புருவமதில் நிலையில் நிற்கும்
காரப்பா காயத்தின் கற்பந் தேடு
கற்பமென்று செந்தூர பற்பஞ் செய்யும்
வீறப்பா சென்றுசிவ யோகம் பண்ணு
விசையான மாய்கைவிளை யாட்டுத் தானே. 482

சாதிலிங்கக் கட்டு

தானென்ற மாய்கைவிளை யாட்டில் லாட்டில்
சங்கற்பம் விகற்பமென்ற சார்பங் கேது?
கோனென்ற குருவருளால் எண்ணிப் பார்க்கில்
கொண்டபடி நின்றதுவே பரசு ரூபந்
தேனென்ற சுரூபமதுக் காக வேண்டிச்
செய்யதொரு பலதொழிலால் குற்ற மில்லை
ஊனென்ற பலதொழிலுக் குறுதி யான
உறுதியுள்ள தங்கமடா உண்மை தானே. 483

உண்மையுள்ள தங்கத்தின் மாத்து தன்னை
உறுதியுடன் காணுதற்கு வகையைக் கேளு
தன்மையென்ற நாகரசம் ஒன்றாய்க் கூட்டிச்
சரியாகப் பொரிகாரங் கெந்தி சேர்த்து
நன்மையுள்ள கலசப்பால் தன்னா லாட்டி
நாதாந்த லிங்கமதுக் கங்கி பூட்டிச்
செம்மையுடன் ரவிதனிலே காய வைத்துச்
சிவசிவா சுண்ணாம்பு உப்புங் கூட்டே. 484

கூட்டிமிகச் சம்பளத்தால் நன்றா யாட்டிக்
கூர்மையுடன் மேற்கவசஞ் சீலை செய்து
வாட்டிமிகப் புடம்போட்டு எடுத்துப் பார்த்தால்
மகத்தான சாதிலிங்கங் கட்டிப் போகும்
தாட்டிகமாய்ச் சயவீரம் அப்படியே கட்டும்
சார்பறிந்து காட்டுகின்ற திட்டம் பார்த்தால்
நாட்டியதோர் ரசவாதங் கைக்குள் ளாகும்
நாதாந்தப் புலத்தியனே இன்னங் கேளே! 485

கல்லுப்பு கட்டு

கேளடா சவுக்கார அன்ன பேதி
கெடியான யப்பிரக முட்டைத் தோடு
வாளடா பொன்னுருக்கும் பொரிகா ரந்தான்
மகத்தான சங்குடனே யாறுங் கூட்டிச்
சூளடா மேனிச்சார் தன்னா லாட்டிச்
சுகமான கல்லுப்புக் கங்கி பூட்டி
மாளடா ரவிதனிலே காய வைத்து
மார்க்கமுடன் இன்னமொரு வரிசை கேளே. 486

வரிசையுடன் சுண்ணாம்பு ஓடுங் கூட்டி
மார்க்கமுடன் சம்பளத்தால் நன்றா யாட்டி
உருசையுடன் மேற்கவசம் நன்றாய்ச் செய்து
உண்மையுடன் புடம்போட்டு எடுத்துப் பாரு
கரிசனமாய்ப் பூடம்போட்டு எடுத்துப் பார்த்தால்
கல்லாகக் கல்லுப்புக் கட்டும் பாரு
பரிசனமாய்க் கல்லுப்புக் கட்டிச் சானால்
பாலகனே வேதைமுகம் பதிவாங் காணே. 487

கட்டு கெந்தகம்

காணவே கட்டிநின்ற உப்போ டொக்கக்
கருவான சாதிலிங்கக் கட்டுங் கூட்டி
ஊணவே கமலரசந் தன்னா லாட்டி
உத்தமனே புடமறிந்து வகையே செய்தால்
தோணவே லிங்கமுடன் உப்புஞ் சேர்த்துச்
சுத்தமுடன் கட்டியது சித்தி யாகும்
பேணவே சித்தியுடன் கட்டும் லிங்கம்
பெரிதான வெள்ளிசெம்பில் வேதை யாச்சே. 488

தங்காயம்

ஆச்சப்பா இன்னமொரு வேதை மார்க்கம்
அருமையுள்ள புலத்தியனே சொல்லக் கேளு
தோச்சப்பா அரிதாரஞ் சாதி லிங்கஞ்
சுகமான பொரிகாரஞ் சவ்வீ ரந்தான்
பாச்சப்பா வகைக்குவகை மஞ்சாடி கூட்டிப்
பதிவாகக் கமலரசந் தன்னா லாட்டி
நீச்சப்பா தங்கமொரு பலத்த கட்டில்
நீமகனே கவசமது நன்றாய்ச் செய்யே. 489

செய்யப்பா மண்சீலை வலுவாய்ச் செய்து
சிவசிவா புடந்தனிலே வைத்துப் பார்த்தால்
மெய்யப்பா தங்கமது ஈய மாகும்
வேதாந்த தங்கமதைப் பதனம் பண்ணி
மய்யப்பா மையமென்ற தங்க ஈயம்
மார்க்கமுடன் செம்பதனில் பத்துக் கொன்று
கையப்பா தானறிந்து உருக்கிக் கொண்டு
கனமாக நாலிலொன்று வெள்ளி சேரே. 490

சேர்த்துமிகத் தானுருக்கிப் பார்க்கும் போது
சிவசிவா பொன்னொளியை என்ன சொல்வேன்
மாத்ததிக மானதொரு சோதித் தாயை
மனதுபரி பூரணமாய்ப் பூசை பண்ணி
ஆற்றுமத்துக் கரசான சோதி யென்று
அனுதினமும் சிவயோகத் தாசை பூண்டு
பார்த்திபனே பூரணமாய் நின்றா யானால்
பக்குவமாய்ப் பூரணத்தில் பதிய லாமே. 491

பதியான பதியதுதான் பரசு ரூபம்
பசுவான வாசியடா காலு மாச்சு
விதியான பாசமடா வீட தாச்சு
வீடறிந்து கால்நிறைந்து போகஞ் செய்தால்
கெதியான முச்சுடரு மொன்றாய் நின்று
கேசரத்தில் ஆடுகிற கெதியைப் பார்த்தால்
மதியான மதிமயக்கந் தானே தீரும்
மாசற்ற சோதியென வாழ லாமே! 492

வாழலாஞ் சவுமியமாய் நின்று கொண்டு
மகத்தான சாகரமே தாமென் றெண்ணி
ஆளலாம் அந்தரங்க மூல மாக
ஆதிபர ஞானவெளி சோதி யாலே
சூழலாஞ் சுத்தசித்த சுகத்தைப் பெற்றுத்
துலங்கலாம் மணிமகுடஞ் சோதி போல
மேலெலாம் பாசமென்று நினைக்க வேண்டாம்
வேதாந்த பீடமடா அண்டந் தானே. 493

தானான அண்டபிண்ட மண்விண் ணாச்சு
சகலசரா சரங்களெல்லாம் அதுதா னாச்சு
வானென்ற வடிவதனைக் காணா ரெல்லாம்
வாசார கோசரமாய்ப் பேச லாச்சு
ஊனென்ற உடலுயிரை உண்மை யாக
உண்மையென்ற ஞானநெறி காணா ரெல்லாம்
வீணென்ற வேடமதைத் தரித்துக் கொண்டு
வெறியெடுத்த நாய்போலே திரிவார் பாரே. 494

பாரப்பா வெறியெடுத்து உதரச் செந்தீப்
பாய்ந்தேறிப் பத்திமனம் மலையா மல்தான்
காரப்பா அதற்குமொரு கருவைக் கேளு
கருவான துருசுசவ் வீரம் கூட்டிச்
சாரப்பா பச்சைக்கற் பூரத் தோடு
தனித்தபச்சைப் புழுகுடனே நாலுங் கூட்டி
நேரப்பா வரைத்துப்பீங் கானில் வைக்க
நிறமாக வருகுமடா செயநீர் தானே. 495

தானான செயநீரின் மைந்தா கேளு
தகடான அரிதாரந் தேய்த்துத் தோய்த்து
வானான ரவிதனிலே வைத்துப் பார்க்க
மாசற்று நீறுமடா துருசு நிறம்
கோனான சவ்வீரங் கூட நீத்துக்
கூர்மையுடன் மூன்றுநீ ரொன்றாய்க் கூட்டித்
தேனான வெள்ளியொரு பலத்த கட்டில்
தீர்க்கமுடன் தான்பூசிப் புடத்தைப் போடே. 496

போடப்பா புடமதினில் வைத்துப் பார்க்கப்
பூரணமாய் வெள்ளியது நீறிப் போகும்
நாடப்பா வெள்ளியென்ற நீரில் மைந்தா
நன்மையுடன் இடைசரியாய் வீரம் பூரம்
கூடப்பா கல்வமதில் நாத நீரால்
சுத்தமுடன் தானாட்டி யெடுத்துக் கொண்டு
ஆடப்பா தங்கமென்ற காசில் அப்பி
அதின்பிறகு உப்புடனே ரெங்கு கூட்டே. 497

நாகக்கட்டு

கூட்டிநன்றாய்ப் பழச்சாற்றில் நன்றா யாட்டிக்
கூர்மையுடன் மேற்கவசஞ் சீலை செய்து
நாட்டிநன்றா யெருவடிக்கிப் புடத்தைப் போடு
நாதாந்த தங்கமது நீறிப் போகும்
தாட்டிகமாய் நீரிநின்ற தங்க நீறு
தானெடுத்துப் பதனமாய் வைத்துக் கொண்டு
பூட்டிநன்றாய் நவலோகந் தன்னி லீயப்
பொல்லாத லோகமெல்லாந் தங்கந் தானே. 498

தானான நாகமதைக் காண வேண்டித்
தன்மையுள்ள நாகமுறை யொன்று கேளு
வீணான கெந்தகமுந் துருசு தாரம்
வெள்ளைப்பா சானமுடன் சாரஞ் சங்கு
வானான அறுசரக்குங் கல்வத் திட்டு
வரிசையுடன் சம்பளத்தின் சாற்றா லாட்டிக்
கோனான நாகமதில் கவசம் பண்ணிக்
கூர்மையுடன் சத்தியுப்பால் சீலை செய்யே. 499

செய்யப்பா சீலைசெய்து புடத்தைப் போடு
செம்மையுடன் நாகமது உருகி நிற்கும்
மெய்யப்பா உருகிநின்ற நாகத் தோடே
மேலான தங்கமதைச் சரியாய்ச் சேர்த்து
வையப்பா செம்புவெள்ளி ஒன்றாய்க் கூட்டி
மகத்தான நாககுரு பத்துக் கொன்று
கையப்பா தானறிந்து கொடுத்துப் பாரு
கண்ணடங்காத் தங்கவொளி காண லாமே. 500

காணவே இன்னமொரு கருவைக் கேளு
கருவான பேதியுடன் காரங் கூட்டிப்
பேணவே தானரைக்க நீருண் டாகும்
பெருகிநின்ற நீர்தனிலே சொல்லக் கேளு
நோணவே அரிதாரம் வீரம் பூரம்
சுத்தமுடன் தானரைத்து ரவியில் வைத்து
ஊணவே நீறியது பற்ப மாகும்
உத்தமனே அதுவுடனே கெந்தி கூட்டே. 501

கூட்டிமிக வாய்நீரால் அரைத்து மைந்தா
குருவான தங்காதி மேலே பூசி
வாட்டிமிகப் புடம்போடத் தங்க நீறு
மகத்தான பற்பமதை வைத்துக் கொண்டு
நாட்டமுடன் பணவிடைதான் தேனில் கொண்டால்
நரசென்ம மல்லவடா தேவ னாச்சு
தாட்டிகமாய்த் தாய்பதத்தைப் பூசை பண்ணித்
தானவனாய் நின்றுதவந் தானே செய்யே. 502

செய்யப்பா கட்டிநின்ற வீர லிங்கத்
தீர்க்கமுடன் நாதநீர் தன்னா லாட்டி
மெய்யப்பா தாரமதுக் கங்கி பூட்டி
விசையான ரவியில்வைக்க ஈய மாகும்
வையப்பா தங்கமதில் ஈயஞ் சேர்த்து
மார்க்கமுடன் தானுருக்கக் குருவாய் நிற்கும்
பையப்பா குருவெடுத்து வெள்ளி செம்பில்
பத்துக்கொன் றிட்டிடவே பழுக்கும் பாரே. 503

கட்டுக்களால் வீரத்துக் கவசம்

பாரப்பா வீரமுடன் சாரங் கூட்டிப்
பத்தியுடன் தானரைக்க நீர்உண் டாகும்
நேரப்பா அந்நீரில் மைந்தா கேளு
நிசமான காரமுடன் வீரந் தோய்த்துக்
காரப்பா விளக்கொளியில் வாட்டி னாக்கால்
கசடத்துக் கட்டியது திட்ட மாகும்
சேரப்பா நாகமது உருகும் போது
செயமான சாரமதைச் சேர்த்துப் பாரே. 504

சேர்த்துமிகத் தானுருக்க நாகந் தானும்
தீர்க்கமுடன் தானிருந்து கண்விட்டாடும்
பார்த்துமிக அந்நேரம் தங்கஞ் சேரு
பதிவான வீரமது கூடச் சேரு
காத்துநன்றாய்ச் சேர்ந்ததைநீ யெடுத்துப் பாரு
கனகமய மானகுரு களங்க தாகும்
ஆற்றுமத்துக் கூரசான களங்கு தன்னை
அன்புவைத்து வெள்ளிசெம்பில் அணைத்துப் பாரே.505

அணைத்துமிகத் தானுருக்கி யெடுத்துப் பார்த்தால்
ஆதிமிகச் சோதியே தங்கத் தாய்தான்
நினைத்தபடி தான்கொடுக்குஞ் சோதித் தாயை
நித்தியமுஞ் சுத்தமதாய்ப் பூசை பண்ணி
மனத்தைமிகத் தானுருக்கிச் சோதி பார்த்தால்
மகத்தான வாசிசிவ யோகந் தன்னால்
சினத்துவருங் காலனவன் ஓடிப் போவான்
சிவசிவா குருபதத்தில் தெளிவாய் நில்லே. 506

நில்லப்பா ஞானியண்ட முட்டைத் தோடு
நிசமான கடல்நுரையும் காரஞ் சேர்த்து
உள்ளப்பா நாதநீர் தன்னா லாட்டி
உத்தமனே சாரமதுக் கங்கி பூட்டிச்
செல்லப்பா ரவிதனிலே காய வைத்துச்
சிவசிவா புடம்போட உருகிக் கட்டும்
வில்லப்பா விசைபோலே கட்டும் சாரம்
வேதாந்த நாகமதில் கட்டும் பாரே. 507

பாரப்பா சவ்வீரம் வைப்புச் சொல்வேன்
பதிவான நவச்சார மன்ன பேதி
சாரப்பா கல்லுப்புச் சீனக் காரஞ்
சங்கையுள்ள வெடியுப்புத் துருசு வெள்ளை
காரப்பா சாதிலிங்கங் கெவுரி துத்தங்
கனமான தாளகமும் எவச்சாரங் காரம்
நேரப்பா வகைக்குஒரு பலமுங் கூட்டி
நிசமான இடைக்குஅரை ரசமுஞ் சேரே. 508

வீரச் செந்தூரம்

சேர்த்துமிகத் தான்பொடித்துக் குப்பிக் கேத்தித்
தீர்க்கமுடன் மண்சீலை மூன்று செய்து
போத்திமிகச் சட்டியரை மணலப் பாத்திப்
பூரணமாய்க் குப்பியதின் மேலே வைத்துப்
பார்த்திபனே குப்பிமூக் களவா மட்டும்
பதிவாக மணலிட்டு அடுப்பில் வைத்து
நாத்துமிகப் போகாமல் நாலு சாமம்
நன்றாகத் தீமூட்டி யெரித்துப் பாரே. 509

பாரடா எரித்துமிக யிறக்கி வைத்துப்
பத்தியுடன் குளுந்தபின்பு எடுத்துப் பாரு
நேரடா வீரமது என்ன சொல்வேன்?
நிசமான பூரணசந் திரனைப் போலே
பேரடா பெற்றதொரு வீர மாச்சு
பிலமான வீரமதை யார்தான் காண்பார்?
காரடா சற்குருவைத் தொழுது போற்றிக்
கனமான சிவயோகக் கருத்தில் நில்லே. 510

பாஷாணக் கட்டு

நில்லென்ற நிலைதனிலே நின்று கொண்டு
நீமகனே இலுப்பையுட பாலை வாங்கிச்
செல்லென்ற பாஷாணக் கட்டி மேலே
செம்மையுடன் தான்தடவி மைந்தா கேளு
உள்ளென்ற காயரைத்துப் பொதிந்து மைந்தா
உண்மையுடன் புடம்போட உருகி நிற்கும்
சொல்லொன்றுந் தவறாமல் தாம்பூ ரத்தில்
சுத்தமுடன் பாஷாணம் பத்துக் கொன்றே. 511

ஒன்றாகத் தான்கொடுத்து உருக்கி மைந்தா
உண்மையுடன் பத்துக்கு ஒன்று வெள்ளி
நன்றாகத் தான்கொடுக்கும் ஒன்று வெள்ளி
நல்லவெள்ளி மாத்ததிகம் நலமாய்க் காணும்
நின்றாடும் பொன்வெள்ளி கண்டா யானால்
நின்மனது மலையாது யோகத் தேறு
குன்றாது சிவயோகங் கூர்மை யாகும்
குருவசனம் மறவாமல் குறிகண் நாட்டே. 512

நாட்டமென்ற நடனமடா மைந்தா கேளு
நன்மையுள்ள இடதுகலை சந்த்ர னாச்சு
தேட்டமென்ற வலதுகலை சூரிய னாச்சு
திருவான புருவநடு அக்னிதான் மைந்தா
ஆட்டமென்ற சந்திரன்தான் சிவமு மாச்சு
அழகான சூர்யகலை சத்தி யாச்சு
கூட்டமென்ற அக்கினிதான் சோதி யாச்சு
குருவருளால் முச்சுடரைக் கண்டு தேரே! 513

தேருவது சூட்சாதி சூட்ச மப்பா
திருவான சூட்சமதைச் சொல்லக் கேளு
நேருவது நிலையறிந்து சுளினைக் கேகி
நேர்த்தியென்ற மத்தியடா மகார மீதில்
சாருவது தெளிவெனவே கண்டு கொண்டால்
தன்வசமாய் அவ்வாசி சார்வாய் நிற்கும்
ஆறுவது ஆதார அந்திரந் தன்னில்
அடங்கிநின்ற அக்கினியே சோதி காணே. 515

சோதியென்ற அக்கினியே தான்தா னாகும்
துலங்கிநின்ற முச்சுடருந் தான்தா னாகும்
ஆதியென்றும் அந்தமென்றுந் தான்தா னாகும்
அடங்கிநின்ற சிவபோகந் தான்தா னாகும்
சாதியென்ற சமரசமுந் தான்தா னாகும்
சச்சிதானந்த பூரணந் தான்தா னாகும்
நீதியுடன் தன்னறிவால் பார்க்கும் போது
நிறைந்துநின்ற பூரணமாய்க் காண லாச்சே. 515

ஆச்சப்பா பூரணமாய் நின்ற காட்சி
அரிதரிது காண்கிறது அருமை யாகும்
பேச்சப்பா பெருகிநின்ற அருமை யாகும்
பிரிந்துதடா ரவிமதியும் ஒளியாய் நின்று
காச்சப்பா ஒளியறிந்து வெளியைக் கண்டேன்
கண்டவெளி ஒளியதுவே கலந்து சென்று
போச்சப்பா இருள்ஒளியில் கலந்து கொண்டு
போனவிடம் வந்தவிடம் புகுந்து பாரே. 516

பாரப்பா புகுந்தவிட மிருள்தா னாகும்
பத்திகொண்டு வந்தவிடம் வெளிதான் மைந்தா
நேரப்பா வெளியொளிதான் எங்கே யென்றால்
நிசமான ஆகாசம் இருளாய்ப் போச்சு
சேரப்பா செனித்ததுவும் இருளி லாச்சு
செத்திறந்து போனதுவும் இருளி லாச்சு
காரப்பா கண்டதெல்லாம் இருள்தா னாச்சு
கண்கண்ட காரியங்கள் கனவாய்ப் போச்சே. 517

போச்சப்பா கண்டதெல்லாம் கனவாய்ப் போச்சு
பொருந்திமனம் காணாத பொருள்தான் சத்யம்
பேச்சப்பா சத்தமெல்லாம் மாய மாச்சு
பேச்சற்ற இடமதுதான் அனித்திய மாச்சு
ஆச்சப்பா ஆசையெல்லாம் பாசம் பாசம்
ஆசையற்ற நிராசையது அதுதான் சாட்சி
காச்சப்பா காச்சியென்று காச்சி காணக்
கண்ணுமில்லை காதுமில்லை யென்றுந் தானே. 518

என்றுந்தான் இருந்தபடி இருந்த தல்லால்
என்மகனே இனிமேல்வே றுண்டோ சொல்ல
அன்றுந்தான் இன்றுவரை ஒன்றே யல்லால்
ஆடினதும் அடங்கினதும் அதுதான் பாரு
ஒன்றும்தான் பல்பொருளாய் விரிந்து நின்று
ஓடிமிக அடங்கினது ஒன்றில் தானே
நின்றபடி இதுபோதங் கண்டு கொள்ளு
நிச்சயமென் றுச்சிதமாய் நின்று காணே. 519

காணுவதும் பூணுவதும் பாச மாகும்
கலங்குவதும் முழங்குவதும் பாச மாகும்
பேணுவதும் பிசத்துவதும் பாச மாகும்
பெருகுவதுங் குறுகுவதும் பாச மாகும்
பூணுவதும் போற்றுவதும் பாச மாகும்
போதநெறி யானதுவும் பாச மாகும்
தோணுவதுஞ் சுற்றுவதும் பாச மாகும்
சுத்தமுடன் நின்றபடி தன்னுள் பாரே. 520

பாரப்பா தன்னுள்ளே புகுந்து பார்க்கில்
பாழான பிருதிவிதான் மண்ணாய்ப் போச்சு
நேரப்பா அப்பதுவுந் தண்ணீ ராச்சு
நிசமான தேய்வதுவுந் தீயு மாச்சு
காரப்பா வாய்வதுவும் காத்து மாச்சு
கருவான ஆகாசம் சாட்சி யாச்சு
தேரப்பா அதுஅதுவும் அதுவே ஆச்சு
தேட்டமென்ன வாட்டமென்ன தெளிந்து பாரே. 521

தெளிந்துநிலை தனையறிந்து தெளிந்து பார்க்கில்
தெளிவறிந்து சொல்வதற்கு நாவங் கில்லை
அளிந்தந்த வடிவான வடிவே யல்லால்
அரூபமென்றும் ரூபமென்றும் மருளப் போமோ?
நெளிந்துமனம் போகாம லமுந்தி யந்த
நேரறிந்து நிலையறிந்து நின்றால் மைந்தா
வெளிந்தோடிப் போகாது அந்தத் தேரு
மாதவமே பேதகமாய் வாழுங் காணே. 522

ரசக்கட்டு நாகசுத்தி

காணவே சூதத்தின் கட்டுச் சொல்வேன்
கருணைவளர் சூதமது பலந்தா னொன்று
பூணவே கல்வத்தில் இட்டுக் கொண்டு
புத்தியுடன் வெத்திலைச்சார் செங்கல் தூளும்
பேணவே மத்தித்துக் கழுவிப் போட்டுப்
பிலமான ரவிதனிலே காய்ந்த பின்பு
தோணவே வழலைபச்சைத் துருசுங் கூட்டிச்
சுத்தமுடன் நாதவிந்தை விட்டு ஆட்டே. 523

ஆட்டவே சூதமது வெள்ளை யாகும்
அறைபச்சைப் பூணாக மறைத்துக் கொண்டு
கூட்டவே குகைபோலே செய்து மைந்தா
குருவான ரசவெண்ணெய் அதற்குள் வைத்து
நாட்டவே அவிபுடமாய்ப் பத்துப் போட்டால்
நல்லரசந் தானுருக்கிக் கல்லுப் போலாம்
வாட்டவே கருஊமத்தங் காயில் வைத்து
மைந்தனே முன்போலே புடத்தைப் போடே. 524

போட்டபின்பு கரண்டியிலே எண்ணெய் குத்திப்
புத்தியுடன் தானுருக்கி யெடுத்துக் கொண்டு
நாட்டமுடன் குடகரியில் உருக்கிப் பார்த்தால்
நல்லரச மணியிதுவும் கண்விட் டாடும்
தேட்டமுட னம்மணியைத் தானெ டுத்துச்
சிவசிவா சாரணைகள் திறமாய்ச் செய்தால்
ஆட்டமுடன் அண்டமெல்லாஞ் சுத்த லாகும்
அரகரா சூதமணி யாட்டுத் தானே. 525

தானென்ற பூரணமே யமூர்த்த மாகும்
தன்மையுடன் அந்தமூர்தம் தானே கொண்டு
தேனென்ற அந்தமூர்தம் கொண்டு தேர்ந்தால்
திருவாசல் பூட்டுகள்தான் திறக்கும் பாரு
ஊனென்ற ஆதாரம் அங்கே காணும்
உண்மையென்ற நாதவெளி கீதம் கேட்கும்
நானென்ற நாட்டமதாய் நின்றா யானால்
நல்லபதங் கிட்டுமடா நயனம் பாரே. 526

பாரப்பா சூதமணி தனையெ டுத்துப்
பத்தியுள்ள நாதமதால் சுருக்குத் தாக்கிச்
சேரப்பா அந்திடைக்குத் தங்கஞ் சேர்த்துத்
திரமான அப்பிரக விந்தால் வாட்டி
நேரப்பா மணிதனுக்கு அங்கி பூட்டி
நேர்மையுடன் ரவிதனிலே காயப் போட்டுத்
தேரப்பா சட்டியிலே கறியுப் பிட்டுத்
திறமான ரசமணியை நடுவில் வையே. 537

ரச செந்தூரம்

வையப்பா மேலுமந்தப் படிதானுப்பை
வரிசையுடன் செய்தபின்பு சட்டி மூடி
மெய்யப்பா மண்சீலை ஏழுஞ் செய்து
மெய்ஞான சற்குருவின் பாதம் போற்றிக்
கையப்பா தவறாமல் குப்பிக் கேத்திக்
கமலமென்ற அக்கினியை நாலு சாமம்
செய்யப்பா தீமூட்டிப் பதந்தப் பாமல்
செம்மையுடன் தானிறக்கி ஆற வையே. 528

ஆறவைத்து ரசமணியை யெடுத்துப் பாரு
அப்பனே செந்தூரங் கண்கொள் ளாது
தேறவைக்கும் தேகமதைச் செந்தூ ரந்தான்
சிவசிவா பணவிடையாய்த் தேனில் கொண்டால்
மாறவைக்கும் வாசியது நேரே நிற்கும்
மகத்தான ஆதாரம் அடங்கா தப்பா
ஊறவைக்குஞ் செம்புகளில் சத்தே பட்டால்
ஊறவைத்துத் தங்கமய மாகுந் தானே. 529

லிங்க செந்தூரம்

தானென்ற சாதிலிங்க வேதை சொல்வேன்
தவறாமல் லிங்கமொரு பலமும் வாங்கிக்
கோனென்ற ரசமுடனே வங்கஞ் சேர்த்துக்
குருவான அரப்பொடியுங் கூடச் சேர்த்துத்
தேனென்ற நாதமதால் நன்றா யாட்டிச்
செம்மையுடன் லிங்கமதுக் கங்கி பூட்டி
வானென்ற ரவிதனிலே மைந்தா நீயும்
வணக்கமுடன் காயவைத்து வரிசை கேளே. 530

வரிசையுடன் கெந்திஅரி தாரம் வெள்ளை
மகத்தான கெவுரிகரி யுப்புத் துத்தம்
வரிசையுடன் வகைக்குஇரு கழஞ்சு கூட்டி
மைந்தனே கல்வமதில் பொடித்துக் கொண்டு
கரிசனமாய் அயச்செம்பில் பொடியரைதா னிட்டுக்
கனமான கவசமதை அதின்மேல் வைத்துப்
புரிசமுடன் புடம்போட்டு எடுத்துப் பாரு
புதுமைவெகு செந்தூரங் கண்கொள் ளாதே! 531

கொள்ளாத பசுவுக்குக் கண்அங் கேது
கொண்டுகரை யேறுதற்குச் செந்தூ ரத்தில்
கள்ளாகேள் பணவிடைதான் தேனில் கொண்டால்
கசடான தத்துவங்கள் கனக மாகும்
உள்ளான வாசியது உறுதி யாகும்
உண்மையென்ற தலமதிலே தீபங் காணும்
விள்ளாமல் விண்டதொரு செந்தூ ரத்தை
விபரமுடன் அந்திசந்தி கொண்டு தேரே 532

கொண்டுமனந் தேறினபின் மைந்தா கேளு
கூர்மையுடன் நவலோகந் தன்னி லேதான்
அண்டர்தொழுஞ் செந்தூரஞ் சத்தே பட்டால்
அசடான கசடகன்று அருணன் போலாம்
கண்டதொரு அருணகிரி உதயங் கண்டால்
கண்கொள்ளாச் சித்துவிளை யாட லாகும்
தொண்டருட தொண்டருக்குத் தொண்டு பண்ணிச்
சுத்தமுடன் சிவயோகத் துறையில் நில்லே. 533

நில்லடா வழிதுறையில் வழக்க மாக
நின்றுகரை யேறினபின் மலையிற் செல்லு
அல்லடா யில்லிடமே சொற்கஞ் சொற்கம்
ஆதியந்தச் சொற்கமதில் அருள்கண் மேவிச்
செல்லடா சிவயோக வாழ்க்கை தன்னில்
செம்மையுடன் சகலகலை கியானம் பெற்று
உள்ளடா உள்ளவரை உலகத் தோடே
உகாந்தவரை தானிருந்து உண்மை பாரே. 534

பாரப்பா உள்ளமதைத் தினமும் மைந்தா
பத்திகொண்டு சுத்தமுடன் பார்த்தா யானால்
பேரப்பா பெற்றதொரு உள்ளந்தானும்
பெருமையுடன் தான்பார்க்கு முறைமை வைத்துக்
காரப்பா கருணைவளர் அமுர்த போதம்
கண்ணறிந்த போதமதால் யோகத் தேகிச்
சாரப்பா சராசரமே தானாய் நின்று
சங்கற்ப விகற்பமதிற் சார்ந்து தள்ளே. 535

தள்ளுவது யாரையென்றால் மைந்தா கேளு
தன்னுணர்வு இல்லாத சமயத் தோரை
உள்ளுணர்ந்து உள்ளமதைக் காரார் தன்னை
உத்தசிவ சத்திபத மறியார் தன்னை
நல்லுணர்வாய்ப் பேசாத நாய்கள் தன்னை
நாதாந்த வேதமதைக் காணார் தன்னைச்
சொல்லுணர்வாய் நாவில்வைத்துப் பேச வேண்டாம்
சோதிமய மானசிவ ஞானம் பாரே. 536

பாரடா சிவஞானம் என்ன வென்றால்
பாருலகில் நின்றவுயிர்ப் பயிர்க ளெல்லாம்
நேரடா தன்னகம்போற் காண வேணும்
நேர்மையுடன் சத்தியமாய் நிற்க வேணும்
காரடா சகலகலைக் கியான மெல்லாம்
கருத்துகந்து பூரணமாய்க் காண வேணும்
மேரடா மேருகிரி அந்தங் கண்டு
விள்ளாத பொருளதுவே விளங்கு வாறே. 537

வாறான உலகமது மாய வாழ்க்கை
மகத்தான வாழ்க்கையிலே மருவி நின்று
நேரான நிச்செயத்தை அறியா மற்றான்
நிசமான வெளியென்றும் ஒளிதா னென்றும்
பேறாக ஈஸ்பரமென்றும் பிரம மென்றும்
பெருகிநின்ற சத்தியென்றும் சிவம்தா னென்றும்
கூறாக யோகமென்றும் எண்ணி யெண்ணிக்
கொண்டுநின்ற நிச்செயத்தை அறியார் காணே. 538

காணவே நிச்செயத்தைக் காண வென்றால்
கண்ணேது வாயேது கருத்தங் கேது?
பூணவே நின்றஅண்டத் தப்பால் பாரு
பொருந்திநின்ற பூமியின்கீழ் இப்பால் பாரு
ஊணவே நின்றகெதி பார்த்தா யானால்
உலகேது நீயேது நான்தா னேது?
பேணவே பார்க்கஅந்த மயமாய்ப் போச்சு
பேச்சற்ற சூட்சமதின் காட்சி தானே. 539

காட்சியென்ற காட்சிகண் காட்சி யாச்சு
கலந்துஒன்றாய் நின்றபொருள் சூட்ச மாச்சு
மோட்சமென்ற சூட்சமது அரணா மென்று
மோனமுடன் தானிருப்பார் போத மாகப்
பேச்சான மூச்சிறந்த வடிவே யாகும்
பிலமான யேகபரி பூரணமே தானாய்ச்
சூட்சமென்ற சூட்சமதைப் போத மாகச்
சூட்சாதி சூட்சமுட னிருப்பார் தானே. 540

இருப்பார்கள் சூட்சாதி சூட்ச மாக
ஏறுதற்கு வகைதுறைக ளொன்று கேளு
வெறுப்பறுக்க மனமலைந்து போகா வண்ணம்
வேதாந்த நாகரச மெழுகு சொல்வேன்
கருப்பான நாகரச மொன்றாய்க் கொண்டு
கருணையுடன் அந்திடைக்கு நாலத் தொன்று
குறிப்பான வீரமுடன் கெவுரி லிங்கங்
குருவான அரிதார மயக்காந்தம் பாரே. 541

பாரப்பா காரமுடன் சாரம் பூரம்
பரிவான துத்தமுடன் துருசு கார
நேரப்பா பதின்மூன்று வகையாய்த் தூக்கி
நேர்மையுடன் கல்வமதில் பொடித்து மைந்தா
காரப்பா கமலரசந் தன்னா லேதான்
கருணையுடன் மூன்றுநாள் நன்றா யாட்டிச்
சேரப்பா ஒன்றாக ஆட்டும் போது
திருவான நாதநீர் தன்னா லாட்டே. 542

ஆட்டுவாய் நாலுநாள் நன்றா யாட்டி
அதின்பிறகு வெடியுப்பு நீரால் மைந்தா
கூட்டியே ஆறுநாள் நன்றா யாட்டில்
குருவான மெழுகதுவை என்ன சொல்வேன்?
நாட்டியே வழித்தெடுத்து மைந்தா நீயும்
நன்மையுடன் ரவிதனிலே நன்றாய்ப் போட்டுப்
பூட்டியே ரவிதனிலே நன்றாய்ப் போட்டால்
பொன்னான பொன்மெழுகு கண்கொள் ளாதே. 543

கண்கொள்ளாக் காட்சிதரு மெழுகு மைந்தா
கருணையுட னவையடக்க மாக வைத்து
விண்கொள்ளாத் தங்கஅப ரஞ்சி தன்னை
வேதாந்த மெழுகுக்கு நாலத் தொன்று
பொன்கொள்ளாப் பொன்விளையும தாலே யென்று
புத்தியுடன் தங்காதி மெழுகு கூட்டிக்
கண்கொள்ளாச் சோதியென்று கல்வத் தாட்டிக்
கனகவதி மெழுகுதன்னைப் பதனம் பண்ணே. 544

பண்ணடா பதனம்வெகு பதன மாகப்
பத்தியுடன் அச்சிமிழில் பதனம் பண்ணி
நண்ணடா நவலோகந் தன்னில் பூசி
நாட்டமுடன் மண்ணரைத்துக் கவசம் பண்ணி
உண்ணடா சற்குருவைத் தியானம் பண்ணி
உறுதியுடன் புடம்போட்டு எடுத்துப் பாரு
கண்ணடா கொள்ளாத சோதி போலே
கைகண்ட தங்கமடா மெய்தான் பாரே. 545

பாரப்பா மெய்யான தங்கத் தாயைப்
பத்திகொண்டு பூரணமாய்க் கண்ட போது
நேரப்பா நின்றதொரு வாசி யாலே
நீங்காத சிவயோகம் நேர தாகும்
காரப்பா சிவயோகத் திருந்துகொண்டால்
கலந்துகொண்ட கற்பமெல்லாம் சித்தி யாகும்
பேரப்பா கொண்டகற்பஞ் சித்தி யானால்
பேர்பெரிய சிவயோக நீர தாச்சே. 546

ஆச்சப்பா சிவயோக ஞானி யென்று
அடங்காத வாசிசிவ யோகி யென்று
மூச்சப்பா நின்றந்தக் கேசரிதா னென்று
முத்தியுள்ள ஞானபர தேசி யென்று
பேச்சப்பா பேசாத மவுனி யென்று
பேரண்டஞ் சித்திக்குங் கெவுனி யென்று
பாச்சப்பா பருதிமதி சுளிமூன் றாலே
பரஞான கேசரியிற் சோதி பாரே. 547

சோதியந்தக் கண்ணதிலே சோதி காணச்
சுத்தமுள்ள கருமானஞ் சொல்லக் கேளு
நீதியந்தப் பூதியடா திருநீர் வாங்கி
நிச்செயமாய்க் கற்பூர மதின்மேல் வைத்து
ஆதியந்தச் சோதியுடதீபம் பார்த்து
அதின்பிறகு கற்பூரத் திருநீர் வாங்கி
ஓதியந்தப் பூதிதனை யுத்தளமாய்ப் பூசி
உண்மையுடன் பூசையிலே சோதி யாமே. 548

ஆமென்ற கற்பூர தீப நீரை
அனுதினமும் உத்தமனாய் அணிந்து கொண்டால்
ஓமென்ற சிவபூசை சக்தி பூசை
உருமையுடன் தினம்செபித்த பலத்துக் கொக்கும்
தாமென்றும் அவனெயென்றும் வேறே இல்லை
சதாகாலங் கற்பூரத் திருநீர் தன்னை
நாமென்று மதம்பிடித்த நோயா ளற்கு
நாட்டமுடன் றான்கொடுக்க நன்மை யாமே. 549

நன்மையுள்ள பூசையடா மவுன பூசை
நல்லோர்கள் அறிவார்கள் இந்தப் பூசை
உண்மையுள்ள பூசையென்று மைந்தா நீயும்
உரிமையுடன் அந்திசந்தி உறுதி வைத்துத்
தன்மையுடன் இடதுகையில் மைந்தா நீயுஞ்
சங்கையுடன் பூதிநன்றாய்ப் பிடித்து வைத்து
நுண்மையுடன் கற்பூரம் அதின்மேல் வைத்து
நோக்கமென்ற அறிவாலே தீப மேத்தே. 550

ஏற்றிமிகப் பூரணமாய் வலது கையில்
என்மகனே சிவமாலை யெடுத்துக் கொண்டு
போற்றிமனம் நன்றாகப் புருவ மீதில்
புத்தியுடன் ஓங்றீங்சிவ சிவவென் றுந்தான்
பாத்திபனே உருச்செவ்வாய் தொண்ணூற் றாறு
பத்தியுடன் முன்செவித்துத் திருநீர் வாங்கிச்
சாத்திடுவாய் நெத்தியிலுத் தளமாய்ப் பூசிச்
சணத்திலே சோதிபிர காசங் காணே! 551

காணவே தன்ரூபம் சிவமா யெண்ணிக்
கருணையுடன் சகலவுப சாரஞ் செய்து
பூணவே கற்பூர தீபம் பார்த்தால்
புத்தியுடன் மெய்க்கணிந்து கொண்டா யானால்
தோணவே ஆதாரஞ் சித்தி யாகும்
சூழ்ந்துநின்ற பாசமெல்லாம் அகன்று போகும்
பேணவே இவ்விதமாய்த் தியானம் செய்தால்
பேறான சித்தரெனப் பேச லாமே. 552

பேசவொண்ணா அந்தரங்க ஞானந் தன்னைப்
பிறரறியச் செய்யாதே பேணிப் பாரு
தேசுவென நின்றகே சரியைப் பாரு
திருவாகி நின்றதிரு வாசி பாரு
ஆசுவென நின்றஆ தாரம் பாரு
ஆதியந்தப் பூரணமாய் அறிவில் சேரு
கூசிமனங் குளராமல் குருவைக் காரு
குருவான அமுர்தரச கற்பங் காரே. 533

கற்பமென்ற உற்பனத்தைச் சொல்லக் கேளு
கருணைவளர் நாதவிந்து கடாட்ச மாகும்
விற்பனவி தட்சணமாய்க் கடாட்சம் பெற்று
விந்துநிலை தானறிந்து நாதத் தேகி
உற்பனமாய்க் கற்பமென்று கொண்டால் மைந்தா
உண்மையென்ற காரணபூ ரணமாய் நிற்கும்
அற்பமென்று நீநினைத்து விட்டா யாகில்
ஆதார தேவதைகள் அகல்வார் பாரே. 554

நவபற்றும்

பாரப்பா ஆதாரம் மவுன பீடம்
பரமகயி லாசமென்ற பரம பீடம்
நேரப்பா நின்றபிர காச மாக
நேர்மையுள்ள கயிலாசஞ் சொல்லக் கேளு
காரப்பா ரசமூணு நாக வங்கங்
கலந்துஒரு கட்டியதாய் எடுத்துக் கொண்டு
சேரப்பா அதற்குஅரைப் பொடிதா னப்பா
தீர்க்கமுடன் தானெடுத்துக் கல்வத் தாட்டே. 555

ஆட்டுவது சம்பளத்தின் சாற்றால் மைந்தா
அப்பனே படிமெழுகு போலரைத்து ஆட்டிக்
கூட்டுவது நாகரசக் கட்டி தன்னைக்
கூர்மையுடன் றான்பொடித்துக் கூடச் சேர்த்துத்
தீட்டுவாய் பழச்சாற்றால் நன்றா யாட்டிச்
சிவசிவா ரெண்டுமொன்றாய்ச் சேர்ந்த போது
நாட்டுவாய் துருசுஅரி தாரம் லிங்கம்
நல்லகெந்தி வீரமுடன் பூரஞ் சேரே. 556

சேரப்பா நவமூல மொன்றாய்க் கூட்டிச்
சேர்த்துநன்றாய் நாதநீர் தன்னா லாட்டி
வீறப்பா தானொடுங்க நன்றா யாட்டி
விபரமுடன் கமலரசந் தன்னா லாட்டி
நேரப்பா நெட்டடங்க நன்றா யாட்டி
நேர்மையுடன் றான்வழித்து வட்டுப் பண்ணிக்
காரப்பா ரவிதனிலே வைத்து மைந்தா
கடுமையாய்க் காய்ந்தபின்புகவசஞ் செய்யே. 557

செய்யப்பா மண்சீலை கவசம் செய்து
செம்மையுடன் சற்குருவைத் தியானம் பண்ணி
வையப்பா புடமதுவை நிதான மாக
வைத்தபின்பு சடாட்சரத்தை மருவி யோது
கையப்பா தவறாமல் புடத்தைப் போட்டுக்
கணபதியைத் தான்றொழுது கருவைப் பாரு
பொய்யப்பா போகாது நவமூ லந்தான்
பொருந்திமிகக் கட்டியது பற்ப மாச்சே. 558

ஆச்சப்பா திசமூல பற்பந் தன்னை
அப்பனே பறணிதனி லடக்கம் பண்ணிக்
காச்சப்பா கனகமென்ற தங்கந் தன்னில்
கருவான பற்பமதை நாலத் தொன்று
பாச்சப்பா அமுர்தமதாற் பாகம் பண்ணிப்
பதிவான தங்கமதுக் கங்கி பூட்டி
மூச்சப்பா போகாமற் கவசம் பண்ணி
முத்திபெறப் புடமதுவை வைத்துக் காணே. 559

காணவே புடமதுவை வைத்துப் பார்க்கக்
கனகமென்ற தங்கத்திற் குருவாய் நிற்கும்
பேணவே கனகமென்ற குருவெ டுத்துப்
பிலமான வெள்ளிசெம்பில் பத்துக் கொன்று
தோணவே தான்கொடுத்து உருக்கிப் பாரு
சுத்தமுள்ள வெள்ளிசெம்பு சோதி யாகும்
ஊணவே சோதிதனைக் கண்ட போதே
உழன்றதொரு பாசமெல்லாம் ஓடிப் போச்சே. 560

போச்சப்பா பாசமென்ற ஆசா பாசம்
பொற்கமலச் சோதிதனைக் கண்ட போதே
மூச்சப்பா பேச்சடங்கிக் காட்சி யாச்சு
முத்தியுள்ள சிவஞானம் போத மாச்சு
பேச்சப்பா பேசாத போதந் தன்னைப்
பிரியமுடன் கொண்டுகெதி கண்டா யானால்
பாச்சப்பா கேசரத்தில் வாசி தன்னைப்
பதிவாகத் தானிறுத்தித் தன்னைப் பாரே. 561

பாரப்பா பதியறிந்து தன்னைத் தானே
பாதாதி கேசமுதல் பார்க்கும் போது
நேரப்பா நின்சமுகம் விண்ணகமும் ஒன்றாய்
நிறைந்தபரி பூரணமயா நிர்மலமு மாச்சு
சேரப்பா நிர்மலமாய்க் கண்ட போதோ
செகமயமே சிவமயமாய்த் தெளிந்து கொள்ளு
பேரப்பா கொண்டசிவ ரூபந் தன்னைப்
பிரமன்மா லறியாமல் பிலங்கெட் டாரே. 562

பிலங்கெட்ட மானிடர்கள் பலநூல் பார்த்துப்
பேசுதற்கு அரிதான பிரமந் தன்னை
நலங்கெட்ட மானிடர்கள் கூடிக் கொண்டு
நாதாந்த மூலமென்ற சோதி யென்றுந்
தலங்கொண்ட ஒளியென்றும் வெளிதா னென்றுஞ்
சகலவுயிர் தானான யேக மென்றும்
குலங்கொண்ட பூரணமாம் வஸ்து வென்றும்
குறும்பர்பல பேரெடுத்துக் கூறு வாரே. 563

கூறுவார் நினைத்தபடி காணா மல்தான்
குறியான அண்டவெளி சதாசிவமாய்ப் போச்சு
ஏறியதோர் வாசியது மயேஸ்பரனாய்ப் போச்சு
என்மகனே அக்கினிதான் ருத்திரனாய்ப் போச்சு
ஊறியதோர் சிவமதுதான் மாலுடைய பாரம்
உண்மையென்ற பிருதிவிதான் பிரமனுட திருஷ்டி
தேறியதோர் ரவிமதியும் சத்திசிவ மாச்சு
செப்புதற்கு எந்தவிதந் தெளிந்து பாரே. 564

அன்னபேதி செயநீர் வீரபற்பம்

பாரப்பா தெளிவான பற்ப மொன்று
பக்தியுடன் சொல்லுகிறேன் பதிவாய்க் கேளு
நேரப்பா சாரமுடன் அன்ன பேதி
நீமகனே ரெண்டையுந்தா னொன்றாய்க் கூட்டிச்
சேரப்பா கல்வமதில் அரைக்கும் போது
சிவசிவா கசிந்துமிகச் சிலமாய் நிற்கும்
தேரப்பா இச்சிலத்தில் வீரம் பூரம்
தீர்க்கமுடன் தானரைத்து ரவியில் வையே. 565

வையப்பா ரவிதனிலை நீறிப் போகும்
மகத்தான நீருடனே கெந்தி கூட்டி
மெய்யப்பா முன்னீரா லரைத்துக் கொண்டு
மேலான தாம்பூரத் துட்டில் பூசிப்
பையப்பா அதின்மேலே மண்தான் செய்து
பாலகனே நிதானமதாய்ப் புடத்தைப் போடு
கையப்பா தவறாமல் புடத்தி லேதான்
காசுவென்ற தாம்பூர நீறிப் போச்சே. 566

போச்சப்பா தாம்பூர நீறிப் போச்சு
புத்தியுடன் அந்நீற்றைக் கல்வத் திலிட்டுக்
காச்சப்பா அதுக்குநிகர் ரசமும் வீரம்
கலந்துகொண்டு கமலரசந் தன்னா லாட்டி
மூச்சப்பா தானடங்க நன்றா யாட்டி
முத்திபெறத் தான்வளித்து ஆட்டிக் கொண்டு
பாச்சப்பா நிழல்தனிலே வைத்துப் பார்க்கப்
பக்குவமாய் நீர்கள்வத்தி நீறிப் போமே. 567

நீறிநின்ற நூல்தனிலே வேதை கோடி
நேர்மையுடன் பூரணமாய்க் கண்டு தேறு
ஆறிநின்ற மனதாலே மைந்தா கேளு
அடங்கிநின்ற வீரமுடன் லிங்கங் கூட்டி
ஊறிநின்ற வாய்நீரா லரைத்துக் கொண்டு
உத்தமனே தாரமதுக் கங்கி பூட்டித்
தேறிநின்ற அடுப்பதனில் வைத்துப் பாரு
தீர்க்கமுடன் தானுருகி ஈய மாமே. 568

ஆமப்பா ஈயமென்ற தாரந் தன்னை
அரிதாரஞ் சவ்வீரம் ரசமுங் கூட்டி
வாமப்பா தன்னாலே பாகம் பண்ணி
மகத்தான தங்கமதுக் கங்கி பூட்டித்
தாமப்பா சுண்ணாம்புச் சீலை செய்து
தங்கமென்ற கவசமதைப் புடமே செய்து
ஓமப்பா பிரணவத்தைத் தியானம் பண்ணி
உத்தமனே புடமாறி யெடுத்துப் பாரே. 569

எடுத்துமிகக் கவசமதை விடுத்துப் பார்க்கில்
ஏகாந்தத் தங்கமதை யென்ன சொல்வேன்?
தொடுத்தமலர் பூப்போல மலர்ந்து நீறிச்
சுத்தமுடன் இருக்குமடா எடுத்துக் கொண்டு
அடுத்ததொரு ஆதாரப் பூசை பண்ணி
அப்பனே பணவிடைதான் தேனிற் கொண்டால்
கடுத்ததொரு மறலியவ னோடிப் போவான்
கனகம்போல் தேகமுமாங் கண்டு பாரே. 570

வெடியுப்புச் செந்தூரம்

கண்டுபார் இன்னமொரு கருவைக் கேளு
　　கருவான வீரமுடன் ரோமங் கூட்டி
விண்டுபார் கமலரசந் தன்னால் ஆட்டி
　　வீரமுடன் ரோமமது ஒன்றாய்ச் சேர்த்துக்
கொண்டதுவும் வெண்ணெயது போலே யாகும்
　　கொடியான வெண்ணெயதை யெடுத்துக் கொண்டு
நின்றதொரு வெடியுப்புக் கம்பி தன்னில்
　　நீமகனே தடவிநன்றாய் ரவியில் போடே. 571

போட்டபின்பு இன்னமொரு கருவைக் கேளு
　　புதுமையுள்ள காரமடா சீனாக் காரம்
தேட்டமுடன் காரமதைச் சுட்டு நீத்தித்
　　திருவான கம்பியுப்பை நடுவே வைத்து
நாட்டமுடன் தீயெரித்து எடுத்துப் பார்த்தால்
　　நல்லவெடி கம்பியது சிவக்கும் பாரு
வாட்டமென்ற கம்பியுப்புச் சிவந்து தானால்
　　மகத்தான லோகமெல்லாந் தங்க மாமே. 572

சிற்றண்டக் கட்டு

ஆமப்பா அண்டமென்ற முட்டை வாங்கி
　　அன்பாக எருக்கம்பால் தன்னில் போட்டுத்
தாமப்பா மறுநாள்தா னெடுத்துக் கொண்டு
　　சங்கையுட எலுமிச்சஞ் சாற்றில் போட்டு
நாமப்பா சொல்லுகிறோம் மறுநாளுந்தான்
　　நன்றாக வீரமுடன் லிங்கஞ் சேர்த்து
வாமப்பால் தன்னாலே நன்றா யாட்டி
　　மகத்தான அண்டமதில் கவசம் போடே. 573

போடப்பா கவசமது நன்றாய்ச் செய்து
புத்தியுடன் மண்டலஞ்சென் றெடுத்துப் பாரு
நாடப்பா கவசமதை எடுத்துப் பார்க்க
நாதாந்த அண்டமது கட்டிப் போகுங்
கூடப்பா கட்டிநின்ற அண்டம் வாங்கிக்
கொடிதான பாஷாணந் தனக்குப் பூசி
ஆடப்பா ரவிதனிலே வைத்துப் பார்க்க
அறுபத்தி நால்வருந்தான் அடங்கும் பாரே. 574

சகலமும் கட்டினம் உருக்கினம்

பாரப்பா அடங்கிமிகக் கட்டிப் போகும்
பரிவான உபரசங்கள் நீறிப் போகும்
பேரப்பா கொண்டதொரு கார சாரம்
பிலமான அண்டமதால் மெழுகு மாகும்
ஆரப்பா அறிவார்கள் அண்டக் கூறு
அண்டமென்ற கேசரியை கண்டோன் காண்பாள்
நேரப்பா நின்றநிலை அண்ட மாச்சு
நிலையாது அண்டம்வெகு மாய மாச்சே. 575

ஆச்சப்பா மாயமென்ற அண்டத் துள்ளே
அடங்கிநின்ற ரவிமதியின் கூற்றைக் கேளு
மூச்சப்பா அடங்கிநின்ற வேகத் தாலே
மூழங்கிநின்ற உயிர்ப்பயிர்கள் மூர்க்கங் கொண்டு
நீச்சப்பா நிலைக்கநிலை காணா மற்றான்
நின்றிலங்கும் ரவிமதியில் அடங்கிப் போச்சு
பேச்சப்பா பேசினதும் ரவிமதியி னாலே
பிலங்குறைந்து போனதுவும் ரவிமதிதான் காணே. 576

ரசகட்டு

காணவே கருமானஞ் சொல்லக் கேளு
கருவான முட்டையுட தோடு வாங்கித்
தோணவே கடல்நுரையும் காரங் கூட்டிச்
சுத்தமுடன் வெடியுப்பு நீரா லாட்டிப்
பேணவே சாரமதுக் கங்கி பூட்டிப்
பிலமான ரவிதனிலே காய வைத்துப்
பூணவே மண்சீலை வலுவாய்ச் செய்து
புத்தியுடன் நிதானமாய்ப் புடத்தைப் போடே. 577

போட்டபுடம் ஆறவிட்டு எடுத்துப் பாரு
புதுமையுள்ள சாரமது தானே கட்டி
நாட்டமுடன் கட்டியது உருகி நிற்கும்
நாதாந்த சற்குருவைப் பூசை பண்ணித்
தேட்டமுடன் நாகமதைக் குகையி லிட்டுச்
செம்மையுடன் உலையில்வைத்து உருக்கும் போது
ஆட்டமுடன் கட்டிநின்ற சாரம் போடு
அடங்காத புகையடக்கிக் கட்டும் பாரே. 578

நாகக்கட்டு

பாரப்பா கட்டிநின்ற நாகந் தன்னில்
பதிவான தங்கமது நாலுக் கொன்று
நேரப்பா தான்கூட்டி யுருக்கிப் பார்க்க
நிசமான நாகமதில் தங்கஞ் சென்று
வீரப்பா தானடங்கி உருகிப் போகும்
வெள்ளிசெம்பு எட்டில்ரெண்டு பத்துங் கூட்டிச்
சேரப்பா நாககுரு வென்று போடு
தீர்க்கமுடன் தானுருக்கத் தங்க மாமே. 579

ஆமப்பா தங்கமென்ற சோதித் தாயை
அன்புவைத்து அந்திசந்தி பூசித் தாக்கால்
வாமப்பா கொண்டசிவ சூட்சங் காணும்
மகத்தான வட்டமடா விந்து வட்டம்
சோமப்பால் சொலிக்கும்விந்து வட்டத் துள்ளே
சொலிக்குமடா மதியமூர்தச் சுனைதா னூறி
ஓமப்பா என்றதொரு வணக்கத் தாலே
உண்மையென்ற ஞானமதில் சோதி யாச்சே. 580

உப்புக் கட்டு

ஆச்சப்பா சோதியென்ற துறையைக் கேளு
அரகரா அமுரியிலே பூநீர் கொட்டிக்
காச்சப்பா பிசறியதை உலர வைத்துக்
கருணைபெற ஓட்டிலதை வாரி யிட்டுப்
பாச்சப்பா பருமணியாய் உப்பை வைத்துப்
பதிவாக மேலுமந்தப் பூநீர் கொட்டி
மூச்சப்பா போகாம லோடு மூடி
முத்திபெறப் புடம்போடக் கட்டு முப்பே. 581

செந்தூரம்

சட்டிநின்ற உப்பதனைச் செந்தூ ரிக்கக்
கருவிபரஞ் சொல்லுகிறேன் கருவாய்க் கேளு
கெட்டியுள்ள அயச்சிமிழில் மைந்தா நீயும்
கெந்தியொன்று சாரமரை சாரங் கால்தான்
மாட்டிநன்றா யுலைதனிலே வைத்துப் பார்த்தால்
மகத்தான கருமூன்று உருகி நிற்கும்
தேட்டமுடன் கட்டுமுப்பு மதிலே போட்டுச்
சில்லிட்டுப் புடந்தனிலே தீர்க்கம் பண்ணே. 582

தாக்கமுடன் புடந்தனிலே வைத்து மைந்தா
சிவசிவா செந்தூரம் என்ன சொல்வேன்
மார்க்கமுள்ள செந்தூரந் தன்னை மைந்தா
மைந்தனே அந்திசந்தி தேனிற் கொண்டால்
சேர்க்கையுள்ள தேகமடா சித்தி யாச்சு
சிவயோக வாழ்வுமுதல் செம்மை யாச்சு
மூர்க்கமுள்ள உடலெல்லாந் தீர்க்க மாச்சு
மூதண்ட கெவுனமுள்ள ஞானி யாச்சே. 583

ஆச்சப்பா சூதமொன்று தங்கம் ரெண்டு
அரகரா கட்டுமுப்பு மூன்றாங் கூடப்
பாச்சப்பா கல்வமதில் நாத நீரால்
பத்தியுடன் தானரைக்க மெழுகு மாகும்
பேச்சப்பா பேசாமல் மெழுகை மைந்தா
பெருமையுடன் பஞ்சலோ கத்தில் ஈந்து
காச்சப்பா மாத்ததுவும் கனக மாகும்
கனகமதைக் கண்டுமனந் தேரு வாயே. 584

தேரவே இன்னமொரு வேதை மார்க்கம்
செப்புகிறேன் நன்றாகத் தெளிந்து கேளு
கூறவே வேண்டாங்காண் மவுன மாகக்
கொடிதான கெந்தகமும் தாரங் கூட்டி
மாறவே தானுருக்கி வைத்துக் கொண்டு
மகத்தான லிங்கமுடன் வீரம் பூரம்
ஆறவே ரசமுடனே நாகம் வங்கம்
அப்பனே காரமுடன் சாரம் எட்டே. 585

எட்டான சரக்கைஒரு நிறையாய்க் கொண்டு
என்மகனே தான்பொடித்து வைத்துக் கொண்டு
கட்டான கெந்தகமும் காரம் ரெட்டிக்
கைமுறையாய்த் தானுருக்கிப் பொடியைச் சேர்த்துத்
திட்டமுடன் தான்மடிய நன்றாய்க் கிண்டிச்
செம்மையுடன் ஆறவைத்து எடுத்துக் கொண்டு
நட்டமுடன் கல்வத்தில் இட்டு மைந்தா
நாதமென்ற நீரதனால் நன்றாய் ஆட்டே. 586

ஆட்டப்பா நெட்டங்க நன்றாய் ஆட்டி
அதன்பிறகு தானெடுத்து வட்டுப் பண்ணி
நாட்டப்பா ரவிதனிலே காய வைத்து
நன்றாக மண்சீலை கவசம் செய்து
மூட்டப்பா புடந்தனிலே வைத்துப் பாரு
முத்திபெறக் கட்டியது திட்ட மாகும்
கூட்டப்பா எட்டுரெண்டும் ஒன்றாய்க் கூட்டிக்
கூடிநின்ற திசைநாத கட்டை வாங்கே. 587

வாங்கியந்த திசைநாத கட்டை மைந்தா
மார்க்கமுடன் தான்பொடித்துக் கெந்தி தாரம்
பாங்குபெற அந்திடைக்குச் சரியாய்க் கூட்டிப்
பத்தியுடன் தான்பொடித்துக் குப்பிக் கேத்திச்
சாங்கமாய் மண்சீலை ஏழுஞ் செய்து
தாழியென்ற பானையிலே சாம்பல் இட்டு
ஓங்கியந்தச் சாம்பல்நடுக் குப்பி வைத்து
உண்மையுடன் மூக்களவு சாம்பல் சாற்றே. 588

சாத்திநன்றாய் அடுப்பேத்தித் தீயை மூட்டு
சாமமென்ற சாமமடா ஆராருஞ் சாமம்
போற்றிநன்றாய்த் தானெரித்துக் குப்பி மூக்குள்
புத்தியுடன் முன்பாரு கண்ணே கூசும்
பாத்திபனே அந்நேரம் பதமென் றெண்ணிப்
பத்தியுடன் தானிறக்கி ஆற வைத்து
வாத்திநன்றாய்க் குப்பிதனை எடுத்துப் பாரும்
மகத்தான செந்தூரங் கண்கொள் ளாதே! 589

கண்கொள்ளாச் செந்தூரந் தன்னை மைந்தா
கருணையுடன் தானெடுத்து வைத்துக் கொண்டு
விண்கொண்ட தங்கமதுக் கிடைதான் மைந்தா
வேதாந்த செந்தூரம் எடுத்துக் கொண்டு
பெண்கொண்ட நாதமதால் அரைத்துப் பூசி
பிலமான ஓட்டில்வைத்து மண்ணும் பூசிப்
பொன்கொண்ட சோதியென்று குடத்தைப் போடு
பொன்விளையும் தங்கமது குருவாய்ப் போச்சே. 590

குருவான தங்காதி குருவை மைந்தா
குணமான நவலோகத் தன்னில் பூட்டத்
திருவான தங்கமடா அங்க மாகும்
தேகமென்ற அங்கமது திறக்க வேண்டி
உருவான செந்தூரம் பணவிடைதான் கொண்டால்
உண்மையுள்ள ஆதாரம் சிவந்து போகும்
கருவான முலைப்பாலில் மண்டலமே கொண்டால்
கைலாச வாசமதாய் வாழ லாமே. 591

வாழ்வதற்கு இன்னமொரு வரிசை கேளு
வரிசையுள்ள அரப்பொடியும் காந்தங் கூட்டி
ஆள்வதற்குக் கல்வமதில் இட்டு மைந்தா
அப்பனே சம்பளத்தின் சாற்றால் ஆட்டி
வாழ்வதற்கு வகைகேளு மைந்தா மைந்தா
மகத்தான ரசமுடனே நாகம் வங்கம்
தாழ்வதற்கும் அயக்காந்தத் துடனே கூட்டிச்
சங்கையுடன் சம்பளத்தில் சாற்றால் ஆட்டே! 592

ஆட்டையிலே அதில்சேர்க்கும் மருந்து கேளு
அந்திடைக்குப் பத்திலொன்று தங்கங் கூட்டி
நீட்டையிலே கெந்திஅரி தாரம் லிங்கம்
நிசமான கெவுரியுடன் மனோசிலையும் பச்சை
பூட்டையிலே பாஷாணம் முதார் சிங்கு
புகழான வீரமுடன் பூரம் காரம்
வாட்டையிலே தங்கஇடை சரியாய்ப் போட்டு
மைந்தனே வெடியுப்பு நீரால் ஆட்டே. 593

ஆட்டிநன்றாய் வழித்துருட்டி வட்டுப் பண்ணி
அப்பனே ரவிமுகத்தில் காய வைத்துத்
தாட்டிகமாய் ஓட்டில்வைத்து ஓடு மூடிச்
சந்துவாய் தெரியாமல் மண்ணும் பூசி
வாட்டுவாய் புடந்தனிலே மைந்தா நீயும்
மகத்தான செந்தூரங் கண்கொள் ளாது
நாட்டிநன்றாய் இவ்விதமாய்ச் சிந்தூரஞ் செய்து
நாலான காரியமும் வகையாய்ப் பாரே. 594

பாரப்பா இன்னமொரு சூட்சஞ் சொல்வேன்
பதிவான அயமுடனே வெள்ளி செம்பு
நேரப்பா தங்கமுடன் நாலு மைந்தா
நீமகனே ஓரிடையாய்த் தகடு செய்து
காரப்பா பழச்சாற்றில் போட்டு மைந்தா
கருணையுடன் மறுநாள்தான் கழுவிப் போட்டுச்
சேரப்பா நாலுவகைத் தகட்டை மைந்தா
செம்மையுடன் குகையிலிடு காரம் போடே. 595

போடப்பா காரமிட்டு உருக்கிப் பாரு
பூரணமாய் நாலுமொன்றாய் உருகி நிற்கும்
நாடப்பா உருகுமுகந் தன்னைப் பார்த்து
நாதாந்த ரசமுடனே நாகங் கூட்டிச்
சூடப்பா உருகுமுகந் தன்னி லீயச்
சுருக்காக நாலும்ரெண்டும் குருவாய்ப் போகும்
ஆடப்பா குருவெடுத்து வைத்துக் கொண்டு
அனுதினமும் சற்குருவைப் பணிந்து போற்றே. 596

பணிந்துநின்று சற்குருவைத் தியானம் பண்ணிப்
பதிவான வெள்ளியிலே பத்துக் கொன்று
கனிந்துமனங் கனியவே குடுத்துப் பாரு
கனிந்துமிக உருகியது கனக மாகும்
அணிந்துஅந்தக் கனகமதைப் பூசை பண்ணி
அட்டாங்க யோகமதால் திட்டம் பார்த்தால்
தணிந்துலகம் உனதுபதம் பணியு மையா
தானவனாய் நீயிருந்து தன்னைப் பாரே. 597

தன்னைப்பார் தன்னறிவின் கண்ணால் நீயும்
தானறிந்து பார்ப்பதற்குச் சங்கே கேளு
விண்ணப்பாத் தந்தநிலை தன்னில் நின்று
வேதாந்த சத்திசிவ பூசை பண்ணிக்
கண்ணப்பா மனக்கண்ணால் வாலை பூசை
கருத்துவைத்துக் கேசரியில் கால்கொண் டூணி
உண்ணப்பா பூரணமே கெதியென் றெண்ணி
ஊடாடும் வாசியைநீ உற்றுப் பாரே. 598

பாரப்பா ஆதாரம் தன்னை நீயும்
பத்தியுடன் ஊடுருவிப் பார்த்து மைந்தா
நேரப்பா பஞ்சகனை தீட்சை பெத்து
நீமகனே நவலோக செந்தூ ரத்தைச்
சேரப்பா பணவிடைதான் கொண்டு மைந்தா
தீர்க்கமுடன் தானிருந்து தேவி பூசை
காரப்பா பூசைமுறை தவறா மற்றான்
காத்துமனக் கண்ணாலே தன்னைக் காணே. 599

காணப்பா தன்னைமிகத் தானே காணக்
காவியமும் பூரணமுங் கலந்து பார்த்துப்
பேணப்பா சவுமியசா கரத்தை நன்றாய்ப்
பெருமைவிட்டு வுரிமையதாய்ப் பேணிப் பாரு
பூணப்பா தத்துவங்கள் நன்றாய்த் தோணும்
பூரணமுங் காரணமும் பொருந்தி வாழும்
தோணப்பா வேதாந்த முடிவு தோணும்
துலங்குகின்ற சித்தாந்தச் சோதி தானே. 600

தானான பூசைக்கு வாலை கேளு
தருவான மூலமடா தாயார் வீடு
வானான வாடமடா சிவமாஞ் சோதி
மகத்தான சுளினையடா மவுனந் தந்து
கோனான ரிஷிகளுமே யாருஞ் சொல்லார்
கூர்மையுடன் அங்மங் உங்கென் றேதான்
ஊனான கேசரியில் மனக்கண் சாத்தி
உத்தமனே பதினாறு உருவே செய்யே. 601

உருவறிந்து திருவேற நீறு சாத்தி
உத்தமனே தினந்தோறும் தியானம் செய்யத்
திருவிருந்த சத்திசிவ பூசை தானுந்
தீர்க்கமுடன் கொடிசெய்த பலத்துக் கொக்கும்
கருவறிந்து ஆதார பூசை கேளு
கருணையுடன் ஓம்றீம் அங்நெங் றேதான்
குருவிருந்த இருதயத்தில் மனக்கண் சாத்திக்
கூர்மையுடன் சுளிமுனையில் கூர்ந்து பாரே. 602

கூர்ந்துபா ரென்றுமனங் கூர்ந்த போது
கோடான கோடிதவம் பெத்த தாச்சு
தேர்ந்தவிட மறியாமல் உலகத் தோர்கள்
சிவசிவா பூசைமடஞ் சிங்கா ரித்து
நேர்ந்தசிவ சக்கரங்கள் பாத்தி ரங்கள்
நிலைநிறுத்தி வெகுநுணுக்கம் பூசை செய்வார்
சார்ந்துஅந்தப் பூசைவெகு சரிதை மார்க்கம்
தனைநிறுத்திக் கிறுகையென்ற யோகம் பாரே. 603

பாரப்பா யோகமென்ற அறிவா னந்தம்
பதிவான தீபமென்றால் மனக்கண் பாரு
நேரப்பா வாசியென்றால் அமுர்த பானம்
நிலையான பிரமமென்றால் மாய்கை மாய்கை
காரப்பா மாய்கைவெளி கண்ணே சூட்சங்
கருவான சூட்சமடா நாத விந்து
வீறப்பா கொண்டதொரு நாத விந்து
விபரமுடன் இத்தனையும் அறிய லாச்சே. 604

ஆச்சப்பா அறிவான நாத விந்து
அண்டமொடு புவனமெல்லாம் அதுதா னாகிப்
பேச்சப்பா பேசாத மவுன மாகிப்
பெருகிநின்ற ஆதாரக் கூத்து மாகி
நீச்சப்பா அஞ்சுபஞ்சு பூத மாகி
நிசமாகிச் சதாகோடி மந்திர மாகி
மூச்சப்பா நின்றதொரு தீயுங் காத்து
முத்திபெறச் சுளிமுனையில் முடிந்து போச்சே. 605

முடிந்ததொரு நிச்சயத்தை யார்தான் காண்பார்
மோனமுள்ள தபோதனரில் கோடிக் கொன்று
விடிந்தவகை முடிந்தவகை இவன்தான் காண
மேதினியில் தானறிவான் குருவே யென்று
படிந்ததொரு நிச்சயத்தை அறியா ரெல்லாம்
பரப்பிரம்ம வஸ்துவென்றும் பரந்தா னென்றும்
வடித்ததொரு வஸ்துவென்பார் போக மென்பார்
மகத்தான பூரணந்தா னென்பார் தானே. 606

தானான நிர்மயமே யென்பார் கோடி
தன்மனமே சாட்சியதாய்ச் சாட்சி யென்பார்
கோனான பூரணமே சோதி யென்பார்
குன்றாத கற்பூர தீப மென்பார்
வானான ரவிமதியுஞ் சுடரே யென்பார்
மகத்தான அடிநடுவு முடியென் பார்கள்
தேனான நிச்சயத்தைப் பெற்றோர் தானும்
சிவசிவா மவுனமதாய்த் திரிவார் பாரே. 607

பாரப்பா பூரணமாய் நயன சூட்சம்
பதிவான கேசரியாம் உச்சி மீதில்
காரப்பா கண்ணுமனக் கண்ணுங் கொண்டு
கருணையுள்ள வாசியென்ற கருவை நோக்கி
நேரப்பா நின்றதினால் யோக மாச்சு
நினைவுகொண்டு பார்த்ததினால் தீப மாச்சு
தேரப்பா தீபமதைத் தினமும் நோக்கச்
சிவகற்பங் காலவரை யிருக்கும் பாரே. 608

பாரடா சவுமியசா கரத்தை நன்றாய்ப்
பார்த்துமன மதியறிந்து மதியால் மைந்தா
நேரடா கலையறிந்து நிலையைப் பாரு
நிலையான சவுமியத்தை யார்தான் காண்பார்
சாரடா சவுமியத்திற் சார்ந்து கொண்டு
சாகரமாங் கடலறிந்து நீஞ்சி யேறிக்
காரடா சகலகலை போத ஞானம்
கருணையுடன் பூரணமாய்க் கண்டு தேரே. 609

கண்டதொரு போதையிலே கனலைத் தூண்டிக்
கனலெழுந்த வாசியினால் அண்டம் மேவி
அண்டகே சரிமாது தன்னைக் கண்டு
அருள்பெருகும் புருவமதில் அமர்ந்து கொண்டு
தெண்டனிடும் படிநிலையைத் தெரிசித் தேதான்
சிவாயகுரு பூரணத்தைக் கண்டா யானால்
மண்டலங்கள் மூன்றுமர சாள்வா யய்யா
மணிநாத அமுர்த கலை வாசி பாரே. 610

வாசியென்ற சுவாசமதை மைந்தா கேளு
மனம்நடுங்கத் தானடுங்கி மாண்டோர் கோடி
நாசியென்ற வாசியதைச் சொல்லக் கேளு
நடுவான பூரணமா யெட்டும் ரெண்டும்
மாசியென்ற மயக்கறுத்து ஒன்றாய்க் கூட்டி
மணிநாத கெவுனமுடன் கொண்டா யானால்
தேசியென்ற குதிரையது தானே நின்று
திரும்புமடா சாரிவல சாரி தானே. 611

தானாகித் தானவனாய்த் தானே தானாய்த்
தனித்துநின்ற இடமதனிற் றானே சேர்க்கக்
கோனாகிப் பூரணமா யெங்குந் தானாய்க்
குவிந்துநின்ற நிச்சயத்திற் குணமாய் நின்று
நானாகி நானீயுந் தான்தா னென்றும்
நாட்டமுடன் நிற்கையிலே அதுதா னாச்சு
ஊனான பஞ்சகர்த்தா அதுதா னான
உண்மைதனைப் பார்க்கமன மொன்று தானே. 612

ஒன்றுபத்தி நின்றகெதி தன்னைப் பார்க்க
ஓமென்ற பிரணவத்தா லகாரத் தேகி
நின்றுகொண்டு நிற்பரத்தைச் சென்று பார்த்தேன்
நிலையறிந்து பார்க்ககையிலே ஒன்று கேளு
விண்டுவகை சொல்வதற்கு நாவங் கில்லை
வேதாந்தம் சித்தாந்தம் ரெண்டும் பொய்யாம்
அன்றுமுத லின்றுவரை கண்ட காச்சி
அரகரா பூரணமாஞ் சாட்சி யாச்சே. 613

சாட்சியென்ற நிச்செயமாஞ் சூட்சந் தன்னைச்
சற்குருவால் கண்டறிந்து கொண்டா யானால்
பேச்சிறந்து மவுனமதாய்க் கெவுன மாகும்
பேசாத நிச்சயத்திற் பிலமாய் நிற்கும்
காட்சியென்ற காட்சியெல்லாம் அதுக்குள் நின்று
காரணமாய் வந்தசெயல் ஆர்தான் காண்பார்
மூச்சிறந்த முன்முகப்பில் தீப மேத்தி
முடிவில்லா இரவொளியைச் சத்தே பாரே. 614

சத்தேபா ரென்றுசொன்ன சொல்லே யான
சங்கையுள்ள ஆசையெல்லா மாயா மாயம்
வித்தான ஆதியந்த மாயா மாயம்
விலாசமுள்ள வெளிஒளியும் மாயா மாயம்
சுத்தான சாத்திரங்கள் மாயா மாயம்
சுழன்றுஉயிர் பயிர்களெல்லாம் மாயா மாயம்
சித்தான அசத்தையெல்லாம் தெளிந்து பார்க்கச்
சின்மயா னந்தமாய்த் தெளிந்து போச்சே 615

தெளிந்துநின்ற சின்மயத்தின் தெளிவு தன்னைச்
சிவசிவா சதாசிவனும் மயேசன் றானும்
மளிந்துநின்ற ருத்திரன்மால் பிரமன் றானும்
மாதவனுஞ் சந்திரனோ டேழு பேரும்
நெளிந்துநித மலைந்தவருந் தேடிக் காணார்
நிசமான நிச்செயத்தை யார்தான் காண்பார்
தெறிந்துகொண்டு சின்மயமா யிருந்தா யாகில்
சின்மயத்தில் தன்மயங்கொண் டேறும் பாரே. 616

சின்மயத்தின் கூறு

பாரப்பா சின்மயத்தின் மைந்தா கேளு
பனிரெண்டு பூரணந்தான் பிறந்து தப்பா
நேரப்பா பூரணந்தா னின்று ஆடி
நேசமென்ற பாசமெல்லாம் கண்டு தேறிக்
காரப்பா என்றுபரி பூரணமாய் நின்று
கருணையுடன் பூரணத்திற் கலந்து போச்சே
ஆரப்பா அறிவார்கள் சின்மயத்தின் வடிவு
அங்குமில்லை இங்குமில்லை யெங்குந் தானே. 617

எங்குந்தான் தானாகி நின்ற சூட்சம்
ஏகபரா பரமான மயமே யாகும்
சங்கையில்லாப் பரமசுகஞ் சின்மயமே யாச்சு
சைதன்ய மானசின்ம யத்தை மைந்தா
அங்கமுடன் பிரமமென்று வெளிதா னென்றும்
அரூபமாய் நின்றதிரு ஒளிதா னென்றும்
மங்களமாய் நிறைந்ததிரு வாசி யென்றும்
மவுனமாய் நின்றமயந் தானென் றாரே. 618

தானேதான் தானாகத் தன்னைக் காணச்
சவுமியமாய் நின்றபொரு ளதுதா னென்றும்
ஊனேதான் தானான வசிட்டர் தானும்
ஒருகோடி யூழிவரை தவமே செய்து
நானேதா னென்றுவெகு கதையைப் பாடி
நாட்டினார் ராமனுக்கு வாசி யென்ற
கோனேதான் வாசியல்ல குருவு மில்லை
கொண்டபடி சாஸ்திரத்தை வகுத்தார் பாரே. 619

வகுத்ததொரு சாத்திரத்தில் மைந்தா மைந்தா
மகத்தான நிச்சயத்தைச் சொல்ல வில்லை
தொகுத்துமிக நாமுரைத்துச் சவுமி யத்தில்
சொல்லவொண்ணா நிச்செயத்தின் சூட்சஞ் சொன்னோம்
பகுத்தறிந்த பெரியோர்கள் எடுத்துப் பார்த்துப்
பரமபத நிச்சயத்தில் நிசமா னார்கள்
இகத்துளதும் பரத்துளது மதுதா னென்று
யேகமய மானசின் மயத்தைப் பாரே. 620

பாரப்பா சின்மயத்தில் தன்மயங்கொண் டேறிப்
பகுத்தறிவாய்த் தானிருந்து பார்க்கும் போதில்
நேரப்பா ஆதியந்தஞ் சின்மயமாய்க் காணும்
நிசமான வெளியொளியுஞ் சின்மயமாய்க் காணும்
சாரப்பாப சத்திசிவம் சின்மய மாய்க் காணும்
சங்கையில்லாத் தோற்றமெல்லாஞ் சின்மயமாய்க் காணும்
சேரப்பா கண்காட்சி யான தெல்லாம்
சிவசிவா சின்மயமாய்த் தெளிய லாச்சே. 621

ஆச்சப்பா சின்மயமாய்த் தெளிந்து கொண்டால்
ஆசையென்ற பாசமெல்லாம் அகன்று போகும்
பேச்சப்பா பேச்சது மவுன மாகும்
பெருகிநின்ற கற்பமெல்லாம் அதுவாய் நிற்கும்
காச்சப்பா ஆதார நிராதார மாகும்
கண்கண்ட காட்சியெல்லாம் காரணமாய் நிற்கும்
மூச்சப்பா தான்நிறைந்து மோட்சகெதி யான
மோனமென்ற மவுனமடா சின்மயந்தான் பாரே. 622

பாரப்பா பக்திகொண்டு சின்மயத்தைக் காணப்
பார்மகனே சரிதைகொண்டு கிரிகை ரெண்டும்
நேரப்பா தவறாமல் பத்தி கொண்டு
நேமமுடன் செய்துவரும் போதி லேதான்
பேரப்பா பெற்றதொரு தவப்பே றாலே
பேசாத மனவுகுரு மவுன மாக
மேரப்பா மேருகிரி தீபம் போலே
மெய்ஞான சற்குருவும் வருவார் காணே. 623

சின்மயம்

காணவே சற்குருவுங் கருணை கூர்ந்து
கண்கண்ட சரிதையொடு கிரிகை ரெண்டும்
பூணவே செய்துவந்த நெறியைப் பார்த்துப்
புத்தியுள்ள என்மகனே வாவென் றேதான்
ஊணவே வாசியுட வளியுஞ் சொல்லி
உண்மையுள்ள சிவயோக நிலையுங் காட்டித்
தோணவே ஞானமென்ற அண்டத் துள்ளே
தொடுகுறிபோல் சின்மயத்தின் மயஞ்சொல் வாரே. 624

மயமான சின்மயத்தின் வடிவு தன்னை
மனதுகந்து மனக்கண்ணால் மகிழ்ந்து பார்த்தால்
செயமான தன்மயஞ்சின் மயமாய்ப் போகும்
சிவாயகுரு பூரணஞ்சின் மயமாய் நிற்கும்
சுயமான வெளியொளிசின் மயமாய் நிற்கும்
சுடரான சோதியுஞ்சின் மயமாய் நிற்கும்
நயமான ஆதார சுரூப மெல்லாம்
நாதாந்த பூரணஞ்சின் மயந்தான் பாரே. 625

பாரப்பா சின்மயமாங் குருவைக் காணப்
பதிவான அருளுடனே பொருளும் வேணும்
நேரப்பா நிறைந்தபொருள் தங்கத் தாயை
நேர்மையுடன் காணுதற்கு வகையைக் கேளு
சாரப்பா ரசமுடனே நாகம் வங்கம்
சரியாக மூன்றையு மொன்றாய்ச் சேர்த்துச்
சேரப்பா இன்னமொரு கருமா னங்கள்
திரமான தங்கமுடன் வெள்ளி செம்பே. 626

தசவிதசரக்கு செந்தூரம்

செம்புடனே வெள்ளிதங்கம் உருகும் போது
சிவசிவா நாகவங்க ரசத்தைக் கேளு
நம்புதலாய்ச் சேர்த்துஒரு மணியாய் நிற்கும்
நாதாந்த ஆறுமுக மணிக்கு மைந்தா
தெம்புதலா யந்திடைக்கு மைந்தா கேளு
திருவான காந்தமயஞ் சரியாய் வாங்கி
வம்பகலக் கல்வமதி லிட்டுக் கொண்டு
மகத்தான பழச்சாற்றால் மைபோ லாட்டே. 627

ஆட்டிநன்றாய்க் காயவைத்துத் தூளே செய்து
ஆறுமுகக் களங்கதனை யதின்மேல் வைத்து
நீட்டிநன்றாய்த் தான்மடியப் பொடியே செய்து
நீமகனே யப்பொடிக்கு நேர தாக
நாட்டிநன்றாய்க் கெந்தகமுந் தாரஞ் சேர்த்து
நல்லதண்ணீர் விட்டாட்டித் தூளே செய்து
கூட்டிநன்றாய்ப் பத்துவகைத் தூளு மொன்றாய்க்
கூர்மையுடன் தான்மடியப் பொடியே செய்யே. 628

செய்யப்பா பத்துவகைப் பொடியு மொன்றாய்ச்
செயமாகக் குப்பிதனில் விட்டு மைந்தா
கையப்பா தவறாமல் மண்சீலை யேழுங்
கணக்குடனே தான்செய்து காய வைத்து
வையப்பா பாண்டமதில் சாம்ப லிட்டு
மகத்தான மேருதனை நடுவே வைத்து
மெய்யப்பா குப்பிமூக் கணவா யிட்டு
வேதாந்த சற்குருவைத் தியானம் பண்ணே. 629

பண்ணப்பா சற்குருவைத் தியானம் செய்து
பயபக்தி யாகவேநீ அடுப்பி லேத்திக்
கண்ணப்பா தவறாமல் கமலம் நோக்கிக்
கருணையுடன் அனல்மூட்டிக் கால்கொண் டூதி
விண்ணப்பா தான்கனிய அனலை மூட்டி
விண்ணான மேருதனைக் கண்ணால் பாரு
பொன்னப்பா தான்விளையும் மேருக் குள்ளே
பொன்னொளிவு போலுருகும் பதத்தைப் பாரே. 630

பாரப்பா பதமான பதத்தைப் பார்த்துப்
பத்தியுடன் தானிக்கி யாற வைத்துக்
காரப்பா சற்குருவைத் தியானம் பண்ணிக்
கமண்டலத்தில் நின்றநடு மேரை வாங்கி
நேரப்பா தானிருத்தித் தூப தீபம்
நேர்மையுடன் உபசார வணக்கம் பண்ணிச்
சாரப்பா மேருவினிற் சார்ந்து நின்ற
சதாபோத பூரணியை யெடுத்துப் பாரே. 631

எடுத்துமிகப் பார்க்கையிலே கண்கொள் ளாது
இன்பரச செந்தூர மென்ன சொல்வேன்
நடுத்தரமாய் நின்றதொரு செந்தூ ரத்தை
நயந்துமிக வாங்கியதைப் பதனம் பண்ணி
அடுத்துமனை களிதனிலே மனத்தை நாட்டி
அருள்பெருகும் பூரணசெந் தூரந் தன்னைத்
தொடுத்ததொரு ஆதார பூசை பண்ணிச்
சுத்தமுடன் பூரணத்தில் கொண்டு பாரே. 632

பாரடா அந்திசந்தி தினந்தான் கொண்டால்
பரமகயி லாசமென்ற தேக மாச்சு
நேரடா பரமகயி லாசங் கண்ட
நிச்சயத்தால் சின்மயத்தில் ஏற லாச்சு
சாரடா சின்மயத்தில் சார்ந்து நின்று
சங்கையினா லங்குமிங்கு மொன்றாய்ப் போச்சு
பேரடா அங்குமிங்கு மொன்றாய்க் கண்ட
பெருமையுள்ள தலமதனைப் பேசு றேனே. 633

பேசுறேன் தலமகிமை யாகி யந்தம்
பிலமான ஆதியந்தம் மண்விண் ணாச்சு
ஆகவென நின்றதொரு மண்விண் தன்னை
அப்பனே குருவருளால் அறிந்து கொண்டு
தேசுவென நின்றவிண்ணுக் கப்பால் பாரு
தெளிவாகத் தெளிந்தமண்ணுக் கப்பால் பார
நேசமுள்ள சின்மயத்தின் வடிவு காணும்
நிசமான தலமதிலே நின்று பாரே. 634

அயத்தாம்பூரக்களங்கு

நின்றுமிகப் பார்க்கையிலே மைந்தா கேளு
நிலையான சின்மயத்தி லுதித்த சித்து
விண்டுமிகச் சொல்லாத வடிவே காணும்
வேதாந்த முடிவதனை விள்ளப் போமோ
ஒன்றுபொரு ளானதிலே ஒளியுண் டாச்சு
உண்மையென்ற ஒளிதனிலே வெளியுண் டாச்சு
சென்றதொரு அண்டவெளி தன்னில் நின்று
செகசால மாய்கையெல்லாந் தெளிந்து தள்ளே. 635

தெளிவாக இன்னமொரு செந்தூ ரந்தான்
தீர்க்கமுடன் சொல்லுகிறேன் மார்க்க மாகச்
சுளியான அயமுடனே செம்பு ரெண்டும்
சுத்தமுடன் விரவியதைச் சுத்தி பண்ணி
வளியாகக் குகைதனிலே காரங் கூட்டி
மார்க்கமுடன் உருக்கையிலே வெள்ளி சேரு
பளியாக வெள்ளியது பாயும் போது
பத்தியுடன் தங்கமதைத் தானே சேரே. 636

சேர்ந்துநன்றாய் உருக்கையிலே மைந்தா கேளு
திருவான நாகவங்கம் ரசமும் சேர்த்துப்
பார்த்திபனே தான்குடுத்துப் பார்க்கும் போது
பதிவான களங்குநிறம் யென்ன சொல்வேன்?
ஏத்தமுள்ள களங்குநிறை தங்கம் கெந்தி
இசையான காந்தமுடன் மூணுங் கூட்டி
வாத்திநன்றாய்க் கல்வமதில் மைந்தா நீயும்
வணக்கமுடன் கமலரசந் தன்னா லாட்டே. 637

ஆட்டுவது கமலரசந் தன்னா லாட்டி
அப்பனே தானுருட்டிக் காய வைத்துத்
தாட்டிகமாய்க் காய்ந்தபின்பு பொடித்து மைந்தா
தன்மையுடன் காசியென்ற குப்பிக் கேத்தி
மாட்டுவது மண்சீலை ஏழுஞ் செய்து
மகத்தான தாழிதனில் சாம்ப லிட்டுத்
தேட்டுடைய குப்பிதனை நடுவே வைத்துச்
சிவசிவா மூக்களவு சாம்பல் சாத்தே. 638

சாத்திமிக அடுப்பேத்தி மைந்தா கேளு
சற்குருவைத் தான்தொழுது அனலை மூட்டிப்
பார்த்திபனே அனல்மூட்டி ஆறு சாமம்
பயபக்தி யாகவேநீ யெரிக்கும் பேது
போர்த்தியதோர் குப்பியுள்ளே மைந்தா மைந்தா
பொன்மெழுகு போலுருகிச் சிவந்து நிற்கும்
பூத்தமலர் வாசனைபோற் சிவந்து தானால்
புண்ணியனே தானிறக்கி யாற வையே. 639

வையப்பா மனங்குளிர ஆற வைத்து
மகத்தான குப்பிதனை யெடுத்து மைந்தா
கையப்பா தவறாமல் கவசம் நீக்கிக்
கருணைவளர் செந்தூரந் தன்னைப் பாரு
பொய்யப்பா போகாது முருக்கம் பூப்போல்
பூரணமாய் நின்றிலங்கும் புருவ மேவி
மெய்யப்பா சற்குருவைத் தியானம் பண்ணி
வேதாந்த செந்தூரம் பதனம் பண்ணே. 640

பதனமதாய்ப் பளிங்கினுட குப்பிக் கேத்திப்
பார்மகனே அந்திசந்தி பூசை பண்ணி
மதனமதாய் மனங்குவிந்து குருவைப் போத்து
மகத்தான செந்தூரந் தன்னை மைந்தா
விதனமென்ற நோயகற்றுந் தாயே யென்று
விரும்பிநிதம் பணவிடைதான் மெய்யி லூட்டு
அதனமதாய்க் கொள்ளாமற் பணவிடைதான் மைந்தா
அப்பனே அந்திசந்தி கொண்டு தேரே. 641

தேரப்பா அந்திசந்தி கொண்டு தேர்ந்தால்
தேகம் வச்சிர காயமடா தேவ ரூபம்
பேரப்பா பெற்றதொரு செந்தூ ரத்தைப்
பிலமாக நவலோகந் தன்னில் மைந்தா
சேரப்பா இனமறிந்து பாச்சி னாக்கால்
செம்மையுடன் நவலோகஞ் செம்மை யாகும்
காரப்பா கருணைவளர் செந்தூரத்தைக்
கருணையுடன் பூரணமாய்க் கொண்டு தேறே. 642

தேறவே இன்னமொரு செந்தூ ரங்கேள்
திருவான அயமுடனே காந்தஞ் சேர்த்து
ஊறவே சம்பளத்தின் சாற்றை விட்டு
உருகவே தானரைத்து உலர வைத்து
நேரவே அதுக்கு நிகர் லிங்கஞ் சேரு
நேர்மையுடன் தாளகமும் வீரஞ் சேரு
கூறவே துருசுடனே துத்தஞ் சேரு
குருவான காரமுடன் சாரஞ் சேரே. 643

சேரப்பா ரசமுடனே நாகம் வங்கம்
செம்மையுடன் இரண்டுமொன்றாய்ச் சேர்த்துக்கொண்டு
நேரப்பா தங்கமதை நாலுக் கொன்று
நேர்மையுடன் தான்கூட்டிக் கமலப் பாலால்
காரப்பா கல்வமதில் நன்றா யாட்டிக்
கடுரவியில் உலரவைத்துத் தூளே செய்து
மேரப்பா என்றதொரு குப்பிக் கேத்தி
வியமுடனே மண்சீலை யேழுஞ் செய்யே 644

செய்யப்பா மண்சீலை வலுவாய்ச் செய்து
தீர்க்கமென்ற பாண்டமதில் சாம்ப லிட்டு
வையப்பா குப்பிதனை நடுவே வைத்து
மார்க்கமுடன் மூக்களவு சாம்ப லிட்டு
மெய்யப்பா சற்குருவைத் தியானம் செய்து
மேன்மைபெற அடுப்பேத்தி அனலைத் தாக்கு
கையப்பா தவறாமல் அனலைத் தாக்கிக்
கருணையுடன் ஆறுசாமம் எரித்துக் காணே. 645

காணவே அறுசாமம் எரித்து மைந்தா
கருணைவளர் குப்பிதனைக் கண்ணால் பாரு
பூணவே குப்பிதனைப் பார்க்கும் போது
பொன்மெழுகு போலவேதா னுருகி நிற்கும்
பேணவே உருகிநிலை தனைய றிந்து
பிசகாமல் தானிறக்கி ஆற வைத்துத்
தோணவே குப்பிதனை எடுத்துப் பாரு
சோதியென்ற செந்தூரங் கண்கொள் ளாதே. 646

கண்கொள்ளாக் காட்சிதரு செந்து ரத்தைக்
கைமுறையாய்த் தானெடுத்துப் பதனம் பண்ணி
விண்ணிறைந்த சோதியெனத் தியானம் பண்ணி
மெய்யாகப் பணவிடைதா னிருபோ துண்ணு
தன்மனமே சாட்டியதாய்த் தினமுங் கொண்டால்
தங்கமய மாகுமடா அங்கந் தானும்
பொன்மயமாய் நின்றுவிளை யாடும் போது
பூரணசெந் தூரமதின் புதுமை கேளே. 647

கேளப்பா வெள்ளிசெம்பு தகடு பண்ணிக்
கிருபையுள்ள செந்தூர மதனிற் பூசி
வாளப்பா அக்கினியில் வாட்டிப் பார்க்க
வரிசையுடன் தகடுருவிப் பழுக்கு மைந்தா
சூளப்பா சுத்தமுடன் பழுத்து நின்ற
சோதியென்ற தங்கமடா சொற்க மாச்சு
ஆளப்பா சொர்ணமது பத்துக் கொன்று
அருள்பெருகப் பூரணமா யடங்கி வாழே. 648

அடங்கிமிக வாழ்வதற்கு அண்ட மேவி
ஆதிசிவ சாம்பவியார் பாதங் கண்டு
துடங்கியந்த வாசிமலர் தனையெ டுத்துச்
சுத்தமுடன் நித்தியமும் பூசை பண்ணித்
திடங்களொடு சிவயோகஞ் சித்தி யாகும்
திருவான அமுர்தரச மருவிப் பாயும்
மடங்களென்ற மடபதிகள் மங்கா தய்யா
மந்திரபஞ் சாக்கரத்தை மருவிப் பாரே. 649

பாரப்பா அகாரமது சிவமு மாச்சு
பதிவான சிவமதுதான் உயிரு மாச்சு
நேரப்பா வுகாரமது சத்தி யாச்சு
நேர்மையுள்ள சத்தியது உடல்தா னப்பா
சாரப்பா மகாரமது மவுன மாச்சு
சாயுச்சிய மவுனமது சோதி யாச்சு
தேரப்பா சிகாரமது தீயு மாச்சு
கிருவான மகாரமது வாய்வு மாச்சே. 650

ஆச்சப்பா அகாரத்தை மதியி லூணி
அப்பனே உகாரத்தை ரவியி லூணு
காச்சப்பா மகாரத்தை நின்மயமாய் நின்று
கருணையுள்ள ரவிமதியைப் புருவத் தேத்தி
மூச்சப்பா அசையாத சிகாரத் தீயில்
முன்னிறைந்த வகாரமென்றால் வாய்வா லூது
பேச்சப்பா பேசாத அக்கினிதா னாகிப்
பிலமான புருவமதிற் சோதி யாச்சே. 651

சோதியென்ற சோதிசிவ சூட்சந் தன்னைச்
சுத்தமுள்ள புலத்தியனே சொல்லக் கேளு
ஆதியென்ற அகாரமடா சிவந்தா னுப்பு
அருளான வுகாரசத்தி புளியு மாச்சு
நீதியென்ற மகாரமடா மவுன வாலை
நிசமான பூரந்தான் சிகார மாச்சு
சாதியென்ற நாலையுந்தான் ஒன்றாய்க் கூட்டிச்
சமரசமாய்ப் பூரமென்ற உப்பைச் சேரே. 652

சேர்த்துநன்றாய் ரவிதனிலே வைத்து மைந்தா
தீர்க்கமுடன் இன்னமொரு செய்தி கேளு
ஆத்துமத்துக் குறவான ஆதி உப்பை
அறிந்தெடுத்துச் சத்திரவி பீசங் கூட்டப்
போத்திமிகத் தானிருந்து தயிலம் வாங்கிப்
பூரணமாய் நாலுப்புஞ் சேர்த்துக் கிண்டிப்
பார்த்துமிகப் பதனமாய்ப் பாணி சேர்க்கப்
பஞ்சகன தீட்சையெனப் பகர லாமே. 653

பஞ்சகன தீட்சை

ஆமப்பா முதல்தீட்சை அகார மாகும்
அப்பனே வுகாரமது ரெண்டாந் தீட்சை
காமப்பா மகாரமது மூன்றாந் தீட்சை
கருணைவளர் சிகாரமது நாலாந் தீட்சை
தாமப்பா வகாரமது ஐந்தாந் தீட்சை
தன்மையுடன் தானறிந்து ஒன்றாய்ச் சேர்க்க
ஓமப்பா பஞ்சகண தீட்சை யாச்சு
உண்மையென்ற தீட்சையிலே உகந்து நில்லே. 654

நில்லப்பா பஞ்சகண தீட்சை பெற்றால்
நிசமான பஞ்சசபை நீதா னாச்சு
சொல்லப்பா சோதிபஞ்சாட் சரந்தா னாச்சு
சுத்தமுள்ள சடாசரத்துக் குயிரு மாச்சு
செல்லப்பா அண்டபத முடிவு மாச்சு
சித்தாந்தம் வேதாந்தம் தெளிவு மாச்சு
உள்ளப்பா உள்வெளியுந் தான்தா னாச்சு
உண்மையுடன் தானிருந்து தாயைக் காணே. 655

தாயான பூரணமே சதாபோத மாகும்
தன்னைத்தான் அறிதல்தெரி சனமு மாகும்
மாயான பிரபஞ்சம் சிவமய மென்று
மார்க்கமென்ற பகுத்தறிவே யறிவா னந்தஞ்
சாயாத நிலையதுவே சிவயோக மாகும்
சகலவுயிர் தானாகச் சற்குருவே யாகுந்
தேயாத ரவியதா லித்தனையுங் கண்டு
சிவயோக யோகமதில் திறஞ்செய் வாயே. 656

திறமான சவுமியசா கரத்தைப் பாரு
தீர்க்கமுடன் காவியத்தைத் தினமும் பாரு
உரமான பூரணத்தைப் பூசை பண்ணு
உண்மையென்ற சகலகலைக் கியானம் பாரு
வரமான ஞானமடா மனுவிக் கியானம்
வணக்கமுட னாயிரத்தை மகிழ்ந்து பாரு
சிரமான தத்துவமா யிரத்தைப் பாரு
தீட்சையொடு பூசைவிதி கண்டு பாரே. 657

பாரப்பா வாதமிதிற் கோடா கோடி
பதிவான வயித்தியத்தி லேக்கோ யில்லை
நேரப்பா பூரணத்தி லிருந்து கொண்டு
நேமமுடன் சூத்திரத்தில் அனந்தஞ் சொன்னேன்
மேரப்பா மேருகிரி தீபம் போலே
மெய்ஞ்ஞான பூரணவேதாந்தஞ் சொன்னேன்
தேரப்பா ஆதிமுதல் அந்தஞ் சொன்னேன்
தீர்க்கமுடன் சொன்னதெல்லாந் தெளிந்து காணே. 658

வல்லாரைக் கற்பம்

தெளிந்துமிகக் காணுதற்கு மைந்தா கேளு
திருவான அமுர்தரசகற்பஞ் சொல்வேன்
அளிந்தினதோர் வல்லாரை தெரிந்து பார்த்து
அப்போதே கொண்டுவந்து அருளை நோக்கிக்
குளிந்ததொரு பூரமடா பூரச் சுண்ணம்
கொட்டிடுவாய் கீழ்மேலுந் திட்டஞ் செய்து
நெளிந்துமனம் போகாமற் சமாதி வைத்து
நேர்மையுடன் அஞ்சாநா ளெடுத்துக் கொள்ளே. 659

எடுத்ததொரு வல்லாரை கல்வத் திட்டு
இடித்துமிகத் தானரைத்துத் தயிலஞ் சேர்த்துத்
தொடுத்ததொரு பூரநாலத் தொன்று கூட்டித்
துலங்குவதைத் தானரைத்து ரவியிற் போட்டு
அடுத்துமிக ரவிதனிலே அஞ்சு நாள்தான்
அப்பனே காய்ந்தபின்பு எடுத்துக் கொண்டு
நடுத்தரமாய் நின்றதொரு அண்டச் சுண்ணம்
நாதாந்தப் பற்பமது கூடச் சேரே. 660

சேரப்பா இடைசரியாய்ச் சேர்த்து மைந்தா
செம்மையுடன் தானரைக்க மெழுகு மாகும்
காரப்பா மெழுகதனை மேருக் கேற்றிக்
கணபதிக்கும் வடுகனுக்கும் பூசை பண்ணி
நேரப்பா பணவிடைதா னெடுத்துக் கொண்டு
நேர்மையுடன் அந்திசந்தி கொண்டா யானால்
ஆரப்பா உனக்குநிகர் சொல்லப் போறேன்
அண்டரண்ட பதங்கடந்த கெவுனி யாச்சே. 661

கடுக்காய் பற்பம்

ஆச்சப்பா கெவுரைச வமுர்தஞ் சொல்வேன்
அமைத்தபடி செங்கடுக்கா யங்கே வாங்கிப்
பாச்சப்பா கல்வமதில் நொறுக்கிக் கொண்டு
பாலகனே அதுக்குநிகர் சருகு சேர்த்து
விச்சப்பா தான்விலகப் பூரஞ் சேர்த்து
வெண்சாரை விட்டுநன்றாய்ப் பிசைந்து லர்த்தி
மூச்சப்பா தான்பிலக்கப் பாண்டத் திட்டு
முத்திபெறக் குழித்தைலம் நன்றாய் வாங்கே. 662

வாங்கியந்தத் தயிலமதைப் பதனம் பண்ணி
வரிசையுடன் அந்திசந்தி மைந்தா நீயும்
ஏங்கியே திரியாதே கொண்டா யானால்
ஈரெட்டு வயதுடைய மதன்போ லாவாய்
பூங்கமல மாதுசிவ சத்தி யாலே
பூரணமுங் காரணமும் பொருந்தும் பாரு
பாங்குடைய கடுக்காயில் தைலத் தாலே
பத்தியுட ஆதாரஞ் சுத்த மாமே. 663

ரெத்தினவைப்பு

சுத்தமுடன் ரெத்தினமுறை வைப்பைக் கேளு
சோதிநவ ரெத்தினத்திற் பவளந் தானும்
சித்தமுடன் வைப்புமுறை சொல்வேன் மைந்தா
சிகப்பான கெவுரிசங்கு பலந்தா னொன்று
பத்தமுள்ள சாதிலிங்கம் பலந்தா னொன்று
பக்குவமாய் ரெண்டுமொன்றாய்க் கல்வத் திட்டு
உத்தமொழி சொல்லுகிறேன் கலசப் பாலால்
ஓமென்று வடிமெழுகு போலே யாட்டே. 664

ஆட்டப்பா வடிமெழுகு போலே யாட்டி
அங்கமுடன் மனதுமெய்க்க மணிபோல் செய்து
நாட்டப்பா அம்மணிக்குத் தமர்கள் போட்டு
நலுகாமற் சலாகைதனிற் கோர்வை யிட்டு
வாட்டப்பா ரவிதனிலே மூன்று நாள்தான்
மைந்தனே காய்ந்தபின்பு வரிசை கேளு
பூட்டப்பா விறால்மச்சம் வயத்துள் வைத்துப்
போதரவாய்ச் சீலையிலே குளியாய்க் கட்டே. 665

கட்டிநன்றாய்ச் சட்டியிலே நிம்பெண்ணை விட்டுப்
கழலாமல் தொளாந்திரம் போலே கட்டிச்
சட்டமுடன் அடுப்பேத்தி அனலை மூட்டிச்
சமைத்தபதம் பார்த்திறக்கி யாற வைத்துத்
திட்டமுடன் கோர்வையிட்ட மணியை வாங்கிச்
செம்மையுடன் ரவியிட்டுக் கழுவிப் போட்டு
இட்டமுடன் தானெடுத்துப் பார்த்தா யானால்
என்னசொல்வேன் பவளமதுக் கதிகங் காணே. 666

முத்துவைப்பு

காணவே முத்துமணி சொல்லக் கேளு
கருவான சிப்பியடா முத்துச் சிப்பி
தோணவே கொண்டுவந்து சுத்தி செய்து
சுகமாகத் தானிடித்துத் தூளே செய்து
பூணவே இடித்ததூ ளாறு பங்கு
புத்தியுடன் கெவுரிசங்கு தூள்தான் மூன்று
பேணவே வெள்வங்க மிடைதான் நாலு
பிலமான ரசமதுவு மிடைதான் அஞ்சே 667

அஞ்சாமல் வங்கரச மொன்றாய்க் கூட்டி
அருமையுடன் சிப்பிசங்கு தூளுங் கூட்டி
மிஞ்சாமல் கமலரச சீன்பால் விட்டு
மெழுகுபதம் போலரைத்து மணியே செய்து
துஞ்சவே தமரிட்டு நிழலு லர்த்திச்
சுகமாக இன்னமொரு வரிசை கேளு
தஞ்சமென அயக்கரண்டி தன்னி லேதான்
சங்கினுட பொடியிட்டுத் தண்ணீர் வாரே! 668

வார்த்துமிக முத்துமணி யதனிற் போட்டு
வணக்கமுடன் கிண்டியதை யடுப்பி லேத்திக்
காத்துமிக அனல்மூட்டி யெரிக்கும் போது
கருவான நீர்வத்திச் சுண்டித் தானால்
பார்த்துமிக ரவிதனிலே காயப் போட்டுப்
பக்குவமாய் முத்துமணி பதிவாய் வாங்கிச்
சேர்த்துமிகக் கல்பொடியும் முத்துஞ் சேர்த்துச்
செம்மையுடன் கையதனால் தேய்த்துப் பாரே. 669

பாரப்பா கல்பொடியும் முத்துங் கூட்டிப்
பதிவாகக் கையதனா லுரசும் போது
நேரப்பா முத்துவெகு ஒளியுங் காணும்
நேர்மையுள்ள ரசமணியும் இதற்கீ டல்ல
கோரப்பா தாழ்வடமாய்க் கோவை செய்து
கூர்மையுடன் மந்திரங்கள் செபித்தா யானால்
சாரப்பா சகலமுமே சித்தி யானால்
தாய்பதத்தைப் பூசித்துத் தன்னைப் பாரே. 670

பாரப்பா பச்சைமணி சொல்லக் கேளு
பச்சையென்ற வளகிலது பொடிதா னெட்டுக்
காரப்பா சங்கினுட பொடிதான் ரெண்டு
கல்வமதில் கமலரசந் தன்னா லாட்டிச்
சேரப்பா மணியதுபோ லுருட்டிக் கொண்டு
திரமாகத் தமரிட்டு நிழலு லர்த்தித்
தேரப்பா பச்சைநிற மண்டூ கத்தில்
திறமாக அதனுள்ளே வைத்துக் கட்டே. 671

கட்டுவது குளிபோலே கட்டி மைந்தா
கரண்டிதனில் நல்லெண்ணெய் கால்படிதான் விட்டுத்
திட்டமுடன் குளியிட்டுத் தீயெ ரித்துச்
செம்மையுடன் தானவித்து இறக்கி மைந்தா
சட்டமுடன் குளியவிழ்த்து மணியெ டுத்துத்
தானுணர ரவிதனிலே காயப் போட்டு
இட்டமுடன் கல்பொடியும் மணியுங் கூட்டி
இறுக்கிமிக உரசையிலே மெதுவாய்க் காணே. 672

வயிரவைப்பு

காணவே வயிரமுறை சொல்லக் கேளு
கற்பூர சலாசத்துப் பொடிதான் ரெண்டு
பூணவே படிக்கல் பொடிதான் ரெண்டு
பொங்குகடல் சங்குரெண்டு யிரத மொன்று
தோணவே ஒன்றாய்க் கல்வத் திட்டுச்
சுத்தமுள்ள முதுகண்பால் விட்டு ஆட்டிப்
பேணவே மணிசெய்து தமர்தா னிட்டுப்
பிலமான ரவிதனிலே காயப் போடே. 673

போடப்பா ரவிதனிலே காய்ந்த பின்பு
புத்தியுடன் மணத்தவளை வயத்தில் வைத்து
நாடப்பா கிளியதுபோல் நன்றாய்க் கட்டி
நயமாகச் சட்டியிலே நல்லெண்ணெய் விட்டு
மூடப்பா கிளியிட்டு அவித்தி றக்கி
முக்யமுள்ள மணியெடுத்து ரவியில் போட்டுத்
தேடப்பா சாணைதனில் தீட்டிப் பார்க்கச்
சிவசிவா சோதியது காந்தி யாமே. 674

ஆமப்பா சிகப்புமணி தன்னைக் கேளு
ஆச்சரியம் சிவந்தகல்லுப் பொடிதா னாலு
ஓமப்பா சங்குரெண்டு இரத மொன்று
உத்தமனே கல்வமதில் சீன்பால் விட்டுத்
தாமப்பா அரைத்துநன்றாய் மணிபோல் செய்து
தமரிட்டு ரிவிதனிலே காயப் போட்டுப்
போமப்பா மணல்தவளை வயத்துள் வைத்துப்
புத்தியுடன் கிளியதுபோல் நன்றாய்ச் செய்யே. 675

செய்துநன்றாய்ச் சட்டியிலே எண்ணெய் விட்டுச்
செம்மையுடன் கிளியிட்டு அவித்து மைந்தா
செய்ததொரு கிளியெடுத்து மணியை வாங்கிச்
செம்மையுடன் கிளியிட்டு அவித்து மைந்தா
செய்ததொரு மணியெடுத்துச் சாணை தன்னில்
தீட்டிமிகப் பார்க்கையிலே சிகப்பென்ன சொல்வேன்?
செய்தசிவப் பானமணி அதிக வித்தை
செம்மையுடன் செய்துதவந் திறஞ்செய் வாயே. 676

கஸ்தூரி முறையும் பூனை பிடிக்கவும்

திறமான கஸ்தூரி முறையைக் கேளு
தீவுதனில் வாழுமடா சிறுகண் பூனை
உறமான பூனையிலே ஆண்பெண் உண்டு
உத்தமனே ஆண்பூனை மஞ்ச ளாகும்
நிறமான பெண்பூனை சிகப்பு மைந்தா
நிசமாக அதின்மேனி யதிக வாசம்
கரமான கையதனாற் பிடிக்க வென்றால்
காந்துமடா மேனியெல்லாம் காந்தும் பாரே. 677

பாரப்பா பிடிக்கும்வகை சொல்லக் கேளு
பால்தனிலே தவளைநெய் பகுந்து விட்டு
நேரப்பா அதுவாழு மிடத்தில் வைத்தால்
நிச்சயமாய் வந்ததுவும் முகந்து பார்க்கும்
சாரப்பா முகந்தவுடன் மயங்கு மப்பா
தருணமது தானறிந்து பிடிக்கும் போது
காரப்பா என்றுமுலைப் பாலு மெண்ணெய்
கலந்துமெய் தனிற்பூசி பிடித்துப் பாரே. 678

பிடித்துஅதின் சோரையெல்லா மொன்றில் வாங்கிப்
பேசாத சாதிலிங்க மிடையே சேர்த்துத்
தடித்தபிஷ்ட்டிச் சதைகளெல்லாம் அரைத்துச் சேர்த்துத்
தனிவீரம் பூரமுடன் சபாதுங் கூட்டி
மடித்திடவே சமாதுதனில் வைத்துப் பார்க்க
மகஸ்த்தான கஸ்தூரி வாசம் வீசும்
முடித்ததொரு கஸ்தூரி வாசங் கண்டால்
முக்யமுடன் தானெடுத்துப் பதனம் பண்ணே. 679

பண்ணப்பா பதனமாய் வைத்துக் கொண்டு
பக்குவமாய்ப் பணவிடைதான் கொண்டா யானால்
முன்னப்பா தேகமதில் நின்ற நோய்கள்
முழுதுமது தீருமடா பழுதோ இல்லை
பொன்னப்பா பொன்னொளிவு போலே மைந்தா
பூரணமாய் நின்றிலங்கும் பொருளைப் பாரு
கண்ணப்பா தானறிந்து பொருளைப் பார்க்கக்
கர்மவினை தீருமடா கண்ணைப் பாரே. 680

ஆசை

பாரப்பா கண்ணறிந்து பார்க்கும் போது
பாழான மாய்கைவெகு தோற்ற மாச்சு
நேரப்பா நின்றதொரு தோற்ற மெல்லாம்
நிமைமூடி விழிக்குமுன்னே மாய மாச்சு
சாரப்பா மாய்கைவெளி கண்ணின் சூட்சம்
சவிப்பறிந்து பார்க்கையிலே தான்பொய் யாச்சு
பேரப்பா கொண்டதெல்லாம் அசத்தே யாச்சு
பேறான அசத்தெல்லாம் ஆசை தானே. 681

ஆசையற்றால் மோட்சமில்லை மைந்தா கேளு
ஆதியென்ற நாதமதால் மைந்தா வாழ்க்கை
ஆசையுற்ற வாழ்க்கையிலே யிருந்து கொண்டு
அடர்ந்தெழுந்த நாதவித்தை அசரா மற்றான்
ஆசையுட நாதவிந்தை யரிந்து கொண்டால்
அருமையுள்ள சுரூபமணி யங்க மாக
ஆசையுடன் அஷ்டாங்க யோகம் பார்த்து
அங்ஙனமே நன்மைதீமை யறிந்து கூடே. 682

அறிந்துபார் நன்மைதின்மை பார்க்கப் பார்க்க
அரகரா கண்டதெல்லாந் தீமை யாகும்
விரிந்தமன மொன்றாதி நின்ற மார்க்கம்
வேதாந்தப் புலத்தியனே யதுதான் நன்மை
வருந்திநன்மை தின்மையிலே மனது வைத்து
மகஸ்த்தான சின்மயமாய் மனக்கண் கூர்ந்தால்
தெரிந்துகொள்ளும் செகத்தினுட மாய மெல்லாம்
தெளிந்ததுவும் சித்தினுட சத்தந் தானே. 683

தானென்ற சத்தமது யீசான முகமாம்
தாங்கியதோர் பரிசமது தற்புருஷ மாகும்
தேனென்ற ரூபமது யகோரமய மாகும்
சிறந்ததொரு ரசமதுதான் வாம மாகும்
பானென்ற கெந்தமது சொல்லக் கேளு
பதிவான சத்தியோ சாத மாகும்
ஏனென்று விளங்கியதோர் நயன மூன்றும்
எரிக்கதிர்சந் திரனாக இயம்பு வேதம். 684

வேதகட முருப்பருத்தல் சிருட்டி யாகும்
விளங்கவகைத் தான்வளர்த்தல் திதிய தாகும்
போதமுடன் பொசிப்பதுசங் கார மாகும்
புத்தியுடன் தானடத்தல் திரோப மாகும்
பாதமுடன் நூல்முதலா யறிவு சேரப்
பத்தியதோ ரார்க்கமுமது அனுக்ரக மாகும்
நீதமுடன் தானவனா யிருந்து கொண்டு
நிலையறிந்து நாமுரைத்த முகத்தைப் பாரே. 685

முகமதுதான் ஐந்துடனே நயன மூன்று
முத்திபெறச் சொன்னதைநீ சித்தம் வைத்து
அகமதிலே தெளிந்துகொண்டு ஆதி யாகும்
ஆதியந்தப் பூரணமா யருளை நோக்கு
சுகமதிலே யருளறிந்து நோக்கி னாக்கால்
சுத்தநித்தப் படிகமதாய் ரூபந் தோணும்
செகமதிலே நின்றுசெக சாலம் பார்த்துத்
தெளிவான இருதயத்தில் சேரும் பாரே. 686

வசியம்

பாரப்பா இருதயமாங் கமல மீதில்
பதிவாக இருந்துதவஞ் செய்த பேரை
நேரப்பா தானறிந்து சொல்லக் கேளு
நிலையறிந்து நாரதருந் துருவா சாரி
காரப்பா வியாக்கிறமா வசிட்டர் தானுங்
கலைகோட்டு மாரிஷியுங் காசிபரும் மைந்தா
கூறப்பா கெவுதமரும் விசுவா மித்திரரும்
கூர்மையுடன் வாசியிலே குவிந்தார் பாரே. 687

பாரப்பா ரிஷிமுனிவ ரெட்டுப் பேரும்
பதிவான சிவயோகம் பதவி சேர
நேரப்பா தானிருந்து யாகாதி கிருத்து
நேர்மையுடன் செய்துதவ நிலையில் நின்றார்
மேரப்பா மேருகிரி தீபம் போலே
வெகுகோடி காலவரை தவமே செய்து
காரப்பா வென்றுசடஞ் சட்டை போக்கிக்
கருணையுடன் வெளியொளியாய்க் கலந்தார் காணே. 688

காணவே வெளியொளியிற் கலந்து நின்றார்
கருணையுடன் கெந்துருவ வாசி யானார்
பூணவே கெந்துருவ வாசி யாகிப்
பூரணமாய் நிறைந்தபரி பூரணமு மானார்
தோணவே நின்றபரி பூரணமு மாகித்
துலங்கிநின்ற கயிலாசப் பொதிகைதனில் வந்து
பூணவே குருமுனியென் றருளி னார்கள்
பூரணமா உபசாரம் புகழ்ந்தோம் பாரே. 689

பாராளும் குருமுனியே அண்ட ரண்டப்
பதங்ளெல்லாங் கண்டுதவம் பணிந்து கொண்டு
நேரான தன்மயத்தைக் கண்டு கொண்டோம்
நிசமான தன்மயங்கொண் டேறு தற்குத்
தூரான சின்மயத்தைக் காண வேண்டிச்
சுருதிமுடிப் பொதிகைவலஞ் சுத்தி வந்தோம்
மேரான சின்மயமாம் மவுன சூட்சம்
விள்ளுவது அருமைவெகு உருமை காணே. 690

காணவே உருமையுடன் காணு தற்குக்
கரைபுரளா மவுனநிலைக் காட்சி யென்ன?
தோணவே சொல்லுகிற சுருதி கேளு
சுருதிமுடி வானதொரு நாத விஞ்சை
பூணவே மதுரரச விஞ்சை தன்னைப்
பூரணமாய்க் கருவறிந்து பூசித் தாக்கால்
ஊணவே சின்மயத்தின் உறுதி நின்று
உத்தமனே தன்மயங்கொண் டேறும் பாரே. 691

பாரப்பா தன்மயங் கொண் டேறும் போது
பருதிமதி சுடருடனே பஞ்சகர்த்தா
நேரப்பா அண்டமொடு சராச ரங்கள்
நேர்ந்துகொண்டமந்திரங்கள் சிவத வங்கள்
வீரப்பா கொண்டதொரு நன்மை தின்மை
வெகுமோக மாகிநின்ற மாய்கை எல்லாஞ்
சேரப்பா சகலமுமே விண்மயமாய் நின்று
திவ்யரச பூரணமாய்ச் சின்மயமாம் பாரே. 692

சின்மயமாய் நின்றபொருள் கண்ட போதே
தீர்க்கமுடன் பொதிகையிற்சின் மயமா னார்கள்
தன்மயமும் விண்மயமும் சின்மயமே யாச்சு
சதாபோத பொதிகையுஞ்சின் மயமே யாச்சு
உன்மயமாய் நின்றதெல்லாம் கண்மயமே யாகும்
உறுதியுள்ள கண்மயத்தைத் தன்மயமாய்க் கண்டு
விண்மயமே சாட்சியதாய்ச் சின்மயமா மென்று
வேதகுரு உபதேசம் போதமயந் தானே. 693

தானான போதமய மறியா மற்றான்
தரணிதனில் யோகியென்று பேரெ டுத்து
வீணான மதுமாங்கி ஷங்கள் கொண்டு
மெய்மறந்து வாய்புலம்பி விசையுங் கெட்டு
ஊணான இல்வாழ்க்கை மரபுங் கெட்டு
உழன்றுமதி கெட்டுஅறி வழிந்து போனார்
தேனான அமுர்தரச பானங் கொண்டு
தீர்க்கமுட னிகபரத்தில் தெளிந்து நில்லே. 694

இல்லறம் மானங்கொள்ள

தெளிந்துரச காயாதி கற்பங் கொண்டு
தீர்க்கமுடன் இல்லறத்தோ டிருந்து வாழ்ந்து
தெளிந்துமன தறிவாலே சிவயோகத்தில்
தீர்க்கமுடன் நின்றுபரா பரத்தில் ஏகித்
தெளிந்துசிதம் பரநடனம் மூலம் கண்டு
தீர்க்கமுடன் அண்டபத முடிவி லேகித்
தெளிந்துமிகத் தன்மயமாய் விண்ணை நோக்கிச்
சிவாயகுரு சின்மயமாய்த் தன்னைப் பாரே. 695

பாரப்பா பதியறிந்து பார்க்கும் போது
பஞ்சசபை யானதொரு மூலங் கண்டேன்
நேரப்பா அம்மூல நடுவில் நின்று
நிலையறிந்து சகலகலை வாசி யேறிக்
காரப்பா கண்டமதி லங்கென் றூணிக்
காலான ரவிமதியைச் சுளினைக் கேத்திச்
சாரப்பா சார்பறிந்து மவுனங் கொண்டால்
சதானந்த பூரணசின் மயமாங் காணே. 696

காணப்பா சின்மயத்தில் நிற்கும் போது
கதிரான வாசியது கால்ரெண் டூணிப்
பூணப்பா ரேசகபூ ரகமுஞ் செய்து
பூரணமாய்க் கும்பகத்தில் நின்றா யானால்
தோணப்பா திவ்யரச வமுர்த மூறும்
சிவசிவா அந்தமுர்தந் தினமுங் கொண்டால்
வீணப்பா என்றதொரு தேகந் தானும்
வேதாந்த அமுர்தரச தேக மாச்சே. 697

ஆச்சப்பா தேகமென்ற சிவால யத்தை
அந்திசந்தி சுத்திபண்ணி யதிலி ருந்து
மூச்சப்பா தானிருத்தி மவுனங் கொண்டு
மூலமுத லாதார முடிவி லேகிப்
பாச்சப்பா வாசிசரந் தொடுத்துப் பாரு
பருதியது தானெழுந்து மதியைப் பாயும்
காச்சப்பா கதிர்மதியும் ஒன்றாய்க் கூட்டிக்
கமலமென்ற சுளினையிலே கலந்து போச்சே. 698

கலந்துநின்ற முச்சுடரே முப்பா ழாச்சு
கமலமென்ற முப்பாழில் அப்பால் சென்றால்
மலர்ந்துநின்ற மகாரமடா மவுன பீடம்
மகத்தான பஞ்சகர்த்தா வணங்கும் பீடம்
வளர்ந்துஅண்ட பிண்டமதாய் நின்ற பீடம்
மகத்தான சோதிமய மான பீடம்
உளந்தெளிந்து இருதயமாம் பீடந் தன்னில்
உன்னிமிகத் தானிருந்து தன்னைப் பாரே. 699

பாரப்பா இருதயமாம் கமலத் தேகிப்
பதியறிந்து மவுனமதாய்ப் பார்க்கும் போது
நேரப்பா நின்றதொரு நவக் கிரகம்
நிசமான அனுக்கிரகம் நாத விந்து
சாரப்பா அண்டமொடு புவனம் போகஞ்
சதாசிவனும் மயேஸ்பரனும் ருத்திர மூர்த்தி
காரப்பா அயன்மாலுங் கதிர் மதியுங்
கண்ணறிந்து காணவெகு மாய மாச்சே. 700

மாயமென்ற மாயமெல்லாங் கண்ணின் சூட்சம்
மகத்தான சூட்சமடா மனக்கண் பார்வை
தாயகமாய் நீயிருந்து மனக்கண் கூர்ந்து
தன்னைமிகத் தானறிந்து தானே நின்றால்
நேயமுடன் காயமது காரணமாய் நின்று
நினைத்தபடி சித்துவிளை யாடும் பாரு
ஞாயமுடன் நடுவிருந்து நாட்டம் பாரு
ஞானமென்ற அக்கினிதான் வசமாம் பாரே. 701

பாரப்பா அக்கினியே போத மாகும்
பதிவான போதமதே ஞான மாகும்
நேரப்பா ஞானமதே தீப மாகும்
நிசமான தீபமடா மனக்கண் பார்வை
காரப்பா கருணைவிழி மலர்க்கண் தன்னைக்
காலறிந்து மேலேறிக் கடைக்கண் கொண்டு
தேரப்பா ஆதாரம் முழுதும் பார்த்துத்
தெளிந்துமன தறிவாலே யாதி பாரே. 702

ஆதியென்ற இருதயமே கமல பீடம்
அண்டசரா சரங்களெல்லாம் அடங்கும் பீடம்
நீதியுடன் ரவிமதிசென் றிருக்கும் பீடம்
நேர்மையுடன் சிவதவத்துக் குகந்த பீடம்
ஓதியதோர் மந்திரகலைக் கியான பீடம்
உறுதியுள்ள ரிஷிமுனிவ ருகந்த பீடம்
சோதிமணி தோற்றொடுக்க மான பீடம்
சுருதிவளர் பீடமதைச் சூழ்ந்து பாரே. 703

சூழ்ந்துபார் இருதயமே சொர்க்க வீடு
சோதிமணி நாகமது துலங்கும் வீட்டில்
தாழ்ந்துகொண்டு தன்னறிவே தன்னைப் பார்த்தால்
தானிருந்து பூரணமாய்த் தன்னைப் பார்த்தால்
வீழ்ந்துசெடம் போகாது வேதந் தூக்கும்
வேதமென்ற சின்மயத்தில் விரும்பி நின்று
வாழ்ந்திருக்கச் சொன்னடா மவுன வீட்டில்
மனங்குவிந்து சிலம்பொலியை மகிழ்ந்து காணே. 704

காணடா மனங்குவிந்து கமல வீட்டைக்
கண்டுமனங் கொண்டுநிதங் காத்தா யானால்
வீணடா போகாது வேதாந் தத்தீ
மெய்நிறைந்த போதமடா நாதாந் தத்தீ
பேணடா தீயறிந்து பிலமா யூது
பிசகாது வாசிசிவம் வசிய மாச்சு
பூணடா வாசிசரம் பூண்டு கொண்டால்
பொற்கமலச் சோதிவெகு புனித மாமே. 705

ஆமப்பா புனிதமுடன் இருந்து கொண்டு
ஆதிமுதல் அந்தம்வரை யறிய வேணும்
தாமப்பா தன்மயத்தை யறிய வேணும்
சதாபோத யோகமதில் சார வேணும்
காமப்பால் கானல்பால் காண வேணும்
கண்டுநிதங் கொண்டுகரை யேற வேணும்
நாமப்பா வென்றசடம் பேணா னாகில்
நரசென்மம் அல்லவடா நாய்தான் பாரே. 706

வெடியுப்பு செயநீர்

பாரப்பா பலநினைவை நிறுத்தி மைந்தா
பக்தியுடன் ஒருமுகமாய்ப் பலன்கைக் கொண்டால்
நேரப்பா தன்மயமே சாட்சி யாகும்
நிசமான வின்மயமே சோதி யாகும்
காரப்பா வின்மயத்தில் மனக்கண் வைத்துக்
கருணைவளர் சின்மயமாய்க் கிடாட்சம் பெற்றால்
ஆரப்பா உனக்குநிகராரு மில்லை
அப்பனே செகசால வித்தை கேளே. 707

கேளப்பா வித்தையிலே செயநீர் வித்தை
கிருபையுடன் சொல்லுகிறோம் நன்றாய்க் கேளு
காலப்பா வெடியுப்பு பலமும் பத்துக்
கருவான புளியெட்டுச் சாரம் ரெண்டு
வாளப்பா துருசுரெண்டு சூடன் ரெண்டு
வகையுடனே வெண்காரம் ரெண்டுங் கூட்டிச்
சூளப்பா கல்வமதி லொன்றாய்க் கூட்டிச்
சுத்தமுடன் அமுரியினால் அரைத்துக் கூட்டே. 708

கூட்டிநன்றா யரைத்துருட்டி யெடுத்துக் கொண்டு
கூர்மையுடன் பீங்கான்றன் தாழிக் குள்ளே
மாட்டிநன்றாய் மதிதனிலே வைத்துப் பார்க்க
மகத்தான வாருதிபோற் சிலந்தா னூறும்
தாட்டிகமா யச்சிலத்தை யொன்றில் வாங்கிச்
சடிகையுடன் வீரமிட்டுத் தானே பார்த்தால்
நாட்டியதோர் செயநீரோ யென்ன சொல்வேன்
நாதாந்த நாதாந் தென்றும் பேரே. 709

நாகக்கட்டு

பேரான நாதநீர்ப் பெருமை மெத்தப்
பேசுறே னதினுடைய பிலத்தைக் கேளு
வீறான பாசாணங் கார சாரம்
விளங்கியதோர் உபரசங்கள் இதிலே கட்டும்
நேராக நீயிருந்து செயநீர் பண்ணி
நினைத்தபடி நின்றுவிளை யாடு மைந்தா
கூறான செயநீரை ஒன்றில் வாங்கிக்
கூர்மையுடன் நாகமதை உருக்கிச் சாயே. 710

உருக்கிமிக நாலஞ்சு தரமே சாய்த்தால்
உண்மையுள்ள நாகமது கட்டிப் போகும்
பெருக்கமுடன் கட்டினதோர் நாகந் தன்னிற்
பெருமையுடன் எடைசரியாய்த் தங்கஞ் சேர்த்துத்
திருக்கரவே தானுருக்கி யெடுத்து மைந்தா
செம்புவெள்ளி எடைசரியாய்ப் பத்துக் கொன்று
இருக்கமுள்ள நாகமதைக் கொடுத்துப் பார்த்தால்
ஈரெட்டு வயதுடைய தங்கந் தானே. 711

தானென்ற தங்கரதி மாது தன்னைத்
தன்மையுடன் தானறிந்து பூசை செய்தால்
தேனென்ற அமுர்தரச பானம் ஈவாள்
திருவான வாசியது திறமாய் நிற்கும்
வானென்ற கேசரியாள் நிர்த்தஞ் செய்வாள்
வரிசையுட அஷ்டசித்தும் வசிய மாகும்
ஊனென்ற தேகமதின் உறுதி கொண்டு
உண்மையுடன் நடுவனையையுகந்து பாரே. 712

பார்ப்பதற்குப் பொருள்சொல்ல நன்றாய்க் கேளு
பராபரையின் திரிகோணம் பதிவாய்க் கீறிச்
சேர்ப்பதற்கு நடுமய்யம் அதனுள் வட்டம்
சிறப்பாக இட்டுறீங் காரம் போட்டு
ஆர்ப்பனமென் றேயிதனை மனதில் வைத்து
அப்பனே மேல்வாசல் திறக்க வேண்டி
நாற்பதுதான் மானதமாய்ப் பூசை பண்ணி
நாடிநின்ற வாசலது திறக்குந் தானே. 713

திறக்கவே அகாரத்தை மதியிற் சேரு
சிவசிவா உகாரத்தை ரவியிற் சேரு
நிறக்கவே மகாரத்தை மேலே போடு
நின்றிலங்குந் தீபவொளி நேர்மை யாகச்
சிறக்கவே யிதைநாடு யேக தீட்சை
திருநயன சுளினைவட்டம் செந்தீக் கண்ணு
துறக்கவே யிதைத்தேடு மவுன வீடு
சுத்தமுடன் தான்திறந்து சோதி யாமே. 714

சோதியிரு கண்மணியாய்த் துலங்கி நின்ற
சுந்தரஞ்சேர் புலத்தியனே சொல்லக் கேளு
நீதியென்ற முக்கோண சூட்சந் தன்னை
நிலையறியா மூடருக்கு ஈந்தா யானால்
ஆதியென்ற அம்பரத்தில் செந்தீப் பத்தும்
அண்டசரா சரங்களெல்லா மதிலே வாழும்
வீதியிரு மூன்றுமனை யெல்லாம் வீட்டில்
மேலிருந்து மவுனரச பூசை செய்யே. 715

செய்யவே திரிகோண பூசை மார்க்கம்
தீர்க்கமுடன் சொன்னதைநீ தெளிந்து பார்த்து
அய்யனே நவகோண பூசை தன்னை
அங்கமுடன் சொல்லுகிறேன் தங்கத் தாலே
மெய்யனே நவகோணத் தகடு செய்து
வேதாந்த நால்வாசல் கோட்டை யிட்டுத்
துய்யனே கோட்டைநடு விந்து போட்டுச்
சோதியென்ற விந்துநடுச் சொல்லக் கேளே. 71

கேளப்பா விந்துவென்ற வளையத் துள்ளே
கெனிதமுடன் நவகோணம் நன்றாய்ச் செய்து
வாளப்பா நவகோணம் நடுமுக் கோணம்
மையமென்ற மத்தியிலே ஓங்காரஞ் சாத்தி
ஆளப்பா ஓங்கார மதனுள் மைந்தா
அவையடக்க மானரீங் காரஞ் சாத்தி
நாளப்பா அறிந்துநவ கோண பூசை
நன்மையுடன் செய்கின்ற நாட்டங் கேளே. 717

மானத பூசை

நாட்டமுடன் மானதமாம் பூசை மார்க்கம்
நன்மையுடன் சொல்லுகிறேன் உண்மை யாகத்
தேட்டமென்ற தேகமடா சதிரகிரி யாகத்
தீர்க்கமுடன் சிரசதுதான் பொதிகை யாக
வாட்டமில்லா அக்கினிதான் மறையோ னாக
மகத்தான வாசியகத் தீச ராக
ஆட்டமென்ற ஆதார பீட மாக
அருளான முச்சுடரே மலரென் றெண்ணே. 718

எண்ணப்பா அறிவல்லோ தூப மாக
ஏகாந்த மனக்கண்ணே தீப மாக
விண்ணப்பா நிறைந்தசதா போத மாக
வேதாந்த பூரணமே சாட்சி யாக
நண்ணப்பா சகலவுப சார மாக
நாட்டமுடன் மானதமாய்ப் பூசை செய்து
கண்ணப்பா மனக்கண்ணால் தன்னைப் பார்த்துக்
கற்பூர தீபமதைக் கையில் வாங்கே. 719

வாங்கியந்தத் தீபமதை மைந்தா நீயும்
மனதுபரி பூரணமாய் வலமாய்ச் சுத்தித்
தாங்கியதைக் கற்பூர விபூதி வாங்கிச்
சந்தோச மாகவேநீ யணிந்து கொண்டால்
பூங்கமல மாதுதன் வசமாய் நின்று
போதமுடன் ஞானபதம் புனித மாகப்
பாங்குபெறத் தன்வசமாய்க் காட்டி வைப்பாள்
பத்தியுடன் சுத்தமதாய்ப் பூசை செய்யே. 720

செய்யப்பா சிவபூசை சக்தி பூசை
செயமான வாலையுட பூசை செய்து
மெய்யப்பா தவறாமற் பூசை பண்ணி
வேதாந்தப் பூரணத்தில் விரும்பி நின்று
மையப்பா மய்யமென்ற மவுன வீட்டில்
மார்க்கமுடன் தானிருந்து வாசி பூட்டிப்
பையப்பா ரேசக பூரகமுஞ் செய்து
பக்திகொண்டு தன்னகத்தைப் பதிவாய்க் காரே. 721

காரப்பா தன்னகத்தைக் கார்க்க வேணும்
காயாதி கற்பமதைக் கொள்ள வேணும்
நேரப்பா நிலையறிந்து கொள்ள வேணும்
நிலையறிந்து சிவயோகத் திருக்க வேணும்
தேரப்பா சிவயோகத் திருந்து கொண்டு
செகசால மாய்கையெல்லாந் தெளிந்து பார்த்து
மேரப்பா மேருகிரி வாச மாகி
மெய்ஞான சித்துவிளை யாடக் கேளே. 722

செம்பு சுத்தி

கேளப்பா சித்துவிளை யாடு தற்குக்
கிருபையுடன் செம்புசுத்தி சொல்லக் கேளு
வாளப்பா வெடியுப்புத் துருசுங் கூட்டி
மகத்தான கருவங்க மிடையே சேர்த்துச்
சூளப்பா கமலரசம் விட்டு ஆட்டிச்
சுகமாகக் கடலைமணி போலே செய்து
ஆளப்பா வெள்ளிதனை உருக்கிக் கொண்டு
அந்திடைக்கு வங்கமணி யதனிற் றாக்கே. 723

தாக்கிநன்றாய் உருக்கியதை எடுத்துக் கொண்டு
தன்மையுடன் செம்புதனில் நாலுக் கொன்று
தூக்கியே தானுருக்கி எடுத்துக் கொண்டு
துப்புரவாய் ஓட்டில்வைத்து ஊதிப் போட்டால்
நோக்கியதோர் தீபவொளி போலே மைந்தா
நுண்மையுள்ள செம்புபிர காச மாகும்
பாக்கியமே படைத்தவர்க்கு எல்லாஞ் சித்தி
பத்தியுடன் இன்னமொரு பாகங் கேளே. 724

பாகமென்ன சத்தியுடன் துருசு லிங்கம்
பதிவாகத் தானரைத்து மணிபோல் செய்து
ஆகமுடன் செம்புருக்கி இடையே தாக்கி
அப்போதே ஓட்டில்வைத்து ஊதிப் போட்டால்
நாகமுள்ள வாடையது ஓடிப் போகும்
நன்மையுள்ள செம்புநல்ல சுத்தி யாகும்
ஏகமுடன் தானிருந்து இன்பம் பார்த்தால்
எட்டுரெண்டும் சுத்தமடா பத்திப் பாரே! 725

பத்தியுள்ள சித்தண்டத் தோடு சேர்த்துப்
பாறையென்ற உப்புவெடி உப்புங் கூட்டிச்
சுத்தியுள்ள சீனமுடன் துருசு பூரம்
சுகமான சத்தியுட னேழுங் கூட்டிச்
சித்தமுள்ள செயநீரால் அரைத்து ருட்டி
செம்மையுடன் புடம்போடச் சுண்ண மாகும்
பத்தமுடன் சுண்ணமதைப் பதனம் பண்ணிப்
பாலகனே இன்னமொரு கருவைக் கேளே! 726

கருவான சுண்ணமதில் வாய்நீர் விட்டுக்
கையாலே மத்தித்துக் காசில் பூசி
உருவான கருவென்ற சாம்ப லுக்குள்
ஒடுக்கிவைத்துப் புடம்போட ஊறல் போகும்
குருவான பதியறிந்து கருவாய்ச் செய்தால்
குணமாகச் சகலசித்தும் கைக்குள் ளாகும்
திருவான லட்சுமிதன் செயல்தன் னாலே
தீர்க்கமுடன் இன்னமொரு கருவைக் காணே! 727

காணவே இன்னமொரு கருவைக் கேளு
கண்டருடன் அடிபூரம் கருவாய்க் கூட்டிப்
பேணவே தான்பொடித்து வைத்துக் கொண்டு
பெருமையுடன் செம்புருக்கி மருந்தை ஈந்து
பூணவே தானெடுத்து மைந்தா நீயும்
புத்தியுடன் புத்தோட்டில் ஊதிப் பாரு
தோணவே களிம்பற்றுச் சோதி யாகும்
சுத்தியுள்ள சோதியடா தங்க மாமே. 728

தங்கமென்ற அங்கமதைச் செம்பாய்ச் செய்யச்
சாதகத்தைச் சொல்லுகிறேன் தங்கந் தன்னை
அங்கமுடன் குகையில்வைத் துருக்கி மைந்தா
அதுக்குநிகர் அரிதாரம் துருசி கெந்திச்
சங்கையுடன் மிருதார சிங்கி கூட்டித்
தான்பொடித்துத் தங்கமதில் குடுத்துப் பாரு
மங்கலமாய் நின்றதங்கம் எடுத்துப் பார்த்தால்
மாசற்ற ரவியினுட மார்க்க மாமே. 729

மார்க்கமுள்ள வெள்ளியிலே பத்துக் கொன்று
மாசற்ற தங்கரவி ஈந்தா யாகில்
ஏற்கையுள்ள தங்கவய தென்ன சொல்வேன்?
ஈரெட்டு வயசுடைய தங்கத் தாயைச்
சேர்க்கையுடன் அவள்பதமே கெதியென் றெண்ணிச்
சிவசிவா சிவயோகத் திறத்தில் நில்லு
தீர்க்கமுடன் சிவயோகத் திறத்தில் நின்றால்
சிவசிவா தேகம்வச்ர காய மாமே. 730

ஆமப்பா தேகவச்சிர காய மானால்
அஷ்டாங்க யோகமது திட்ட மாகும்
காமப்பால் கானல்பால் கருணை யாகும்
கருணையுடன் பூரணமுங் காண லாகும்
தாமப்பா பூரணத்தைத் தானே கண்டு
சதாயோத மவுனரச பானங் கொண்டு
ஓமப்பா என்றபிரண வத்தை நாட்டி
உண்மையுடன் தானிருந்த உச்சம் பாரே. 731

உச்சமென்ற உச்சியடி வார மான
உண்மை யென்ற புருவநடு அடிவா ரத்தில்
பச்சமுடன் தானிருந்து வாசி யேறிப்
பருதிமதி கலையதனைப் பருவ மாக
அச்சமற அக்கினியிற் றாக்கிப் பார்க்க
ஆனந்த மானசிவ சோதி சூட்சம்
மச்சுவென்ற மாளிகையி னுச்சி மீதில்
மகத்தான சோதிசெக சோதி யாமே. 732

சோதியென்ற சோதிசிவ சூட்சந் தானும்
சுயஞ்சோதி யிருதயமாங் கமல மீதில்
நீதியுடன் தானிருந்து கலையைப் பற்றி
நிலையான முச்சுடரு மொன்றாய்க் கண்டு
ஓதியதோர் பிரணவத்தின் சூட்சத் தாலே
உண்மையென்ற ஆதியந்தந் தன்னுள் பார்க்க
ஆதியென்ற சின்மயமா யங்கே தோணும்
அந்திடமே சொந்தமென அறிந்து நில்லே. 733

அறிந்துகொண்டு நிலையறிந்து நின்றால் மைந்தா
ஆதார சொருபநிலை யங்கே தோணும்
விரிந்துநின்ற ஆகமபு ராண சாஸ்திரம்
வேதாந்த சித்தாந்த மனுவிக் கியானம்
தெரிந்துகொண்டு தெளிவதனாற் பார்க்கும் போது
சிவசிவா சிவமயமாய்த் தெளிய லாச்சே. 734

ஆச்சப்பா தெளிவான சோதி மூலம்
அருளான பொருள்பெருகு மாதி மூலம்
மூச்சப்பா தானடங்கும் மவுன மூலம்
முத்தியுள்ள மூலமடா தங்க மூலம்
நீச்சப்பா நிலையாத தங்க மூலம்
நிசமான மூலமடா தன்னுள் பாரு
பேச்சப்பா பேசாத நாத விந்து
பெருமையுள்ள சரக்குவகை பெலத்தைக் கேளே. 735

பிலமான லோகமடா கீழ்லோ கத்திற்
பிறந்திருந்த சத்துவகை யெல்லாங் கூட்டித்
தலமான அத்தலத்தில் மாண்டு போன
சங்கைதனை யாரறிவார் சாற்றக் கேளு
குலமான குலமறிந்து கூட்டிப் பாரு
கூட்டுவகை சொல்லுகிறேன் குருவ தாக
நிலமான ராசியரைப் பொடியும் நேரா
நிலையறிந்து குகைதனிலே யுருகும் பாரே. 736

தொந்தக் களங்கு செந்தூரம்

பாரப்பா சத்திசிவம் ஒன்றாய்க் கூட்டிப்
பதிவாக மனங்கனிந்து உருகும் போது
நேரப்பா தங்கமது வெள்ளி சேரு
நிலமாக அதுக்குநிகர் நாகஞ் சேரு
காரப்பா மனங்கனிய லிங்கஞ் சேரு
கசடான களிம்பகல வீரஞ் சேரு
பேரப்பா பெற்றதொரு சாரஞ் சேரு
பிசகாமற் சேர்த்துஒரு மணியாய் வாங்கே. 737

வாங்கியந்த மணியதனை மைந்தா கேளு
மகத்தான வெள்ளிசெம்பில் நூற்றுக் கொன்று
தாங்கியே தான்குடுத்து உருக்கிப் பாரு
தாயான தங்கமடா அதிக காந்தி
பூங்கமலக் காந்திதனை மைந்தா நீயும்
பூரணமாய் அனுதினமும் பூசை பண்ணிப்
பாங்குபெறச் சிவயோகத் திருந்து கொண்டால்
பரஞான தேசியென்ற யோகி யாமே. 738

ஆமப்பா யோகமதுக் குறுதி யான
அருளான களங்குதனைக் கல்வத் திட்டு
நாமப்பா சொல்லுகிறோம் நன்றாய்க் கேளு
நன்மையுள்ள களங்குநிகர் தாரங் கெந்தி
ஓமப்பா காந்தமுடன் ஒன்றாய்ச் சேர்த்து
உறுதியுடன் தான்பொடித்துக் குப்பிக் கேத்தித்
தாமப்பா தன்னறிவால் மண்சீலை செய்து
தாளியரை சாம்பலிட்டுக் குப்பி வையே. 739

வைத்தகுப்பி மூக்களவு சாம்ப லிட்டு
மகத்தான சற்குருவை மனதிற் கொண்டு
மெய்த்திட்ட மாகவேதா னடுப்பி லேத்தி
மேன்மைபெற அனல்மூட்டிப் பதத்தைப் பாரு
கைத்திட்ட மாகவேதான் சலாகை போட்டுக்
கதிர்முனையிற் சிவந்தவர்ணங் கண்டால் மைந்தா
மைத்திட்ட மானபதஞ் சரிதா னென்று
மார்க்கமுடன் தானிறக்கி யாற வையே. 740

ஆறவே வைத்ததொரு பாண்டத் துள்ளே
அருள்பெருகும் குப்பிதனை யெடுத்துப் பாரு
தேறவே வைத்த குப்பிக் குள்ளே மைந்தா
சிவந்திருந்த செந்தூர மென்ன சொல்வேன்?
நேரவே நவலோகந் தங்க மாகும்
நீமகனே பணவிடைதான் கொண்டா யானால்
கூறவே நாவேது தேக காந்தி
கோடான கோடிரவி போலா மென்னே. 741

எந்நேரமுங் குருவைத் தியானம் பண்ணி
ஏகாந்த மானரச வாதம் பார்க்கக்
கண்ணாரக் கண்டபடி சொல்லக் கேளு
கருவான அரப்பொடியைக் கல்வத் திட்டு
விண்ணான கமலரசந் தன்னா லாட்டி
மேலான நாகரசம் வங்கஞ் சேர்த்துப்
பொன்னான தாரமுடன் கெந்தி லிங்கம்
பொருளான தங்கமுடன் வீரஞ் சேரே. 742

அயச்செந்தூரம்

சேரப்பா நவமூல மொன்றா யாட்டித்
தீர்க்கமுடன் வழித்துருட்டி வட்டுப் பண்ணி
நீரப்பா தான்சுவற ரவியிற் போட்டு
நீமகனே காய்ந்தபின்பு ஓட்டில் வைத்துச்
சாரப்பா மண்சீலை நன்றாய்ச் செய்து
சற்குருவைத் தான்பணிந்து புடத்தைப் போடு
தேரப்பா புடமாறி யெடுத்துப் பாரு
செந்தூர மானதொரு கட்டி யாமே. 743

ஆமப்பா செந்தூரக் கட்டி தன்னை
அவையடக்க மாகவேநீ பதனம் பண்ணி
வாமப்பா பூசையிலே வைத்துப் போத்தி
மகத்தான வெள்ளிசெம்பு தகட்டி லேதான்
தாமப்பால் வாய்நீரி லரைத்துப் பூசித்
தன்னிலையைத் தானறிந்து புடத்தைப் போட்டால்
போமப்பா வெள்ளிசெம்பு என்ற பேச்சுப்
புதுமையென்ற தங்கமென்ற பேரே யாச்சு. 744

குடவன்செம்பு

ஆச்சப்பா இன்னமொரு சித்துக் கேளு
ஆதியென்ற வெடியுப்பு துருசு கூடன்
மூச்சப்பா தானிருத்தும் நவச்சா ரந்தான்
முத்தியுள் காரமுடன் அஞ்சுங் கூட்டிப்
பாச்சப்பா அதுக்குநிகர் சக்தி சேர்த்துப்
பதிவாகச் செய்நீரா லரைத்து ருட்டி
வீச்சப்பா கொண்டதொரு குடவன் தன்னில்
மேலாகத் தான்பூசிப் புடத்தைப் போடே. 745

போடப்பா புடம்வலுவாய்ப் போட்டெ டுத்தால்
பொன்னான குடவனது செம்பாய்ப் போகும்
ஆடப்பா செம்புதனை யெடுத்து மைந்தா
அருளான வெள்ளிதனில் நாலுக் கொன்று
நாடப்பா நாடியதை உருக்கிப் பாரு
நயமான பொன்னொளிவை என்ன சொல்வேன்?
தேடப்பா இவ்வேதை நிமிச வேதை
தெளிவான மனத்தெளிவா யிருந்து பாரே. 746

இருந்துகொண்டு மனத்தெளிவாய் நன்றாய்ப் பாரு
என்மகனே கதிர்மதியை ஒன்றாய்ச் சேரு
வருந்திமிக கதிரதனை ஒன்றாய்ச் சேர்த்து
மகத்தான அக்கினியில் வாச மாகி
அருந்தவமா யிருந்துகுளிர் காய்ந்து கொண்டால்
அசடான கல்மிசங்க ளகன்று போகும்
விரிந்தமனம் தனைநிறுத்தி வேதம் பார்த்து
மேன்மைபெறச் சிவதவங்கள் செய்து பாரே. 747

ஏழுவாரஞ் செபிக்க மணிவிபரம்

பாராய்நீ புலத்தியமா ரிஷியே அய்யா
பதிவாகச் சிவதவங்கள் செய்வ தற்கு
நேராக அந்தந்த வாரந் தன்னில்
நிசமான மணிஎடுத்துச் சிவமே செய்யப்
பேறாகச் சொல்லுகிறேன் ஆதி வாரம்
பிலமான ருத்திராட்ச மெத்த நன்று
சீரான வாரமடா சோம வாரம்
சிவசிவா பளிங்குமணி செயமாங் காணே. 748

காணவே மங்களமா வாரந் தன்னில்
கருணைக்கு தாமரையின் மணிதான் மைந்தா
பூணவே புதன்வாரந் தன்னி லேதான்
பூசிக்கத் துளசிமணி புகழோ மெத்தப்
பேணவே குருவாரம் தன்னிற் கேளு
பிலமான சங்குமணி பெருமை மெத்தத்
தோணவே சுக்கிரன்தன் வாரந் தன்னில்
சுகசூடா மணியதுதான் சுத்த மாமே. 749

சுத்தமுள்ள சனிவாரந் தன்னில் மைந்தா
சோதிரச மணியதுதான் மெத்த நன்று
சித்தமுடன் தானிருந்து வாரந் தோறும்
செப்பியசொல் தவறாமல் சித்தி யாக
முத்திபெறச் சொல்லுகிறேன் மைந்தா கேளு
முதலான மனோன்மணியை மவுன மாக
நித்தியமும் நிலையறிந்து சுத்த மாக
நேமமுடன் மனோன்மணியால் சிவமே செய்யே. 750

செய்யப்பா சிவமதுதான் தினமும் செய்யில்
சிவசிவா ஆதாரஞ் சித்தி யாகும்
மெய்யப்பா கர்மந்தான் விலகிப் போகும்
வேதாந்த சித்தாந்த மெய்யுள் தங்கும்
மையப்பா சுழுனைதனில் வாசி யேறும்
மைந்தனே அஷ்டா ங்கந் திட்டமாகும்
பொய்யப்பா போகாது தன்னைப் பாரு
பூரணமுங் காரணமும் பொருந்தும் பாரே. 751

பொருந்திமனங் கொண்டுசிவ யோகஞ் செய்யப்
போதமய மானசிவ சத்தி பாதம்
இருந்துநிதந் தன்மனமே சாட்சி யாக
ஏகாந்த மாயிருந்து பூசை செய்தால்
வருந்திவரும் பிறப்பிறப்பும் மாய மாகும்
மார்க்கமுள்ள செகசாட்சி மனதில் தங்கும்
அருந்தவமாய் நின்றதொரு சாட்சி தானும்
அரகராசின் மயமான ஆதி யாமே. 752

ஆமென்ற ஆதியந்த மண்விண் ணாச்சு
அதின்நடுவே யப்புடனே தீயுங் காலும்
ஓமென்ற முச்சுடராய் விளங்கு தய்யா
உறுதியுடன் தன்னகத்தி லொடுங்கிப் பாரு
தாமென்ற பானுவது பருதி யாச்சு
சதிரான காலதுதான் மதியு மாச்சு
நாமென்ற தீயதுதான் சுடரு மாச்சு
நாட்டமதில் கண்டறிந்து நயனம் பாரே. 753

பாரப்பா நயனமது மனக்கண் ணாச்சு
பதிவான தீபமது மனக்கண் ணாச்சு
நேரப்பா வாசியது மனக்கண் ணாச்சு
நேர்மையுள்ள சிவயோக மனக்கண் ணாச்சு
சாரப்பா குருமொழியும் மனக்கண் ணாச்சு
சகலகலைக் கியானமெல்லாம் மனக்கண் ணாச்சு
தேரப்பா தெரிசனமும் மனக்கண் ணாச்சு
சிவசிவா சின்மயமும் மனக்கண் ணாமே. 754

கண்ணான விண்ணறிந்து கால்கொண் டூணிக்
கருணைவளர் கேசரியிற் கருத்தை வைத்து
முன்னான முச்சுடரின் நடுவி லேதான்
முதலான ஞானசிவ சோதி சூட்சம்
ஒண்ணான சூட்சமதை யூணிப் பார்க்க
உண்மையென்ற அதிசயத்தை யென்ன சொல்வேன்?
விண்ணான அதிசயத்தைப் பார்க்க வென்றால்
வேதமுறை தவறாமற் சிவமே செய்யே. 755

செய்யப்பா சிவமதுதான் செய்ய வென்றால்
தீர்க்கமுள்ள ருத்திராட்ச செயத்தைக் கேளு
மையப்பா மய்யமென்ற சுழுனைக் கண்ணாய்
வளர்ந்துமிகப் பொருதிருத்தி ராட்ச மாச்சு
மெய்யப்பா ருத்திரனே குடியாய் நின்று
மேல்கீழும் ஒன்றான தமர்தா னாச்சு
பையப்பா தமர்வாச லறிந்து சேர்ந்து
பத்தியுடன் சிவதவபிரா ணாயஞ் செய்யே. 756

வாரங்களி லஷ்டசித்து

செய்யடா பிராணாயம் நன்றாய்ச் செய்ய
சிவதலத்தில் மனதுருமை யாக நின்று
மெய்யடா சொல்லுகிறேன் ஆதி வாரம்
மேன்மையுள்ள வசீரகத்துக் குருமை யாச்சு
மையடா மய்யனென்ற சோம வாரம்
மகத்தான மோகனங்கள் வரிசை யாகும்
கையடா தவறாது செவ்வாய் மைந்தா
கனதையுள்ள தம்பனத்துக் கடிதா னாமே. 757

ஆமென்ற புதனதுதான் மைந்தா கேளு
அருமையுள்ள சாடனத்துக் கடிதான் காணும்
தாமென்ற வியாழமதை யென்ன சொல்வேன்?
தன்மையுள்ள சிறுசனங்கள் தானே யாகும்
நாமென்ற வெள்ளியுட மகிமை தானும்
நாடரிய வசனங்கள் நன்மை யாகும்
ஓமென்ற சனிவாரந் தன்னில் மைந்தா
உண்மையென்ற மாறணங்கள் உறுதி யாமே. 758

உறுதியுடன் மனதறிவால் தன்னைக் காண
உருமையுடன் மனோன்மணியால் தியானம் பண்ணு
பருதிமதி சுடரொளிபோல் அட்ட கர்மம்
பாலகனே உனதிடமாய்ப் பரிவாய் நிற்கும்
சுருதிபொரு ளானதொரு மவுனங் கொண்டு
சுத்தமுடன் அட்டகர்மந் திட்டம் பாரு
குருவசனந் தனைமறவா திருந்து கொண்டு
கோடான கோடிவித்தை கூர்ந்து பாரே. 759

கூர்ந்துபார்த் தறியவென்றால் மவுன வாலை
குணமறிந்து வணங்குதற்குக் குருவைப் போற்றி
நேர்ந்துகொண்டு அண்ணாக்கை உண்ணாக் குள்ளே
நேர்மையுடன் ஓங்கார விசையி லேற்றித்
தேர்ந்துகொண்டு பாடமென்ற வாசற் குள்ளே
சிவசிவா வென்றுதிரு நடன மாடிச்
சார்ந்திருந்து சிவயோக முத்த னாகித்
தன்மையுள்ள பூதவகைச் சரக்கைக் கேளே! 760

கேளப்பா பூமியது தங்க மாகும்
கிருபையுள்ள காரியம் அப்பு வாகும்
கேளப்பா தேய்வதுவுஞ் செம்பு வாகும்
கிருபையுள்ள இரும்பதுவும் வாயு வாகும்
கேளப்பா நாகமது ஆகாச மாகும்
கிருபையுடன் பூதவகை அறிந்து கொண்டால்
கேளப்பா நவலோகம் தங்க மாகும்
கிருபையுடன் காரசா ரத்தைக் கேளே. 761

கேளடா பிருதிவிதான் மைந்தா கேளு
கிருபையுள்ள இந்துப்பு கல்லுப் பாச்சு
ஆளடா அப்பதுதான் என்ன வென்றால்
ஆதியென்ற சாரமுடன் சத்தி சாரம்
வேளடா தேய்வதுதான் சொல்லக் கேளு
வெடியுப்பு சவட்டுப்பு ரெண்டு மாச்சு
காலடா வாய்வதுதான் கருதக் கேளு
கருவான துருசுவெண் காரங் காணே. 762

காணவே ஆகாசம் வழலை பூரம்
கண்டறிந்து பூதவகை கருவாய்ப் பார்த்துத்
தோணவே வாதமுறை வைத்யம் பாரு
சுத்தமுடன் சற்குருவைத் தொழுது போற்று
பேணவே பூதவகை கார சாரம்
பேரறிந்து வேதமுறை பிலமாய்ப் பாரு
பூணவே தன்னறிவாய்ப் பார்த்துக் கொண்டு
பூதவகை பாசாணம் பொருந்தப் பாரே. 763

பாரப்பா பிருதிவிதான் தொட்டி சிங்கிப்
பதிவான கார்முகிலும் பவளப் புத்தும்
நேரப்பா அப்பதுவும் கெவுரி வெள்ளை
நிசமான குதிரைபல கோழி கெந்தி
வீரப்பா தேய்வதுவும் கெந்திசிலை வீரம்
விசையான அரிதாரம் கண்டு கொள்ளு
ஆரப்பா அறிவார்கள் ஆகா சத்தை
அப்பனே சூதமென்று அறிந்து தேடே. 764

தேடவே பாசாணச் சியலைச் சொன்னேன்
சிவசிவா உபரசத்தைச் செப்பக் கேளு
நாடவே அப்பிரகம் பூமி காந்தம்
நலமான சலாசத்து பூநா கந்தான்
கூடவே யப்பதுதான் கிளிஞ்சி சங்கு
குருவான அண்டமொடு நண்டு நத்தை
ஆடவே தேய்வதுதான் நிமிளை பூரம்
அத்தியொடு வேழமொடு ஆமை தானே. 765

தானென்ற வாய்வுஅன்ன பேதி ரோமம்
தருவான கல்மதமும் சாத்திர வேதி
வானென்ற ஆகாசம் துத்தமயங் காந்தம்
மார்க்கமுள்ள ரசிதபா சாணம் சுக்கான்
கோனென்ற குருவருளால் மைந்தா நீயும்
குறிப்புடனே பூதவகைச் சரக்கைப் பார்த்துத்
தேனென்ற ருசிபோலே வேதை பார்த்தால்
சிவயோக பூரணமாய் வாழ லாமே. 766

ஆமப்பா புடந்தனக்கு நிதானங் கேளு
அப்பனே காடையது யெருஒன் றாகும்
நாமப்பா கௌதாரி யெருமூன் றாகும்
நன்மையுள்ள குக்குடந்தான் யெருப்பத் தாகும்
தாமப்பா வராகமது யெருஅன்ப தாகும்
தயவான கனபுடந்தா னெருநூ றாகும்
ஓமப்பா கெசபுடந்தா னாயிர மாகும்
உத்தமனே கைமுறையாய்ப் புடந்தான் பாரே. 767

பாரப்பா ஊத்துமுறை வகையைக் கேளு
பக்குவமாய் உருக்குமுறை துருத்தி ஒன்று
சேரப்பா சத்துவகைத் துருத்தி நாலு
செயமாகக் கைமுறையாய் அறிந்து கொண்டு
காரப்பா கருணையினால் ஆறா தாரம்
கண்டறிந்த காரணமாய் மேலா தாரம்
சேரப்பா வாசியினால் மவுனங் கொண்டு
சிவசிவா கேசரியைத் தினமும் நோக்கே. 768

நோக்கடா அற்பசிமுதல் மூன்று மாதம்
நுண்மையுட னுருக்கினத்தின் கால மாகும்
வாக்கடா தைமுதலாய் மூன்று மாதம்
மகத்தானசெயநீரின் கால மாகும்
தாக்கடா சித்திரைமுதல் மூன்று மாத
சங்கையுடன் குருமுடிக்கும் கால மாகும்
தூக்கடா ஆடிமுதல் மூன்று மாதம்
சுத்தமுடன் திராவகம்செந் தூரஞ் செய்யே. 769

செய்யப்பா நீற்றினத்தின் குருவைக் கேளு
சிவசிவா புழுகுடனே வீரம் பூரம்
மெய்யப்பா குருவணைடு கூடன் சூதம்
விதமான கார்முகிலும் சவுக்கார முரமும்
[illegible] மைந்தா
[illegible] போகும்
[illegible] ல்
கட்டறுந்து வெல்லுமுறை காணலாமே. 770

காணவே உருக்கினத்தின் சரக்கைக் கேளு
காரமுடன சவாதுவெடி சார முப்பு
பேணவே கண்டரொடு மால்தேவி வெள்ளை
பலமான மிரங்குடனே ஆமணக்கு குன்றித்
தோணவே தேனுடனே பிறாவின் எச்சம்
மகாகுதகறிந்து கருமானங கண்டா யானால்
ஊணவே நவலோக முருகிப் போகும்
உத்தமனே கண்டறிந்து யோகங் காணே. 771

காணவே நவலோகம உபரசங்கள்
கடிதான பாசாண வகைகட் கெல்லாம்
பேணவே செந்தூரம் செய்ய நல்ல
பிலமான சரக்கதுவைச் சொல்லக் கேளு
தோணவே மனோசிலையும் தாரங் கெந்தி
சுத்தமுள்ள அப்பிரகம் கெவுரி துத்தம்
பூணவே வெடியுப்பு இதுவெல் லாம்தான்
புத்தியுடன் செந்தூரக் குருவாம் பாரே. 772

பாரப்பா வர்ணவகைச் சரக்கு கேளு
பரிவான தங்கமொடு நாகம் சூதம்
நேரப்பா நிமிளையொடு உப்பு மைந்தா
நேரறிந்து கைபாகம் முறையாய்ப் பார்த்தால்
பேரப்பா பெற்றதொரு நவலோ கங்கள்
பிலமான வர்ணமுறைக் கிதுவே யாகும்
சாரப்பா சற்குருவின் பாதங் கண்டு
சங்கையுடன் சவுமியசா கரத்தைப் பாரே. 773

பாரடா சற்குருவின் கடாட்சந் தாமே
பதிவாகக் கட்டியதோர் சூதந தன்னில்
நேரடா காரீயஞ் சரியாய்க் கூட்டி
நேர்மையுடன் நாலிலொன்று தங்கங் கூட்டிக்
காரடா யிந்திடைக்குக் கெந்தி தாரங்
கைமுறையாய் எட்டிலொன்று வீரங் கூட்டிச்
சேரடா பொடியாக்கிக் குப்பிக் கேத்திச்
சிவசிவா வாலுகையின் மேலே யேத்தே. 774

ஏத்திநன்றாய் தீமூட்டி மைந்தா நீயும்
இன்பமுடன் பதம்பார்த்துச் செந்தூ ரித்துப்
போற்றியே நவலோகம் நூற்றுக் கொன்று
பூட்டடா பனிரெண்டு மாத்து மாகும்
பார்த்திபனே யின்னமொரு சூதந் தானும்
பதிவாகப் பலமெட்டு எடுத்துக் கொண்டு
சாத்தியதோர் தங்கமொரு பலமுங் கூட்டிச்
சங்கையுடன் தெளிவாக உருக்கிப் பாரே. 775

பாரப்பா உருக்கியதைப் பொடியாய்ச் செய்து
பார்த்திபனே பதினாலு பலந்தான் கெந்தி
நேரப்பா பொடிசெய்து கூட்டி நீயும்
நேர்மையுடன் குப்பியிலே நிசமாய்ச் சேர்த்துச்
சேரப்பா வாலுகையி லேத்தி மைந்தா
தீர்க்கமுடன் பதம்பார்த்துச் செந்தூ ரித்துக்
காரப்பா இதையடுத்து நூற்றுக் கொன்று
காட்டவே நவலோகங் கனக மாமே. 776

ஆமப்பா இதின்பேரு வால சந்திரன்
அரகரா குன்றியுண் ணுயிரு நேர்ந்தான்
தாமப்பா மண்டலந்தான் கொண்டா யானால்
சந்திரன்போல் தேகமது காந்தி யாகும்
ஓமப்பா சட்டையது உரிந்து போகும்
உன்மேனி தங்கம்போல் பிரகா சிக்கும்
போமப்பா தசையினுள்ளே தோச மெல்லாம்
புத்தியுள்ள தாதுகள்தான் விருத்தி காணே. 777

காணவே நரைதிரைகள் காணா தோடும்
கன்னிகைமேல் கவனமது மெத்த வாகும்
பூணவே தந்தமெல்லாம் மிறுகிப் போகும்
பூரணமாம் கண்கள்ரெண்டும் ஒளியாய் நிற்கும்
தோணவே உடம்பிறுகி வாலை யாகும்
சுத்தமுள்ள கற்பமடா இந்த மார்க்கம்
பேணவே உண்போர்க்குஞ் சோதி காணும்
பேர்பெரிய வேதாந்தம் சித்தி யாமே. 778

சத்து இறக்கும் வகை

சித்தமுடன் உபரசத்தின் சத்துச் சொல்வேன்
செயமான நவச்சாரம் விராகன் ரெண்டு
பத்தமுள்ள வீரமது விராகன் ரெண்டு
பதிவான மடல்துத்தம் பலமோர் பத்து
புத்தியுட அண்டநீர் விட்டு ஆட்டிப்
பூரணமாய்க் குகையிலிட்டு உருக்கச் சத்தாம்
வெத்தியுள்ள சத்ததுதா னாகும் போலே
வேகமுடன் உருகுமது கண்டு பாரே. 779

பாரப்பா துத்தசத்தின் வேதை சொல்வேன்
பரிசமுதற் சந்தான தூப தீபம்
நேரப்பா சத்திடைக்குச் சூதம் சேர்த்து
நேர்மையுடன் கூட்டிநன்றா யுருக்கிப் பாரு
காரப்பா நாலிலொன்று தங்கம் சேர்த்துக்
கருணையுட னுருக்கியந்த மணியை வாங்கித்
தேரப்பா அந்திடைக்குக் கெந்தி சேர்த்துச்
சிவசிவா பொடிசெய்து குப்பிக் கேற்றே. 780

ஏற்றிநன்றாய் வாலுகையி லங்கி பூட்டி
எரித்திடுநீ செந்தூரம் பதமும் பார்த்துப்
போற்றிநன்றாய் நவலோகம் நூற்றுக் கொன்று
பூட்டினார் பதினாறு மாத்து மாகும்
மாற்றிநன்றாய் வீரமிட்டுச் செந்தூ ரத்தில்
மகத்தான சூதமிட்டு அரைத்துக் கொண்டு
தோற்றியதோர் துகிலிட்டுத் திரித்துக் கொண்டு
சுத்தநெய் தனிலே துவைத்தி டாயே. 781

துவைத்ததொரு திரியெடுத்துத் தீப மேற்றிச்
சூழவே கடராசிக் கூடு கட்டிப்
பவித்ததொரு நவலோகந் தகட்டுக் கேதான்
பத்தியதோர் திரியவித்துத் தூபஞ் சாத்தித்
தவித்ததொரு தகடெல்லாங் கறுத்துப் போகும்
தன்மையுள்ள ....ட்டத் தங்க மாகும்
செபித்ததொரு தூம்பூரமாம் வேதை மார்க்கம்
செம்மையுள்ள மாணாக்காள் கண்டு கொள்ளே. 782

காந்த செந்தூரம்

கண்டுபார் காந்தமது பலந்தா னொன்று
கட்டியதோர் சாரமது பலந்தான் அஞ்சு
விண்டுபார் செயவீரம் பலந்தான் அஞ்சு
வெத்தியுள்ள வெண்காரங் காசு போட்டுக்
கொண்டதொரு சிப்பிநீர் விட்டு ஆட்டிக்
குறிப்பாகத் தானுருட்டிக் குகையி லிட்டுச்
சென்றிடவே சில்லிட்டு உருக்கிப் பாரு
சிவசிவா நாகம்போல் சத்துப் பாரே. 783

பாரப்பா நாகம்போல் காந்த மானால்
பதிவான காயசித்தி யோக சித்தி
நேரப்பா கண்டிடைக்கு ரசமுங் கூட்டி
நிசமான சத்திடைக்குத் தங்கங் கூட்டிச்
சேரப்பா தானுருக்கி மணியை வாங்கித்
தீர்க்கமுள்ள கெந்தகமுஞ் சமனாய்ச் சேர்த்துக்
காரப்பா பொடிசெய்து குப்பி கேத்திக்
கருணையுடன் வாலுகையில் தீயை மூட்டே. 784

மூட்டிநன்றாய்ச் செந்தூர பதத்தைப் பாரு
மோசங்கள் வாராமற் சலாகை போட்டு
நீட்டியதோர் சலாகைமுனைகாகரப்புக் கண்டால்
நிலைத்ததொரு செந்தூரம் பதமாச் சென்று
பூட்டியதோ ரீசானம் பூசை செய்து
புகழாகக் குளிர்ந்தபின்பு இறக்கிப் பாரு
ஆட்டியதோர் செந்தூரம் அருணன் போலாம்
அந்திசந்தி தினம்ரெண்டு குன்றி தின்னே. 785

தின்னடா மண்டலத்திற் காய சித்தி
சிவசிவா அருணனைப்போல் தேக மாகும்
சுண்ணடா சோதிவெகு காந்தி யாகும்
கலகலத்த தந்தமெல்லா மிறுகிப் போகும்
பெண்ணடா புணர்ந்தாலும் விந்து வீழா
பூரணமாய் வாசியது பிறம்போ காது
விண்ணடா தானேறி யோகம் பாரு
வேதைக்கு வகைசொல்வேன் விரும்பிக் கேளே. 786

காந்த செந்தூரம்

கேளடா காந்தசத்து நாக மொன்று
கெடியான தங்கமொன்று ரசந்தா னொன்று
நாளடா மூன்றுமொன்றாய் உருகும் போது
நல்லதொரு நாகமது மூன்று போடு
காலடா புகையமந்து கட்டிப் போகும்
கருணையுடன் நின்றுருகி மணியு மாகும்
ஆளடா இந்திடைக்குக் கெந்தி கூட்டி
அப்பனே நாலிலொன்று சிலையுஞ் சேரே. 787

சேரப்பா பொடித்தல்லோ குப்பிக் கேத்திச்
செம்மையுடன் வாலுகையில் வைத்து மூடிக்
காரப்பா தீயெரிக்கச் செந்தூர மாகும்
கருணையுடன் பதம்பார்த்து இறக்கிக் கொண்டு
நேரப்பா நவலோகம் நூற்றுக் கொன்று
நீட்டவே பனிரெண்டு மாத்து மாகும்
தேரப்பா மயங்காதே பொன்னைப் பார்த்துத்
தீர்க்கமுடன் குகையிட்டுப் பார்த்தி டாயே. 788

பூணாகச்சத்து

பாரப்பா பூணாகச் சத்து சொல்வேன்
பதிவான பூமிவேர் தன்னை வாங்கிச்
சேரப்பா உலத்திநன்றாய்ப் பொடியே செய்து
செயமான சாரமது விராகன் அஞ்சு
காரப்பா சவ்வீரம் விராக னஞ்சு
கட்டான வெண்காரம் விராக னஞ்சு
தேறப்பா இதுவெல்லாஞ் செய்நீர் தன்னால்
செம்மையுடன் அரைத்துருட்டிக் குகையில் வையே. 78

வைத்துநன்றாய்ச் சில்லிட்டு உருக்கிப் பாரு
மார்க்கமுடன் மணிமணியாய்ச் சத்து வீழும்
வைத்தல்லோ மணியெல்லாம் உருக்கிப் பார்க்க
மகத்தான வயிரம்போல் பளப ளக்கும்
கைத்ததொரு பூணாகச் சத்தில் தானும்
கருணையுடன் காசிடைதா னுருக்கும் போது
நைத்தல்லோ நாகமந்த இடையே போட்டு
நல்லகரு ரெண்டுமொன்றா யுருகும் பாரே. 790

நாகச்சத்து செந்தூரம்

பாரப்பா இப்படியே ஓட்டிப் பார்க்கப்
பதிவாக நாலிடைதா னாகங் கட்டும்
சாரப்பா கட்டியதோர் நாக மொன்று
சங்கையுள்ள சூதமொன்று தங்க மொன்று
நேரப்பா உருக்கியதை வாங்கிக் கொண்டு
நேராகக் கெந்தகமும் கூட்டி மைந்தா
சேரப்பா பொடியாக்கிக் குப்பிக் கேத்திச்
செம்மையுடன் வாலுகையி லேத்தி டாயே. 791

ஏத்தியல்லோ தீயெரித்துச் செந்தூ ரித்தால்
என்ன சொல்வேன் நவலோகம் நூற்றுக் கொன்று
சாத்தியல்லோ தானுருக்கிப் பார்த்தால் மைந்தா
சங்கையுடன் பதினாறு மாத்துக் காணும்
பார்த்திபனே மற்றதெல்லாம் சுருக்கில்லை மைந்தா
பார்மகனே யாதிரசம் நாக மாச்சு
போத்தியல்லோ ஆரெடுத்துப் பார்த்தா லுந்தான்
புண்ணியனே ரசவாதம் புகழுண் டாமே. 792

புகழாகப் பூனாகச் சத்தி னோடே
பூட்டடா சமன்தங்க முருகும் போது
அகலாதே செயசூதம் சமனாய்ப் போட்டு
அப்பனே தானுருக்கி நொறுக்கிக் கொண்டு
பகலான கெந்தியதி னிடையே கூட்டிப்
பத்தியுடன் குப்பியரை வாசி யிட்டு
நிகழாமல் வாலுகையிற் சமைந்தால் மைந்தா
நிர்மலம்போற் செந்தூர மாகுங் காணே. 793

அயம்இயம்

தானென்ற செந்தூரந் தன்னை மைந்தா
சமரசமாய்த் குன்றியிடை தினமுந் தின்னு
தானென்ற மண்டலத்திற் காய சித்தி
சங்கையுடன் சட்டையொன்று தானே போகும்
வானென்ற குருபதந்தான் வெளியாய்க் காணும்
மைந்தனே கேசரியில் மகிழ்ந்து பாரு
கோனென்ற பூநாகச் சத்து மைந்தா
குறியறிந்து நெறியறிந்து கூர்ந்து கொள்ளே. 794

கொள்ளடா அயத்தினுட விபரங் கேளு
குணமான அரப்பொடியும் பலமும் ரெண்டு
விள்ளடா செயசாரம் பலமும் கால்தான்
விசையான செயவீரம் பலமுங் கால்தான்
அல்லடா செயநீரை விட்டு ஆட்டி
அப்பனே குகையிலிட்டு உருக்கிப் பாரு
வெல்லடா ஈயம்போ லுருகி நிற்கும்
வேதாந்த அயத்தினுட ஈயந் தானே. 795

தானான ஈயமது உருகும் போது
தாக்கடா நூறுதொந்தம் நாகம் காட்டும்
வானான பச்சைரச மீந்த நாகம்
வரிசையுடன் கட்டுமடா நூறு தொந்தம்
கோனான நாகமிதைக் கெந்தி கூட்டிக்
குமிறவே செந்தூரஞ் செய்தா யானால்
தேனான நவலோகம் நூறுக் கொன்று
சேர்க்கவே பணிரெண்டு மாத்து மாமே. 796

அயச் செந்தூரம்

ஆமப்பா அயமுடனே தங்கஞ் சேர்த்து
அடங்கிநின்று உருகையிலே ரசத்தைக் கேளு
தாமப்பா அந்திடைக்குப் போட்டு நீதான்
சங்கையுட னுருக்கியொரு மணியாய் வாங்கி
ஓமப்பா அந்திடைக்குக் கெந்தி கூட்டி
உருக்கமுடன் பொடித்ததனைக் குப்பிக் கேத்திச்
சாமப்பா வாலுகையிற் செந்தூ ரித்துச்
சாதகமாய்த் தினம்ரெண்டு குன்றி தின்னே. 797

தின்னவே காயமது இரும்பு போலாம்
திரமாகத் தாதுவெல்லாந் திறம தாகும்
உண்ணவே இருபோதும் அப்பிரக மப்பா
உத்தமனே சித்தியடா மண்டலத்தி லாகும்
பொன்னடா உன்தேகம் வயிரக் கட்டி
புணர்ச்சிசெய்யச் சுக்கிலந்தான் மேலே ஏறும்
நண்ணடா சற்குருவின் பாதந் தன்னை
நாடிநின்று பூரணத்தில் நயமாய்த் தேறே. 798

சாஸ்திர விபரம்

தேறவென்றால் காவியத்தை நன்றாய்ப் பாரு
தீர்க்கமுடன் பூரணத்தைத்தேடிப் பாரு
ஏறவென்றால் சகலகலைக் கியானம் பாரு
என்மகனே சவுமியசா கரத்தைப் பாரு
கூறவென்றால் தத்துவமா யிரத்தைப் பாரு
கூர்மையுடன் மாந்திரிகக் குணத்தைப் பாரு
ஆறவென்றால் ஆயிரமா மனுவிக் கியானம்
ஆதிதொடுத் தந்தவரை அன்பாய்ப் பாரே. 799

பாரப்பா பலநூலுந் தேடிப் பாரு
பதிவான சூத்திரங்கள் பத்திப் பாரு
நேரப்பா நிலையறிந்து பார்ப்ப தற்கு
நிசமான சிவயோக நேர்மை கேளு
காரப்பா அண்ணாக்கை யுண்ணாக் குக்குள்
கருத்துறவே தானிருத்திக் கலையைப் பத்தி
ஏறப்பா அண்டபத முடிவி லேதான்
இன்பமுடன் தானிருந்து ஆண்டு கொள்ளே. 800

மவுனயோகத்துக்குக் கைபாகம்

ஆண்டிருந்த மவுனத்தைச் சுழுனை யுள்ளே
அசைவான வாசிசிவ யோகம் பார்த்துப்
பூண்டுகொண்டு மனதையங்கே பூட்டிப் பார்த்தேன்
புருவமய்யத் தாள்திறந்து போனேன் மேலே
தாண்டியந்த அறுவகையுந் தானே கண்டேன்
சதாபோத பூரணமாய்த் தானே நின்று
தூண்டினேன் விளக்கொளியின் சூட்சங் கண்டு
சொர்க்கபதங் கைக்கொண்டேன்
சுகம்பெற் றேனே. 801

சுகம்பெற்ற சூட்சமதை யென்ன சொல்வேன்?
சுத்தமுள்ள புலத்தியனே சொல்லக் கேளு
அகம்பெற்ற தேகமா னந்த மாக
அருமையுடன் தற்சனியு மத்திமையுங் கூட்டி
முகமுற்ற நாவினிரு பிறஞ்செ லுத்தி
மூர்க்கமுடன் தாணுசத்தி மேலே தள்ளு
செகமுத்த தமர்வாசல் திரையை நோக்கித்
தீர்க்கமுடன் முச்சுடரைக் கண்டு மேவே. 802

மேவய்யா சத்தியுட சூட்சந் தன்னை
விளம்புகிறேன் ஓங்கென்று அங்கென் றுள்ளே
தாவய்யா மானதமாய்ப் பூசை பண்ணத்
தன்ரூபங் கண்ணாடி போலே காணும்
கூவய்யா சிவசக்தி பத்தாந் தீட்சை
கொள்ளுகிறேன் விழியொளியின் அந்தி ரத்தே
நாவய்யா மூலமங்கே மங்கென் றூதி
நாக்கைமேல் நோக்கியந்த அமுர்தங் கொள்ளே. 803

கொள்ளடா அமுர்தரச பானந் தன்னைக்
குருவான சுழுமுனையில் மனதை நாட்டி
நில்லடா வாசியினால் மணிநா வுன்னி
நேர்மையுள்ள மணிவாசற் பூட்டுத் தன்னைத்
தள்ளடா தமர்வாசல் திரையை நோக்கிச்
சச்சிதா னந்தமென்ற குகையிற் சென்று
உள்ளடா மனதுகந்து ஒளியைப் பாரு
உத்தமனே மூக்குநுனி சுளியைப் பாரே. 804

சிவயோக நேர்மை

மூக்குநுனி சுழுனையிலே மனதை மூட்டு
முத்திபெறத் தவறாமல் வாசி யூதித்
தாக்கினா லறிவங்கே யேறிச் செல்லும்
சதானந்த விந்துவினால் வாசி தங்கும்
நாக்குநுனி மேல்நோக்கிச் சாத கஞ்செய்
நலமான வாதபித்தஞ் சிரசே றாது
சீக்கிரத்தில் ஒளிகாணச் சுழுமுனையில் மைந்தா
திருவான நாவினுனி சேர்த்துப் பாரே. 805

சேரடா சுழுனைவழி தமருக் குள்ளே
சிவசிவா ஓமெனவே மவுனம் பூட்டிக்
காரடா கருணையினால் வசிவசியென் றோதிக்
கருணைவளர் ஓங்காரக் கம்ப மீதில்
ஏறடா அந்தரங்க முடிவு சென்று
இறங்குதுறை வழியறிந்து அமுர்தங் கொண்டு
மேரடா சென்றுவலம் வந்தா யாகில்
மெய்ஞ்ஞான குருதேசி வாசி யாச்சே. 806

வாசிவலங் கொண்டுமதி கலையை வாங்கி
மகத்தான சுழுனைவழி மார்க்கஞ் சென்றால்
பேசியசொல் முடிவான மவுனத் தந்தம்
பேரண்டத் துள்மூலத் துச்சி வட்டந்
தேசியென்ற சவுதகிரு வட்ட மேறிச்
சிவசிவா பொதிகைவலஞ் சென்று வந்தால்
நாசிவழிச் சுழுனைநடுக் கமலந் தன்னில்
நாதாந்தத் திருநடனங் காண லாமே. 807

காணலாந் திருநடனங் காட்சி தன்னைக்
கருணைவளர் கேசரியாங் கமல மீதில்
பூணலாம் பூண்டுமனங் கொண்டு அந்தப்
புருவமய்யப் பூரணசந் திரனைப் பார்த்தால்
தோணலாம் அதிலிருந்த சூட்சந் தானும்
துலங்குதடா முச்சுடரு மொன்றாய் நின்று
பேணலாம் ஏகமென்ற சோதி தன்னைப்
பிரியமுடன் கண்டறிந்து காலால் தேரே. 808

காலறிந்து விசேஷயஷ்த்த விசேஷத் தாலே
கருணைவளர் கைபாக்கக் கிடாட்சம் பெற்று
மேலறிந்து ஒளியில்நின்று வெளியி லேகி
மெய்ஞான அமுர்தரச பானங் கொண்டு
நூலறிந்து நூல்வழியே இறங்கி யந்த
நுண்மையுள்ள தமர்வாசற் கப்பால் சென்று
மால்நிறைந்த வழிதனிலே வாச மானேன்
மகத்தான லோகமெல்லாந் தானா னேனே. 809

தானான மவுனமதைச் சாதித் தோர்கள்
சகஸ்திரமாங் கோடியிலே ஒருவ னுண்டு
ஊனான உலகமதில் ஒருவன் றானும்
உத்தமர்கள் தன்னிடத்தி லொடுங்கி வாழ்வான்
வானான கேசரமே வாச மாகி
மார்க்கமுடன் அஷ்டசித்தும் வகையாய்ச் செய்வான்
கோனான குருபீட மாகி நிற்பான்
குவிந்தமனப் பூரணமாய்க் குறிகாண் பாரே. 810

குறியான நெறிதமர்க்குள் மவுனம் பூட்டிக்
குறிப்பறிந்து பெரியோர்கள் குணத்தைக் கேளு
விரிவான உலகமெல்லாந் தானாய் நிற்பான்
மெய்ஞ்ஞானக் குருதனக்கும் வித்தாய் நிற்பான்
சிறியார்போல் தானிருந்து மலச லத்தால்
செகமெல்லாந் தங்கமய மாகச் செய்வான்
அரியான மூவெழுத்தின் இசைதன் னாலே
அட்டதிசைக் கரசான மவுனி யாச்சே. 811

மவுனகுரு நாதனென்று யார்க்கும் நாமம்
மகத்தான புலத்தியனே சொல்லக் கேளு
தவனமுடன் சத்திசிவ பூசை பண்ணித்
தானவனாய் வாலைபதந் தன்னைக் கண்டு
கெவுனமுடன் அமுர்தரச பூரணமும் பெற்றுக்
கோசதி பாதமுதல் தன்னைக் கண்டால்
நவமணியா மகுடரத்ன முடிமேல் சென்ற
நாதாந்த மவுனகுரு தேசி யாச்சே. 812

யோகத்துக் காசனம்

தேசிபர தேசிவிசு வாசி யான
சிவசிவா மவுனகுரு நாத னாவான்
வாசிவல சாரியிட சாரி செய்வான்
வணக்கமுடன் செகந்தனிலே வாழ்ந்து கொள்வான்
நாசிமுனை யறிந்துமணி நாவ சைத்து
நாட்டமுடன் வாசிவா ஓமென் றூணி
நேசமுடன் சரியைவழி நடந்தா யாகில்
நிசமான ஞானமது இழுக்கும் பாரே. 813

இழுக்குமடா சரியைவழி யொடுகிரியை ரெண்டும்
இதுவறிந்து யோகத்துக் கடிதான் மைந்தா
தெளிக்குமடா கோமுகஆ சனத்தைக் கேளு
சிறக்கரெண்டு முழங்காலை யொன்றாய்ச் சேர்த்துக்
களிக்குமடா குதியொன்றில் பானங் கார்க்கக்
கசடறவே நோக்கிமேல் மூலம் பாரு
நெளிக்குமடா நாவினுனி சுழுனை மேலே
நேர்மையுடன் அங்கென்று நின்று ஊணே. 814

ஊணியே வாசிதனி லேறிப் பார்க்க
உத்தமனே ரவிபோலே ஒளிதான் வீசும்
பேணியே சிவயோகம் ஆர்தான் செய்வார்?
பெரியோர்கள் சொல்லார்கள் அரிதரி தென்பார்
தோணியே பார்ப்பதற்கிந் நூலைப் பாரு
சுகமாக யீராறு தலமேற் சென்று
ஆணியாய் மூன்றெழுத்து மொன்றாய் நின்ற(து)
அறியார்க ளசைபைமுதல் அறிவாங் கண்ணே. 814

கண்ணறியார் மூக்கறியார் காதும் கேளார்
கருத்துவைத்துச் சுழுமுனையிலே மனத்தை யூணார்
விண்ணேறிக் கேசரியைப் பெற்றோ ரில்லை
வேதாந்தம் வாய்ப்பேச்சால் கைக்குள் ளாமே
ஒண்ணறியா மனத்தையங்கே யூணிக் காண
உத்தமனே மூதண்ட ஒடுக்கஞ் சென்று
நண்ணறிவால் நாதவிந்து குளிகை செய்து
நாதமென்ற வாசிவல நாடி னேனே. 816

வலஞ்சுழிலி டஞ்சுழியை வைத்து மேலே
மகத்தான சுடர்சுழியில் மனையி லேகித்
தலஞ்சுழியிற் சிங்குவங்கு வாசல் தன்னில்
தானிருக்குந் துவாரபால கர்தான் மைந்தா
நிலஞ்சுழியிற் சுழிக்காத்தைத் திறந்து விட்டால்
நின்றநிலை யண்டவெளிக் குள்ளே சென்று
குலஞ்சுழியின் நலஞ்சுழியாய் வந்த தாலே
கொஞ்சுசிலம் பொலிநடனங் குறிகண் டேனே. 817

குறிகண்டு நெறிதமர்க்குள் செல்லும் போது
கொம்புசுத்தி யாடுஞ்சுளிக் காத்து மைந்தா
நெறியறிந்து வலமிடமாய் நின்ற தாலே
நிலையறிந்து கதவிருதாள் பூட்டுத் தன்னை
அறிவறிந்து சுழிமுனையின் சூட்சத் தாலே
ஆதியென்ற தாளறிந்து அண்டஞ் சென்றேன்
பதியறிந்து அண்டமதிற் சென்று பார்க்கப்
பரந்தசுளிக் காத்துவெகு பதிவ தாச்சே. 818

ஆச்சப்பா சுளிக்காத்துக் கப்பா லேக
அண்ணாக்கை யுண்ணாக்குள் அழுத்திப் பாரு
மூச்சப்பா நிறைந்தசுழி சுழியின் காத்து
முனைமய்ய மானசுழி முனையிற் சென்று
போச்சப்பா பரவெளியே பரமென் றெண்ணிப்
பூதமுத லாகாசம் பொருந்தப் பாரு
பேச்சப்பா பிறந்ததுவும் வெளியி லாச்சு
பேச்சறிந்து போனதுவும் வெளியிற் காணே. 819

வெளியான பரமவெளி யார்தான் காண்பார்?
வேதாந்தப் புலத்தியனே சொல்லக் கேளு
நெளியாமற் சுழிமுனையில் மனதை நாட்டி
நேரான அந்தரங்கத் தமரில் சென்று
முழியான முழிநிறுத்தி முழித்துப் பார்த்தால்
மூதண்டப் பரவெளியை யென்ன சொல்வேன்?
சுழியான வழியறிந்து வெளியைக் காத்தால்
சுத்தவெளி பலவிதமாய்த் தோணும் பாரே. 820

பாரப்பா பலவிதமாய்த் தோன்றி நின்ற
பதிவான பரமவெ ளி யண்ட மாச்சு
வேறப்பா அண்டகே சரியே சோதி
வேதாந்தச் சோதியடா சுழுனைக் குள்ளே
சாரப்பா சார்பறிந்து மவுனம் பூட்டிச்
சந்திரகலை சூரியகலை வாசி யேறி
நேரப்பா நிறைந்தகே சரியைக் கண்டு
நெடுவானில் நாவினுனி நிற்கப் பாரே. 821

மவுனயோக கைபாகம்

பாரடா நாவினுனி யுண்ணா மேலே
பதிவாகச் சேர்வதற்குப் பதிவாய்க் கேளு
நேரடா தானிருந்து சரமே பார்க்க
நேர்மையுடன் சற்குருவைத் தியானம் பண்ணித்
தேறடா தற்சனையு மத்திமையுங் கூட்டித்
திருவான நாவடியில் அழுத்தி மைந்தா
சாரடா நாவினுனி யுண்ணா மேலே
சார்ந்திருக்க நித்தியமுஞ் சாதிப் பாயே. 822

சாதித்து வரும்போது மைந்தா மைந்தா
தருக்கிநின்ற பீடையெல்லாம் தானே போகும்
பேதித்த தேகமது பிலமாய் நிற்கும்
பிலமான வாசிசிவ யோகம் தங்கும்
ஆதித்தன் சந்திரனுஞ் சொன்னபடி யாகும்
ஆனந்த மதியமுர்த மங்கே பாயும்
சோதித்து அண்டவரைக் குள்ளே மைந்தா
சோதிமணி நாவினுனி சொருகிப் பாரே. 823

சொருகிவிளை யாடுதற்கு மைந்தா கேளு
சோதிதிரு மணிநாவின் அடியி லேதான்
இறுகஇரு விரலழுத்தி மேலே யேற்று
இப்படியே தினந்தோறும் சாதித் தாக்கால்
திருகுமணி வாசலுட திரைக்கு மேலே
சிவசிவா சுழுமுனைமேல் சேர்ந்து நிற்கும்
பருதிமதி சுடரதிலே சேர்ந்த போதே
பத்திமுத்தி சித்திவயி ராக்கிய மாச்சே. 824

ஆச்சப்பா நெஞ்சில்வை ராக்கியம் வைத்து
அனுதினமு மணிநாவை யசைத்துள் ளேத்திக்
காச்சப்பா கலையறிந்து கபாட வாசல்
கதவறிந்து தாள்திறந்து கால்கொண் டேறி
மூச்சப்பா காலறிந்து முனைகொண் டேறி
முச்சுடரு மொன்றாகி முன்பின் தோணும்
நீச்சப்பா நிலையறிந்து மணிநா வுன்னி
நேமமுடன் நித்தியமும் நிலையைப் பாரே. 825

நிலையறிந்து நாற்பத்து முக்கோ ணத்தை
நின்றுநடு வாசியினாற் கண்டு கொண்டு
தலையறிந்து தலைமலையின் குகையிற் சென்று
தானறிந்து மேலான கனலைத் தூண்டத்
துலையாத அமிர்தரச கெங்கை தானும்
சோதிமணி வாசலிலே சொலிக்கு மைந்தா
கலையறிந்து நிலையறிந்து அமுர்தங் கொண்டால்
கயிலாச பதவியது கைக்குள் ளாச்சே. 826

கைபாகம்

ஆச்சப்பா கைமேலாய்ப் பதவி காண
அந்தரங்க மானகை பாகங் கேளு
பேச்சப்பா பேசாத மவுன மாகப்
பிலமான கோமுக்ஆ சனமேற் கொண்டு
பாச்சப்பா தற்சனியு மத்திமையுங் கூட்டிப்
பாலகனே யடிநாவைப் பதிவாய்த் தள்ளு
மூச்சப்பா நிலையறிந்து தள்ளி னாக்கால்
மூவுலகுந் தன்வசமாம் முனைகொண் டூணே. 827

ஊணுவது மூலமதில் அங்கென் றூணி
உண்மையுடன் கண்டமதில் உங்கென் றூணிப்
பேணுவது சுழுமுனையில் மங்கென் றூணிப்
பிலமான மணிநாவி லடிவா ரத்தில்
பூணுவது தற்சனியு மத்திமையுங் கூட்டிப்
பொருந்திமனக் கனிவதனால் மேலே யேற்று
வானுலகங் கைவசமாம் மைந்தா மைந்தா
மகத்தான அண்டவரை யாறுந் தானே. 828

தானென்ற அண்டவரை தாண்டி யேறச்
சாதகமாய் வாசியினால் மணிநா வுன்னி
வானென்ற சுழுமுனையின் திரையை நீக்கி
மகத்தான தமர்வாசற் குள்ளே சென்றால்
கோனென்ற குருரூப மென்ன சொல்வேன்
கூறுதற்கு நாவசையா மவுன மாச்சு
ஊனென்ற மனம்பூண்டு மவுனங் கொண்டால்
ஒருகோடி ஊழிவரை உறுதி யாமே. 829

உறுதிகொண்டு கேசரியி லொடுங்கி வாழ
உண்மையென்ற மவுனமடா மணிநா வுன்னிப்
பருதிமதி கலையறிந்து தமரில் புக்குப்
பாரடா கேசரியாள் பாதந் தன்னைச்
சுருதிமுறை தவறாமற் சுாத்தா யானால்
சொலிக்குமடா அமுர்தரசச் செந்தேன் மைந்தா
கருதிமனங் கனிவதனால் கால்கொண் டூணிக்
கனிந்தமுர்தங் கொண்டுகளி வொளியைப் பாரே. 830

ஒளிகண்ட போதுயிரு ளோடிப் போச்சு
உண்மையென்ற மவுனமிது ஒடுக்க மாச்சு
விழிகண்ட பின்பல்லோ சுழுனைக் குள்ளே
வேதாந்த லாடவிளி ஒளிதன் னாலே
வெளிகண்டோம் வெளியினுட விலாசம் கண்டோம்
வேதமய மானபூ ரணமுங் கண்டோம்
சுளிகண்டோஞ் சுளியினுட சூட்சங் கண்டோம்
சோதிமணி வாசலுட துறைகண் டோமே. 831

மவுனாதி யின்னூல் மகிமை

துறைகண்ட சுழுமுனையின் வாசலுக்குச்
சூட்சமிரு கதவிருதாள் பூட்டுத் தன்னை
வரைகண்டு அறையறிந்து வாசல் சென்று
வங்குசிங்கு சிங்குவங்கு வாசற் குள்ளே
நிறைகண்டு மணியசைத்து மணிநா வுன்னி
நெருங்குமணிப் பூட்டதனை நெகிழ்த்துக் கொண்டு
கரைகண்டு கரைநீஞ்சி யேறிக் கொண்டு
கனிந்துவரும் அமுர்தரசஞ் சுனைகண் டேனே. 832

சுனைகண்ட சூட்சமதைச் சொல்லக் கேளு
சொல்பெரிய சவுமியசா கரந்தா னென்பார்
மனைகண்ட சாகரந்தான் மணிநா வென்பார்
மகத்தான சகத்திரமா மலர்தா னென்பார்
அனைகண்ட மலரான அடிநாக் குள்ளே
அடங்கிநின்ற அமுர்தரசத் தாளி யென்பார்
முனைகண்டு முனையிறுத்தி யமுர்தங் கொள்ள
மூக்குநுனி யடிநாக்குத் தாளி பாரே. 833

கைபாககேடு

தாளியென்ற மதமதக்கந் தாளி தன்னைத்
தள்ளிமலை யேற்றுதற்கு வகைகா ணாமல்
தாளியென்ற தாளியடி வாரந் தன்னைச்
சக்கரமாம் வாளதனால் தகைத்து மைந்தா
தாளியென்ற தாளியது தலைகீ ழாகத்
தான்கவிழ்ந்து வாயடைத்துத் தானே கெட்டுத்
தாளியென்ற ஆதார தாளி யெல்லாந்
தான்கவிழ்ந்து மனந்தளர்ந்து தயங்க லாச்சே. 834

கைபாகம்

தயங்காமல் தாளியடி கிறா மல்தான்
தாளியடி முனையண்டத் தமருக் குள்ளே
மயங்காமல் மணிநாவி னடிநாக் குக்குள்
மத்திமையுந் தற்சனியும் வகையாய்க் கூட்டித்
தியங்காமல் ஓங்கார விசையாற் றள்ளித்
திருவான கபாடமென்ற திரையை நோக்கிச்
செயங்காணப் பிரமரந்தி ரத்துள் சென்று
திருநடனக் கூத்தறிந்து தெளிவைக் கொள்ளே. 835

கொள்ளடா மதனறிவால் குருவின் பாதங்
கொண்டுகரை யேறுதற்கு மணிநா வுன்னித்
தள்ளடா தமரறிந்து திரையை நீக்கிச்
சக்கரமாய் நின்றசுழு முனையில் மைந்தா
நில்லடா வாசியினால் தமர்மய் யத்தில்
நின்றுகொண்டு அண்டவரை சென்று பார்த்தால்
உள்ளடா ஆதார மூல மெல்லாம்
ஒளிவிளக்காய்த் தோணுதடா உன்னிப் பாரே. 836

உன்னியந்த ரவிமதியை ஒன்றாய்ச் சேர்த்து
உற்றகலைக் கியானமென்ற சுடரைத் தூண்டி
வன்னியனென்ற சமாதியிலே மனங்கொண் டேகி
வாசிவா ஓமெனவே வணங்கி னாக்கால்
சென்னியென்ற உச்சியடி வாரத் துள்ளே
தீர்க்கமுடன் மதியமுர்தத் தெளிவு காணும்
கண்ணிறைந்த தெளிவுதன்னைக் கனிவாய்க் கொண்டால்
காயமென்ற ஆதாரங் கனக மாமே. 837

அமிர்தம் பாய்தல்

ஆமப்பா கனகமென்ற ஆதா ரத்தை
அறிந்துகொண்டு மேலாரு மடுக்கக் கேளு
வாமப்பால் கொண்டசிவ யோகத் தாலே
மார்க்கமுடன் சுகாசனமா யிருந்து கொண்டு
தாமப்பா தன்மனமே சாட்சி யாகத்
தானிருந்து நாவினுனி தமரி லேற்று
ஓமப்பா வாசிவா வசியென் றோத
ஊடுருவிப் பாயுமடா வாசி பாரே. 838

வாசிவா ஓமெனவே மனக்கண் கொண்டு
மகத்தான கேசரியில் மணிநா வுன்னி
ரேசிவா வென்றுஅந்தத் தமரில் செல்ல
நின்றிலங்கும் ரவிமதியும் ஒன்றாய்க் கூட்டி
நாசிவா வென்றுசுளி மேலே நின்று
நாதாந்தக் கண்திறந்து அமுர்தம் பாயும்
வாசிவா வசிவசியென் றோதிக் கொண்டால்
மகத்தான மவனசிவ யோகங் காணே. 839

காணவே யோகத்தி லிருந்து கொண்டு
கருணைபெறச் சுழுமுனையில் மணிநா வுன்னித்
தோணவே மந்திரங்கள் செவித்தா யாகில்
சொல்நிறைந்த அட்சரங்க ளெல்லாஞ் சித்தி
பேணவே ஆதாரம் பிலமாய் நிற்கும்
பெருகிநின்ற வாசிநிதம் பிறழா தய்யா
பூணவே மனம்நிறுத்தி மவுனம் பூட்டப்
பொருந்திமனங் கனிந்தமுர்தம் பொருந்தும் பாரே. 840

பாரப்பா கனிந்தமுர்தத் தேனை மைந்தா
பத்தியுடன் மவுனமதாயிருந்து கொண்டு
சாரப்பா சதாகாலம் பூசித் தாக்கால்
சரமான வாசிதிரு வாசி யாகி
நேரப்பா நிறைந்ததிரு வாசி யாலே
நின்றிலங்கு மவுனகே சரியாள் தானும்
மேரப்பா மேருகிரி திபம் போலே
விளங்குமடா சுழுனையடி முடிமேற் பாரே. 841

பாரப்பா அடிமுடிமேற் பார்க்கும் போது
பதிவான யேகாட்ச ரத்தை மைந்தா
நேரப்பா சவுமியமாய் நிலைக்கச் சொல்வேன்
நிசமான புலத்தியனே நினைவாய்க் கேளு
மேரப்பா வலஞ்சுழிகீத் தடியின் கீழே
மெஞ்ஞான இடஞ்சுழிமேல் சூலஞ் சாத்தித்
தேறப்பா சூலமிடை தீயுங் காலுந்
தீர்க்கமுட னிருத்திமேல் விந்து போடே. 842

போட்டதொரு விந்துவட்டக் கோட்டைக் குள்ளே
பூரணயே காட்சரத்தைப் பார்க்கும் போது
நாட்டமென்ற அஞ்செழுத்தும் அங்கே கண்டேன்
நன்மையுள்ள எட்டுரெண்டும் அங்கே கண்டேன்
ஆட்டமென்ற முக்கோண மேரு கண்டேன்
அதில்நிறைந்த சிதம்பரச்சக் கரமுங் கண்டேன்
தேட்டமென்ற தேட்டமெல்லாம் அங்கே கண்டேன்
சேர்ந்துமிக ஒன்றான செயல்கண் டேனே. 843

செயலறிந்து நடப்பதற்கு மைந்தா மைந்தா
தீர்க்கமுடன் சற்குருவைத் தியானம் பண்ணிப்
பயமகலக் கோமுகஆ சனமேற் கொண்டு
பத்தியுடன் பிராணாயஞ் செய்தா யானால்
தயவாகப் பிராணாய வாசி தானாய்த்
தன்னுள்ளே நின்றாடுந் தன்னைப் பார்த்து
நயமாகச் சொல்லுகிறேன் யோக மார்க்கம்
நடுவான அடிமுடியும் நன்றாய்ப் பாரே. 844

ரேசகம்

பாரப்பா ரேசகந்தான் மாத்திரைதான் நாலு
பதிவான மூலமதி லொன்று ரேசி
காரப்பா பூரகந்தான் மாத்திரைதா னெட்டு
கனிவாக ருத்திரனில் றீங்கென்று பூரி
நேரப்பா கும்பகந்தான் மாத்திரையீ ரெட்டு
நினைவாகக் கண்டமதில் அங்கென்று கும்பி
சாரப்பா சவுபீச மாத்திரைநா லெட்டுச்
சங்கையுடன் ஓம்றீங் அங்கென் றோதே. 845

ஓதுவது ஓங்றீங் அங்கென் றேதான்
உத்தமனே சுழுமுனையில் மணிநா வுன்னி
நீதியுடன் உன்னிநடு மனையிற் சென்று
நிற்பீச மாத்திரைதா னறுபத்து னாலு
வீதியென்ற ஆதார மேலா தாரம்
வெளிதனிலே அறுபத்து நாலு மேத்த
ஆதியென்ற பிராணாயம் இதுதான் மைந்தா
அஞ்சுநிலை தனையறிந்து அடங்கி யேறே. 846

ஏறுவது மனதடங்கிச் சுழுனைக் கேக
என்மகனே பிராணாயக் கருவைக் கேளு
நேருவது சுழுமுனையில் ஓமென் றூணி
நிச்சயமாய் நாலுதிரம் ரேசித் தாக்கால்
பேறுபெற மூலவன்னி மேலே சாடும்
பிரியமுடன் அந்நேரம் ஓம்றீங் கென்று
சீருபெற இருநான்கு பூரித் தாக்கால்
சிவசிவா அந்தவன்னி தீர்க்க மாமே. 847

தீர்க்கமுடன் நின்றுவன்னி கண்டத் தேறு
சிவசிவா அந்நேரம் திரமாய் நின்று
மார்க்கமுடன் ஓம்றீங் அங்கென் றய்யா
மாத்திரைதான் பதினாறு கும்பித் தாக்கால்
பார்க்குமுன்னே யந்தவன்னி சுழூனைக் கேற்கும்
பத்தியுடன் சவுபீச முப்பத்தி ரெண்டும்
ஏற்கையுடன் தானறிந்து மவுனம் பூட்டி
என்மகனே நிற்பீசம் இன்பங் கேளே. 848

இன்பமென்ன நிர்ப்பீச மாத்திரையெட் டெட்டும்
ஏகாந்த அண்டவெளி தன்னி லேத்தி
அன்புடனே வாசிவா ஓமென் றோதி
ஆதரவாய்த் தானிறங்கி அருள்கண் கொண்டு
தென்புடனே ஆதார மூலத் தேகித்
தீர்க்கமுடன் பிராணாய மஞ்சுந் தீர்ந்தால்
பண்புடைய சிவயோக முத்த னாவாய்
பதிவான சிவயோக வாழ்க்கை பாரே. 849

சர்வயோகம்

பாரப்பா சிவயோக வாழ்க்கை பார்க்கப்
பதிவான மாத்திரையை அறியா மல்தான்
சாரப்பா ரவிமதியை மாறு வோரும்
தன்னுணர்வாய் வாயுதனை யடக்கு வோரும்
நேரப்பா என்றுகண்ணை மூடு வோரும்
நிசமாகச் செவிமூக்கை யடைப்போர் தானும்
வீறப்பா கொண்டுலகில் திரிவோர் தானும்
வேதாந்தப் பிராணாயம் விதிகா ணாரே. 850

விதியான அமைத்தவிதி யெழுத்தைப் பத்தி
மெய்ஞ்ஞான சற்குருவைப் பணிந்து கொண்டு
கெதியான பிராணாயம் அறிந்து கொண்டால்
கெவுனமென்ற மவுனசிவ யோகி யாகும்
பதிவான தலமதிலே வாச மாகிப்
பத்திகொண்டு இகபரத்திற் பதிவாய் நிற்பான்
மதியான காலடக்கி ரவியிற் சென்று
மவுனமுற்றுச் சுழுமுனையிற் சென்றமுர்தங் கொள்ளே. 851

கொள்ளப்பா அமுர்தரச பானந் தன்னைக்
கொண்டுகரை யேறுதற்கு வகையைக் கேளு
சொல்லப்பா சற்குருவின் பதியை நோக்கிச்
செங்கமலச் சுழுனையிலே மனதை நாட்டி
நல்லொப்பாய்த் தானிருந்து அகார மான
நன்மையுள்ள காமப்பால் கொண்டு தேர்ந்து
உள்ளப்பா நின்றிலங்கும் உகார சத்தி
உண்மையுள்ள நாதமதை யுண்டு காணே. 852

காணவே நாதவிந்து கொண்டு தேர்ந்தால்
கருவான செடலமதனில் குடிலம் நீங்கும்
பூணவே குடிலமென்ற மாய்கை யற்றால்
பொற்கமல மதில்மவுனம் பூட்ட லாகும்
தோணவே சுழுனையிலே மவுனம் பூட்டிச்
சுத்தியிட சாரிவல சாரி யானால்
பேணவே அண்டரண்டங் காண லாகும்
பெருகிநின்ற வாசியது பிராணன் பாரே. 853

பாரடா பிராணனென்ற பிராண வாய்வு
பக்தியுடன் தானியங்கும் வகையைக் கேளு
நேரடா லாடவிழி சுழியில் தோன்றி
நின்று சித்திர நாவடியில் சிமமெனவே பார்க்குஞ்
சாரடா ஓமெனவே மூலா தாரஞ்
சார்ந்திருந்து நாபியிலே ஆவென் றோடிக்
காரடா சிவ்வெனவே கதிர்மதியிற் சென்று
கபாலத்தைச் சுத்திநடு நாசி காணே. 854

சுவாச நிலை

காணுமிடை பிங்கலையில் மைந்தா கேளு
கைவிரல்நா மூன்றுபிர மாணம் வந்து
பேணுவிரல் பிரமாண நாலுஞ்சென் றேகும்
பிலமான என்விரல்தா னுள்ளே நின்று
தாணுவென நின்றிடத்தில் தானே நிற்கும்
சங்கையுள்ள பிராணநிலை தன்னைக் கண்டு
வானுலகி லிரவுபக லறுப துக்கும்
மைந்தனே சுவாசத்தின் வகையைக் கேளே. 855

கேளப்பா மூலத்திற் சுவாசந் தானும்
கெணிதமுடன் தானிருக்கும் அறுநூ றய்யா
வாளப்பா பிரதிவியி லாயிரமா யாறு
வகையான அப்புவினி லப்படியே நிற்கும்
ஆளப்பா அக்கினியில் அப்படியே நிற்கும்
அரகரா மயேசுபரத்தில் சுவாசமா யிரமாம்
காலப்பா சிவனிடத்தில் சுவாசமா யிரமாங்
கருணைவளர் நாதாந்தந் தன்னிற் காணே. 856

காணவே நாதாந்தம் தெட்சணா மூர்த்தி
கனிவான சுவாசமா யிரமாய் நிற்கும்
பேணவே கூட்டியொரு துகையைக் கேளு
பெருகிநின்ற மூவேழு அறுநூ றாச்சு
தோணவே மூவேழு அறுநூறு தன்னில்
சுழன்றுஏ ழாயிரமு மிருநூ றாச்சு
ஊணுபதி நாலாயிரத்து நானூறு சுவாசம்
உள்ளுணர்வாய் நின்றுதடா உகந்து பாரே. 857

உகந்துநின்ற சுவாசவெளி பாழ்போ காமல்
உத்தமனே தானிருந்த வகையைக் கேளு
அகந்தெளிந்து அகமறிந்து பிராணா யந்தான்
ஆதிதொடுத் தந்தவரை யஞ்சும் பார்த்துச்
செகந்தெளிந்த மூக்குநுனி புருவ மத்தி
திருவான சுழுனையிலே மணிநா வுன்னி
முகந்தெளிந்த பிரமரந்தி ரத்திற் சென்று
முத்திரையிற் சுத்தமுடன் பத்தி நில்லே. 858

மணிநாவுன்னி

நில்லென்ற நிலையறிந்து சுழுனை மேவி
நிரஞ்சனமாய்ச் சற்குருவைத் தியானம் பண்ணி
உள்ளென்ற ரவியறிந்து மவுனம் பூட்டி
ஓங்கார விசையதனால் உன்னி யேறிச்
செல்லென்று பிரமரந்தி ரத்திற் புக்கிச்
சிவயவசி யென்றுதா ரணையே செய்யக்
கல்லென்ற கோட்டைகை வசமாய்ப் போகும்
காத்திருந்து ஓமெனவே கருதி யூதே. 859

மூலசுத்தி

ஊதையிலே துன்பமென்ற வினைகள் நீங்கும்
ஊதுகொண்ட நஞ்சதுவும் உள்கொள்ளாது
போதையிலே மூலமதிற் காந்தி யுண்டாம்
பொருந்திநின்ற காந்தியிலே கடுப்பு கண்டால்
ஆதரவாய்க் கத்தாழஞ் சாறு வாங்கி
அதுக்குநிகர் ஏரண்டத் தயிலம் விட்டுச்
சாதகமாய் நடுவிரலில் தோய்த்துக் கொண்டு
தன்மையுடன் மூலமதிற் சுழத்தி யாட்டே. 860

ஆட்டையிலே துர்மலங்கள் விஷநீ ரெல்லாம்
அப்பனே கிழ்நோக்கி அகன்று போகும்
நாட்டையிலே பூரணத்தை நாடிச் செல்லு
நடுக்கமுடன் மயக்கங்கண் டாலமுரி கொள்ளு
மூட்டையிலே பசிதாகங் கண்டால் மைந்தா
முறையோடே பாலுடனே யமுது கொள்ளு
தாட்டிகமாய் முன்போலே அமுரி கொள்ளு
தனிமிளகு போயமுரி தன்னிற் கொள்ளே. 861

கொள்ளையிலே கபநீர்கள் கழன்று போகும்
கொடிதான சூட்டுடனே மயக்கங் கண்டால்
அல்லவே சொல்லுகிறேன் மைந்தா கேளு
அப்போதே மூதண்டக் கிழாயங் கேளு
செல்லவே அந்திசந்தி யாறு வேளை
தீர்க்கமுடன் கொண்டிடவே மேகம் போகும்
சொல்லவொண்ணாச் சூட்டுடனே மேகந் தீர்ந்தால்
சுருதியுள்ள வாசியது துலங்கும் பாரே. 862

பாரப்பா சூட்டுடனே கபங்கள் தீர்ந்தால்
பதிவான வாசியது சுழுனைக் கேகும்
தேரப்பா அமுர்தரசம் ஓடும் பாரு
சிங்குவங்கு நன்மையினால் தீபங் காணும்
காரப்பா தீபமதைப் போதத் தாலே
கருணைவளர் போதமென்ற மவுனத் தாயை
நேரப்பா நிலையறிந்து மவுனம் பெற்று
நேர்மையுடன் சதானந்தி தன்னைக் காணே. 863

கபம்

காணவே கேசரத்தின் மேலே சென்று
கதித்தெழுந்த சூடுடனே கபால நீர்கள்
தோணவே இன்னீர்கள் கைத்தி ருக்கும்
சுத்தமுடன் இதையறிந்து வழலை தள்ளிப்
பூணவே பூரணமாய் மவுனம் பூண்டு
புத்தியுடன் கண்டறிந்து கபநீர் போக்கி
நாணவே சேத்துமந்தான் இடரே செய்யில்
நாடிநீ யகண்டறிந்து கண்டம் பாரே. 864

பாரடா கண்டமென்றால் கழுத்தின் மேலே
பத்திநின்ற நீரதனால் ரோக மாச்சு
நேரடா இன்னீர்தான் நாள்கள் தோறும்
நின்றுகொண்டு கபத்தை அகலப் பண்ணும்
காரடா கபமதுதா னின்று கொண்டு
கனமான நெஞ்சில்வெகு கடினஞ் செய்யும்
சாரடா சுவாசமதைத் தரிக்கொட் டாது
தமரான மூக்குநுனி சுளியைப் பாரே. 865

பாரப்பா சுழுனைதிரு வாச லுக்குப்
பதிவான கதவிருதாள் பூட்டு மேலே
நேரப்பா அப்பூட்டுக் கடுக்க மைந்தா
நெருக்குதிட்டி வாசலுண்டு அதுக்குங் கீழே
காரடா சுழுனைதிரு வாசற் குள்ளே
கதித்தெழுந்த வாசலடா வாசந் தந்தம்
மேரப்பா கொண்டெழுந்த சுவாச தந்தம்
விசையுடனே பரிபட்டு பனிரெண் டாச்சே. 866

ஆச்சப்பா சூரியகலை பனிரெண் டாச்சு
அக்கலையின் எண்கலைதான் சீவாத் மாவாய்
மூச்சப்பா நாலுகலை வெளியாய் நின்று
முத்திபர மாற்றுவாய் முடிந்து தப்பா
நீச்சப்பா நிலையறிந்து மவுனங் கொண்டு
நிலையறிந்து உள்வெளியும் ஒன்றாய்க் கண்டால்
போச்சப்பா அவமிருத்து ஒடுங்கிப் போச்சு
பூரணத்தில் தானொடுங்கிக் காட்சி யாச்சே. 867

காட்சியென்ற காட்சியெல்லாம் வாசி யாச்சு
கருணைவளர் சிவயோகம் வாசி யாச்சு
பேச்சிறந்த மவுனமது வாசி யாச்சு
பெருகிநின்ற மவுனரசம் வாசி யாச்சு
தாச்சியில்லா வாதமது வாசி யாச்சு
சகலகலை போதமது வாசி யாச்சு
மூச்சிறந்து நின்றவிடம் வாசி யாச்சு
மூதண்ட அண்டவெளி மூலம் பாரே. 868

பாரப்பா மூலமுத லாறா தாரம்
பதிவான சுழுனையடா மேலா தாரம்
காரப்பா ஆதார மீரா றுக்குங்
கருணைவளர் போதமடா அமுர்த விந்து
மேரப்பா மேருகிரி விந்தோ டய்யா
மெஞ்ஞான மானதொரு நாதஞ் சேர்க்க
ஆரப்பா அறிவார்கள் ரெண்டு மொன்றாய்
அடங்கியது பூரணமாய்க் கெங்கை யாச்சே. 869

ஆச்சப்பா கெங்கையென்றா லார்தான் காண்பார்?
அருளான மதியமுர்தங் கெங்கை யாச்சு
நீச்சப்பா நிலையாத கங்கை தன்னை
நிலையறிந்து நீஞ்சினபேர் கோடிக் கொன்று
மூச்சப்பா முன்னிலையா மவுனம் பூட்ட
முனையான சுழுனைவழிக் குள்ளே சென்றால்
வாச்சப்பா வென்றுதிரு வாசி கொண்டு
மார்க்கமுடன் தானிருத்தி வருந்தி நில்லே. 870

வருந்திநின்ற அமுர்தகலை யுட்கொண் டேதான்
வாங்கடா மதியமுர்த பானந் தானும்
திருந்தியதோர் திருகுசுழு முனைமை யத்தில்
தெளிந்துவரும் அமுர்தரசம் தேனைக் கொண்டால்
இருந்துயுக முடிவரைகள் காண லாகும்
ஈராறு வரைகடக்கக் கெவுன மாகும்
அருந்தவசு பெற்றவர்க்கு மிந்த யோகம்
ஆதிபரா பரனருளால் அறிகு வாரே. 871

அறிவான பூரணமே யமுர்த போதம்
ஆதிசிவ போதமென்று அமுர்தம் வாங்கு
குறியான சரக்குவகை பாஷா ணங்கள்
கூறுகின்ற உபரசங்கள் கார சாரம்
சரியாகச் சொன்னவகை சரக்கெ லாந்தன்
சணத்திலே கட்டுமடா மனதைக் காரு
துரியாதீ தந்தனிலே நின்று தேறிச்
சுத்தமுடன் சாக்கிரத்தின் கோட்டைச் சாரே. 872

சாரப்பா சாக்கிரத்தின் நடுமய் யத்தில்
சாக்கிரமாங் கோட்டைநடு வாசற் குள்ளே
சேரப்பா மனதிருத்தி வாசி கொண்டு
சிவசிவா நடனசபைக் குள்ளே சென்று
பாரப்பா பஞ்சசபை யஞ்சுந் தானாய்ப்
பக்குவமாய்க் கண்டுநிதம் கொண்டா யானால்
ஆரப்பா உனக்குநிக ராரு மில்லை
ஆதிசிவ யோகியென அறிவாம் பாரே. 873

சாரக்கட்டு

பாரப்பா அமுர்தரச பானம் வாங்கிப்
பத்தியுடன் பீங்கானில் பதனம் பண்ணி
நேரப்பா சாரமுடன் காரங் கூட்டி
நிசமான வங்கபற்ப மரையே சேர்த்து
வீரப்பா தாணொடுங்கக் கல்வத் திட்டு
வேதாந்த அமுர்தரசம் விட்டு ஆட்டித்
தேறப்பா மெழுகதுபோல் நன்றா யாட்டித்
தீர்க்கமுடன் தானுருட்டி ரவியில் வையே. 874

வங்கசுண்ணம் சோமானம்

வையப்பா ரவிதனிலே நன்றாய்க் காய்ந்தால்
மார்க்கமுடன் மண்சீலை வலுவாய்ச் செய்து
மெய்யப்பா காட்டெருவில் புடமே செய்ய
வேகமுள்ள சாரமது கட்டு மப்பா
பொய்யப்பா போகாது சாரக் கட்டு
புத்தியுடன் கண்மணியே நன்றாய்ப் பாரு
செய்யப்பா கைபாகத் தாலே பார்த்தால்
தீர்க்கமுள்ள வீரத்தின் கட்டுக் கேளே. 875

வீரக்கட்டு

கட்டான வீரமதின் கட்டைக் கேளு
கருவான வீரமுடன் துருசு சேர்த்து
மட்டாக வங்கபற்பங் காலே கூட்டி
மார்க்கமுடன் கல்வமதில் வைத்து மைந்தா
மட்டான மதியமூர்த்தந் தன்னா லாட்டி
மார்க்கமுடன் வழித்துருட்டி ரவியில் போடு
திட்டமுடன் காட்டெருவில் புடத்தைப் போட்டால்
சிவசிவா வீரமது கட்டுங் காணே. 876

காணப்பா சாரமுடன் வீரம் ரெண்டும்
கைமுறையா யமுர்தரசத் தாலே கட்டிப்
பூணப்பா பாணிதனில் பதனம் பண்ணிப்
புத்தியுடன் இன்னமொரு கருவைக் கேளு
பேணப்பா நாகமதைக் குகையி லிட்டுப்
பெருமையுடன் தானுருகும் போதி லேதான்
தோணப்பா சாரமுடன் வீரம் ரெண்டும்
சுத்தமுடன் பத்துக்கு ஒன்று சேரே. 877

தொந்தநாகக்கட்டு

சேர்த்துநன்றாய் நாகமதை உருக்கிச் சாய்க்கச்
சீரடங்கிக் கட்டியது வெள்ளி போலாம்
காத்துநன்றாய் மூன்றுதிர முருகும் போது
கனகமென்ற தங்கமதுக் கிடையே சேர்ததுப்
பார்த்திபனே தானெடுத்துப் பார்த்தா யானால்
பதிவான நாகமது குருவாய்ப் போச்சு
ஆற்றுமத்துக் குயிரான குருவைப் போற்றி
அருள்பெருகும் நாககுரு வேதை கேளு. 878

கேளப்பா செம்புவெள்ளி யாறு நாலுங்
கிருபையுள்ள நாககுரு வொன்று கூட்டிக்
காலப்பா வலுவறிந்து உருக்கிப் பாரு
கனகமென்ற தங்கமடா மங்காத் தங்கம்
ஆளப்பா மங்காத தங்கத் தாயை
அனுதினமும் பூசித்து அருளைப் பெற்றுத்
தாளப்பா திறந்தமுர்தந் தானே யீவாள்
தன்மனமே சாட்சியதா யிருந்து வாழே. 879

இருந்துமிக வாழ்வதற்கு மைந்தா கேளு
இன்பமென்ற மவுனமதை யார்தான் காண்பார்
வருந்துகின்ற அண்ணாக்கை யுண்ணாக் குள்ளே
வாழ்ந்திருக்கத் தானிருத்தி வாசி யூது
அருந்தவமாய் நின்றுதிரு வாசி யூத
அருள்பெருகிப் பூரணமா யண்டத் தேறும்
பொருந்தியண்டத் தமருள்ளே யேறும் போது
பூரணமுங் காரணமும் பொருந்தும் பாரே. 880-

பாரப்பா மனதறிவாய்ப் பொருந்தும் போது
　　பதிவான கேசரியில் மனது கூர்ந்து
நேரப்பா நின்றவளு மமுர்தம் ஈவாள்!
　　நிசமான ரவிமதியும் வசமாய் நிற்கும்
தேறப்பா தேறிமன தறிவாய் நிற்கும்
　　சிங்குவங்கு தானறிந்து நடுவி லேறிச்
சாரப்பா சராசரமே தான்தா னாகத்
　　தன்மையுடன் பூரணமாய்த் தன்னைப் பாரே. 881

தன்னைத்தான் தானறிந்து விண்ணை நோக்கித்
　　தமரான அண்டவெளிக் குள்ளே புக்கி
உன்னைத்தா னறிந்துசிவ ஓமென் றூணி
　　உறுதியுடன் மனம்நிறுத்தி யேறி னாக்கால்
விண்ணைத்தா னறிந்துவலஞ் சுத்து தற்கு
　　வேகமுடன் கெவுனமதில் மேவ லாகும்
கண்ணைத்தா னறிந்துமனக் கண்ணைக் கொண்டு
　　கயிலாச முடிவரையுங் காண லாமே. 882

காணவே இன்னமொரு சூட்சங் கேளு
　　கருவான நாகத்தைத் தங்கத் தாட்டிப்
பேணவே இதுக்குநிகர் கெந்தி சேர்த்துப்
　　பிலமான அமுர்தரச விந்தி னாலே
பூணவே கல்வமதில் நன்றா யாட்டிப்
　　புத்தியுடன் வழித்துருட்டி ரவியில் போட்டுத்
தோணவே ரவியளவில் காய்ந்து தானால்
　　சுத்தமுடன் சருகெருவில் புடத்தைப் போடே. 883

புடம்போடும் வகையதுதான் சொல்லக் கேளு
போதமுடன் சருகெருவில் பொடிமேல் வைத்துத்
திடமாக மேலுமந்தச் சருகைப் போட்டுத்
தீர்க்கமுடன் இன்னமொரு கருவைக் கேளு
அடவாக அதின்மேலே எருவ டுக்கி
அற்புதமாய்ப் புடம்போட்டு எடுத்துப் பாரு
குடம்போன்ற மாதுதிரு மகிமை யாலே
குவிந்தமலர் செந்தூர மாகும் பாரே. 884

இன்பமென்ன இதுவே மாத்தெட் டெட்டு
யேகாந்த அண்டவெளி தன்னி லேத்தி
அன்புடனே வாசிவா ஓமென் றோதி
ஆதரவாய்த் தானிறங்கி யருள்கண் கொண்டு
தென்புடனே ஆதார மூலத் தேகித்
தீர்க்கமுடன் பிறாணாய மஞ்சுத் தீர்ந்தால்
பண்புடைய சிவயோக முத்த னாவாய்
பதிவான சிவயோக வாழ்க்கை பாரே. 885

பாரப்பா செந்தூர மதிகக் காந்தி
பக்தியுடன் தானெடுத்துப் பதனம் பண்ணி
நேரப்பா நிலையறிந்து குருவைப் போற்றி
நித்தியமும் அந்திசந்தி கொண்டா யானால்
ஆரப்பா உனக்கிது சொல்லப் போறேன்
ஆனந்த மதியமுர்த மறிவா யப்பா
காரப்பா அந்தமுர்தங் கொண்டு தேர்ந்து
கைமுறையாய் வாதமுறைக் கருவைப் பாரே. 886

கருவான நாகரச செந்தூ ரத்தைக்
கருணையுடன் வெள்ளிசெம்பில் கடாட்சித் தாக்கால்
குருவான தங்கமதை யென்ன சொல்வேன்
கோடிரவி காந்தியடா கூறப் போமோ
திருவான செங்கமலச் சோதித் தாயைச்
சிவசிவா மவுனமென்ற வாசி பூட்டித்
தருவான அரூபமென்ற வாசல் சென்று
தன்மயமும் விண்மயமும் ஒன்றாய்ப் பாரே. 887

பாரப்பா பூரமென்ற கற்பூ ரத்தில்
பதத்நின்ற பாசமது காண வேண்டிக்
காரப்பா கல்லுப்பு வெடியுப்புச் சீனம்
கருவான பூரமுடன் துருசு சற்று
நேரப்பா சரியிடையாய்க் கல்வத் திட்டு
நீமகனே மவுனரசந் தன்னா லாட்டிச்
சாரப்பா யாட்டியதை வட்டுப் பண்ணிச்
சங்கையுடன் காயவைத்துப் புடத்தைப் போடே. 888

போட்டபுட மாறவிட்டு எடுத்துப் பாரு
புண்ணியனே அறுசரக்கு மொன்றாய்க் கட்டி
நாட்டமுட வீறியது சுண்ண மாகும்
நல்லபிர யோகமடா சுண்ணத் தாட்டு
தேட்டமுடன் சுண்ணமதைப் பதனம் பண்ணித்
தீர்க்கமுடன் தாம்புரத் தகடு செய்து
வாட்டமில்லாச் சுண்ணமதை யமுர்தந் தன்னால்
வணக்கமுடன் தான்குழைத்த தகட்டில் பூசே. 889

பூசியே காயவைத்து மைந்தா கேளு
புத்தியுடன் சருகதுவின் சாம்பல் தன்னில்
நேசமுடன் கீழ்மேலும் நன்றா யிட்டு
நேமமுடன் தானிருந்து புடத்தைப் போடு
வாசமுடன் வாசிதனைச் சுழுனைக் கேத்தி
மைந்தனே புடமாறி யெடுத்துப் பாரு
ஆகவென நின்றதாம் பூரந் தானும்
அங்கமுட னூறல்வைத்துத் தங்க மாச்சே. 890

தாம்பரசுத்தி

தங்கமென்ற செம்புதன்னில் தங்கஞ் சேர்க்கத்
தங்கவய தென்னசொல்வேன் மங்காத் தங்கம்
அங்கமுள்ள வாதைமுறைக் குறுதி யான
அருமையுள்ள செம்புசுத்தி யதிக வேதை
தங்கமுடன் இன்னமொரு சுத்தி கேளு
தாம்பூரக் குகையில் நின் றுருகும் போது
பங்கமில்லாக் கருநாக ரசித மொன்றாய்ப்
பாச்சியதைத் தானெடுத்து ஓட்டி லூதே. 891

ஊதடா கசடறவே ஓட்டி லூதி
உத்தமனே தானெடுத்து உருக்கிப் போடு
சூதடா இந்தமுறை கருவாய்ப் பாரு
சுத்தமென்ற சத்தியடா மெத்த நன்று
வாதடா செய்துவரும் வாசி தன்னை
வகையுடனே சுத்திமுறை வரிசை கேளு
கோதறவே சுத்திமுறை சொன்னா னானால்
குருபுத்திர னாகுமென்று குணமாய்ப் பேசே. 892

குடவன் செம்பு

குணமான இன்னமொரு மார்க்கங் கேளு
குடவனென்ற பித்தளையைக் குணமாய்த் தட்டிக்
கனமான சாரமுடன் வெடியுஞ் சீனங்
கண்டருடன் காரமுடன் பூரஞ் சேர்த்து
மனமான சத்தியரை வாசி கூட்டி
மார்க்கமுடன் மதியமுர்தந் தன்னா லாட்டித்
தனமான குடவனிலே பிசரி மைந்தா
தன்மையுடன் ஓட்டில்வைத்துப் புடத்தைப் போடே. 893

போட்டபுடமாறவிட்டு எடுத்துப் பாரு
புத்தியுடன் மூன்றுதிரம் புடமே செய்து
நாட்டமுடன் றானெடுத்துப் பார்த்தா யானால்
நாற்றமுள்ள குடவனது செம்பே யாகும்
தேட்டமென்ற குடவன்செம்பை யெடுத்து மைந்தா
செம்மையுடன் வெள்ளிதனில் நாலுக் கொன்று
ஆட்டமுடன் றான்கொடுத்து உருக்கிப் பார்த்தால்
ஆறுவய தானசிவ மாத்துத் தானே. 894

லிங்கக்கட்டு

தானான லிங்கமடா சாதி லிங்கம்
தன்மையுடன் கட்டுமுறை திட்டங் கேளு
வானான காசியுட குப்பி வாங்கி
மார்க்கமுடன் கல்வமதில் பொடித்துக் கொண்டு
கோனான வெடியுடனே சீனக் காரம்
குவிந்த அண்டத் தோடுடனே காரங் கூட்டி
ஊனான மதியமுர்தந் தன்னா லாட்டி
உண்மையுடன் லிங்கமதில் கவசஞ் செய்யே. 895

செய்யடா கவசமது வலுவாய்ச் செய்து
தீர்க்கமுடன் மண்சீலை திறமாய்ச் சுத்தி
வையடா ரவிமுகத்தில் நன்றாய்க் காய்ந்தால்
மார்க்கமுடன் உமிப்புடத்தில் வலுத்துப் போகும்
கையடா தவறாமல் மெய்யாய்ப் பாரு
கனகமென்ற பாக்கியங்கள் மைமே லாகும்
பொய்யடா போகாது தன்னைப் பாரு
பூரணமா மவுனமதைப் பொருந்தி நில்லே. 896

பொருந்திமனம் நின்றுசிவ யோகஞ் செய்யப்
பூரணமா யின்னமொரு சுட்டுட் சொல்வேன்
திருந்தியதோர் அயக்காந்தங் கல்வத் திட்டுத்
தீர்க்கமுடன் பழச்சாற்றால் நன்றா யாட்டி
வருந்திமிக ஆட்டையிலே மைந்தா கேளு
மால்தேவி மனோசிலையுங் கெந்தி கூட்டி
அருந்தவமா யமுர்தரசந் தன்னா லாட்டி
அடக்கமுடன் லிங்கமதில் அங்கி பூட்டே. 897

பூட்டிமிக ரவிதனிலே காய்ந்த பின்பு
புத்தியுடன் மண்சீலை பொருந்தச் செய்து
நாட்டமுடன் கீழ்மேலும் உமியைக் கொட்டி
நாதாந்தச் சற்குருவைத் தியானம் பண்ணித்
தாட்டிகமாய்ப் புடம்போட்டு எடுத்துப் பார்த்தால்
தன்மையுள்ள லிங்கமது கட்டுப் போகும்
தேட்டமுடன் கட்டினதோர் லிங்கந் தன்னைத்
திருவான தங்கமுடன் சேர்த்துப் பாரே. 898

பாரப்பா தங்கமுடன் லிங்கஞ் சேர்த்துப்
பத்தியுடன் தானுருகி மணிபோ லாகும்
நேரப்பா லிங்கதங்க மணியை வாங்கி
நிச்சயமாய் வெள்ளிதனில் பத்துக் கொன்று
சாரப்பா தான்கொடுத்து உருக்கிப் பாரு
தன்மையுடன் வெள்ளியது தங்க மாகும்
ஆரப்பா அறிவார்கள் லிங்க வேதை
அடங்காத வேதையடா ஆதி பாரே. 899

அண்டபிண்டம்

ஆதியென்ற பிரமதல மணிநா லாச்சு
அண்ணாக்கை யுண்ணாக்கு ளடக்கி மைந்தா
சோதியென்ற சுழுனையிலே துலங்கப் பண்ணித்
துருவமென்ற தமர்தனிலே சொக்கி நின்று
நீதியுடன் அண்டவெளி தன்னைப் பார்த்து
நிறைந்தமதி பூரணமாய் நின்றா யானால்
சாதியென்ற சமரசமு மொன்றாய்ப் போகும்
தனித்திருந்து மவுனமதில் சார்ந்து நில்லே. 900

நில்லடா நிலையறிந்து வாசி கொண்டு
நீமகனே உன்னிவிளை யாடும் போது
உள்ளடா சுழுனையிலே மனதை வைத்து
உத்தமனே ஓங்காரக் கம்பம் நாட்டிச்
சொல்லடா சிவாயவசி யென்று மைந்தா
சுகமாகப் பிராணாயஞ் செய்தா யாகில்
அல்லடா சொல்லுகிறேன் ஒளிதான் காணும்
ஆதிவெளி தனையறிந்து அண்டம் பாரே. 901

பாரப்பா அண்டபிண்ட மார்தான் காண்பார்
பதியறிந்து காண்பதற்கு வகையைக் கேளு
நேரப்பா பிண்டமென்றா லண்ணாக் காச்சு
நிதமான அண்டமென்றால் சுழுனை யாச்சு
காரப்பா அண்ணாக்காச் சுழுனைக் குள்ளே
கைமுறையா யுன்னிநடு மனையிற் சென்று
மேரப்பா சுத்திவலம் வந்தா யாகில்
மெய்ஞ்ஞான மானசெக சோதி தானே. 902

அயம் வன்னி மதியில் தாளகக் கட்டு

சோதியென்ற ஆதியடா தங்கத் தாயைச்
சுத்தமுடன் கண்டுமன முத்தி யாக
ஆதியென்ற அயமுடனே வன்னி கூட்டி
அந்தஇடை மதிசேர்த்து உருகும் போது
நீதியுடன் அரிதாரக் கட்டி மைந்தா
நிசமான அந்திடைக்கு வசமாய்ச் சேர்த்துச்
சாதியென்ற தங்காதி நாலுக் கொன்று
சங்கையுடன் தான்கொடுத்து உருக்கிப் பாரே. 903

பாரடா மனதுருக்க உருக்கிப் பார்த்தால்
பசுமையுள்ள தங்காதி களங்க மாச்சு
காரடா களங்கமில்லாக் களங்கு தன்னைக்
கருணையுடன் வெள்ளிசெம்பில் பத்துக் கொன்று
சேரடா தெளிவறிந்து சேர்க்கும் போதில்
திருவான லெட்சுமிதன் னிடமே நிற்பாள்
ஆரடா உனக்கீடு யாரு மில்லை
அருமையுள்ள மவுனரச ஆண்மை தானே. 904

தானேதான் நின்றுவிளை யாடு தற்குத்
தன்மையுட னின்னமொரு சூட்சங் கேளு
பூணவே அயமுடனே வன்னி கூட்டிப்
புத்தியுடன் கல்வமதில் பழச்சாறு விட்டு
ஏனோதான் திரியாமல் நன்றா யாட்டு
இன்பமுட னாட்டையிலே வீரம் லிங்கம்
மானேகேள் தாரமுடன் காரங் கூட்டி
மடியநன்றாய்த் தானரைத்து வட்டுப் பண்ணே. 905

பண்ணியதோர் வட்டதனை ரவியில் போடு
பாலகனே தானெடுத்து ஓட்டில் வைத்து
உண்ணியது போகாமற் கவசஞ் செய்து
உத்தமனே நிதானமதாய்ப் புடத்தைப் போடப்
புண்ணியனே யறுசரக்கு மொன்றாய்க் கட்டிப்
பூரணமாய் நிற்குமடா புதுமை யாகத்
தண்ணிமையாய்க் கட்டியதைத் தங்கந் தன்னில்
தாக்கஅந்தத் தங்கமது குருவாங் காணே. 906

குருவான தங்கமதை யெடுத்து மைந்தா
குணமாக மதிதனிலே பத்துக் கொன்று
கருவாகத் தான்கொடுத்து உருக்கிப் பாரு
கனகமென்ற தங்கமதை யென்ன சொல்வேன்
திருவான லெட்சுமிதன் பாதங் கண்டால்
சிவயோக மானதவஞ் சித்தி யாகும்
தருவான கற்பமுடன் சித்தி யாகும்
தன்மையுடன் மவுனமதிற் சார்ந்து நில்லே. 907

சார்ந்துஅந்த நிலையறிந்து மவுனங் கொண்டு
சச்சிதா னந்தமென்ற சுழுனை மீதில்
கூர்ந்துமனக் குறியறிந்து வாசி பூட்டிக்
குருவான பிரமதல மறிந்து கொண்டு
தேர்ந்துஅந்தத் தலமறிந்து வாச மானால்
சிவசிவா கயிலாசந் தேக மாகும்
தேர்ந்துகொண்டு நிலையறிந்து வாசி பூட்டி
நின்றதினால் சிவயோகம் நிசம தாமே. 908

நிசமான சுழுனையிலே வாசி பூட்டி
நீமகனே அண்டபதங் கொண்டா யானால்
திசமான தீட்சையடா மவுன தீட்சை
சித்திமுத்தி யாகுமடா திருவை நோக்கு
வசமான பூரணமுந் தானே யாவாய்
வாசிசிவ யோகியென்ற மவுனி யாவாய்
கதிகாமற் காலறிந்து வாசி கொண்டு
கண்மூக்கு மத்தியென்ற கருத்தி லொண்ணே. 909

ஒண்ணான சிவதீட்சை தன்னை மைந்தா
உருமையுடன் மவுனசா தகமாய்ச் சொல்வேன்
கண்ணான தீட்சைசிவ தீட்சை தானும்
கருணைவளர் காரமடா விந்து விந்து
முன்னான விந்ததுவுந் தண்ணீர் தண்ணீர்
முறையறிந்து தண்ணீரை யொன்றில் வாங்கி
விண்ணான வால்மிளகு பொடிதான் செய்து
விபரமுடன் பணவிடைதான் நீரில் போடே. 910

போட்டவுடன் தான்விறலி மைந்தா மைந்தா
புத்தியுடன் சிவயவசி யென்று நீயும்
நாட்டமுடன் கொண்டுவிடு உதய காலம்
நன்மையுடன் சதாகாலம் சாதித் தாக்கால்
வாட்டமென்ற வல்பிணியும் விஷரோ கங்கள்
மார்க்கமுடன் தான்விலகி மகிழ்ச்சி யாகும்
ஆட்டமென்ற சக்கரமுஞ் சாரா தய்யா
ஆதியென்ற வாசியதை யமுழ்த்தி யூதே. 911

அழுத்தமுனை தனையறிந்து பக்கஞ் சென்று
ஆதியென்ற அகாரமதை யறிந்து கொண்டு
முழித்துநிமை தனையமுழ்த்தி உகார சித்தி
மூர்க்கமுள்ள சத்தியைநீ மார்க்க மாக
வழுத்தியதோர் அஞ்செழுத்தால் மவுனங் கொண்டு
வரிசையுடன் அங்கெனவே வாசி பூட்டிச்
செழித்தபுத்தி யறிவாலே கபாட வாசல்
திரையகற்றி யறைபுகுந்து திருவை நோக்கே. 912

நோக்குமன தறிவாலே மவுனங் கொண்டு
நுண்மையுடன் சத்திசிவ பூசை செய்தால்
தாக்கிமனம் நோக்குமுனே யண்டத் தேறு
சந்திரனுஞ் சூரியனுந் தானே தானாய்
வாக்குமன மொன்றாகிச் சுளிமய் யத்தில்
மகிழ்ந்திருக்கும் வாசிசர மொன்றாய் நின்று
நாக்குமுனை யண்ணாக்கை யுண்ணாக் குக்குள்
நாதாந்தச் சுமுனைவளி கண்ணு நோக்கே. 913

மவுனயோகம்

கண்ணான மவுனமதின் தீட்சை தன்னைக்
கருணையுடன் சொல்லுகிறேன் கருவாய்க் கேளு
முன்னான மூலமதில் உகாரம் ஓட்டு
முதலான கண்டமதில் அகாரம் ஓட்டு
விண்ணான புருவமதில் மகாரம் ஓட்டு
வேகமுடன் நாவினுனி சுமுனைக் கேத்தி
ஒண்ணான சுமுமுனையிற் சோதி காணும்
ஒருகோடி சூரியன்போ லுதய மாமே. 914

உதையமென்ற சுழுனையிலே மைந்தா நீயும்
உன்னிமிக நாவினுனி யுள்ளே சென்றால்
இதையமென்ற இருதயத்திற் சோதி காணும்
இன்பரச அமுர்தமது தானே ஊறும்
அதையறிந்து அந்தமுர்தம் கொண்டால் மைந்தா
ஆயிரமாம் வருஷமது அசையா தில்லம்
பதையாமல் மனம்நிறுத்தி மவுனம் உன்னு
பரமகயி லாசமென்ற தேக மாச்சே. 915

ஆமப்பா தேகமென்ற பஞ்ச பூதம்
அடங்கியொன்றாய் நின்றவிட மார்தான் காண்பார்
நாமப்பா சொல்லுகிறோம் மைந்தா கேளு
நாட்டமென்ற பூதமஞ்சும் நாமென் றெண்ணித்
தாமப்பா தன்னிலையாந் தமருக் குள்ளே
தன்னறிவே பூரணமாய்த் தானே சென்று
ஓமப்பா வென்றுமன துன்னி யாட
ஊடுருவிப் பரந்துமனம் ஒடுங்கும் காணே. 916

காணாத அந்தரங்கச் சுழுனை வீடு
கண்ணான மணிவீடு கமல வீடு
தோணாது தோணுகிற சோதி வீடு
சோதிமய மானகயி லாச வீடு
வானான தேவர்களும் ரிஷிகள் சித்தர்
வரிசையுடன் தான்வணங்கி மகிழ்ந்த வீடு
கோனான குருபீட மான வீட்டைக்
குறியறிந்து வணங்குதற்குச் சொன்னேன் பாரே. 917

பாரப்பா மனமேது தியான மேது?
பதிவான சரிதையொடு ஞான மேது?
நேரப்பா விழிமடவார் மயக்க மேது?
நிசமான மக்களொடு சுற்ற மேது?
காரப்பா உபதேசக் குருதா னேது?
கருவேது கைபாக முறைதா னேது?
சாரப்பா உடலேது உயிர்தான் ஏது?
தகமையில்லாப் பெருவெளியிற் சாருந் தானே. 918

தானென்ற வெண்காரக் கம்ப மாச்சு
சங்கையுடன் அகாரமங்கே பிறந்த தாச்சு
வானென்ற வளியறியார்க் கொன்று மில்லை
மகத்தான பூரணத்தை மகிழ்ந்து சொன்னோம்
ஊனென்ற உடலுயிரும் நாத விந்து
ஒடுங்கிநின்ற சுழுனையடா அண்ட மேரு
கோனென்ற குருபீட மான மேரில்
குறியறிந்து நெறிதமர்க்குள் குணமாய் நில்லே. 919

குணமான மந்திரத்தைச் சொல்லக் கேளு
குருவான அகாரமொடு உகாரத் தோடு
இனமான மகாரமொடு மூன்றுஞ் சேர்த்தால்
இருத்துமடா சிவயோக இன்ப மாகக்
கனமான உச்சிவெளிச் சுழுனை மூலங்
கண்ணறிந்து பின்னதனைக் கருவாய்ப் பாரு
மனமான பஞ்சஅறை வாசல் காண
மவுனமுடன் ஓம்சிவ வசியென் றூணே. 920

ஊணுவது மந்திரத்தைச் சொல்லக் கேளு
உண்மையுடன் அண்டவெளிக் குள்ளே சென்று
காணுவது ரேசகபூ ரகமாய் நின்று
கலையறிந்து கும்பகத்தில் கனிந்து கொண்டால்
தோணுவது என்னென்று சொல்வே னையா?
தூண்டாத மணிவிளக்கின் சோதி தன்னைப்
பேணுவதாற் கயிலாசந் தேக மாச்சு
பேரண்டச் சுத்தவெளி மகார மாச்சு. 921

ஆச்சப்பா குறிகையெழுத் தல்ல கேளு
அப்பனே சரிதையிலே யடங்கி நின்று
மூச்சப்பா ஆறுதலந் தன்னைக் கண்டு
முனையறிந்து இடையொடுபின் கலையைப்பாரு
பேசசென்ற உடலுயிரை நன்றாய்ப் பேணு
பேரண்டச் சுழுமுனையில் மனக்கண் ணாட்டு
நீச்சென்ற அக்கினிபஞ் சாட்சரத்தை மைந்தா
நிலைநிறுத்திப் பூரணமாய் நின்று பாரே. 922

பாரடா கண்டமெனுந் தொண்டைக் குள்ளே
பக்தியுடன் அங்கென்று வாசி கொண்டு
நேரடா அந்தரங்கச் சுழிய றிந்து
நிலையறிந்து தமர்வாசற் குள்ளே சென்றால்
தூரடா அடிமுடியு மொன்றாய்க் காணும்
சுகசீவ பிராணகலை துலங்கும் பாரு
ஏறடா வாசிகொண்டு முனைமை யத்தில்
இருந்துதடா அமுர்தமது இறங்குந் தானே. 923

தானான பிரமநிலை அண்டத் துச்சி
தமரான அந்திரத்தில் தானே நின்று
வீணான சத்தாதி விசையாம் போக்கி
மெய்ஞ்ஞான பூரணமாய்த் தன்னைப் பார்த்தால்
ஊனான சிவாத்துமாப் பரமாத்து மாவில்
உண்மையுடன் நின்றகா ரணந்தான் மைந்தா
கோனான குருவினுப தேசங் கொண்டால்
குறியறிந்து அக்குறியிற் குணமா வாரே. 924

வாறான அசபையெனுஞ் சீவாத்து மாவாய்
வணக்கமுடன் பராபரத்தில் மகிழ்ந்து கூடக்
கூறான ஓங்கார மூல வட்டக்
குண்டலியாம் பிரணவத்தின் குணாதீ தந்தான்
நேரான சிங்குவங்கு ரந்திர வாய்வை
நீங்காமல் ஏகமதாய் நிறுத்திக் கொண்டு
பாரான அட்சரசா தனமுந் தள்ளிப்
பரமகயி லாசமென்னும் பதியில் நில்லே. 925

நில்லடா நிலையான அண்டத் துள்ளே
நின்றுவினை யாடுதற்கு நிச்சயமாய் மைந்தா
செல்லடா அந்தரங்கச் சுழுனை மீதில்
திருமேனி வாசலுட திரையை நீக்கி
உள்ளடா தானிருந்து வாசி கொண்டு
ஊதடா அண்டவெளி யுச்சி மட்டும்
தள்ளடா வாசியென்று சற்ப மேறிச்
சகலகலைப் போதமென்று அறிவிற் பாரே. 926

பாரப்பா பிராணாய யோகஞ் செய்யப்
பதிவான திசதீட்சைக் குள்ளே நின்று
நேரப்பா சமாதியிலே மனது பூண்டு
நின்னாக்கால் காயசித்தி யோக மெய்தும்
ஊரப்பா இருக்கிறவன் பிராணாய மென்று
உருச்செவிப்பான் மணியெடுத்து மூக்கைத் தொட்டுப்
பேரப்பா இதினாலே யொன்று மில்லை
பூமியிலே இருந்தவர்கள் கோடி தானே. 927

கோடியடா உலகத்தில் பிராணாயஞ் செய்யக்
குறையாம லொருபோதும் பிட்சை கொண்டு
வாடியல்லோ உடம்பெல்லாம் வெளுத்துச் சோம்பி
மகத்தான சற்குருவைக் காண வென்று
தேடியல்லோ மலைதோறுஞ் சென்று புக்கித்
திசதீட்சை யறியாமல் செனித்தோர் கோடி
நாடியல்லோ குருவறித்து திசதீட்சை பெற்றால்
நன்மையுடன் றானிருந்து அஷ்டசித்தும் பாரே.928

அடையோகந்தள்ள

பாரப்பா தன்மயத்தை யறியா மற்றான்
பக்தியுடன் யோகம் செய்வான் பாவி
வீறப்பா மூச்சடக்கிச் செவிவாய் மூடி
வேகமுடன் பூரிக்கில் மேனி தன்னில்
சாரப்பா மூலமதிற் சொருகிக் கொண்டு
தலைவலித்துக் காதடைத்து மூக்குக் கோணி
நேரப்பா கண்தெறித்து மதிக லங்கும்
நேர்மைகெட்ட அடையோகந் தள்ளு தள்ளே.929

மந்திராதி யோகம்

தள்ளடா பறியங்க யோகந் தானுஞ்
சாதகமாய்ச் செலந்தனிலே தானே சென்று
மெள்ளடா தானிருந்து அபானத் தாலே
விரும்பியே பூரித்து ரேசிப் பான்பார்
உள்ளடா மூலமென்ற ஆதா ரத்தில்
ஒடுங்கிநீர் தாங்கியது குன்ம மாகும்
அல்லடா இதினாலே யொன்று மில்லை
ஆதியென்ற மவுனாதி யோகம் பாரே. 930

மவுனாதி யோகம்

தள்ளடா பறியங்க யோகந் தானுஞ்
சாதகமாய்ச் செலந்தனிலே தானே சென்று
மெள்ளடா தானிருந்து அபானத் தாலே
விரும்பியே பூரித்து ரேசிப் பான்பார்
உள்ளடா மூலமென்ற ஆதா ரத்தில்
ஒடுங்கி நீர் தாங்கியது குன்ம மாகும்
அல்லடா இதினாலே யொன்று மில்லை
ஆதியென்ற மவுனாதி யோகம் பாரே. 931

மந்திராதி யோகம்

கேளடா வங்கென்று மூலத்திற் பூரி
கெணிதமுடன் சிங்கென்று மேலே ரேசி
ஆளடா மங்கென்று சுழுனைக் கோட்டி
அண்டவெளி தனையறிந்து வாசி யோது
சூளடா துருவநிலை கண்டு தேறச்
சுத்தமுடன் சிங்குவங்கு தன்னைக் காரு
மேலடா தனையறிந்து காத்தா யானால்
விசையாதி மந்திரமாம் யோக மாச்சே. 932

ஆச்சப்பா இதின்மேலோர் சாங்க யோகம்
ஆதியென்ற யோகமடா மவுன யோகம்
மூச்சப்பா தானிறந்த மவுன யோக
முறையறிந்து கைபாக முத்தி பெற்றால்
நீச்சப்பா அண்டவெளிச் சாகரத்தில் நின்று
நிலையறிந்து பிராணாய வளியே சென்று
பாச்சப்பா வாசிசரஞ் சுழுனைக் கேறிப்
பளீரெனவே கண்டதெல்லாம் வெளியாய்ப் போச்சே. 933

வெளியான வெளியறிய வெளியைத் தூண்டி
வேதவொளி தன்னாலே வெளியைக் கண்டு
ஒளியான வாசிசரம் உசரச் சுத்தி
ஓமென்ற பிரணவத்தா லுறுதி கொண்டு
வெளியான துறையறிந்து மணிநா வுன்னி
மகஸ்தா அண்டவெளிக் குள்ளே சென்று
அழியாத பேரின்ப வீட்டில் சென்றால்
அமுர்தரச போதஆ னந்த மாமே. 934

ஆமப்பா ஆனந்த போத மான
அகாரமுடன் உகாரமது மகாரங் கூட்டி
நாமப்பா வென்றமொழி தனைய கத்தி
நடுவான சுழுனையிலே நாட்டங் கொண்டால்
சோமப்பால் கசிந்துவெகு பூரணமாய்க் காணும்
துலங்குதிரு வாசியென்ற குகையைக் காரு
காமப்பால் கசிந்தொழுகிக் குகையைக் கார்க்கக்
கருணைவளர் சற்குருவை யடுத்துக் காரே. 935

அடுத்துமிகப் பொருளீந்து தொண்டு பண்ணி
அனுசரித்துக் கேட்டாக்கால் அருளிச் செய்வார்
தொடுத்துமிகக் கேட்டேனே சொல்லவில்லை யென்று
சுகமறியாக் குரங்கதுபோல் கெட்டோர் கோடி
கடுத்துமிக வலையாதே மோட்சம் வேண்டிக்
காத்திருந்து குருபதத்திற் கனிந்து கேளு
தடுத்தடிமை கொண்டவருந் தீட்சை வைப்பார்
சதாபோத பூரணத்திற் றாக்கும் நீயே. 936

நீயென்றும் நானென்றும் பேத மில்லை
நிர்மலமாம் வெளிதனிலே நின்ற போதந்
தாயென்றுஞ் சேயென்றும் பேத மில்லை
சராசரங்க ளெங்குமொன்றாய் நிறைந்து தப்பா
காயென்றுங் கனியென்றும் பேத மில்லை
கருவான முக்கனியைக் கண்ட போது
சீயென்றும் அமுர்தமென்றும் பேத மில்லை
தெளிந்தோர்க்கு வாசியென்ற குதிரை தானே. 937

குதிரையென்ற வாசியினால் திசதீட்சை வீதி
குறுகாமற் சுழுமுனையிற் குறியாய்ப் போடு
குதிரையின்மே லேறியல்லோ அண்டஞ் சுத்திக்
குருபதமாம் புருவமய்யத் தூடே சுத்திக்
குதிரையின்மே லேறியல்லோ ராச வீதிக்
குதிரைமுனை யங்கெயடா கட்டு கட்டு
குதிரையின்மே லேறியல்லோ பஞ்ச பூதக்
கொள்கையெல்லாங் கண்டுபிச காமல் கட்டே. 938

கட்டினால் வாசியது மூச்சா டாது
கருவறிந்து குருசொல்லக் கட்ட வேணும்
எட்டினால் பிராணாய வாசி யோகம்
இயங்காம லூதினா லொன்று மில்லை
முட்டினால் வாசியது கட்டா தய்யா
மூதண்டக் குளிகைக்குப் பிலமோ யில்லை
ஓட்டினா லாவதென்ன அன்னத்தை விட்டு
உத்தமனே தீட்சைவிட்டா லொக்கப் பாழே. 939

பாழான முப்பாலை யறிய வேணும்
பரமபதத் தெல்லையிலே பதிவாய் நின்று
மேலான நிற்குணப்பாழ் கண்டு தேறி
மெஞ்ஞான கேசரத்தில் வாசி பூட்டிக்
காலான அடிமுடியு மொன்றாய் நின்று
கருணைவளர் ஓங்காரக் கம்பத் தேறி
நூலான சாக்கிரமே போத மென்று
நோக்கிமனங் கொண்டுஅந்தப் போக்கைக் காணே. 940

போக்கோடே பூரணத்தை நன்றாய்ப் பார்த்துப்
போதமென்ற புருவமய்யத் திசமாந் தீட்சை
வாக்கோடே யேறுதற்கு அமுர்த முண்டாம்
மகத்தான அமுர்தமடா வழலைப் பாம்பு
தாக்கோடே வழலைகடி பட்டு தென்றால்
சகலசரக் கத்தனையுஞ் சாந்த மாகும்
நாக்கோடேமேல்வாசற் குள்ளே சென்று
நலமான மதியமுர்த வழலை வாங்கே. 941

துருசுசுண்ணம்

வாங்கியந்த வழலையிலே வீரஞ் சேர்த்து
மகத்தான சுக்கிலமுங் கூட விட்டுப்
பாங்குபெற அமுரியுப்புக் கூடச் சேர்த்துப்
பறையான போதவிட்டுப் பதிவாய் நீயும்
சாங்கமுடன் கற்பூரஞ் சீனஞ் சேர்த்துப்
சாத்தடா துருசுதான் சுண்ண மாகும்
ஏங்கிய கெந்திரச பாஷா ணந்தான்
என்னசொல்வேன் கட்டுமடா திட்டந் தானே. 942

திட்டமென்ற பிரமதிஷ்டி வாசல் தன்னில்
சிங்குவங்கு காலறிந்து அங்கென் றூதிக்
கெட்டிமன தாயிருந்து வட்ட மேவிக்
கீழ்மேலாய் நின்றிலங்கும் வாசி தன்னை
இஷ்டமுடன் சுழுனையடா தமருக் குள்ளே
இயங்குகின்ற வாசிசர மேறி னாக்கால்
வட்டமதில் மதியமுர்தந் திட்ட மாக
வாசிசரந் தன்னுடனே வடியுந் தானே. 943

வடிந்தொழுகும் அமுர்தரச வழலை தன்னில்
மகத்தான வேதமுறை வழுத்தக் கேளு
சொடிந்தரசந் தன்னுடனே நாகங் கெந்தி
சுத்தமுள்ள தங்கமுடன் கல்வத் திட்டுப்
படிந்துவந்த வழலைதன்னா லரைத்து மைந்தா
பரமகுரு தன்னருளால் புடத்தைப் போடு
மடிந்தபுடந் தனையெடுத்துப் பார்த்தா யானால்
மகஸ்தான ஏமமென்ற குருவாம் பாரே. 944

வழலையால் துருசுநீறு

பாரப்பா ஏமமென்ற குருவை மைந்தா
பத்தியுடன் றானெடுத்து வைத்துக் கொண்டு
நேரப்பா வெள்ளிசெம்பில் பத்துக் கொன்று
நேர்மையுடன் றான்கொடுத்து உருக்கிப் பாரு
சாரப்பா உருகிநின்ற சத்தைப் பார்த்தால்
தன்மயமாய் நின்றபரஞ் சோதி யாகும்
காரப்பா கருணைவளர் சோதித் தாயைக்
கண்மூக்கு மத்தியிலே கண்டு பாரே. 945

கண்டுகொண்டு யோகமதி லிருக்க வேணும்
கருணைவளர் பூரணத்தைக் காண வேணும்
நின்றுகொண்டு வாசியிலே நிலைக்க வேணும்
நேரறிந்து நிலையறிந்து நிற்க வேணும்
பண்டுடைய வேதமொடு சாஸ்தி ரங்கள்
பலபலவாஞ் சூஸ்திரங்கள் பார்க்க வேணும்
அண்டகே சரமதிலே மனக்கண் சாத்தி
அருள்பெருகுந் தன்மயங்கொண் டறிவாய் நில்லே. 946

நில்லென்ற நிலையதிலே வாசி யூதி
நீமகனே யமுர்தரச வழலை வாங்கிச்
சுள்ளென்ற வீரமுடன் பூரஞ் சேர்த்துத்
துடியான லவணமுடன் காரச் சுண்ணம்
கல்லென்ற கல்வமதி லாட்டி மைந்தா
கணக்கான நாலிலொன்று சாரஞ் சேர்த்துக்
கொல்லென்று துருசுதனைக் கங்கி பூட்டிக்
கூர்மையுள்ள புடத்தில்வெகு சுண்ண மாமே. 947

துருசு செயநீர்

ஆமப்பா சுண்ணமதில் நாலுக் கொன்று
அடங்கிநின்ற நவசாரங் கூடச் சேர்த்து
நாமப்பா சொல்லுகிறோம் பனியில் வைக்க
நாதாந்த மானதொரு செயநீ ராகும்
காமப்பா லானதொரு செயநீர் தன்னைக்
காசியென்ற குப்பியிலே பதனம் பண்ணித்
தாமப்பா தன்னிலையைத் தானே கண்டு
சங்கையுள்ள வேதமுறை சாற்றக் கேளே. 948

கேளடா அயமுடனே வெள்ளி செம்பு
கிருபையுள்ள நாகமுடன் தங்க மஞ்சும்
ஆளடா அஞ்சையுமே கணக்காய்ச் சேர்த்து
அப்பனே அதுக்குநிகர் ரசத்தை வார்த்து
வாளடா கலசமதி லிட்டுக் கொண்டு
வழலையென்ற அமுர்தரசச் செயநீர் தன்னால்
காலடா தானறிந்து விசைகொண் டாட்டிக்
கைமுறையாய்த் தானுருட்டிக் காயப் போடே. 949

போடப்பா காய்ந்தபின்பு எடுத்துக் கொண்டு
புதுமையுடன் செம்புருக்கி அதனிற் றாக்கில்
நாடப்பா செம்பதுவுங் கட்டிப் போகும்
நன்மையுள்ள செம்பெடுத்து மைந்தா கேளு
வீடப்பா பிலப்பதற்கு வெள்ளி தன்னில்
வேகமுள்ள செம்பதனைப் பத்துக் கொன்று
சூடப்பா குகைதனிலே உருக்கிப் பாரு
சுத்தமுள்ள வெள்ளியது தங்க மாமே. 950

சிவயோகவழி

தங்கமய மானதொரு அங்கத் தன்னைத்
தானறிந்து வாசியினா லண்ட மேவிச்
சங்கையுடன் றானிருந்து மணிநா வுன்னித்
தன்மயமும் விண்மயமுந் தானே கண்டு
அங்கமுடன் அனுக்கிரக வளியே கண்டு
ஆதியண்ட கேசரியை யன்பாய்ப் போற்றி
மங்களமா மனதுருமை யாக நின்றால்
மகஸ்தான சிவயோக வழிசெல் வாமே. 951

குடவன் செம்பு

வளியான வளியிலொரு விபரங் கேளு
மகஸ்தான வெடியுப்புச் சீனக் காரம்
பளியான நவச்சாரந் துருசு வீரம்
பாலகனே ஓரிடையாய் வாங்கிக் கொண்டு
நெளியாம லிதுக்குநிகர் கரிச லுப்பு
நேர்மையுடன் கல்வமதில் நன்றா யாட்டிப்
புளிவான குடவனிலே பூசி மைந்தா
புடம்போட்டுத் தானெடுக்கச் செம்பாய்ப் போச்சே.952

போச்சப்பா குடவனது செம்பாய்ப் போச்சு
பூரணமாய் வெள்ளியது தங்க மாச்சு
காச்சப்பா கசடற்ற தங்கத் தாயைக்
கனியமன முருகவே பூசித் தாக்கால்
மூச்சப்பா வோடாது முனைமேல் நிற்கும்
முனையான சுழுனைவழிக் குள்ளே சென்று
பாச்சப்பா வாசிசர அண்டத் துள்ளே
பத்திகொண்டு தன்மயமாய்ப் பதிவாய் நில்லே. 953

பதியான பதியிதுதா னண்டத் துச்சி
பரமகயி லாசமென்ற சொர்க்க வீடு
மதியான வீடதிலே மனக்கண் சாத்தி
மார்க்கமுடன் சுழுனையிலே மணிநா வுன்னி
விதியான எழுத்தறிந்து கமலத் தேகி
வேதாந்த அமுர்தரசங் கொண்டால் மைந்தா
கெதியான மோட்சமடா சொல்லப் போமோ
கேசரத்தில் பூரணமாய்க் கெதிகொண் டேறே. 954

ஏறுவதுக் கின்னமொரு சூட்சங் கேளு
ஏகாந்த மாகவேநீ யிருந்து கொண்டு
தேறுவது ஓங்காரச் செயல்தன் னாலே
திருகுசுளி கபாடமதின் திரையை நீக்கி
மாறுவிதந் தனையறிந்து வாசி யேற்ற
மணிமந்திர நாதவொலி கீதங் கேட்கும்
சாறுவது மணிநாத வோசை நீக்கித்
தன்மயங்கொண் டண்டமதில் சார்ந்துகொள்ளே.955

கொள்ளடா அண்டமதிற் சார்ந்து கொண்டு
கூர்மையுடன் தன்மயங்கொண் டிருந்தா யாகில்
உள்ளடா சோதிபிர காச மாகி
உண்மையென்ற ஆதியந்தந் தான்தா னாகிச்
சொல்லடா சொல்லிறந்த மவுன மாகிச்
சுகசீவ பிராணகலை சுத்த னாகி
அல்லடா தன்மயங்கொண் டிருந்தா யாகில்
அரகரா சின்மயமா யாகுந் தானே. 956

தானென்ற குருவினுப தேசத் தாலே
சார்ந்துநின்ற அவத்தையெல்லாந் தானே போகும்
வானென்ற வடிவுசிவ ரூப மானால்
மவுனாதி யோகமுதல் வாழ்க்கை யெய்தும்
நானென்ற பிரபஞ்ச மாய்கைக் கையா
நாசமென்ற அக்கினியாம் நன்றாய்க் காணும்
தேனென்ற வேதாந்த முடிவைப் பார்த்துத்
தெளிவான யோகமதில் தீர்க்கம் பாரே. 957

பாரப்பா பிரமநிலை யார்தான் காண்பார்?
பதமில்லை யாகிலும் பதிவு மில்லை
காரப்பா எந்தவித மானா லுந்தான்
காணரிதாஞ் சிவரூபஞ் கண்ணிற் காணார்
ஊரப்பா காலஅபி மானத் தாலே
உண்மையென்ற காரணமாம் உற்பத் திக்குப்
போரப்பா நன்மைதின்மை ரெண்டில் தானும்
பொருத்திமன மில்லாத காட்சி தானே. 958

தானென்ற காட்சியடா குணாதீத மாகிச்
சகலபொருள் தானாகித் தானே தானாய்
வானென்ற ஆகாச முடிவு மாகும்
மகஸ்தான சோதிசெக சோதி யாகிக்
கோனென்ற குருவாகி எங்குந் தானாய்த்
குவிந்தெழுந்த வாசிசிவ யோகந் தானாய்த்
தேனென்ற அமுர்தரச போதந் தன்னைச்
சிவாயகுரு தெளிவாகிச் சொன்னார் காணே. 959

சொன்னதினால் தெரியாமல் மைந்தா மைந்தா
தொடுகுறிபோ லங்கனையே தூண்டி னாக்கால்
கண்ணெதிரே தோன்றிநின்ற காட்சி போலக்
கருணைவளர் சாஸ்திரத்தின் கருக்க ளெல்லாம்
விண்ணதிலே துலங்கிநின்ற ஒளிபோற் காணும்
விளங்குமொளி தனையறிய வெளியுந் தோணும்
ஒண்ணதிலே கண்டவொளி வெளியின் சூட்சம்
ஓமுடிந்த சூட்சமடா சுழுனை யாமே. 960

சுளியான காத்துவெகு சுளிக்காத் தப்பா
சுளித்தசுளி நடுவறிந்து ஏற மாட்டார்
வளியான துணையறிந்து ஏறு தற்கு
வங்குசிங்கு வாசலிலோர் மார்க்கங் கேளு
தெளிவான ஓங்காரக் கம்பந் தன்னைச்
சிவயவசி சிவயவசி யென்று நாட்டி
விழியான மனவிழியால் தன்னைப் பார்த்து
வீடான பேரின்ப வீட்டில் நில்லே. 961

வாசியேற்ற

நில்லென்ற வாசிபே ரின்ப வீட்டில்
நீமகனே போதநெறி யாக நின்றால்
வில்லென்ற விசைபோலே வாசி நின்று
விளங்குமடா திருகுசுழு முனைமை யத்தில்
சுள்ளென்ற சுவாலையடா வாசத் தந்தத்
துலங்குமடா கதிர்மதிபோற் றுருவ மீதில்
உள்ளென்ற சுழுனையிலே மவுனம் பூட்டி
ஊடுருவ அட்சரத்தை யுயர ஏற்றே. 962

ஏற்றடா வாசிவலங் கொண்டு மைந்தா
இருத்தடா முனையறிந்து தமருக் குள்ளே
காத்துமிக அசையாமல் திரையைப் போட்டுக்
கண்ணறிந்து விண்ணான கதவை மைந்தா
சாத்தடா கையறிந்து மெய்யாய் நீயும்
சார்ந்தேறு அட்சரத்தால் தன்னைப் பார்த்துப்
போத்தடா மவுனமென்ற வாசி யாலே
பொருந்திமன தறிந்துஅமுர்த பூசை பண்ணே. 953

பூசையென்ன தசமறிந்து வாசி யேற்றிப்
பொருந்திநின்ற அஞ்சுநிலை பூண்டு பார்த்தால்
பூசையென்ற பூசைசிவ பூசை தானும்
பூரணமாய்க் கோடிசெய்த பலத்துக் கொக்கும்
ஆசையுடன் அந்தரங்க வாசல் கண்டு
அதிலிருந்து அங்கனையே பார்த்தால் மைந்தா
ஓசையென்ற மணிகெவுனச் சுழுனை லிங்கம்
ஒருகோடிச் சூரியன்போல் காண லாமே. 964

காணவே செகச்சால வித்தை மார்க்கம்
கைமுறையாய்ச் சொல்லுகிறேன் கருவாய்க் கேளு
தோணவே சொல்லுகிறேன் சரக்கின் மார்க்கம்
சுத்தமுள்ள பாஷாணம் அறுபத்து நாலும்
பேணவே லவணமென்ற கார சாரம்
பெருமையுள்ள இனவகைதா னிருபத் தஞ்சு
பூணவே உபரசங்கள் நூத்திரெண்டு பத்தும்
புதுமையுடன் கண்டறிந்து வாதம் பாரே. 965

பாரப்பா வாதமுறை பார்ப்ப தற்குப்
பதிவான உபரசங்கள் கார சாரம்
சாரப்பா பாஷாண வகைக ளெல்லாம்
தான்சத்துரு மித்துருவுந் தானே சொல்வோம்
நேரப்பா தானிருந்து சத்துருவு மித்துருவும்
நேர்மையுடன் கண்டறிந்து நிலையைப் பார்த்தால்
வீறப்பா கொண்டுநின்ற நவலோ கங்கள்
வேதாந்தக் குருவருளாற் றங்க மாமே. 966

துருசுசத்துரு மித்துரு

ஆமப்பா துருசுசத் துருவைக் கேளு
அடங்காத யிணங்கனொடு சீனஞ் சூடன்
தாமப்பா அப்பிகரங் கல்லுப்பு நாகஞ்
சங்கையுள்ள இந்துப்பு வங்கம் லிங்கம்
நாமப்பா சொன்னவகை சத்துருவே யாகும்
நாட்டமுடன் கண்டறிந்து நன்மை யாக
ஓமப்பா சத்துருவால் துருசைக் கொன்று
உத்தமனே மித்துருவை யுரைக்கக் கேளே. 967

கேளப்பா துருசுசத் துருவைச் சொன்னேன்
கெணிதமுடன் மித்துருவை நன்றாய்க் கேளு
ஆளப்பா சாரமொடு வீரமரி தாரம்
அளகரன வெண்காரம் கெந்தி சூதம்
காலப்பா பூரமொடு மனோசிலையும் லிங்கம்
கருவான மித்துருவென் றறிந்து கொண்டு
வாளப்பா மித்துருவாற் செயமே செய்து
மார்க்கமுடன் வேதைமுறை மகிழ்ந்து பாரே. 968

பாரப்பா சத்துருவால் துருசைக் கொன்று
பதிவான மித்துருவாற் சுண்ண மாக்கிச்
சாரப்பா இவ்விதமாய் வேதை பார்த்தால்
சங்கையுடன் காணுமடா அங்க மாக
நேரப்பா தானிருந்து அங்கம் பார்த்து
நீமகனே பூரணமாய் நின்றா யாகில்
பேரப்பா பெற்றசிவ யோகி யாவாய்
பேரண்டஞ் சித்தண்ட மிரண்டுங் காணே. 969

சாரசத்துருமித்துரு

காணவே சாரசத் துருவைக் கேளு
கல்லுப்பு இந்துப்பு வளகி லுப்புப்
பூணவே வங்கமொடு காரீ யந்தான்
பொருளான அண்டமொடு மடிந்த சுக்கான்
பேணவே அப்பிரக மிதுவெல் லாந்தான்
பெருகிநின்ற சாரசத் துருவே யாகும்
தோணவே இச்சரக்கால் சாரந் தன்னைத்
துடியடங்கக் கட்டினபின் மித்துருவைக் கேளே. 970

கேளடா சாரமித் துருவைச் சொல்வேன்
கெந்திமனோ சிலைதாரம் வீரம் லிங்கம்
ஆளடா காரம்வெடி காரீ யந்தான்
அப்பனே கெவுரியொடு நாகங் கூட்டி
வாளடா அமுர்தமதால் கவசஞ் செய்து
மைந்தனே புடம்போட்டு எடுத்தா யானால்
காலடா அணுவாகுஞ் சாரங் கட்டிக்
கனகமென்ற குருவாகுங் கண்டு பாரே. 971

வெடியுப்புசத்துருமித்துரு

பாரப்பா வெடியுப்புச் சத்துருவைக் கேளு
பகையான காரீயந் துருசு சூடன்
நேரப்பா வெள்ளியொடு செம்பு கெந்தி
நிசமான அண்டமொடு சத்துருவே யாகும்
சாரப்பா சத்துருவா லுப்பைக் கட்டித்
தன்மையுடன் வேதைமுகந் தானே கண்டால்
ஆரப்பா உனக்கீடு யாரு மில்லை
ஆதியென்ற லவனமதை யறிந்து காணே. 972

காணவே சத்துருவா லுப்பைக் கொன்று
கருணைபெற மித்துருவைக் கருதிக் கேளு
பூணவே லிங்கமொடு காரங்கல் லுப்பு
பூகழான இந்துப்பு வீரந் தாரம்
தோணவே நாகமொடு ரோமம் வெள்ளை
சுத்தமுள்ள சீனமொடு மித்துருவே யாகும்
பேணவே சத்துருவா லுப்பைக் கூட்டிப்
பிரியமுடன் மித்துருவால் சுண்ணஞ் செய்யே.973

கல்லுப்புச் சத்துரு

செய்யடா கல்லுப்புச் சத்துருவைக் கேளு
செயமான வீரமொடு சிங்கமனோ சிலையும்
மெய்யடா பழம்புளியோ டிவையெல் லாந்தான்
மெய்யுள்ள கல்லுப்புச் சத்துருவே யாகும்
கையடா தவறாமல் மைந்தா நீயும்
கல்லுப்புச் சத்துருவால் கசிவு போக்கிப்
பொய்யடா போகாமல் செயமே செய்து
புத்தியுடன் மித்துருவைப் புகழ்ந்து காணே. 974

காணவே மித்துருவைச் சொல்லக் கேளு
கருவான லிங்கம்வங்கம் நாகஞ் செம்பு
பூணவே பூரமரி தாரங் காரம்
புத்தியுடன் மித்துருவென் றறிந்து கொண்டு
பேணவே மதியமுர்த வழலை தன்னாற்
பிலமான சரக்குகளை யரைத்துக் கொண்டு
தோணவே சரக்குகளுக் கங்கி பூட்டிச்
சுத்தமுடன் புடம்போட்டு வேதை பாரே. 975

காரசத்துரு மித்துரு

பாரடா காரத்தின் சத்துருவைச் சொல்வேன்
பதிவான சலாசத்து அண்டஞ் சூடன்
நேரடா சரக்குவகை தானே கண்டு
நிசமான மதியமுர்த வழலை தன்னால்
காரடா கல்வமதில் நன்றா யாட்டிக்
கருணையுடன் காரமதுக் கங்கி பூட்டிச்
சேரடா புடமதிலே வைத்துப் பார்த்தால்
சிவசிவா காரமது கட்டுங் காணே. 976

காணவே சத்துருவாற் காரங் கூட்டிக்
கருணையுடன் மித்துருவாற் கருதக் கேளு
ஊணமே உபரசங்கள் பாஷா ணங்கள்
உண்மையுள்ள நவலோகந் தனக்கு மைந்தா
பேணவே காரமது கால்தா னாகும்
பெருமையுடன் சத்துருவு மித்துருவும் பார்த்துப்
பூணவே கண்டுமனங் கொண்டா யானால்
புத்தியுடன் வாதமது வாசி யாமே. 977

தங்கசத்துரு மித்துரு

ஆமப்பா தங்கமென்ற அபரஞ் சிக்கு
அப்பனே சத்துருவைச் சொல்லக் கேளு
நாமப்பா சொல்லுகிறோம் துருசு லிங்கம்
நன்றான யிணங்களொடு நாகம் வெள்ளை
தாமப்பா தாளகமுஞ் சூதங் கெந்தி
தன்மையுடன் மனோசிலையும் அண்டங் கூட்டிச்
சோமப்பால் தன்னாலே யாட்டி மைந்தா
சுத்தமுள்ள தங்கமதுக் கங்கி பூட்டே. 978

பூட்டிய புடமதிலே வைத்துப் பாரு
போதமுள்ள தங்கமது குருவாய் நிற்கும்
நாட்டியே தங்கமதில் குருவாய் நின்றால்
நாலான காரியமும் நன்மை யாகும்
தாட்டிகமாய்ச் சத்துருவின் பாதம் போற்றிச்
சங்கையுடன் மவுனரசந் தானே கொண்டு
நீட்டியதோர் வாசியினால் தன்னைப் பார்த்து
நிசமான வாகமுறை நின்று பாரே. 979

நின்றுமனங் கொண்டுமிக மைந்தா கேளு
நிலையறிந்து வாசியினால் நெத்திக் கண்ணைக்
கண்டுசிவ சோதியென்ற தங்கத் தாய்க்குக்
கருணைவளர் மித்துருவைக் கருதக் கேளு
விண்டுசொல்வேன் நவலோகந் தனக்கு மைந்தா
மேன்மையுள்ள ராசாவாரந் தங்கத் தாய்தான்
அண்டகே சரியான தங்கத் தாயை
அனுதினமும் பூசைபண்ணி யறிவாய் நில்லே. 980

ரசசத்துருமித்துரு

அறிவான ரசமதுக்குச் சத்துருவைக் கேளு
அப்பனே நாகமொடு காரீயம் வங்கம்
குறியான கெந்தகமும் மனோசிலையும் வீரங்
குறிப்பான தாரமொடு வெள்ளி செம்பு
நெறியான வெண்காரத் துருசு காரம்
நேர்மையுடன் சத்துருவென் றறிந்து கொண்டு
விரிவான மனதைமெள்ள லயமே பண்ணி
மேன்மையுள்ள மித்துருவை விளங்கக் கேளே. 981

கேளடா மித்துருவைச் சொல்வேன் மைந்தா
கேள்வியென்ன இரும்புவெடி சூடன் காந்தம்
ஆளடா மித்துருவென் றறிந்து கொண்டு
அருளான வேதமுறை யறிந்து பார்த்தால்
கோளடா ஒன்றுமில்லை கருவே யாகும்
குருவான அமுர்தரச வழலை கண்டால்
காலடா வலுவாகி வாசி யேறும்
கண்மூக்கு மத்தியென்ற சுழியைப் பாரே. 982

இரும்பு சத்துரு மித்துரு

பாரப்பா இரும்புக்குச் சத்துருவைக் கேளு
பகையான அப்பிரகம் வெண்கார மண்டம்
நேரப்பா வங்கமொடு கெந்திநவச் சாரம்
நிறமான வீரமொடு கெவுரிசலா சத்துக்
காரப்பா இரும்புக்குச் சத்துருவே யாகும்
கண்டறிந்து விண்டபடி கருவாய்ப் பார்த்தால்
வீறப்பா கொண்டஅயஞ் சத்துருவால் மைந்தா
விசையடங்கு மித்துருவை விளங்கக் காணே. 983

காணவே இரும்புக்கு மித்துருவைக் கேளு
கருவான வெள்ளிசெம்பு நாகந் தங்கம்
பூணவே காந்தமொடு கெந்தி கூடன்
பொருந்திநின்ற மித்துருவென் றறிந்து கொண்டு
பேணவே தானிருந்து வேதை பாரு
பிலமான வாசிசரஞ் சுழுனைக் கேறும்
ஊணவே தானிருந்து மவுனம் கொண்டால்
உத்தமனே யோகியென்ற உண்மை யாமே. 984

நாகசத்துரு மித்துரு

உண்மையுடன் சொல்லுகிறேன் நாகத் துக்கு
உத்தமனே சத்துருவை யுரைக்கக் கேளு
தன்மையுள்ள வங்கமொடு வெள்ளி தங்கம்
தயவான வெடியுப்புச் சீனங் கல்லு
வெண்மையுள்ள வெண்கலமும் வளகில் வீரம்
விசையான நாகசத் துருவே யாகும்
நன்மையுடன் சத்துருமித் துருவைக் கண்டு
நாட்டமுடன் பூரணத்தில் நயந்து நில்லே. 985

நில்லென்ற நாகமதின் மித்துருவைக் கேளு
நிசமான அப்பிரகம் இரும்பு காந்தம்
உள்ளென்ற சலாசத்துச் செம்பு சூதம்
உறுதியுள்ள காரீயஞ் சாரங் கெந்தி
சொல்லென்ற விசைபோலே நாகத் துக்குச்
சுகமான மித்துருவால் சுத்தம் பண்ணி
வில்லென்ற விசைபோலே வாதம் பாரு
வேதாந்த சின்மயத்தில் விரும்பித் தேறே. 936

காரிய சத்துருமித்துரு

தேறவே காரீயந் தனக்கு மைந்தா
சிவசிவா சத்துருவைச் சொல்லக் கேளு
மீறவே யமுர்தமதால் நன்றா யாட்டி
மேன்மையுள்ள காரீயந் தனக்கு மைந்தா
கூறவே காந்தம் அயங் குளிஞ்சி யண்டங்
குருவான கெவுரியோடு கெந்தி சேர்த்து
மாறவே கவசமது நன்றாய்ச் செய்து
மார்க்கமுடன் புடம்போடக் கட்டும் பாரே. 937

பாரப்பா சத்துருவைச் சொன்னேன் நன்றாய்ப்
பரிவான மித்துருவைப் பகரக் கேளு
தேரப்பா செம்புவெள்ளி வங்கஞ் சூதந்
திறமான நாகமதாற் குருவாய் நிற்கும்
நேரப்பா குருவறிந்து மகிழ்ந்து காண
நிசமான சத்துருமித் துருவைப் பார்த்துக்
காரப்பா கருவறிந்து செய்தா யாகில்
கனகமென்ற பாக்கியங்கள் கைமே லாமே. 938

ஆமப்பா கைவசமாய்ப் பொருளைக் காண
அருள்பெருகும் பூரணத்தி லழுந்தி மைந்தா
தாமப்பா தன்னிலையால் மனத்தை நாட்டிச்
சங்கையுடன் சத்துருமித் துருவைக் கண்டு
நாமப்பா சொல்லுகிறோம் பாஷா ணங்கள்
நலமான உபரசங்கள் சாரங் காரம்
சாமப்பா சத்துருவால் செயமே செய்து
சங்கையுள்ள மித்துருவால் வேதை காணே. 939

வேதையென்ற வாதமது போத மாக
மெஞ்ஞான சற்குருவின் கடாட்சம் பெற்றுப்
போதையென்ற சோதிபிர காசங் கொண்டு
பூரணமாம் ஒளியதனில் புகுந்து வாழ்வான்
வாதையென்ற சூழ்வினைகள் தீர்வ தற்கு
மகத்தான அமுதாகச் சிவநூல் தன்னைக்
கோதையென்ற மனோன்மணியின் கடாட்சத் தாலே
கூறினேன் சவுமியசா கரத்தைப் பாரே. 990

மேக ராசாங்க கிருதம்

பாரப்பா புலத்தியனே சொல்லக் கேளு
பதிவான மேகமென்ற வகைக ளெல்லாம்
வீறப்பா தானொடுங்கித் தீர்வ தற்கு
விபரமுள்ள கிருதவகை யொன்று கேளு
நேரப்பா பசுவின்நெய் படியொன் றுக்கு
நேர்மையாஞ் சாறுவகை சொல்லக் கேளு
சேரப்பா சிலஷ்த்தம்ப மூலிச் சாறுந்
திருவான ஓரிதழ்த்தா மரையின் சாறே. 991

சாறான ஆவாரை யிலையின் சாறுந்
தன்மையுள்ள விடத்தலைச்சா றைந்து மைந்தா
நேராக வகைக்குக்கால் படிதான் வாங்கி
நெய்யுடனே தான்கலந்து ரவியில் வைத்துப்
பேராக அதில்சேர்க்குஞ் சரக்கைக் கேளு
பெருமையுள்ள சீரகமும் பலந்தா னொன்று
கூறான அதிமதுரம் பலந்தா னொன்று
கடுகுவது பலங்காலாய்க் கூடச் சேரே. 992

சேரப்பா சாதிக்காய் விராக னொன்று
திறமான கிராம்பதுவும் வீராக னொன்று
வீறப்பா சாதிபத்திரி விராக னொன்று
விபரமுடன் ஏலமது பலமுங் கால்தான்
சாரப்பா வால்மிளகு விராக னொன்று
சன்னஇல வங்கமது விராகன் ரெண்டு
பேரப்பா விளாமிச்சை விராகன் ரெண்டு
பெருகுவெள்ளைக் குங்கிலியம் ஒன்றரைப் பலமே. 993

பலமான பலமறிந்து நினவாய் வாங்கிப்
பசுவின்பால் தன்னாலே பதிவா யாட்டிக்
குலமான நெய்யுடனே கலந்து மைந்தா
குருவான சற்குருவின் பாதம் போற்றிப்
பிலமான அடுப்பேத்தி அனலைத் தாக்கிப்
பிரயமுடன் மெழுகுபதந் தனிலி றக்கி
நலமாக நாற்பதுநாள் கொள்ளும் போது
நாடிநின்ற மேகமெல்லாம் நாச மாமே. 994

ஆமப்பா மேகமென்ற தெல்லாந் தீரும்
அதிலடுத்த கிரந்தியெல்லாம் விறணந் தீரும்
போமப்பா வாதபித்த சிலேட்டும வாய்வு
பொல்லாத கிராணியுடன் மூல ரோகம்
சாமப்பா காசமொடு அஸ்தி வெட்டை
தணியுமடா கிருதவகை தயவாய்க் கொண்டால்
சோமப்பால் தான்சொல்லிச் சோதி காணும்
துன்பமற்று எந்நாளும் வாழ்வாய் காணே. 995

பூரண லேகியம்

காணவே பூரணலே கியத்தைக் கேளு
காயான சாதிக்காய் சாதி பத்திரி
பூணவே கிராம்புடனே யேலம் நாலும்
புத்தியுடன் வகைக்குக்கால் பலமே வாங்கிப்
பேணவே திரிகடுகு பலமொன் றாகப்
பெருமையுள்ள சரக்கேழுஞ் சூரணமே செய்து
தோணவே யிதுக்குரெட்டி மைந்தா கேளு
சுத்தமுள்ள ஆனந்த மூலி வாங்கே. 996

வாங்கியந்த மூலிகையைச் சூரணமே செய்து
மைந்தனே யிருவகையு மொன்றாய்க் கூட்டிப்
பாங்குபெறத் தேனதிலே சர்க்கரையும் வெல்லம்
பனைவெல்லம் மூன்றும்அதிற் கரைத்துக் கொண்டு
சாங்கமாய் முன்செய்த சூரணத்தை மைந்தா
தன்மையுள்ள பாகதிலே சேர்த்துக் கிண்டித்
தீங்கிலாப் பசுவின்நெய் சிறுக விட்டுச்
சேர்த்துமிகத் தான்பிசைந்து ரவியில் வையே. 997

வையப்பா ரவிதனிலே நவநாள் வைத்து
மார்க்கமுடன் தானெடுத்துப் பதனம் பண்ணி
மெய்யடா சற்குருவின் பாதம் போற்றி
மெஞ்ஞான மதியமுர்தம் பெருக மைந்தா
கையடா மெய்யுடைய வலுவ றிந்து
கருணைவளர் பூரணலே கியத்தில் மைந்தா
பையடா பார்வைவழிச் சுழுனைக் கேந்திப்
பால்கனே பணவிடைதான் கொண்டு தேறே. 998

தேறப்பா பணவிடைதான் கொண்டு மைந்தா
தீர்க்கமுடன் தானிருந்து வாசி யேறிக்
காரப்பா கேசரியில் மனக்கண் ணோட்டிக்
கண்ணான விண்ணறிந்து உன்னி னாக்கால்
நேரப்பா நிறைந்துவரும் அமுர்த பானம்
நிசமான பானமதைக் கொண்டு தேர்ந்தால்
மேரப்பா குறிதீபம் போலே மைந்தா
மெஞ்ஞான கேசரியில் தோணும் பாரே. 999

தோணுமடா கேசரியில் சுழுனை மூலஞ்
சோதியென்ற ஆதார கமல பீடம்
காணுமாட ரவிமதியு மொன்றாய்க் கூட்டிக்
கால்நிறுத்திப் பிடரிவழிக் கண்ணைப் பார்த்துப்
பூணுமடா வாசியது பொருந்தும் போது
பூரணமுங் காரணமும் பொருந்தி யொன்றாய்
வானுலகிற் சாட்சியென விளங்கு தய்யா
மைந்தனே ரவிமதியை வணங்கிப் பாரே. 1000

வணங்குவது பெரியோரை வணங்க வேணும்
மகத்தான சாஸ்திரங்கள் பார்க்க வேணும்
இணங்குவது வாசியிலே யிணங்க வேணும்
ஏகாந்த மானசிவ யோகம் வேணும்
மனங்குவிந்து தானிருந்து மணிநா வுன்னி
மகஸ்தான ஓங்கார வழியே சென்று
குணங்குவிந்து அமுர்தரசங் கொண்டால் மைந்தா
கூர்மையுடன் ஒளிவெளியிற் கூடும் பாரே. 1001

பாரப்பா ஒளிவான அறிவின் கண்ணும்
பதிவான வெளியதுதா னண்டத் துச்சி
நேரப்பா அண்டமென்ற உச்சி மீதில்
நிசமான அறிவின்கண் நேரே பாய்ந்தால்
பேறப்பா பெற்றதொரு சீவாத் மாவாய்ப்
பேசாத மவுனமென்ற பரமாத் மாவும்
தேறப்பா ரெண்டுமொன்றாய்ச் சேர்ந்து மைந்தா
சிவசிவா வெளியொளியாய்ச் சேருந் தானே. 1002

தானேதான் ஒளிவெளியிற் சேர்ந்த போது
சங்கையுள்ள பிருதிவிதான் பிருதிவியிற் சேரும்
நானேதா னென்றவப்புச் செலத்தில் சேரும்
நடுவான அக்கினியும் வாய்வுங் கூடி
வீணேதா னாகாசஞ் சாட்சி யா
விளங்கிநின்ற சூட்சமதை யறியா ரய்யா
கோனேதா னாகித்தா னவனு மானால்
குறியில்லா நிர்மலத்தின் குறியைப் பாரே. 1003

கெதியான மோட்சகெதி வீட்டைக் காணக்
கிருபையுள்ள புலத்தியனே சொல்லக் கேளு
பதியான மூலமடா புருவ மத்தி
பரமகயி லாசமென்ற சுழுனை வீட்டில்
மதியான மதிரவியும் ஒன்றாய்ச் சேர்த்து
மவுனமென்ற பீடமதில் வாச மானால்
விதியான கெதிமோட்ச வீடுந் தோணும்
விளங்குமணி வீடதிலே விரும்பி நில்லே. 1004

சிவயோகத்தால் பிறவிமாற்று

விரும்பியந்தச் சுழுனையிலே மனத்தை நாட்டி
வீடான பேரின்ப வீட்டில் சென்று
வரும்பிறவி தனையகற்ற வழியைக் கேளு
வங்குசிங்கு வாசலிலே மணிநா வுன்னித்
திரும்பிமன தசையாமல் சிவயவசி யென்று
தீர்க்கமுடன் பதினாறு உருவே செய்தால்
அரும்பிறவி இல்லையடா மைந்தா மைந்தா
அண்ணாக்கை யுண்ணாக்குள் அடக்கிப் பாரே. 1005

பாரப்பா அண்ணாக்கை யுண்ணாக் குக்குள்
பக்தியுடன் தானடக்கிப் பதிவாய் மைந்தா
சாரப்பா ஓமெனவே தமரில் புக்கிச்
சரமறிந்து தானொடுங்கித் தானே நின்றால்
பேரப்பா பெற்றசிவ யோகந் தங்கும்
பேரண்டத் தமுர்தரசங் கொள்ள லாகும்
மேரப்பா சுத்திவரக் கெவுன முண்டாம்
வேதாந்த கேசரியின் விஞ்சை தானே. 1006

தானான விஞ்சையென்ற சத்தி மாது
சமரசமாய்த் தான்விளக்குந் தங்க மாது
வானான கேசரியாந் தங்க மாதை
மார்க்கமுடன் கண்டறிந்து மகிழ்ச்சி யாகக்
கோனான குருவருளால் சொல்லக் கேளு
குருவான அயமுடனே பூரஞ் சேர்த்துப்
பூனான காரமிட்டு உருக்கி மைந்தா
பொருந்திரெண்டும் உறவாகிப் பொருந்துங் காணே. 1007

காணவே தானுருகிப் பொருந்தும் போது
கனிவான நாகமுடன் லிங்கந் தாரம்
பேணவே ரசமுடனே நாலுஞ் சேர்த்துப்
பிரியமுடன் தான்கொடுக்க வாங்கிக் கொள்ளும்
தோணவே யதற்குக்கால் தங்கஞ் சேர்த்துச்
சுத்தமுடன் தானுருக்கி யெடுத்துப் பார்த்தால்
பூணான தங்கமதைப் பத்துக் கொன்று
பூரணமாங் களஞ்சிதனி லொன்று போடே. 1008

போட்டுமிகத் தானுருக்கி யெடுத்துப் பார்த்தால்
பொன்னான தங்கமதை யென்ன சொல்வேன்
பூட்டறிந்து பொற்குறியைக் கண்டால் மைந்தா
பொன்னுலகெ லாமுனது வசமே யாகும்
தாட்டிகமாய்ப் பொன்னுலகில் தானே தானாய்த்
தானிருந்து சிவயோகத் தலைவ னாகிப்
பாட்டறிந்து பயனறிந்து பதியில் நிற்கப்
பத்தியுடன் இன்னமொரு பாகங் கேளு. 1009

அயக்களங்கு

கேளப்பா இன்னமொரு சூட்சஞ் சொல்வேன்
கிருபையுடன் புலத்தியனே நன்றாய்க் கேளு
ஆளப்பா அயமுடனே வெள்ளி செம்பு
அருள்பெருகும் குகையில்நின்று உருகும் போது
தாளப்பா ஏமரசம் நாகங் கூட்டிச்
சார்ந்துநன்றாய் உருக்கியதைப் பார்க்கும் போது
கேளப்பா இல்லாத களங்காய் நிற்கும்
குருவான களங்கினுட வேதை காணே. 1010

காணவே வேதையுட வகையைக் கேளு
கருவான செம்புவெள்ளி உருகும் போது
தோணவே யஞ்சுமுகக் களங்கை மைந்தா
சுத்தமுடன் பத்துக்கு வொன்று தாக்கு
பேணவே வாலைவய தென்ன சொல்வேன்
பேர்பெரிய புலத்தியனே யீரெட் டாகும்
பூணவே இந்தமுறை பெற்றுக் கொண்டு
பூலோக வாசமதாய்த் தவசு பண்ணே. 1011

பண்ணப்பா இன்னமொரு பாகங் கேளு
பாரான அயமுடனே செம்பு சேர்த்துக்
கண்ணப்பா தான்கலக்க உருக்கும் போது
கனிவான தாரமுடன் வீரம் லிங்கம்
நண்ணப்பா மனோசிலையும் கெவுரி கூட்டி
நாட்டமுடன் தான்கொடுக்கச் சத்தை யுண்ணு
முன்னப்பா நிறைந்தசத்தை யுண்டு நின்ற
முத்தியுள்ள செம்பயத்தை யெடுத்துப் பாரே. 1012

அயசெம்புக் களங்கு

எடுத்ததொரு செம்பயத்துக் கிடை தான் மைந்தா
ஏகாந்த மானகுரு தங்கஞ் சேர்த்து
நடுத்தரமாய்த் தானிருந்து உருக்கிப் பாரு
நன்மையுள்ள களங்குவெகு தன்மை யாகும்
தொடுத்ததொரு களங்குதன்னை எடுத்துக் கொண்டு
சுத்தமுள்ள வெள்ளியிலே பத்துக் கொன்று
கொடுத்துமிகத் தானுருக்கிப் பார்த்தா யானால்
குருவான தங்கம்வெகு காந்தி யாமே. 1013

அரிதாரக் கட்டு

ஆமப்பா காந்தியென்ற அரிதா ரத்தை
அப்பனே கட்டுகிற வகையைக் கேளு
நாமப்பா சொல்லுகிறோம் ரெங்குவெடி சீனம்
நலமான காரமுடன் தாரஞ் சேர்த்துத்
தாமப்பா தண்ணீரா லரைத்து ருட்டித்
தங்கமென்ற தாரமதுக் கங்கி பூட்டி
ஓமப்பா மண்சீலை வலுவாய்ச் செய்து
உத்தமனே காடையென்ற புடத்தைப் போடு. 1014

போடப்பா நிதானமாய்ப் புடத்தைப் போடு
பொன்னான தாரமதை யெடுத்துப் பார்த்தால்
நாடப்பா மெய்க்கவேதான் கட்டிப் போகும்
நல்லகட்டுத் தாரமதை யெடுத்து மைந்தா
சூடப்பா தாம்பூரந் தன்னி லேதான்
சுத்தமுட னரைவாசி தாரஞ் சேர்த்துக்
கூடப்பா குகைதனிலே உருக்கிப் பார்க்கக்
குருவான தாம்பூரங் குடவ னாமே. 1015

ஆமப்பா குடவனென்ற தாம்பூ ரத்தில்
அரைவாசி தங்கமிட்டு உருக்கிக் கொண்டு
ஓமடா வெள்ளிதனில் பத்துக் கொன்று
உருக்கமுடன் தான்கொடுத்து உருக்கிப் பார்த்தால்
நாமடா சொல்லுகிறோம் வெள்ளி மைந்தா
நல்லதங்கச் சோதியடா கண்கொள் ளாது
தாமடா தன்னிலையின் வாசி பூட்டிச்
சங்கையுள்ள மவுனாதி யோகங் காணே. 1016

ரசகெந்தத்தால் ரசிதவேதை

காணவே யின்னமொரு வெள்ளி வித்தை
கருவாகச் சொல்லுகிறேன் கண்டு பாரு
பூணவே வெள்வங்கந் தன்னை வாங்கிப்
புத்தியுடன் அதுக்குநிகர் ரசத்தைச் சேர்த்துப்
பேணவே அதுக்குநிகர் வெண்ணெய் கூட்டிப்
பேறான அமுர்தரசந் தன்னா லாட்டித்
தோணவே ரவிதனிலே காயப் போட்டுச்
சுத்தமுடன் தானெடுத்து இன்னங் கேளே. 1017

கேளடா வெள்ளிதனை யுருக்கி மைந்தா
கிருபையுள்ள வங்கமதைச் சரியாய்த் தாக்கு
காலடா வலுவறிந்து உருக்கிப் பாரு
கயிலாச வெள்ளியது குருவாய் நிற்கும்
வாலடா வெள்ளியென்ற குருவை மைந்தா
மார்க்கமுடன் குப்பியிலே வைத்துக் கொண்டு
சூலடா தான்கொடுத்து உருக்கிப் பார்க்கச்
சுத்தமென்ற செம்பதுவும் வெள்ளி யாமே. 1018

ஆமப்பா இன்னமொரு கருமானங் கேளு
அடங்கிநின்ற வெள்ளைப்பா ஷாணந் தன்னில்
ஓமப்பா இடைசரியாய் ரசத்தை வார்த்து
உண்மையென்ற மவுனரசந் தன்னா லாட்டி
நாமப்பா வென்றவங்கத் தகட்டில் பூசி
நன்மையுட னோட்டில்வைத்து மண்ணுஞ் செய்து
தாமப்பா நிலையறிந்து புடத்தைப் போட்டால்
தன்மையுள்ள வங்கமது வேட்டை காணே. 1019

காணவே வேட்டையென்ற வங்கந் தன்னைக்
காரமிட்டுக் குகைதனிலே யுருக்கிப் பார்த்தால்
பேணவே வங்கமது உருகி நல்ல
பேர் பெரிய வெள்ளிவய தாகும் பாரு
காணவே பொற்கமலந் தன்னில் நின்று
சுதியுடனே யண்டவெளிக் குள்ளே சென்றால்
ஊணவே உள்வெளியு மொன்றாய் நின்று
உண்மையென்று மவுனமது உறுதி யாமே. 1020

உறுதியுள்ள மவுனமடா மகார பீடம்
உண்மையென்ற மவுனமடா நந்தி வீடு
பருதிமதி யொன்றாகிப் பாய்ந்த வீடு
பரமகயி லாசமென்ற பரம வீடு
சுருதிபொரு ளானதொரு பரம வீட்டில்
சோதிமணி நாவினுனி சுழற்றி னாக்கால்
கருதியதோர் கபாடமதுக் குள்ளே சென்று
கருணைவளர் தெரிசனத்தைக் கண்டு பத்தே. 1021

சோடச தெரிசனம்

பத்தியுள்ள புலத்தியனே சொல்லக் கேளு
பதிவான தெரிசனங்கள் பதினாறு தன்னை
முத்தியுள்ள ஆதார தெரிசனந்தா னொன்று
மூலமென்ற ஆத்மாவின் தெரிசனந்தா னொன்று
சித்தியுள்ள அறிவான தெரிசனந்தா னொன்று
சிவசிவா மனமான தெரிசனந்தா னொன்று
புத்தியுடன் மனமடங்குந் தெரிசனந்தா னொன்று
புகழான உள்ளமென்ற தெரிசனந்தா னொன்றே. 1022

ஒன்றான பூரணமாந் தெரிசனந்தா னொன்று
உறுதியுள்ள நாசிநுனி தெரிசனந்தா னொன்று
பன்றான புருவமய்யத் தெரிசனந்தா னொன்று
பார்மகனே வெளியான தெரிசனந்தா னொன்று
நன்றாக நின்றவெளி தெரிசனந்தா னொன்று
நாடிமனங் கொண்டவிந்து தெரிசனந்தா னொன்று
ன்றாத நாதமென்ற தெரிசனந்தா னொன்று
குணமான உருவமென்ற தெரிசனந்தான் காணே. 1023

காணவே அரூபமென்ற தெரிசனந்தா னொன்று
கயிலாச சாயுச்சிய தெரிசனந்தா னொன்று
தோணவே தெரிசனங்கள் பதினாறு தன்னைச்
சுத்தமுடன் சற்குருவின் கடாட்சத் தாலே
ஊணவே யந்தநிலை யூணிப் பார்த்து
உண்மையுடன் தன்னிலையில் தன்னைக் கண்டு
பூணவே யிகபரசா தனத்துக் கெல்லாம்
பொருந்திமனம் பூரணமாய் வாழ்வாய் பாரே. 1024

பாரப்பா தெரிசனங்கள் பதினாறு தன்னைப்
பத்தியுடன் தன்னகமாய்ப் பதிவாய்க்காண
நேரப்பா சொல்லுகிறேன் மூலா தாரம்
நேர்மையுள்ள தன்னறிவாய் நிலையைக் காணச்
சாரப்பா ஆதார மேலா தாரம்
சகலகலை வாசமடா மூலா தாரம்
காரப்பா அடிமூலா தாரத் துள்ளே
கருணையுடன் ஓமென்று இங்கென் றூணே. 1025

ஊணவே வாசிதனை மூலந் தன்னில்
ஓமென்ற தானிருத்தி யுறுதி கொண்டு
பேணவே யிங்கென்று மவுனம் பூட்டிப்
பெருமையுடன் ஓம்அங் சிவாயநம வென்று
தோணவே தினம்நூறு உருவே செய்தால்
சுத்தமுள்ள சுழுனையிலே நந்தி காணும்
பூணவே நந்திபிர காசங் கண்டால்
பொருந்திநின்ற ஆதாரஞ் சித்தி யாமே. 1026

ஆமப்பா ஆதாரஞ் சித்தி யானால்
ஆதார தேவதைக ளப்போ காணும்
ஓமப்பா என்றபிர ணவத்தி னாலே
ஒளிவிளக்காய் நின்றதொரு சோதி காணும்
வாமப்பா நிறைந்தபூ ரணத்தி னாலே
மகத்தான சோதிபஞ்ச வர்ண மாகத்
தாமப்பா தன்னிலையிற் றானே காணும்
தன்மையுடன் கண்டதெல்லாஞ் சித்தி யாமே. 1027

ஆத்ம தரிசனம்

சித்தியுள்ள ஆதார தெரிசனந்தான் சொன்னேன்
சிவசிவா ஆத்மாவின் தெரிசனத்தைக் கேளு
புத்தியுடன் கண்டமதில் அங்கென் றூணிப்
பூரணமாய் வாசிதனை நிறுத்திக் கொண்டு
பத்தியுடன் சுழுமுனையில் வாசி யேறப்
பாலகனே உங்கென்று மவுனம் பூட்டிச்
சுத்தமுடன் ஓம்கிலிம் நம்சிங் கென்று
சுருதிபெறத் தினம்நூறு உருச்செய் வாயே. 1028

செய்யப்பா உறுதிகொண்டு உருவே செய்யச்
செயமான திருவுருவும் ஆதா ரத்தில்
மெய்யப்பா சுழுமுனையின் பிரகாசத் தாலே
மெஞ்ஞான மூலவன்னி பிரகா சிக்கும்
மையப்பா மூலவன்னி பிரகா சித்தால்
மந்திரகலை ஆத்மாவின் அறிந்து கொண்டு
கையப்பா குவிந்தநிதம் பணிந்து கொண்டால்
கருணைவளர் சீவாத்மா கனியுந் தானே. 1029

அறிவு தெரிசனம்

தானென்ற ஆத்மாவின் தெரிசனத்தைச் சொன்னேன்
சங்கையுடன் அறிவான தெரிசனத்தைக் கேளு
வானென்ற மூலமதி லுங்கென் றூணி
மவுனமென்ற பீடமதில் அங்கென் றோதிக்
கோனென்ற விளியோகங் கொண்டு நல்கக்
குறியறிய ஓம்நங் சிவய வென்று
தேனென்ற ரசம்போலே உருவே செய்தால்
தேவாதி தேவனென்ற பிரம மாச்சே. 1030

ஆச்சப்பா பிரமமென்றாலார்தான் சொல்வார்
ஆதியென்ற சுழுனையிலே அக்கினிதான் தோன்றும்
பேச்சப்பா மூலவன்னி தன்னாலந்தப்
பேரண்டஞ் சுத்திவரக் கெவுன முண்டாம்
நீச்சப்பா வெகுநீச்சு மூச்சே வந்த
நிசமான அந்தமடா நெத்திக் கண்ணு
பாச்சப்பா தானறிந்து வாசி கொண்டால்
பதிவான மவுனசித்து பலிக்குங் காணே. 1031

மவுன தெரிசனம்

காணென்ற அறிவான தெரிசனமுஞ் சொன்னேன்
கலங்காத மவுனமென்ற தெரிசனத்தைக் கேளு
வாமெ ன்ற பூரகத்தில் சிங்கென் றூதி
மகத்தான சுழுனையிலே வாசி பூட்டிப்
பூணொன்ற ஓம்அரி நமவென் றேதான்
புத்தியுடன் தினம்நூறு உருவே செய்தால்
வானென்ற தேகமது குளிர்ச்சி யாகும்
மகத்தான ஆனந்த மயமாந் தானே. 1032

தானென்ற ஆனந்தந் தானே தானாய்த்
தன்மையுடன் நின்றநிலை தானே கண்டு
வானென்ற கேசரியில் மவுன மொட்டி
வரிசையுடன் அண்டகே சரியில் நின்றால்
ஏனென்ற மனோன்மணிதான் முன்னே நின்று
இன்பரச அமுர்தமது ஈவாள் பாரு
வீணென்று யோகமதை விட்டா யானால்
வேதாந்த மவுனமதுக் குறுதி போச்சே 1033

மனமடங்கு தெரிசனம்

உறுதியுள்ள மனமான தெரிசனமுஞ் சொன்னேன்
உகந்தமன மடங்கினதோர் தெரிசனத்தைக் கேளு
பருதிமதிச் சுடரறிந்து மவுனம் பூட்டிப்
பக்தியுடன் ருத்திரனில் வங்கென் றூணித்
திருகுசுழு முனையதிலே சிங்கென் றோட்டித்
தீர்க்கமுடன் தானிருந்து குருவைப் போற்றி
உறுதியுடன் சிங்குசிவா வசியென் றோத
உண்மையுள்ள ருத்திரனார் தெரிசனமு மாமே. 1034

ஆமப்பா தெரிசனத்தை யென்ன சொல்வேன்
ஆதியென்ற தேகமதி லக்கினிகொண் டேறும்
காமப்பால் கானல்பால் கனிந்தமுத மூறுங்
கண்ணறிந்து மவுனமதாய்க் கனிவாய் நின்றால்
வாமப்பா லுறுதியினால் வரைகள் தாண்டி
மகத்தான சுழுனைவழி வாசல் சென்று
தாமப்பா தன்னறிவே சாட்சி யாச்சு
தன்மயமும் விண்மயமுந் தானாய் நில்லே. 1035

உள்ளந்தெரிசனம்

நில்லென்று மனமடங்குந் தெரிசனமுஞ் சொன்னேன்
நிசமான புலத்தியனே யின்னங் கேளு
உள்ளென்ற உள்ளமதின் தெரிசனத்தைச் சொல்வேன்
உத்தமனே சற்குருவைத் தியானம் பண்ணிச்
சொல்லென்ற வாசிதனை வங்கென் றெழுப்பித்
தீர்க்கமுடன் உங்கென்று மவுனம் பூட்டிச்
சொல்லென்று அங்கிலிவசி வசியென் றோதத்
துலங்குமடா மயேசுபரத்தின் தெரிசனந்தான் காணே. 1036

காணவே மயேசுபரத்தின் தெரிசனந்தான் மைந்தா
கருணையுடன் காணவெகு அரிதாம் பாரு
பூணவே புருவமய்யச் சுழுனைக் குள்ளே
பொருந்திநின்று வந்ததொரு வாசி தானும்
தோணவே துலங்கிநின்ற அசவை யாகிச்
சொல்நிறைந்த மந்திரமு மதுவே யாகி
ஊணவே மவுனமதுக் குறுதியாகி
உள்வெளியாய் நின்றுதடா வுகந்து பாரே. 1037

பாரப்பா உள்ளமென்ற தெரிசனமுஞ் சொன்னேன்
பதிவான பூரணமாந் தெரிசனத்தைக் கேளு
நேரப்பா அங்கென்று வாசிதனை யெழுப்பி
நிலையான சுழுனையிலே அங்கென்றி ருத்திக்
காரப்பா ஓம்றீங் கிலிமங் கென்று
கருத்துறவே நூத்தெட்டு உருவே செய்தால்
தேறப்பா அண்டமெனுஞ் சுழுனைக் குள்ளே
தீர்க்கமுடன் சதாசிவனார் தெரிசனமுங் காணே. 1038

மவுனரச பானம்

காணவே அரிதாகுந் தெரிசனந்தான் மைந்தா
கற்பூர தீபமதின் காந்தி தன்னைப்
பேணவே மனம்பூண்டு காந்தி தன்னால்
பேசாத மவுனரச பான முண்டாம்
தோணவே மவுனரச பானங் கொண்டால்
துலங்குமடா மவுனரசஞ் சுத்த மாக
ஊணவே தானிருந்து மவுனம் பூட்ட
ஓடிநின்ற வாசியது ஒடுக்க மாச்சே. 1039

நாசிநுனி தெரிசனம்

ஒடுக்கமுடன் பூரணமாந் தெரிசனத்தைச் சொன்னேன்
உண்மையென்ற நாசிநுனி தெரிசனத்தைக் கேளு
அடுக்கநடு மனைதனிலே வங்கென் றிருத்தி
ஆதியென்ற சுழுமுனையில் சிங்கென் றூதித்
தொடுத்துமிகச் சிவாயவசி அங்மங் கென்று
சுத்தமுடன் நூத்தெட்டு உருவே செய்தால்
நடுத்தமரில் நாதாந்தச் சோதி தோன்றி
நலமான காரியமும் நன்மை யாமே. 1040

நன்மையுடன் நாசிநுனி நாட்டம் பாரு
நாதாந்தப் பூரணமாய்ச் சுழுனை பாரு
உண்மையென்ற வாசியிலே உகந்து நில்லு
உறுதியுடன் வாசிசிவ யோகம் பாரு
தன்மையுடன் உலகமதில் தானே நின்று
சகலஉயிர் தாபரமும் தானே தானாய்ச்
சின்மயமுந் தானிருந்து தெளிந்து கொண்டால்
சிவசிவா மவுனமது திறக்கும் பாரே. 1041

புருவமய்யத் தெரிசனம்

பாரப்பா நாசிநுனி தெரிசனமுஞ் சொன்னேன்
பதிவான புருவமத்தி தெரிசனத்தைக் கேளு
நேரப்பா மனம்நிறுத்தி மவுனம் பூட்டி
நேர்மையுடன் சுழுனையிலே மனக்கண் சாத்திக்
காரப்பா கனிந்துமனங் கொண்டு மைந்தா
கருணையுடன் நின்றுதவஞ் செய்தா யானால்
பேரப்பா சதுரகிரி முடிவி லேதான்
மெஞ்ஞான சோதிசிவ சோதி யாமே. 1042

சோதியென்ற ஆதியடா சுழுனைக் கம்பஞ்
சுயஞ்சோதி யானசிவ ஞான தீபம்
ஆதியென்ற தீபமடா அரூப மாகும்
அருள்நிறைந்த வாசியடா மூல வன்னி
நீதியென்ற வன்னியடா சீவ னாச்சு
நிலையான தீபமடா பரமாய் நிற்கும்
சாதியென்ற ஆவியுட வன்னி தன்னைத்
தனையறிந்து வாசியாம் அதனில் சேரே. 1043

சேரப்பா மூலவன்னி தன்னில் மைந்தா
திருவான சோதிபரஞ் சோதி தன்னில்
சாரப்பா வென்றுரெண்டு மொன்றாய்ச் சேர்ந்தால்
தன்னகமும் விண்ணகமு மொன்றாய்ப் போகும்
நேரப்பா ஒன்றான காட்சி பார்த்தால்
நிறைந்தபரி பூரணமாய்க் கண்டோம் கண்டோம்
ஆரப்பா அறிவார்கள் ஆதி யந்தம்
அடங்கிநின்ற பரசொரூபம் வெளிதா னாச்சு 1044

பரமவெளி தெரிசனம்

ஆச்சப்பா புருவநடு தெரிசனமுஞ் சொன்னேன்
அரகரா பரமவெளி தெரிசனத்தைக் கேளு
பேச்சப்பா பெருகிநின்ற மூலந் தன்னில்
பிரணவத்தால் வாசிதனை மேலே நோக்கிப்
பாச்சப்பா மவுனமதில் நீங்கென் றிருத்திப்
பதிவான சுழுமுனையில் பந்திப் பார்க்கில்
மூச்சப்பா பெருகிநின்ற ஆறா தாரம்
முகிவில்லாப் பரமவெளிக் காந்தி யாச்சே. 1045

காந்தியென்ற பரமவெளிக் காந்தி தன்னைக்
கனிவான கண்ணெறிந்து யார்தான் காண்பார்
பாந்திபமாய்ப் பரவெளியைப் பதிவாய்ப் பார்த்தால்
பஞ்சவர்ண அஞ்சுநிலை தானே தோணும்
சாந்தமுடன் அஞ்சுநிலை தன்னைப் பார்த்தால்
தன்மயமும் விண்மயமு மதுவாய்ப் போச்சு
நேர்ந்துமிகப் பூரணமாய் மவுனங் கொண்டால்
நிசமான மனனகுரு நாத னாச்சே. 1046

வெளி தெரிசனம்

ஆச்சப்பா பரமவெளி தெரிசனமுஞ் சொன்னேன்
அருள்நிறைந்த வெளியினுட தெரிசனத்தைக் கேளு
காச்சப்பா அங்கென்று கண்டத்தி லிருத்திக்
கருணைவளர் உச்சியிலே சிம்மென்று ரேசி
பாச்சப்பா இப்படியே பிராணாயஞ் செய்தால்
பரமவெளி தன்னிலொளி பளீரெனவே தோணும்
மூச்சப்பா நின்றநிலை யாரறியப் போறார்?
முத்திகொண்ட சுழுனையடா சத்தியந்தான் பாரே. 1047

விந்து தெரிசனம்

பாரப்பா ஒளியினுட தெரிசனமுஞ் சொன்னேன்
பதிவான விந்தினுட தெரிசனத்தைக் கேளு
சாரப்பா கேசரியில் மனத்தை நாட்டித்
தமரான அறுவாசல் தன்னில் சென்று
நேரப்பா கண்ணடங்க மவுனம் பூட்டி
நேர்மையுடன் தானிருந்து வங்றீங் கென்று
காரப்பா வாசியைநீ மேலே நோக்கிக்
கருணையுடன் சுழுனையிலே சிம்மென்று நில்லே. 1048

நில்லடா சிம்மெனவே வாசி கொண்டு
நிலையான தமரதிலே வாசி யேற்றி
வில்லடா விசைபோல வாசி யேற்றி
விபரமுட னிறங்குதுறை யறிந்து கொண்டு
செல்லடா தமர்தனிலே நின்று பார்த்தால்
சிவசிவா பூரணசந் திரனே காணும்
உள்ளடா பூரணசந் திரனைக் கண்டால்
உறுதியுள்ள திஷ்டிதிதி சங்கார மாமே. 1049

நாததெரிசனம்

ஆமப்பா விந்தினுட தெரிசனமுஞ் சொன்னேன்
அருள்பெருகு நாதமதின் தெரிசனத்தைக் கேளு
தாமப்பா தன்னிலையைத் தானே கண்டு
சங்கையுடன் விபூதிதூ ளிதமே செய்து
சோமப்பால் கொண்டுபரி பூரணமாய் நின்றால்
சொல்நிறைந்த சுவாசமது பாழ்போ காமல்
தாமப்பா சொல்லுகிறோம் மவுனம் பூட்டி
நாதாந்தத் தமர்வாசல் திரையை நீக்கே. 1050

நீக்கியந்தக் கேசரியில் மனத்தை நாட்டி
நிலையறிந்து ஓம்வசி யென்று மைந்தா
தாக்கிநன்றாய் ரேசகபூ ரகமாய் நிற்கத்
தன்மையுடன் வாசியது உண்மை யாகும்
போக்குவரத் தாகிநின்ற வாசி மைந்தா
பொருந்திநின்ற தமரதிலே யடங்கி னாக்கால்
வாக்குமன தொன்றாக மனது கூர்ந்து
மகத்தான கேசரியில் சோதி யாமே. 1051

சொரூப தெரிசனம்

சோதியென்ற நாதாந்த தெரிசனமுஞ் சொன்னேன்
சொரூபமென்ற உரூபமதின் தெரிசனத்தைக் கேளு
ஆதியென்ற கோமுகா சனமேல் கொண்டு
அப்பனே விபூதியுத் தளமே செய்து
நீதியென்ற வாமத்தால் மவுனம் பூட்டி
நின்றுநிலை தமர்வாசல் திரையை நீக்கி
ஓதியதோர் பிரணவத்தா லுள்ளே சென்றால்
ஒளிவெளியும் வெளியொளியு மொன்றாய்ப் போமே. 1052

ஒன்றாகி நின்றபொருள் தானே நின்றால்
உத்தமனே அட்டசித்துத் தானே யாகும்
நன்றான ரவிமதியுஞ் சொன்னபடி கேட்கும்
நாட்டமுடன் இகபரமும் நன்மை யாகும்
நின்றாடும் வாசியினால் மவுனங் கொண்டு
நெறியான தமரதிலே வாச மாகிக்
குன்றாத மவுனரசங் கொண்டா யானால்
குருவான தேசியடா வாசி யாமே. 1053

வாசியென்ற உருவமதே பொருளென் றெண்ணி
மனதுபரி பூரணமாய்ப் பூசை செய்து
தேசியென்ற அரூபமதின் தெரிசனத்தைக் கேளு
திருகுமணி வாசலிலே மவுனம் பூட்டி
நாசிநுனிச் சுழுனைவளித் தமருக் குள்ளே
நாவின்நுனி யூடுருவ நாட்டங் கொண்டு
ரேசிவா சிம்மெனவே வாசி யூது
நின்னகமும் விண்ணகமு மொன்றாய்க் காணே. 1054

ஒன்றான காட்சியடா அரூப மாச்சு
உத்தமனே யரூபமென்ற காட்சி தன்னை
அண்டகே சரியெனவே சுமந்து கொண்டு
அனுதினமும் பிராணாதா ரகமாய் நின்றால்
குன்றாத சோதியடா ஆதி யாச்சு
குருவான சோதியிலே கூர்ந்து கொண்டால்
நன்றான பதவியடா சாயுச்சிய பதவி
நாதாந்தப் பதவியென்ற அரூப மாச்சே. 1055

தெரிசனை பதினாறுக்கு மவுனம்

அரூபமென்ற தெரிசனங்கள் பதினா றுக்கும்
ஆதியென்ற தெரிசனந்தான் மவுன பீடம்
சொரூபமென்ற சோதியிலே மனக்கண் சாத்திச்
சுத்தமுடன் அந்திரத்தில் மணிநா வுன்னி
அரூபமென்ற தெரிசனங்கள் ஈரெட் டுந்தான்
அங்ஙனமே தோணுமடா அமர்ந்து பாரு
சுரூபமென்ற சோதியிலே அமர்ந்து பார்த்தால்
துலங்குமடா நினைத்தவண்ணஞ் சோதி தானே. 1056

தானான சோதியடா உச்சி மூலம்
தனையறிந்த வாசியடா மவுன பீடம்
கோனான சுழுனையடா நந்திக் கம்பம்
குருவான மூலமடா ஓங்கா ரந்தான்
வானான வட்டமடா கபாட வாசல்
வரையறிந்து திரையகற்றி மவுனங் கொண்டால்
தேனான அமுர்தரசத் தெளிவு காணும்
தெளிவான ஒளியறிந்து வெளியைக் காணே. 1057

காணவே சொல்லுகிறேன் கமலந் தன்னைக்
கண்மூக்கு மத்தியிலே கருத்தை வைத்துத்
தோணவே காணுமடா கிணேசன் மூலந்
துகளறுத்துச் சுழுமுனையில் ஒளியைக் கண்டால்
பூணவே காணுமடா சுவாதிஷ் டானம்
புத்தியுட னசபையிலே பூண்டு பாரு
ஊணவே சுழுமுனையில் மணிநா வுன்ன
ஓடாது வாசிசரம் நாதந் தானே. 1058

தானான மவுனமடா பூரகத் தானம்
தன்னிலையில் தானறிந்து ஒளியைப் பாரு
ஊனான அனாகதம்பின் கடைக்கண் ணாலே
உருமையுடன் ருத்திரன்தன் ஒளியைப் பாரு
வானான ஆக்கினையில் சச்சு தானந்த
மணிமேவுஞ் சதாசிவத்தின் ஒளியைப் பாரு
கோணாமற் குருமுறையாய்ப் பார்த்த பின்பு
குண்டலியா மாதார மூலம் நோக்கே. 1059

நோக்குவதுக் கொருபோது அமுது கொள்ளு
நுண்மையுடன் பிங்கலையில் மவுன மூணில்
நாக்குநுனி சுவைபிறக்கு மறிந்து கொள்ளு
நலமான உமிநீறு மதுவே யாகும்
மூக்குநுனி சுழுனையிலே வாசி யேற
முத்திபெற இப்படியே புத்தி சொன்னோம்
பாக்குடனே வெற்றிலையை யகலத் தள்ளு
படுக்குமிடக் கரத்திலந்தத் தலையைத் தாங்கே. 1060

தாங்குவதுக் கனுபோகஞ் சூரியனிற் கூடு
சய்யோக மாலதென்ன சிவயோக மப்பா
தூங்குவது மவுனமதாய்த் தூங்க வேணும்
தூங்கையிலே சோதிபிர காச மப்பா
ஓங்குவதுக் கோங்காரக் கம்பம் நாட்டி
உத்தமனே மேல்வாசற் குள்ளே தாக்கு
வாங்குவதுக் கிடமறிந்து சரத்தை வாங்கு
வளமான ரேசகந்தான் மேலே தாக்கே. 1061

தாக்கடா மேல்வாசற் குள்ளே சென்று
சாக்கிரத்திற் கண்மூடிச் சதாநித்தம் பாரு
நோக்கடா நோய்களெல்லா மகன்று போகும்
நுண்மையுடன் பார்த்துவா கண்மூ டாமல்
வாக்கடா பேசாதே மவுன மூட்டு
மகத்தான சமாதியடா விளங்கும் பாரு
போக்கடா ஐம்பொறியை யடித்துத் தள்ளு
பூரணமாய் மதியமுர்தம் விளங்கும் பாரே. 1062

யோக மாத்திரை பார்க்குந்திதி

விளங்குமடா குருபாதம் நடுலா டத்தில்
மெஞ்ஞான விளியமுர்த மேவுங் காலந்
தளங்கொண்டபுரியஷ்டம் பூரணமு மேலாய்த்
தன்மையுடன் குருவெளியாய்ச் சார்ந்து நிற்கும்
குளங்கொண்ட சமாதியடா மவுன மார்க்கம்
குருமுறையாய்ச் சமாதியிலே கூர்ந்து பார்க்கில்
நலங்கொண்ட மவுனமடா அண்ட மேரு
நாதாந்த வேதமடா சுழுனை தானே. 1063

தானென்ற தியானமடா அஞ்சு சொன்னேன்
தண்மையுள்ள ஆதார மூலஞ் சொன்னேன்
கோனென்ற குருவருளால் ஒளிகண் காணக்
குருவான தியானமதின் குறியுஞ் சொன்னேன்
தேனென்ற பஞ்சசத்தி தீட்சை சொன்னேன்
சிவஈசாட் சரத்தினுட திறமுஞ் சொன்னேன்
வானென்ற சடாதார யோகத் துக்கு
வரிசையுடன் தானிருந்து வாசி யூதே. 1064

வாசியென்ற இடகலையில் பூரகந்தான் ரெண்டு
வரிசையுள்ள சுழுனையிலே கும்பகந்தான் நாலு
தேசியென்ற பின்கலையில் ரேசகந்தா னொன்று
செம்மையுடன் பவுரணையைத் தொட்டுச் சந்திரன்
தேசியென்ற முறையம்மா வாசி தொட்டுத்
திசமான வளர்பிறையிற் றாக்கிப் பாரு
மாசியென்ற பித்தநீர் மாயா வண்ணம்
மதிபார்த்துக் கண்ணாலே நோக்கு வாயே. 1065

முப்புவுக்கும் மவுனத்துக்கும்

நோக்கடா ஆதாரம் பனிரெண் டும்பார்
நுண்மையுள்ள தமர்வாசற் குள்ளே வாசி
தாக்கடா ரேசகமாய்க் கண்டம் பாயுஞ்
சத்தியிடை பாயாமற் பின்கலைக்கே ரேசி
வாக்கடா மேல்வாசற் பூட்டு விட்டால்
மகத்தான பொறியதுவும் பூதா தய்யா
நாக்கடா வாசிதா ரணையு மாச்சு
நலமான சுழுமுனையில் நாடி நில்லே. 1066

நில்லடா அக்கினிதா ரணையு மாச்சு
நிசமான விந்துவுடன் நாதங் கூடச்
செல்லடா திசநாதங் கிளம்பு மையா
திடமான பூரணமா மதியி னுள்ளே
அல்லடா அமுர்தமது கக்க லாகும்
அடவான அமுர்ததா ரணையு மாச்சு
கல்லடா ஆதாரக் காலன் மாண்டான்
காலனென்ற இடகலையை ரவிதா னுண்டே. 1067

உண்டதொரு ரவியாலே மதியமுர்த மாச்சு
ஊதியனல் தான்கொளுத்த வேர்வை யாச்சு
கண்டதொரு அப்புதா ரணைதான் மைந்தா
காலதேக மானதினால் தாரணையாம் பூமி
கொண்டதொரு மேல்வாசல் திறந்த போது
குருவான தாரணையாம் வெளிச்ச மாச்சு
அண்டபிண்டம் ரெண்டுமடா ஒன்றாய் நின்று
ஆகமுட னிருவினையும் அமந்த தாமே. 1068

ஆமிந்த வாசிரவி யூடே சென்று
அடங்கினது பிராணாய மய்யா சொன்னேன்
ஓமிந்தத் திருவாசி மேலே யேறி
உயர்ந்திட்டால் பிரத்தியா கார மாச்சு
தாமிந்தப் பிரமமேதான் பிரம மாகித்
தன்மையுடன் பூரணத்திற் சொக்கிப் போனால்
போமிந்த நேமமுடன் ஏமன் றானும்
பூரணத்திற் செத்தவன்போ லிருக்கப் பூணே. 1069

பூணாத மனத்தோர்க்குத் தியான மேது?
புந்தியறி வில்லார்க்கு ஞான மேது?
வீணான வீண்பதர்க்கு வாத மேது?
விண்ணதனை யறியார்க்கு யோக மேது?
ஊணான மனத்தோர்க்கு மவுன மேது?
உறுதிமன மில்லார்க்குக் கெவுன மேது?
பேணாத மடையர்க்கு உயிர்தா னேது?
பிராணநிலை தனையறிந்து ஒடுக்கங் காணே. 1070

ஒடுக்கமென்ற நிலையதுகே ளுண்ணாக் குள்ளே
உயர்ந்திட்டுக் கடுக்கவொரு குகைதா னுண்டு
அடக்கமென்று குகையதுவைக் கா ண வென்றால்
அரிதரிது வெகுகடினங் காணப் போமே
துடக்கறுத்துப் பஞ்சகர்ண தீட்சை பெற்றுத்
தூண்டாத மணிவிளக்கைத் தூண்டி னாக்கால்
நடக்கும்வளி துலக்கமதா யங்கே காணும்
நாதாந்த அண்டவெளித் தொண்டை தானே. 1071

தானென்ற தொண்டையடா விந்து வட்டத்
தமரதிலே கொண்டெழுந்த வாசி தன்னால்
கோனென்ற முக்கோண மவுன பீடம்
குருவான பீடமடா சுழுனை மூலம்
வானென்ற மூலமதில் மணிநா வுன்னி
மகாரமென்ற அனுக்கிரக வாசல் சென்று
பூணென்ற மனம்நிறுத்தி மவுனங் கொண்டால்
பூரணமாய் மதியமுர்தம் பொங்கும் பாரே. 1072

பாரப்பா அண்டபகி ரண்ட மெல்லாம்
பாங்கான பூரணத்திற் செனித்த வாறு
நேரப்பா மேகசிலத் துவரை நீக்கி
நேர்மையுடன் குன்றுசெடி தாவ ரங்கள்
வீரப்பா தழைத்தாப்போ லந்த மேகம்
விபரமுடன் சூரியனி லொடுங்கு மப்பா
சாரப்பா அகாரத்தி லுகாரந் தோன்றித்
தன்மையுள்ள மகாரமுடன் விந்து நாலே. 1073

சிவகலை

நாலான விந்துவதில் அனந்தஞ் சென்மம்
நயந்துபார் திரேதியொடு நாதாந் தந்தான்
மேலான அகாரமதிற் சத்தி தானும்
வியாபினியுஞ் சாமனைஉன் மனைதான் மைந்தா
நூலான கருணைதரு மோம ரூபி
நுண்மையுடன் அனந்தமுதல் அனாதை யோடு
மாலான அனாகிருதை யிதுநா லுந்தான்
மார்க்கமுடன் சிவகலையாய் மகிழ்ந்து காணே. 1074

காணவே சோடசமாங் கலைதா னாகிக்
கமலமதை நோக்குதற்குக் காலாய் நின்று
பேணவே யகாரந்தான் சோதி யாகிப்
பிறழாமல் மூலமதாய்ப் பிலமாய் நிற்கும்
பூணவே யட்சரந்தான் அண்டத் துள்ளே
பொருந்திநின்று அக்கினிபோற் போத மாகும்
தோணவே மகாரந்தான் கண்டந் தன்னில்
துலங்கிநின்ற ஆதித்தன் காந்தி யாமே. 1075

காந்தியென்ற விந்துவது மின்போல் தோன்றிக்
கண்டமதி லங்குலம்நால் நடந்து நிற்கும்
சாந்தியென்ற புருவமதிற் சாந்த மானால்
சந்திரன்போ லொளிவீசித் தன்மை யாகும்
பாந்திபமாய்த் தினந்தோறும் பழக்க மானால்
பாலகனே கற்பூர தேக மாகும்
சேர்ந்துபா ரங்குலம்மேல் மூன்றே யானால்
சிவசிவா சோடசமாங் கலைதான் பாரே. 1076

ாரப்பா புகைபோல யாகுந் தேகம்
பதிவாக அதினூடே சேர்ந்தா யானால்
நேரப்பா சத்திநடு மேலே யோடும்
நீமகனே யங்குலம்மூன் றப்பாற் சென்றால்
பேறப்பா நாதகலை பளிங்கு போலப்
பிறழாமல் ஒளிவீசும் பேணிப் பாரு
ாரப்பா நாதாந்த உச்சி மீதில்
சார்ந்திடுவாய் மின்கோடி ஒளிபோ லாமே. 1077

ஒளியான மாத்திரைதா னரைக்கால் வைத்து
உற்றுப்பார் அந்தத்தில் மாய மாயம்
தெளிவான பேரின்ப மோட்ச வீடு
திரைகடந்து அங்குலம்நால் சென்ற போது
அளியாத சந்திரகலை ரவிபோற் றோன்றி
அரைமாகாணி மாத்திரைதா னங்கே யோத
விளியான சுடரதுபோ லுந்தன் றேகம்
விளங்குமடா சித்திமுத்தி மேவிக் காணே. 1078

காணவே அங்குலம்நால் கடந்து மைந்தா
கயிலாச வியாபினியான் கலைதான் மைந்தா
ஊணவே யாதித்தன் ஒளிபோற் காணும்
உண்மையுடன் மாத்திரைக்கால் மாகாணி வைத்துப்
பேணவே தியானித்தா லுந்தன் றேகம்
பேர்பெரிய ரவிபோலே காந்தி காணும்
பூணவே தோத்திரஞ்செய் மவுனத் தாலே
புத்தியுடன் சித்திமுத்தி வருகுந் தானே. 1079

தானான உச்சிவெளிக் கப்பால் மைந்தா
சமனாக நின்றகலை ஒளிபோற் காணும்
தானான மாத்திரைதா னரைமா காணி
தன்மனதின் கண்ணாலே தாண்டிப் பாரு
தானான தேகமப்பா ஒளிபோல் வீசுந்
தன்மையுட னுன்மனையைத் தாண்டிப் பாரு
தானான வெளியொளிபோற் காந்தி காணும்
சங்கையுடன் மாத்திரைதா னரைக்கா லோதே. 1080

ஓதினால் வெளியொளிபோ லுந்தன் தேகம்
ஒளிவிளக்காய் நின்றுதடா பிடிகொள் ளாது
சோதிபெற அண்டபகி ரண்ட மெல்லாம்
சுத்தமுடன் சித்துவிளை யாட லாகும்
நீதியுடன் ஆதார மாறில் நின்றால்
நின்தேகம் பரசொரூப நிசங்கள் மைந்தா
ஆதியாய் நின்றதிரு வாசி மூலம்
அறிந்துதலந் தனில் [illegible]

சித்திதரு மூலமொன்று செப்பக் கேளு
சிவ்வுடனே அவ்வோடே கிலியிங் கூட்டில்
பத்தியுள்ள பாதையென்று நாயன் சொன்னார்
பரமான சுழுனையிலே பதிவாய்க் கண்டேன்
சத்திக்குச் சவ்வுண்டு சித்தி யானால்
சதாசிவனும் மனோன்மணியுந் தானே தானாம்
புத்திக்குள் ளிதைப்பாரு ஒன்றாய்க் காணும்
பூரணத்தா லஞ்செழுத்தைப் போற்று வாயே. 1082

போற்றியதோ ரஞ்செழுத்தைப் பூண்டு பாரு
புத்தியுடன் எட்டெழுத்தும் வாலை தானாம்
ஆத்தியதோ ரரியெழுத்தை யழுத்திப் பாரு
ஆதியென்ற சுயம்புலிங்க மதுதான் மைந்தா
சாத்தியதோர் எழுத்தறித்து பிடித்து வாங்கு
சங்கையுடன் ஓரெழுத்தைத் தன்னுள் பாரு
ஏத்தியதோர் ஓரெழுத்தை யறியச் சொன்னேன்
இதுபலிக்கு மறிவதனால் தன்னைக் காணே. 1083

காணரிதாய் நின்றதொரு மூல சூட்சங்
கண்டவர்கள் சிவயோகி சீவன் முத்தன்
பூணரிதா யுலகத்தில் மாண்பர் தானும்
புத்தியுடன் ஏறுகிற வழியைக் காணார்
தோணரிது விழிமயக்கம் மைந்தா மைந்தா
சுளிதாக மேலாறுஞ் சுத்த மாகும்
பேணரிது பேணரிது மனப்பேய் மைந்தா
பிலத்தபுத்தி யறிவாலே குருவைக் காரே. 1084

காரப்பா வாசியினால் சாக்கிரத்தி னுள்ளே
கலந்தாக்கால் சிவயோகங் கைக்குள் ளாகும்
ஏறப்பா வாசிகொண்டு கனலைத் தூண்டி
ஏகாந்த நிராதாரங் கடந்தப் பாலே
சாரப்பா சுளியில்நின்று விட்ட நாலைச்
சார்ந்துகொண்டு நீயிருந்து பதத்தைப் பாரு
நேரப்பா நின்றமன நேரொட் டாது
நிலையறிந்து காத்தவனே யோகி யாமே. 1085

ஆமப்பா சிவயவென்றும் யவசி யென்றும்
அப்பனே வசியவென்று மூன்றுதிற மாறு
ஓமப்பா பிராணாய மொன்ற தாச்சு
உத்தமனே ரெண்டுதிற மோதி னாக்கால்
தாமப்பா சுடரொளிபோல் தேக மாகும்
சாந்தமாய்ச் சட்டையொன்று எம்பிப் போகும்
காமப்பால் பிராணாயம் ஏமம் நேமங்
கண்மூக்கு மத்தியிலே கண்டு கூட. 1086

கூடப்பா யோகத்திற் குறிகண் ணாடிக்
குமுறுகின்ற நாதமதிற் கூட்டி யேற
நாடப்பா அங்உங் ஓங்ஙென் றூணி
நன்மையுடன் சிங்வங்மங்கென் றேதான்
ஆடப்பா அஷ்டசத்தி தானாய் நிற்பாள்
அஞ்செழுத்தில் மூன்றெழுத்தை யணைத்துப் பாரு
தேடப்பா அஷ்டாங்க நிலைநின் றாடுஞ்
சிந்தைதனில் நினைத்தவண்ணந் தெளிவிப் பாளே. 1087

தெளிவான பராபரையைச் சிம்மென் றேத்தச்
சிவசிவா அஷ்டசித்துந் தெளிவா யாகும்
வளியான வாதசித்தி காய சித்தி
மகத்தான யோகமொடு ஞான சித்தி
அளியாத ரீங்காரஞ் சுளியில் சேரும்
ஆதியென்ற நூல்களிலே யழுத்திப் பாரு
நெளியாமற் பராபரையா ளெழுத்தை மைந்தா
நிலையான சுளிதனிலே நிலைத்துத் தேறே. 1088

தேரப்பா சாயுச்சிய பதவி காட்டுஞ்
சிவஞான நூலதுபோற் செப்பா தையா
நேரப்பா ஆயிரமா மிதழுக் குள்ளே
நின்றிறங்கு மமுர்தமதை நினைவாய்க் கொள்ளு
கூறப்பா கூறுதற்கு நாவங் கேது
குறியறிந்து வாசியடா ஒளிபோற் காணும்
தேறப்பா வென்றுசொல்லி வைத்தேன் சூட்சஞ்
சிவசிவா பூரணத்திற் சென்று பாரே. 1089

பார்ப்பதற்கு வகையேது மைந்தா கேளு
பதிவாக இடையிலே வங்கென் றூது
சேர்ப்பதற்குப் பிங்கலையிற் சிங்கென் றூணு
தீர்க்கமுடன் சிம்மென்று தெளிவாய்ப் பாரு
கார்ப்பதற்குச் சுழுனையிலே மங்கென் றூணு
கருணையுடன் மவுனத்தாற் கால்கொண் டேறு
ஏற்பதற்கு யோகமப்பா வாசி யோகம்
என்மகனே சுழுனையிற்சென் றிருந்து பாரே. 1090

பாரப்பா மூலமது விந்துவினாற் றோன்றும்
பதிவான மூலமது நிர்மலமாய்க் காணும்
சீரடா சந்திரனில் நின்ற வாசி
சிவசிவா சுழுனையிலே சேர்ந்து நிற்கும்
கூறடா அகாரத்தில் உகாரஞ் சேர்த்துக்
குருவான மகாரத்தில் குணமா யூது
ஏறடா பிரமாந்தி ரத்திற் சென்று
ஏகமென்ற காலறிந்து இருந்து ஊதே. 1091

ஊதியதோர் வாசிதனை யறிந்தோன் யோகி
உயிரிருந்த நிலையறிந்தோ னவனே யாசான்
நீதியுடன் மனம்நிறுத்தி மவுனம் பூட்டி
நிலையறிந்து நின்றவனே கெவுனி யாகும்
ஓதியதோர் வேதநிலை பிரம மாகும்
உச்சியென்ற மூலமடா ஓங்கா ரந்தான்
வீதியென்ற ஆதியந்தம் கடந்து மேலே
விளங்கும்ஒளி தனையறிய அகத்துள் நில்லே. 1092

நில்லடா நிலையறிந்து மணிநா வுன்னி
நீமகனே பூரணத்தில் நின்றா யானால்
உள்ளடா ஆதார மூல மெல்லாம்
ஒளிவிளக்காய்த் தோன்றுமடா உன்னிப் பாரு
கொல்லடா கருவிகர ணாதி யென்ற
கொடுமலத்தைத் தானகற்றிக் குருவைப் போற்றிச்
செல்லடா ஞானகே சரியாள் பாதஞ்
சிந்தைமன தொன்றாகத் தெளிவிற் காணே. 1093

காணுகிற உருவேது கருவு மேது?
கருணைவளர் பூரணமாம் வாசி யேது?
ஊணுகிற வாசியுட நிலையங் கேது?
உற்றசிவ சக்தியுட மாய்கை யேது?
பூணுகிற பொருளேது அருளங் கேது?
பொருந்திமனங் கொண்டஅண்ட பிண்ட மேது?
தோணுகிற மாயமெல்லாஞ் சுழுனை யாட்டஞ்
சுழுனைவழி தனையறிந்து சுகத்தைப் பாரே. 1094

பார்த்தனடா சுத்தவெளி பரத்தின் வீடு
பதிவான நடுவீடு அண்டத் துச்சி
காத்தனடா சுழுனைவழி நந்தி சேர்வை
கண்ணறிந்து விண்ணதிலே கால்கொண் டூதிச்
சேர்த்தனடா ரவிமதியைச் சுழுனைக் குள்ளே
தீர்க்கமுடன் கால்நிறுத்தி மார்க்க மாகக்
கூத்தனுட காலறிந்து மாத்தி வைத்தேன்
குமுறுகின்ற சிலம்பொலியில் தேறி னேனே. 1095

சாபம்

தேறவே சவுமியசா கரத்தைப் பார்த்துத்
தெளிந்துகொண்டேன் இருவினையின் செயலைக் கண்டு
மாறவே யெழுத்துவகை முன்னே சொன்னேன்
மகத்தான சித்தரெல்லாம் மறைத்து வைத்தார்
தேறவே ஓரெழுத்தைத் தியானித் தப்பா
சிவபஞ்சாட் சரந்தன்னைச் செபித்துக் கொண்டு
மீறவே மவுனமதை வெளியில் சொன்னால்
வேகுமடா உன்சிரசு வெடிக்குந் தானே. 1096

தானேதான் விட்டகுறை மார்க்கத் தோர்கள்
சகலகலை நூல்பார்த்து நுணுக்கங் கண்டு
வானேதா னாகிநின்று மவுனங் கொண்டு
மவுனமென்ற தியானமதின் கெவுனத் தாலே
கோனென்ற குருபதமே தியான மாகக்
குறியறிந்து சொரூபசித்தி கொண்டு நின்று
தேனென்ற அமுர்தரச பானங் கொண்டு
சின்மயங்கொண் டெந்நாளுந் தெளித்து நில்லே 1097

தெளிவான குருமுறையைத் தவறா மல்தான்
தீர்க்கமுள்ள மனதாலே மவுனங் கொண்டு
சுளியான நிலையறிந்து சூட்சங் கண்டு
துலங்குமணி வாசலுட திரையை நீக்கி
வளியான அனுக்கிரக வாசற் குள்ளே
மனங்குவிந்து சிவயோக வரிசை பெற்றால்
களியாது காயமடா கனக மாகும்
கனகமென்ற கற்பூர தேகந் தானே. 1098

தானென்றுஞ் சுழுனையென்றும் உண்மை யென்றும்
சகலகலை யாய்நிறைந்த அகார மென்றும்
வானென்றும் வகாரமென்றும் யோக மென்றும்
மணிகெவுன குளிகையென்றும் வாசி யென்றும்
தேனென்ற அமுர்தரசத் தெளிவே யென்றும்
தெளிவான பூரணமாந் தேசி யென்றும்
கோனென்ற குருபீட மான தென்றும்
குருவிருந்த மணிமகுட பதிதான் காணே. 1099

பதியென்றும் பசுவென்றும் பாச மென்றும்
பகமகயி லாசமென்ற மேர்வு வென்றும்
கெதியென்றுஞ் சதுரகிரி மேரு வென்றும்
கெவுனரச மணிமகுட பொதிகை யென்றும்
விதியென்றும் வேதாந்த நாத மென்றும்
விஞ்சையென்றும் மந்திரமாம் யோக மென்றும்
மதியென்றும் ரவியென்றுஞ் சுழுனை யென்றும்
மகத்தான உண்மையென்ற சோதி தானே. 1100

தானென்ற பூரணத்தின் சமாதி கேளு
 தரணிதனில் அறியார்கள் வெளியாய்ச் சொல்வேன்
கோனென்ற அகாரமுடன் உகாரந் தொட்டுக்
 குருவான மகாரமொடு மூன்றுங் கூட்டி
வானென்ற சஞ்சார சமாதி பண்ணும்
 வகையுடனே சிவதவத்தில் வணங்கி நில்லு
ஊனென்ற அறிவுகொண்டு யோகம் பாரு
 உண்மையுள்ள மெஞ்ஞானம் உறுதி பாரே. 1101

உறுதிபார் புலத்தியனே சொல்வே னையா
 உற்றதொரு மூலத்தில் ஓமென் றேற்றிச்
சுருதிமுடி வானபிரம தானந் தன்னில்
 சுத்தமுள்ள நங்இங் கென்றே வாங்கிக்
கருதிப்பார் மாலினுட வீட்டில் வந்து
 கனமான மார்க்கமுடன் ஊங்மெங் றேத்தித்
துரிதம்பார் ருத்திரனில் சிங்றீங் கென்றே
 சொல்மயேஸ் வரனில்வங் றிங்கென் றோதே. 1102

ஓதியே மேல்நோக்கிச் சதாசிவத்தில் அப்பா
 உயரவே அங்சங் கென்றே நில்லு
வாதுசெய்யும் வாசியைநீ மேலே வாங்கி
 மகத்தான அண்டவெளி தன்னில் நின்றால்
வேதமுறை சுழூனையின் மையந் தன்னில்
 மேலான யோகமுடன் மந்தி ரங்கள்
ஆதியென்ற பிராணாய ஞான போத
 மாம்முரசு பூரணமாம் அறிந்து கொள்ளே. 1103

அறிந்துகொண்டு யோகமதில் இருக்கும் போது
 அப்பனே கோமுகா சனம தாகிப்
பிரிந்துகொண்டு மறுசத்தங் கேளா வில்லம்
 பிசகாமல் தவறாமல் இருந்துகொண்டு
அறிந்துமனம் வேறுநினைப் பில்லா மற்றான்
 வங்குசிங்கு வாசலிலே மணிநா வுன்னிச்
சொரிந்திடுமே அமுர்தரசம் சுழற்றல் மைந்தா
 துடராதே நமனும்வல் பிணியுந் தானே. 1104

தானான பூரண சமாதி தன்னைத்
தன்மையுள்ள புலத்தியனே சாதித் தேறில்
வானான சிவயோகம் வழூக்கு தய்யா
மாமுனிவர் சித்தர்மெச்சி மகிழ்ந்து கொண்டு
ஊனான அமுர்தரச வமுர்த மீவார்
உறுதியுள்ள மெய்ஞ்ஞானத் தலைவ னாகித்
தேனான மொழியுமையாள் தீட்சை பத்தும்
திருவான பூரணமும் சித்தி யாமே. 11105

ஆமப்பா தீட்சைதிச தீட்சை யாகும்
அடங்கிநின்ற மந்திரமு மதுவே யாகும்
நாமப்பா சொல்லுகிறோம் மவுன மார்க்கம்
நாதாந்த அண்டவெளிச் சுழுனைக் குள்ளே
தாமப்பா தன்னறிவாய் உன்னிப் பாரு
தன்மையுடன் ஓங்காரக் கம்பம் நாட்டி
வாமப்பா லானதொரு மவுன மார்க்கம்
மகஸ்தான மார்க்கமடா மவுனந் தானே. 1106

தானான மவுனமதுக் குறுதி யான
தன்மையுள்ள கற்பமொன்று சொல்லக் கேளு
தேனான கத்தாழஞ் சோறெ டுத்துத்
தீர்க்கமுடன் தான்கழுவிச் செம்மை யாக
ஊனான திரிகடுகைப் பொடித்து மைந்தா
உத்தமனே தானெடுத்து வைத்துக் கொண்டு
கோனான சற்குருவைத் தியானம் பண்ணிக்
குருவான கற்பமென்று குவிந்து போற்றே. 1107

குமரி திரிகடுகு லேகியம்

போற்றிமனப் பூரணமாய் மைந்தா நீயும்
புகழான குமரிதிரி கடுகு மொன்றாய்ப்
பார்த்திபனே பீங்கான்தன் தாளி சேர்த்துப்
பத்தியுடன் தேனதிலே பதிவாய் விட்டுச்
சேர்த்துநன்றாய்த் தான்கிளறி ரவியில் மைந்தா
தீர்க்கமுடன் நவநாள்தான் வைத்தெ டுத்து
ஆத்துமத்தின் செயலறிந்து அந்தி சந்தி
அரகரா மண்டலமாய்க் கொண்டு தேறே. 1108

தேறப்பா மண்டலமாய்க் கொண்டு தேர்ந்தால்
சிவசிவா தேகமது திறமாய் நிற்கும்
வீறப்பா கொண்டகபம் மடிந்து போகும்
வேதாந்த சுழுனையுட வெளியுந் தோணும்
சாரப்பா சுழுனைவெளிக் குள்ளே சென்று
சார்ந்திருந்து வாசிவலந் தானே கொண்டால்
ஆரப்பா உனக்குநிகர் சொல்லப் போறேன்
ஆதியந்தச் சுழுனையிலே யமர்ந்து நில்லே. 1109

அமர்ந்தநிலை தனையறிந்து சுழுனைக் குள்ளே
அருள்பெருகும் வாசிசர மழுத்திப் பார்க்க
அமர்ந்துநின்ற பஞ்சஅறை அங்கே தோணும்
அதையறிந்து திருகுமணிப் பூட்டை மைந்தா
அமர்ந்துஅந்தத் திருகுமணிப் பூட்டுத் தன்னை
ஆடிநின்ற சக்கரத்தா லழுத்தும் போது
அமர்ந்துநின்ற திரையகன்று அமுர்த மூறும்
அந்தமுர்தம் பூரணமா யறிவாய் உண்ணே. 1110

அறிவான கற்பமடா குமரி கற்பம்
அதையறிந்து கொண்டதனால் மைந்தா கேளு
குறியான சுழுனையிலே வாசி யேறிக்
கோடிரவி காந்தியென்ற போத முண்டாம்
திருவான போதமதாற் கெவுன முண்டாம்
தேகமென்ற ஆகமமே சிவசொரூபம்
உருவான சிவசொரூபந் தனைய றிந்து
உண்மையுடன் வாசியென்ற மலரைச் சாத்தே. 1111

சாத்தடா மலரறிந்து மனக்கண் கொண்டு
சரந்தொடுத்துச் சுழுனைவளி தானே கண்டால்
காத்தடா அசையாது சுளியின் காத்துக்
காலறிந்து நிலைநிறுத்திக் கடைக்கண் ணாலே
பார்த்தடா பதியமனம் பதிவாய்த் தூண்டிப்
பரஞான கேசரியில் வாச மானால்
கூத்தடா திருநடனஞ் சபையிற் காணும்
குருவான கனகசபை சுழுனை தானே. 1112

கபசத்துரு கரிசாலை நெய்

தானென்ற சுழுனைவளி கண்டு ஏறச்
சாதகமாய் இன்னமொரு பாகங் கேளு
வீணென்ற கபமகல மைந்தா கேளு
விபரமுடன் கரிசாலைச் சாறு வாங்கிச்
கோனென்ற குருவருளால் ஆவின் நெய்யைக்
கூர்மையுடன் இடைசரியாய்க் கலந்து காய்ச்சி
நானென்ற ஆணவத்தை யகலத் தள்ளி
நன்மையுடன் நெய்யதனை வடித்துக் கொள்ளே. 1113

வடித்ததொரு நெய்யதனை மைந்தா கேளு
மார்க்கமுடன் தற்சனையு மத்திமையுங் கூட்டிக்
கடுத்ததொரு நெய்யதனைத் தொட்டு நீயும்
கண்டமதிற் சுத்திவிடு கபநீ ரெல்லாம்
தொடுத்துமிகத் தான்வடித்து சுத்த மாகும்
சுத்தமுடன் மண்டலம்நீ தொகுத்துப் பார்த்தால்
பிடித்தகபக் கட்டறுத்து ஆறா தாரம்
பெரிதான தூலமது சூட்ச மாச்சே. 1114

ஆச்சப்பா சூட்சமதாய் இருந்து கொண்டு
அப்பனே கரிசாலை நெய்யில் மைந்தா
பாச்சப்பா பெருவிரலில் தோய்த்து அந்தப்
பதிவான அண்ணாக்கைப் பதிவாய்ச் சுத்து
காச்சப்பா இப்படியே பத்துவிசை சுத்து
கபாடமதில் நின்றகபங் கழன்று போகும்
மூச்சப்பா ஒடுங்கிநின்ற அண்ட வாசல்
மூடிநின்ற திரையகன்று வழிசெல் வாரே. 1115

வழியான சுழுனைவளி கபாட வாசல்
வங்குசிங்கு சுழுனைவளி வாசற் குள்ளே
தெளியாமல் வாசிசர மதிலே பாய
நிசமான புலத்தியனே சொல்லக் கேளு
சலியாமற் சுகாசமனா யிருந்து கொண்டு
தற்சனையு மத்திமையுந் தானே சேர்த்து
அளியாத பேரின்ப வீட்டைப் பத்தி
அண்ணாக்கை உண்ணாக்குள் அடக்கம் பண்ணே. 1116

பண்ணப்பா அண்ணாக்கை யுண்ணாக் குள்ளே
பயபக்தி யாயடக்கம் பதிவாய்ச் செய்து
விண்ணப்பா தோன்றிநின்ற சத்தாதி விடையம்
விபரமுடன் தான்கண்டு மெஞ்ஞான தீபம்
கண்ணப்பா துலங்கிநின்ற கமல மீதிற்
காணுதடா பூரணமாய்க் கனிவாய்ப் பாரு
எண்ணப்பா வென்றுதன்னை மறந்தி டாதே
இகபரமாய் நின்றுவிளை யாட லாமே. 1117

ஆமப்பா அண்டவெளி கண்டு ஏற
அரிதரிது வெகுகடின மறியப் போமோ
நாமப்பா வென்றசத்த மறந்தா னாகில்
நாடுமுன்னே அண்டவெளி நயமாய்க் காணும்
காமப்பால் கானல்பால் கருவாய்க் கொண்டு
கருணையுடன் கேசரியிற் கலந்துகொண்டால்
சோமப்பால் சொலிக்கின்ற அண்ட மேரு
சுத்தமுடன் தோணுமடா நித்தம் பாரே. 1118

நித்தியம்நீ தப்பாமற் சுத்த மாகி
நீமகனே வாசிசரஞ் சுழுனைக் கேத்து
சுத்தமுடன் தானிருந்து சுழுனைக் குள்ளே
சுகமாக அங்குட்டஞ் சொருகி மைந்தா
சித்தமுடன் மனதறிவாய்ச் சுத்தும் போது
சிவாயகுரு சொரூபமது தீபம் போலே
பத்தமுடன் காணுமடா பதிவாய்ப் பாரு
பதிவான சீவகலை யொளிதான் பாரே. 1119

ஒளியறிந்து வெளியென்ற வகையைக் கேளு
ஓமென்ற பிரணவத்தால் உன்னி மைந்தா
வளியறிந்து நாடாற காந்திர வாய்வை
மார்க்கமுடன் ஏகமதாய் வணக்க மானால்
வெளியறிந்து பரமவெளி உச்சி மூலம்
வேதாந்த மூலமடா நாதாந் தத்தில்
முளையறிந்து முளிநிறுத்திக் கொண்டால் மைந்தா
முத்தியுள்ள மவுனமடா சுத்த மாமே. 1120

சுத்தமுடன் நின்றுவிளைய யாடு தற்குத்
தொடுகுறிபோல் இன்னமொரு சூட்சஞ் சொல்வேன்
பத்தமுடன் ஏகாந்த சித்த மாகிப்
பரமகயி லாசகுரு பாதம் போற்றிப்
புத்தியுடன் நின்றுதிரு வாசி யேறிப்
பூரணமாஞ் சுழுனையிலே மனக்கண் சாத்திச்
சத்தமுடன் ஓங்கார விசையி னாலே
சரியையிலே நின்றுமனந் தாங்கி நில்லே. 1121

நில்லடா சரியையிலே நின்று தேறி
நிசமான கிரியையிலே தேர்ந்து கொண்டு
உள்ளடா உடலறிந்து யோகம் பண்ணு
உண்மையென்ற யோகமதி லுறுதி யானால்
செல்லடா ஞானமென்ற நிலையில் நின்று
திருவான பூரணத்தைக் கண்டு கொண்டு
சொல்லடா சொல்நிறைந்த மவுனத் தேகிச்
சுகமறிந்து சூட்சநிலை கண்டு கொள்ளே. 1122

கண்டதொரு நாலுக்கும் பகையே தென்றால்
கசடான காமியமாஞ் சித்தத் தாலே
விண்டதொரு பிராரத்வ கர்மத் தாலே
விளங்கிநின்ற நாலுக்கும் விக்கினங்க ளாச்சே
கொண்டதொரு நாலுதனைச் சொல்லக் கேளு
கொடிதான வறுமையொடு கிலேசந் தீரும்
சென்றதொரு பெண்ணாசை மண்பொன் னாசை
செகத்திலுள்ளோர் தான்மயங்கித் தியங்கு வாரே. 1123

தியங்கினால் வாசியது மயங்கிப் போகும்
திறமறியா மானிடர்கள் செகத்தி னுள்ளே
மயங்கினார் மாய்கையிலே மகிழ்ந்து கொண்டு
மாசற்ற சோதியிலே மனஞ்செல் லாமல்
தயங்குகின்ற காமவலைக் குள்ளே சென்று
தன்னிலையைத் தானறிய மாட்டா மல்தான்
மயங்கியதோர் மயக்கத்தால் ஞானம் போச்சு
மகத்தான அறிவதும் மாண்டு போச்சு. 1124

மாண்டுதான் போகாமல் தெளிவ தெப்போ?
மகஸ்தான அறிவதிலே வாழ்வ தெப்போ?
பூண்டுகொண்ட ஆசையது ஒழிவ தெப்போ?
பொல்லாத மாய்கைவிட்டு நிற்ப தெப்போ?
ஆண்டுகொண்ட காமவலை யறுப்ப தெப்போ?
அலைச்சலற்று இருப்பதெப்போ? அய்யா அய்யா!
தாண்டியந்தக் கேசரியில் மனதை நாட்டிச்
சதானந்த போதமதாய் மூலம் பாரே. 1125

பாரப்பா ஆறுதலங் கண்டு தேறிப்
பதிவான மேலாறில் சென்று புக்கிக்
காரப்பா சுழுமுனையிற் கலந்து கூடிக்
கருணையுள்ள மனோன்மணியைக் கண்டு போற்றி
நேரப்பா மவுனமென்ற கேசரியிற் சென்று
நீமகனே பராபரத்தில் நேர்ந்து கொண்டால்
சாரப்பா பிறப்பிறப்புத் தவிர்ந்து போகும்
சதாபோத பிரணவமும் காரங் காணே. 1126

காணப்பா பிரணவங்கொண் டிருந்த மூலங்
கருணைவளர் பஞ்சகர்த்தா இருந்த வீடு
பூணப்பா அவ்வீட்டில் மனக்கண் கொண்டால்
பொருளான அகாரமுதல் உகாரங் காணும்
ஊணப்பா மகாரமொடு விந்து நாதம்
உண்மையுடன் தானிருக்கு மறிவா னந்தம்
பேணப்பா அறிவான மவுனத் தேகில்
பிலமான போதமது பிலக்கும் பாரே. 1127

பிலமான ஓங்கார மண்ணை யுண்ணும்
பெருகிநின்ற மண்ணதுவுஞ் சிலத்தை யுண்ணும்
குலமான சிலமதுதான் தீயை யுண்ணும்
கொடிதான தீச்சென்று வாய்வை யுண்ணும்
சலமான வாய்வதுதான் விண்ணை யுண்ணும்
சங்கையுள்ள செடமதுதான் தானே போச்சு
தலமான தலமறிந்து தன்னைக் கண்டு
சந்திரகலை யமுர்தமதைக் கொண்டு காணே. 1128

காணவே அகாரமது உகாரத்தைக் கொள்ளும்
கருவான உகாரமது மகாரத்தைக் கொள்ளும்
பூணவே மகாரமது விந்துவைத்தான் கொள்ளும்
பொருந்திநின்ற விந்துவது நாதத்தைக் கொள்ளும்
தோணவே நாதமது சத்தியைத்தான் கொள்ளும்
சுகமான சத்தியல்லோ சிவத்தைக் கொள்ளும்
பேணவே சிவன்தன்னைப் பரந்தான் கொள்ளும்
பெரிதான பரஞ்சென்ற இடத்தைப் பாரே. 1129

பாரப்பா மூலமுத லாறும் பாரு
பதிவான சுழுமுனையையறிந்து கொண்டு
சாரப்பா சாம்பவியைத் தானே கண்டு
தன்மையுடன் தானறிந்து தானே நின்றால்
காரப்பா வாழ்வுசிவ யோக வாழ்க்கை
கதிர்மதியு மானவிடம் யோக மாச்சு
நேரப்பா நின்றஇடங் கண்டால் யோகி
நிசமான கேசரியைக் கண்டு பாரே. 1130

கண்டுபார் லகிரியுண்ண மேலே யேறும்
காணாமல் லகிரிவிட்டால் கீழே பாயும்
உண்டுபார் குளிகையிட்டாற் சினத்துக் குள்ளே
ஊடுருவிக் கடந்தேறி ஒளியுங் காணும்
அண்டமொடு புவனமதைக் கண்டா யானால்
ஆதிவஸ்தும் அனாதிவஸ்து மொன்றாய்க் காணும்
நின்றுவளர் சற்குணத்தின் அமுத மள்ளி
நிசமான ஞானசத்தி யூட்டு வானே. 1131

ஊட்டினதோர் தாடைவிட்டா லுறவு முண்டே
உலகத்திற் பூரணியைத் தூஷிப் பார்கள்
ஆட்டினதோர் திரேதாயி தானே நின்று
ஆகாத மாய்கையிலே யமிழ்த்தி மாட்டி
மாட்டினதோர் ஞானமெல்லாம் மயக்கித் தள்ளி
மகஸ்த்தான காமமென்ற வலையைப் போட்டால்
நீட்டினதோர் போதமதால் ஞான மாச்சு
நிலையறிந்து நின்றவர்கள் வாசி பாரே. 1132

வாசியென்றும் மவுனமென்றும் ரெண்டு மொன்று
மகஸ்த்தான கேசரியுஞ் சாம்பவியு மொன்று
தேசியென்றால் யோகத்துக் காதி வித்தை
திறமான மவுனமென்றால் ஞான வித்தை
மாசியென்ற மயக்கமுற்றால் ரெண்டு மாகா
மகஸ்த்தான அறிவறிந்தால் ரெண்டு மாகும்
நாசியென்ற விளியல்லோ அகண்ட வீதி
நாதாந்தப் பூரணத்தில் நாடி யேறே. 1133

ஏறடா ஆதார மூலங் கொண்டு
என்மகனே சத்தாதி விசையம் போக்கி
நேரடா குருபதியில் மனத்தை வைத்து
நேர்மையுடன் பூரணமாய் மவுனம் பூட்டிச்
சாரடா அண்டவெளி யுச்சி மீதில்
சந்திரனைச் சூரியனில் தாக்கிக் கொண்டு
காரடா கற்பூர தீபந் தன்னைக்
கண்ணாக்கு மூக்குநிலை கண்டு பாரே. 1134

பாரப்பா உலகத்தில் மனுஷாள் கோடி
பாழான மாய்கையிலே மனது பூண்டு
நேரப்பா செந்தூரங் காதங்க ளேறி
நேசமுடன் பூஷணங்கள் தரித்துக் கொண்டு
பேரப்பா கொண்டவர்க ளாரு மில்லை
பேறான சிவயோக வாழ்க்கை வந்தால்
மேரப்பா மேருகிரி தீபம் போலே
மெஞ்ஞான பூரணத்தில் கூடி வாழே. 1135

வாழ்வதற்கு ஆதியடா மவுன யோகம்
மகஸ்தான யோகமடா சிவமாந் தீட்சை
ஆள்வதற்கு அதிகமடா திசமாந் தீட்சை
ஆதியென்ற மூலமடா ஓங்கா ரத்தில்
தாழ்வதில்லை உயர்வதில்லை மூல வன்னி
தன்மையுடன் தானறிந்து வாசி யேறிச்
சூழ்வதற்கு அண்டவெளிச் சுழுனை மேவிச்
சுத்தமுடன் தானிருந்து சுத்தம் பாரே. 1136

பாரப்பா குண்டலிக்குள் மூல மொன்று
பதிவான கேசரியின் மூல மொன்று
நேரப்பா சாக்கிரத்தில் மூல மொன்று
நிசமான விந்துவென்ற மூல மொன்று
சாரப்பா சத்தியென்ற மூல மொன்று
சகலகுரு பராபரமாம் மூல மொன்று
சேரப்பா இசையறிந்து அதிலே மூலஞ்
செயலறிந்து கொண்டவனே சித்த னாமே. 1137

சித்தமுடன் றானறிந்து யோக மூலம்
திருவான மூலமடா சுழுனை மையஞ்
சுத்தமுடன் சுழுனையிலே மணிநா வுன்னிச்
சோதிதிரு மணிவாசற் குள்ளே சென்று
சத்தமுடன் சேர்ந்தவரை யகலத் தள்ளித்
தன்மனமே சாட்சியதாய்த் தானத் தேகிப்
பத்தமுடன் குருபதியில் நின்றா யானால்
பரஞான கேசரியில் வாழ்வாய் கண்ணே. 1138

கண்ணேது காதேது மூக்கங் கேது?
கருணையுடன் கண்டதெல்லா மழிந்து போச்சு
ஒண்ணேது ஒன்றுமற்று நின்ற தேது?
உற்றுப்பார் வெட்டவெளி யொன்று மில்லை
விண்ணேது வெளியேது ஒளியங் கேது?
வேதாந்த கேசரியில் நின்று பாரு
எண்ணேது எழுத்தேது ஏக மேது?
யேகநிரா மயமான இடத்தைக் காணே. 1139

காணவே கேசரியில் மனத்தை வைத்துக்
கருணையுடன் பூரணத்திற் கலந்து கொண்டு
பூணவே புருவமையத் தமருக் குள்ளே
புத்தியுடன் சித்தமாய் வாசி பூட்டிப்
பேணவே கேசரியில் வாழ்ந்து கொண்டால்
பேசாத மவுனமது கைக்குள் ளாச்சு
தோணவே மவுனமது கைக்குள் ளானால்
சுகசீவ பிராணகளை சுத்த மாமே. 1140

சுத்தமுள்ள சவுமியசா கரத்தை மைந்தா
சுகமறியா மானிடர்க்கு ஈந்தா யானால்
பத்தமுள்ள தேகமதைக் காண மாட்டாய்
பரமகயி லாசமதிற் சேர மாட்டாய்
சுத்ததொரு மந்திரங்க ளுதவா தய்யா
காலான வாசியது நிலையா தய்யா
முத்தமிழ்சேர் புலத்தியனே பதனம் பண்ணி
மோனமுடன் தானிருந்து தன்னைப் பாரே 1141

தன்னைப்பார்த் தறிவதற்கு மைந்தா மைந்தா
சாகரமும் பூரணமும் தானே பார்த்து
விண்ணைப்பார்த் தந்தநிலைச் சோதி காண
வேதாந்த காவியத்தை விரும்பிப் பாரு
கண்ணப்பா சகலகலை கியானம் பாரு
கருத்துவைத்துத் தத்துவமா யிரத்தைப் பாரு
மண்ணைப்பார்த் தந்தமதில் கூட தற்கு
மகஸ்தான பூரணகே சரியைக் காணே. 1142

காணப்பா பூரணகே சரியை மைந்தா
கருணைவள ராயிரமாய்க் கருவாய்ச் சொன்னேன்
பேணப்பா சொன்னகரு யிந்திர சாலம்
பெரிதான சாலமதைப் பேணிப் பாரு
பூணப்பா மந்திரகலை மாந்த ரீகம்
புத்தியுடன் ஆயிரத்தைப் பூண்டு பாரு
தோணப்பா சகலமுமே தொகுத்துப் பார்க்கச்
சொல்லவொண்ணா மவுனத்தின் தீட்சை பாரே. 1143

பாரப்பா திசதீட்சை யார்தான் காண்பார்
பதிவான மவுனமென்றி தீட்சை பெற்றால்
நேரப்பா நின்றநிலை காண லாகும்
நிசமான மந்திரங்க ளெல்லாஞ் சித்தி
காரப்பா மவுனமென்ற தீட்சை தன்னைக்
கருத்துவைத்துப் பாராட்டால் கண்ணைக் குத்து
சாரப்பா கண்ணறிந்து தன்னைப் பார்த்தால்
தன்மயமே நிராகாரந் தானா வாயே. 1143

தானென்ற ஆணவத்தைத் தள்ள மாட்டார்
சங்கையுடன் பூரணத்தைச் சார மாட்டார்
ஊனென்ற சுகபோகம் ஒழிக்க மாட்டார்
உறுதியுடன் சிவ்வத்தி லொடுங்க மாட்டார்
பானென்ற மதியமுர்தங் கொள்ள மாட்டார்
பதிவான மவுனத்தைக் காண மாட்டார்
வானென்ற பொருளறிய எளிதோ மைந்தா
மகஸ்த்தான வாசியைநீ சுழுனைக் கேத்தே. 1145

நாகரசமெழுகு

ஏத்தமுள்ளசெகசால வித்தை சொல்வேன்
என்மகனே அதினாலே யொன்று மில்லை
நாத்தமுள்ள கெந்தகமுஞ் சாதி லிங்கம்
நன்மையுள்ள வீரமுடன் கெவுரி கூட்டிக்
காத்துநன்றா யோரிடையாய் வாங்கி மைந்தா
கைமுறையாய்த் தான்பொடித்துக் கரண்டி சேர்த்துப்
பார்த்துநன்றாய் அடுப்பேத்தித் தீயை மூட்டப்
பத்தியுடன் அஞ்சுமொன்றாய் இளகும் பாரே. 1146

பாரப்பா இளகிநின்ற குழம்புக் குள்ளே
பாச்சடா நாகரசமொன்றாய்ச் சேர்த்து
நேரப்பா நாகரசம் பொடித்துச் சேர்த்து
நேர்மையுடன் தானெடுத்துப் பார்க்கும் போது
சாரப்பா சார்ந்துஒன்றாய் இறுகிப் போகும்
சங்கையுடன் கால்வாசி தங்கம் கூட்டிக்
காரப்பா கமலரச அமுர்தந் தன்னால்
கல்வமதில் தானரைக்க மெழுகு மாமே. 1147

ஆமப்பா மெழுகெடுத்துப் பதனம் பண்ணி
அப்பனே வெள்ளிசெம்பு சரியாய்ச் சேர்த்து
நாமப்பா சொல்லுகிறோம் உருக்கி நன்றாய்
நாதாந்த மெழுகெடுத்துப் பத்துக் கொன்று
ஓமப்பா நின்ற பிரண வத்தி னாலே
உண்மையுடன் தான்கொடுத்து உருக்கிப் பார்த்தால்
வாமப்பால் கொண்டகெதிக் கண்ணால் மைந்தா
மகஸ்தான தங்கம்வெகு சோதி யாச்சே. 1148

மவுனமந்திரம்

சோதியென்ற ஆதியடா சுழுனை மூலஞ்
சுயஞ்சோதி யானதிரு வாசி யாலே
ஆதியென்ற அந்தமடா அண்ணாக் கையா
அருள்பெருகு மண்ணாக்கை யுண்ணாக் குள்ளே
ஓதியதோர் பிரணவத்தா லுசர வேத்தி
ஓம்நமசி வாயமென்று உறுதி கொண்டால்
நீதியுடன் கேசரியில் பஞ்ச கர்த்தா
நின்றுவிளை யாடுவதைக் காண லாமே. 1149

ஆமப்பா அங்கென்ற மூல சத்தி
அப்பனே அவள்வாயி லோங்கா ரந்தான்
ஆமப்பா அறிந்தேறி மணிநா வுக்குள்
அரகரா சிங்கொன்று உத்துப் பார்க்க
ஆமப்பா வெளிவாகும் வெளியாய்க் காணும்
அங்கமுடன் வங்கென்று வாங்கிக் கும்பி
ஆமப்பா மாணிக்க ஒளிபோ லாகும்
ஆதியந்த மிதுவாச்சு அங்கங் காணே. 1150

காணவே ஒளியில்நின்று உத்துப் பாரு
கண்கொள்ளாச் சோதிவெகு சோதி காணும்
பூணவே சோதிதனைக் கண்டா யானால்
புனிதமுள்ள காயசித்தி யோகந் தங்கும்
தோணவே மவுனமதாய்ப் பூசை பண்ணிச்
சுத்தமுடன் வேதாந்த மதுவை யுண்டு
ஊணவே சுளிதிறந்து பாரு பாரு
உத்தமனே கண்கொள்ளாச் சோதி யாமே. 1151

ஆமப்பா தானென்ற பூமி யெல்லாம்
அருள்பெருகி நிறைத்ததொரு களிய யாச்சு
வாமப்பால் தானென்ற வேலை யெல்லாம்
மார்க்கமுடன் வாத்திட்ட நெய்யு மாச்சு
காமப்பால் தானென்ற ஒளியே பானு
கருணையுடன் கலந்தெங்குந் தோத்தி னாப்போல்
ஓமப்பா வென்றதொரு முல நந்தி
உறுதியுள்ள சோதிவெகு கண்கொள் ளாதே. 1152

கொள்ளப்பா நயனஒளி பார்க்க வென்றால்
குறியான சுழுனையிலே மனத்தை வைத்து
நில்லப்பா கலையறிந்து மனக்கண் கொண்டு
நிலையான கேசரியைப் பூசை பண்ணச்
சொல்லப்பா சகலகலை வாசி யேறிச்
சுளிதிறந்து மேல்வாசல் துருவ மீதில்
நல்லொப்பாய் நல்மனதாய் நாதாந் தத்தில்
நாடிநின்று மூலமதை நயந்து கேளே. 1153

கேளடா மூலமென்ற ஆறா தாரங்
கெடியான அண்டமது போலே நிற்கும்
வேளடா இதில்நாலு இதழு மூண்டு
விபரமுடன் கண்டறிந்து விண்ணை நோக்கி
வாளடா சிவ்வுடனே வவ்வுங் கூட்டி
வணக்கமுடன் ரேசகபூ ரகமே பண்ணிக்
காலடா கண்டறிந்து மேலே நின்று
கருணைவளர் முச்சுடரைக் கண்டு பாரே. 1154

பாரப்பா சுடரான மூன்றுக் குள்ளே
பத்தியுட அதின்விபரம் பகரக் கேளு
நேரப்பா நிசமான அகார மொன்றில்
நிலையான கணபதியும் நிற்பார் பாரு
காரப்பா கருணைவளர் உகாரந் தன்னில்
கயிலாச வல்லபையாள் காலாய் நிற்பாள்
கூறப்பா குறியறிந்து குணமாய்க் கேளு
குண்டலியில் நின்றதொரு கதலிப் பூவே. 1155

பூவான மலர்தூவு முகங்கீ ழாகப்
புத்திவளர் பெண்பாம்பு போலே சீறும்
பூவான வாலதுவுஞ் சுருட்டிக் கொண்டு
பூரணமாய்ச் சுழுனையிலே பொருந்தி நிற்கும்
பூவான பூரணமாம் அவள்வாய்க் குள்ளே
பொருந்திமன துறுதியினால் நந்தி நிற்பான்
பூவான மலரதுபோல் நாதந் தானும்
புத்தியுடன் காணுவது சிகாரத் தீயே. 1

சிகாரமென்ற அக்கினியை மூட்டிக் கொண்டு
சிவசிவா சுழுமுனையில் வாசி யேத்தி
வகாரமென்ற வாசிதனைத் திறவாள் சத்தி
வரிசையுடன் சத்தியெட்டும் மவுன மாவாள்
மகாரமென்ற மவுனியவள் ஓங்காரத் துள்ளே
வகையறிந்து ரவிமதியும் வாச மாகி
அகாரமென்ற மனோன்மணியைப் பூசை பண்ண
அனுதினமுஞ் சுழுமுனையை யறிந்து நோக்கே. 1157

நோக்குவது சுழுமுனைக்குள் மனது வைத்து
நுண்மையுடன் அண்ணாக்கை யுண்ணாக் குள்ளே
தாக்குவது ரவிமதியை யொன்றாய்க் கூட்டித்
தமரான அனுவாசல் தமரி லேதான்
வாக்குமன தொன்றாகி மனது கூர்ந்து
வரிசையுடன் ரேசகபூ ரகமும் பண்ணி
நாக்குநுனி யமுர்தத்தை நாவில் கொண்டு
நன்மையுடன் கும்பகத்தில் நாடி நில்லே. 1158

நில்லென்ற நிலையான மூல சக்தி
நிசமான ஓங்காரந் தன்னில் மைந்தா
சொல்லென்ற சுழுனைவளி தன்னி லேறிச்
சுகமாக மேலாறுஞ் சுத்திப் பார்த்து
உள்ளென்ற சிகாரமதா லுற்றுப் பார்த்து
உற்றுமெல்லப் பார்க்கையிலே நந்தி காணுஞ்
செல்லென்ற அகாரமதா லறிவுங் காணுஞ்
சேர்ந்துமிக ஒன்றாகி ஒளிபோ லாமே. 1159

ஒளியான வொளியறிந்து உற்றுப் பாரு
உற்றுமெல்லப் பார்க்கையிலே நந்தி காணும்
விளியான தெளிவறிந்து கண்டா யானால்
வேதாந்த மூலமதிற் கனலோ மீறும்
சுளியான கண்ணறிந்து வளியே சென்றால்
சோதிதிருவானகே சரியாள் பாதம்
வளியான துறையறிந்து கண்டா யானால்
மகஸ்த்தான மதிரவியின் காலைத் தேடே. 1160

தேடிமனங் கொண்டதொரு சித்தர் பார்த்துத்
தெளிவான தெளிவறிந்து தெளிந்து கொண்டு
நாடிமனங் கொண்டுசிம் சிம்சிம் மென்று
நாதாந்தப் பூரணத்தில் நாடி னார்கள்
வாடிமனம் போகாமல் மவுனம் பூட்டி
மகஸ்த்தான சுழுனையிலே வாச மாகி
ஆடியந்தத் திருநடனங் கண்டால் மைந்தா
அங்கமுடன் பூரணமாய் இருந்தார் தாமே. 1161

இருந்தாரே சுழுனைவளிச் சூட்சந் தன்னில்
ஏகாந்த மானதொரு எழுத்தைப் போற்றி
இருந்தாரே யந்தரங்க மனையிற் சென்று
என்னசொல்வேன் தாள்கதவைத் திறந்து கொண்டு
இருந்துஅந்தப் பூரணத்தைப் பூசை பண்ணி
யேகாந்த வடிவதனை இருந்து பார்த்து
இருந்தாரே சிவயவசி யென்று மைந்தா
ஏகாந்த மானதிரு வாசி பாரே. 1162

மவுனத்தால் நாலுமடங்க

பாரப்பா வாசிவா வென்று உள்ளே
பத்தியுடன் தானிருத்தி மணிநா வுன்னி
நேரப்பா ரேசிவா வென்று உள்ளே
நேர்மையுடன் ரேசகபூ ரகமும் பண்ணிக்
காரப்பா நாசிவாய் செவிகண் மூக்குக்
கருணையுடன் நாலுமடா நடுநின் றாடும்
சேரப்பா ஓமெனவே வாசி யுன்னத்
திருவாசி பூரணமா யாடும் பாரே. 1163

ஆடுமப்பா அண்டபதந் தன்னிற் சென்று
ஆதார மானதொரு மூலத் தோடி
ஓடுமப்பா வாசியது நூல்பாலம் போல
உண்ணாக்கு அண்ணாக்கின் மூக்கி னூடே
நாடுமப்பா லிங்கமதில் நடுவே நின்று
நாதாந்த நடுவணையைப் பிடித்து ஊது
வாடுமப்பா கருவியஞ்சு மவுனத் தாலே
மவுனமுடன் வாசியைநீ யிறுக்கிப் பாரே. 1164

இறுக்கியந்தத் தாதுவைநீ யிறுக்கிப் பார்க்க
ஏகாந்தச் சபைதனிலே யிருந்தா யானால்
சுருக்கிநின்ற அஞ்சுபஞ்ச பூத மெல்லாஞ்
சொன்னபடி யாடுமடா துருவம் பாரு
திருக்கறவே பூரணமாய்த் துருவம் பார்த்தால்
செங்கமலச் சுழுனையிலே நின்றால் மைந்தா
நெருக்கிநின்ற சுழுனையிலே அமுர்தஞ் சிந்தும்
நேமமுடன் நீயிருந்து பூசை பண்ணே. 1165

பூசைமுறை தனையறிந்து சுளியில் நின்றால்
பூரணமா யிதழ்கனிந்து அமுர்தம் பாயும்
நேசமுடன் அமுர்தமதைக் கொண்டால் மைந்தா
நேர்மையுடன் வாசியது நிலையில் நிற்கும்
பாசமுடன் நிலையறிந்து வாசி பூட்டிப்
பத்தியுடன் கேசரியில் பணிந்து நின்றால்
ஆசையென்ற சத்தாதி விடைய மெல்லாம்
அதையகற்றிப் பூரணமாய் அறிவில் நில்லே. 1165

நில்லடா சுளியறிந்து லிங்கத் தோரம்
நேர்மையுள்ள தமர்வாசற் கண்ணி லேதான்
உள்ளடா மதியமுர்தங் கசிந்து பாயும்
உண்மையதாய் மவுனமுடன் உள்ளே கொண்டால்
அல்லடா உன்தேசம் தங்கம் போலே
அங்கனையே தோணுமடா ஆதி சோதி
செல்லடா சோதியிலே மனதை வைத்துத்
திருகுசுழு முனையதிலே சிந்தை வையே. 1167

சிந்தையது பூரணமாய்க் கொண்டா யானால்
சிறப்பான மூப்பாலுந் திறமாய்க் காணும்
சந்தேக மில்லாமல் முப்பால் தன்னில்
தானிருந்து பூரணமாய்ச் சுளியைப் பாரு
சொந்தமுள்ள சுளிதனிலே மனதை வைத்துச்
சுகமான வாசியைநீ சுடருக் கேத்தி
அந்தமுடன் தானிருந்து தன்னைப் பாரு
ஆனந்த மானசிவ சோதி பாரே. 1168

சோதியென்ற ஞனமடா மவுன ஞானம்
சுயஞ்சோதி யானதொரு சுழுனை மூலம்
ஆதியென்ற மூலமடா அண்டத் துச்சி
அருள்நிறைந்த பூரணமாம் யேக வஸ்து
நீதியுடன் வஸ்துவைநீ பூசை பண்ணி
நிசமுனக்கு இல்லையடா நிலையைப் பற்றி
ஓதியதோர் மந்திரகலை வாசி யேறி
உண்மையுள்ள ஞானநிலை உகந்து கேளே. 1169

கேளப்பா ஞானமதுக் கேறும் மார்க்கங்
கெடியான மண்டலங்க ளாறுஞ் சொல்வேன்
வேளப்பா தன்னுருவா மண்டலந்தா னொன்று
மேலான ரவியிருக்கு மண்டலந்தா னொன்று
சூளப்பா மதியிருக்கு மண்டலந்தா னொன்று
சூழ்ந்திருக்கும் அமுர்தநிலை மண்டலந்தா னொன்று
சாளப்பா இவ்வளவும் யோக சித்தி
சாத்துகிறேன் ஞானங்கள் சார்ந்து கேளே. 1170

சார்ந்திருந்த குருபதந்தா னாயிரத்தெட் டிதழாய்ச்
சபையாகுஞ் சத்தியுட மண்டலந்தா னொன்று
ஆய்ந்திருந்த ஆதிசிவ மண்டலந்தா னொன்று
அப்பனே யஞ்சுதெரி சனமு மானால்
போந்திருந்த நிர்மலமா மண்ட லத்திற்
போச்சப்பா பிறவியென்ற சஞ்சி தங்கள்
சார்ந்திருந்த நிர்மலமாய் நிறைந்த போதஞ்
சங்கையுள்ள முத்தரென்று சாற்று வாரே. 1171

சாத்துகிறேன் புருவமய்யத் தானந் தன்னில்
சற்குருவாய் நிர்மலத்தைப் போற்றி செய்து
சாத்துகிறேன் கீழரையில் வாலை யைத்தான்
சலியாமல் பூசைபண்ணித் தியானஞ் செய்து
சாத்துகிறேன் பூசைமுறை தன்னைக் கேளு
சாதகமாய் முதலெழுத்துச் சிகாரங் கூட்டிச்
சாத்துகிறேன் நிர்மலத்தைத் தியானம் பண்ணி
சலியாதே வாலைசந் தானங் கேளே. 1172

சந்தான மவ்வோடு சிகாரந் தானும்
சாதகமாய் வகாரமொடு மூன்று மாறிச்
சிந்தாமல் திருநாமம் மூன்றுங் கூட்டிச்
சிவசிவா மவுனத்தைத் தியானம் பண்ணிச்
சொந்தமுடன் பூசையைத்தான் நன்றாய்ப் பண்ணு
சுத்தமுடன் பண்ணையிலே நிர்த்தஞ் செய்வாள்
தந்திரமாய்ச் சிவசக்தி தீட்சை சொன்னால்
தன்மையுடன் பூரணமாய் நின்று பாரே. 1173

சுளி பார்க்கும் வகை

பாரப்பா வெளிபார்க்க வகையைக் கேளு
பதிவான குறியென்று சொல்வே னையா
நேரப்பா கண்முடி விரலா லாட்டில்
நேர்மையுடன் ரவிவளையம் போலே காணும்
காரப்பா ரவிவளையங் கண்ணி லேதான்
கருத்துடனே வாசியைநீ கருவா யூட்டித்
தேறப்பா மவுனமதி லிருந்து கொண்டு
திறமான பூரணமுந் தோன்றும் பாரே. 1174

பாரப்பா தோணுகிற வட்டச் சுத்தில்
பதிவான நட்சத்திரம் போலக் காணும்
நேரப்பா நிலையறிந்து மவுனங் கொண்டு
நிசமான கேசரியில் வாசி பூட்டிக்
காரப்பா கண்ணாக்கு மூக்குக் குள்ளே
கபாடமென்ற வாசியிலே தெளிவாய் நின்று
ஏறப்பா ஓங்கார மூலங் கொண்டு
இன்பரச அமுர்தமதைக் கொண்டு தேறே. 1175

தேறப்பா இன்னமொரு கருமானங் கேளு
திறமான பூரணத்தைத் திரள வாங்கிக்
காரப்பா பீங்கானிற் பதனம் பண்ணிக்
கருணையுடன் அமிர்தரசப் பழச்சாறு விட்டு
நேரப்பா ரவிபீசங் கூடச் சேர்த்து
நிசமாகத் தான்பிசைந்து ரவியிற் போடு
சாரப்பா ரவிதனிலே காய்ந்த பின்பு
சங்கையுடன் பத்துமுறை தயவாய்ச் செய்யே. 1176

செய்யப்பா பத்துவிசை திட்சை செய்தால்
சிவசிவா பூரணமுந் திறமாய் நிற்கும்
மெய்யப்பா கட்டிநின்ற பூரணத்தை மைந்தா
மேன்மைபெறப் பீங்கானிற் பதனம் பண்ணிக்
கையப்பா தவறாமல் மைந்தா நீயும்
கருவான கற்பமதைக் கொள்ளும் போது
மையப்பா மெய்நிறைந்த பூர ணத்தில்
மார்க்கமுடன் பணவிடைதான் கொண்டு காணே 1177

காணவே பூரணத்தைக் கொண்டால் மைந்தா
கருணையுள்ள வாசியது கலங்கா தப்பா
பேணவே சுழுனையிலே வாசி யேறும்
பேரண்டஞ் சுத்திவரக் கெவுன முண்டாம்
பூணவே கெவுனமென்ற மவுன யோகம்
பூரணமாய் வாசியினால் பூண்டு கொள்ளும்
ஊணவே பூண்டுகொண்டு நின்றால் மைந்தா
உன்தேகம் விளக்கொளிபோ லுண்மை யாமே. 1178

உண்மையுட னின்னமொரு கருவைக் கேளு
உருமையுடன் லிங்கமரி தாரம் வீரம்
நன்மையுடன் காரமொடு கெவுரி கூட்டி
நாதாந்த அமுர்தபூ ரணத்தி னாளே
தன்மையுடன் கல்வமதில் நன்றா யாட்டித்
தயங்காம வீராறு சாம மாட்டிச்
சின்மயமாய்த் தானழித்துப் பதனம் பண்ணித்
தேவியெனும் பூரணியைத் தியானம் செய்யே1179

செய்தொரு மெழுகெடுத்து மைந்தா நீயுஞ்
செம்புவெள்ளித் தகடடித்து மேலே பூசிக்
கொய்துமிக ஓட்டில்வைத்து ஓடு மூடிக்
குறியுடனே மண்சீலை வலுவாய்ச் செய்து
மெய்தவறாப் பூரணமாய்க் குருவைப் போற்றி
மேன்மைபெற எருவடுக்கிப் புடத்தைப் போடு
கைதவறா மனதாக எடுத்துப் பாரு
கனகமென்ற தங்கமடா கண்கொள் ளாதே. 1180

கண்ணான கமலக்கண் மனக்கண் ணாகும்
கருணைவளர் பூரணமெய் யறிவா னந்தம்
ஒண்ணான அறிவல்லோ பிரம மாச்சு
உண்மையென்ற வாசியடா அமுர்த பானம்
எண்ணான அமுர்தமதை யறிந்து கொண்டால்
யேகநிரா மயமான சோதி யாச்சு
விண்ணான சோதிதனைக் கண்ட போது
மேலான பிரமமென்று மெய்யிற் கொள்ளே. 1181

மெய்யான சவுமியசா கரத்தை மைந்தா
விரும்பிநின்று ஆதியந்தம் நன்றாய்ப் பார்த்தால்
பொய்யான மாய்கை யெல்லாம் விட்டகன்று
போதமய மானசிவ யோகந் தங்கும்
மையான சுழுனையிலே மனக்கண் சாத்தி
மகஸ்த்தான சாகரத்தைப் பூசை பண்ணு
கையான கையில்நெல்லிக் கனிபோல் மைந்தா
கருணைபெற மவுனமதைக் காரு காரே. 1182

காரப்பா மவுனமதைக் காக்க வேண்டிக்
கருணையுடன் சத்திசிவ பூசை பண்ணு
நேரப்பா வாலைதனைப் பூசை பண்ணு
நிசமான பூரணத்தைக் கண்டு கொள்ளு
தேரப்பா நால்பதமுந் தேர்ந்து கொண்டால்
சிவசிவா மவுனமதுக் குருதி யாகும்
வீறப்பா கொண்டுபதி கெட்டுப் போனால்
வேதமென்ன நாதமென்ன வீண்தான் பாரே. 1183

பாரடா வேதமொடு நாதந் தானும்
பதிவான ஆதியந்த மென்றும் பேரு
நேரடா ஆதியந்த மண்விண் ணப்பா
நிசமான மண்ணுவிண்ணு நாத விந்து
கூறடா நாதவிந்து சத்திசிவ மாச்சு
குறியான சத்திசிவ மேதென் றாக்கால்
காரடா சத்தியென்றால் தேக மாச்சு
கருவான சிவமென்றால் வெளிதான் காணே. 1184

விபரமாய் நூல் பார்க்க

காணவே புலத்தியனே சொல்லக் கேளு
கருணைவளர் சவுமியசாகரத்தில் மைந்தா
தோணவே சித்தாந்தம் வேதாந்தம் ரெண்டும்
சொல்முறைகள் தவறாமல் சமரசமாய்ச் சொன்னோம்
பேணவே சாலமீ ராறு நூறில்
பிலமான மோடியங்கம் வினோதம் சொன்னோம்
பூணவே சகலகலைக் கியான மெல்லாம்
புத்தியுடன் நன்றாக பூண்டு பாரே. 1185

பாரப்பா பூரணமீ ராறு நூறில்
பத்தியுடன் சகலகலை தீட்சை சொன்னோம்
நேரப்பா காவியத்தி லடக்க மெல்லாம்
நிசமாகச் சொல்லிவைத்தோம் நீதான் பாரு
சாரப்பா வைத்தியமா பாரத்தைந் நூறில்
சகலதுறை கட்டுமுறைத் தயிலஞ் சொன்னோம்
சாரப்பா செந்தூர வைப்பு மார்க்கம்
சமரசமாய்ச் சொல்லிவைத்தோம் தானே காணே 1186

காணவே கர்மமது நிவர்த்தி யாகக்
காண்ட மென்ற முந்நூறு கனிவாய்ச் சொன்னேன்
ஊணவே பற்பமது இருநூற் றஞ்சில்
உத்தமனே சொல்லிவைத்தே னுற்றுப் பாரு
தோணவே மாந்திரீக மாயி ரத்தில்
சொல்லவொண்ணா அதிசயங்கள் தோணச் சொன்னேன்
பேணவே தீட்சைவிதி பூசைவிதி ரெண்டும்
பெருமையுடன் சொல்லிவைத்தேன் பேணிக் காணே.1187

காணப்பா தத்துவம்ஆ யிரத்தில் மைந்தா
கருணையுடன் சடாதாரக் கோர்வை தோணும்
பூணப்பா மனம்பூண்டு மனுவிக் கியானம்
புத்தியுடன் ஆயிரமாய்ச் சொன்னேன் நூலில்
தோணப்பா இகபரத்தின் சூட்சந் தோணும்
சுந்தரம்போற் பூரணத்திற் சொக்கி நின்று
பேணப்பா ரெண்டுலெட்சங் காப்புச் சொன்னோம்
பெருமையுடன் சூத்திரங்கள் அனந்தந் தானே. 1188

தானேதான் தானாகப் பூரணத்தில் நின்று
சகலவுயிர் தானாகத் தானே எண்ணி
ஊனேதான் உள்ளுணர்வாய்க் கண்டு கொண்டால்
உற்றசிவ யோகியென உரைக்க லாகும்
பேணவே சிவயோகி யானால் மைந்தா
பேசாத மவுனமதிற் கெவுனஞ் சொல்வான்
பூணவே இத்தனைக்கும் வருவ தென்ன?
புத்தியுடன் விட்டகுறை வேளை பாரே. 1189

வேளையிலே விட்டகுறை அமைப்பே யாச்சு
வேதாந்த நந்திகுறை கண்ணிற் காணும்
சாளையமாய்ப் போகாது தன்னைக் காட்டிச்
சச்சுதா னந்தபூ ரணமுங் கூட்டிக்
கோளையெல்லாங் கக்கிவைத்த தமரைக் காட்டிக்
குறிப்பாகத் தொடுகுறியாந் தமரைக் காட்டித்
தாளைநினை வாய்திறந்து அமுர்த மூட்டிச்
சாதிக்கும் யோகத்தின் நிலைசொல் வாரே. 1190

சொல்லடா ஓங்காரச் சூட்சந் தன்னைச்
சூரியன்போல் வட்டமதா யிருக்கு தென்று
சொல்லடா மவுனமிது நாதமிது வென்றுஞ்
சுழுனையென்றும் விந்துவென்றும் நந்தி மூலம்
சொல்லடா அதின்வட்டம் உள்சூட் சந்தான்
தொடுகுறிபோல் சண்முகமாம் அறுகோ ணத்தில்
சொல்லடா இதினுள்ளே முக்கோ ணத்திற்
சோதியெனுங் கண்டநுனி சொர்க்கந் தானே. 1191

சொர்க்கபத மதில்நின்று வொளியை மைந்தா
தூண்டியந்தக் குருவதனைச் சூட்சஞ் செய்து
சொர்க்கபதந் தனைப்பாரு வாசி யோகம்
சூடப்பா லகிரியொடு குளிகை கொண்டு
சொர்க்கபதந் தெரிசனையா யூடுங் கூத்தைத்
தொடுகுறிபோல் நடனமிட்ட கூத்துக் காணும்
சொர்க்கபதங் குருவினுட பாதங் கண்டால்
தூலம்போங் காயமதில் வாசி சாத்தே. 1192

சாத்துறேன் வாசியுட கருவைக் கேளு
தற்பரமாஞ் சுளினையிலே சரத்தை யூன்றி
நேத்திரமே பிறியாமல் நோக்கிப் பார்க்கில்
நிலையற்ற புரியஷ்ட முள்ளாய் நிற்கும்
ஆத்துறேன் பூரணந்தா னாலு மைந்தா
அப்பனே வெளியோடி யுள்ளே பாயு
மாத்துறேன் பூரணத்தை மவுனந் தாக்க
மகஸ்த்தான சிவயோக வரிசை பாரே. 1193

பாருநீ யிப்படியே வாசி யோகம்
பார்க்கையிலே மவுனமது பிலக்குஞ் சித்தி
காருநீ சூடுகொணடா லுள்ளங் காலில்
கலசப்பால் பூரணமுங் கலந்து பூச
சேருநீ புளியாரை கொடுப்பை வெந்து
சிறப்பாக மிளகுசார் தினமுங் கொள்ளு
சாருநீ தலைமுழுக வகையைக் கேளு
தனிமிளகு அமுரிதனி லரைத்துக் காணே. 1194

காணவே யமுரிதனில் மிளக ரைத்துக்
கருணையுடன் தான்குழைத்துத் தலையில் தேய்த்துப்
பேணவே வெந்நீரால் முழுகு மைந்தா
பெரிதான கபாலத்தின் தோஷந் தீரும்
பூணவே கண்ணெரிவு கபாலக் குத்து
புத்தியுடன் தீருமடா புத்தி யாகத்
தோணவே கண்மூடிக் கண்ணைப் பாரு
சுத்தமுட னிருகண்ணுஞ் சோதி கேளே. 1195

கேளப்பா விரலாலே விழியைத் தூண்டிக்
கேசரியில் மளதொட்டி யாட்டிப் பாரு
நாளப்பா அக்கினிபோ லங்கே தோணும்
நயனத்திற் றோணுதடா சொற்க மோட்சம்
வாளப்பா யிதுவல்லோ மோட்ச வீடு
வாச்சுதடா உந்தனக்கு மைந்தா கேளு
கோளப்பா கோபமென்ற முனையைப் போக்கில்
குறியான மோட்சகெதி பரகெதிதான் பாரே. 1196

கெதியென்று பரகெதிதா னிதுதான் மைந்தா
கேசரத்திற் கண்ணொளிபோற் காணு மய்யா
பதியென்ற கெதியொன்று சொல்லக் கேளு
பகலவன்றா னுதிக்குமுன்னே சரீர சுத்தி
விதியென்ற பிரமவிதி லாடத்தை நோக்கி
விளங்கவே சூரியனைக் கண்ணால் பார்த்துத்
துதியென்ற சுளிமுனையில் முதுகண் ணாட்டத்
தொடுகுறிபோல் லாடத்தில் மனக்கண் ணூணே. 1197

ஊணியே கரந்தனிலே பூதி வாங்கி
ஓகோகோ பூசையிலே ரவிபேற் காந்தி
தோணவே சொர்ணமது போலே காணுஞ்
சொற்கபத முண்டாச்சு சுகமுண் டாச்சு
நாணியே செய்பாவ மெல்லாம் போச்சு
நானென்ற ஆணவம்போய்ப் பேத மாச்சு
வாணியே நின்றுகவி சுயங்கள் பாடும்
வார்த்தைசொல்வாள் சுளிகையிலே வாழென் பாளே 1198

வாழப்பா சித்தரொடு ரிஷிக ளெல்லாம்
மகஸ்த்தான கற்பூர தீபம் போலே
ஆளப்பா காயத்தை ஒளிபோ லாக்கி
ஆனந்த மதியமூர்தம் அணுவாய்க் கொண்டு
தாளப்பா தாள்திறந்து நின்று பாரு
சந்திரனுஞ் சூரியனுந் தானே தானாய்
நீளப்பா சுழுனையிலே அங்சிங் ் கென்று
நேர்முகமாய் நின்றசர மோடும் பாரே. 1199

ஓடுகிற வேளைகண்டு ராக்கா லத்தில்
உத்தமனே கற்பூரச் சோதி தன்னை
நாடுகிற வொளிகாட்டி யொளியைப் பாரு
நாலுரண்டு திங்களிலே தேக மெல்லாஞ்
சூடுகிற செம்பரத்தம் பூப்போ லாகும்
சுகமான விளக்கொளியிற் சாய்கை யில்லை
சாடுகிற அண்டமதைப் பார்க்கும் போது
தன்மயத்திற் புடைத்தெழுந்த ஒளிகண் டோமே. 1200

ஒளிகண்டோஞ் சதாகால மைந்தா கேளு
உற்பனமாய்க் கடிகைரெண்டு தீபம் பார்த்து
வெளிகண்ட பின்பல்லோ சுளினை மேலே
வேதாந்த லாடவிளி ஒளிகண் ணாட்டம்
விளிகண்டோம் பராபரத்தின் விசாலங் கண்டோம்
மெய்க்குள்ளே தத்துவங்க ளெல்லாங் கண்டோம்
சுளிகண்டோம் பூரணத்தின் சோதி யாலே
சொற்கபத மானதொரு சுடர்கண் டோமே. 1201

சுடர்காட்டிச் சுளினையுட வொளியுங் காட்டிச்
சொற்கபத மானதொரு ரவியுங் காட்டிப்
பிடிகாட்டிப் பிடரியென்ற சுளினை காட்டிப்
பேரொளியாய் நின்றதொரு பிரபை காட்டிப்
படர்காட்டி மதியினுட பாகங் காட்டிப்
பரிசுபெற்ற ஆதியந்த நடுவுங் காட்டி
இடர்காட்டிக் கால்தலையாய்ச் சிவயோ கத்தை
இருகதிரி னொளியாலே பாவம் போச்சே. 1202

போச்சப்பா குறிகாட்ட வாசி யோகம்
பூட்டுவதால் சிவயோக முத்த னாச்சு
ஆச்சப்பா இந்நூல் சாகரமே யாகும்
அறிவான சாகரத்தை யார்தான் சொல்வார்
வாச்சப்பா புலத்தியனே வாசி பார்க்க
மகஸ்த்தான நந்தியொளி கண்கொள் ளாது
பேச்சப்பா பின்கலையில் ஓங்சிங் கென்று
பிலமான ரவிமுகமா யிருந்து பாரே. 1203

பாரப்பா இருவிழியால் மேல் பார்த்துப்
பதிவாகப் பத்துநாள் பார்க்கும் போது
காரப்பா மண்டலமூன் றங்கே காணும்
கதிர்மதியுஞ் சுழினையுட கண்ணே காணுந்
தேறப்பா நின்றபூ ரணமுங் காணுந்
திறமான பரமபதம் நேரோ காணுஞ்
சாரப்பா சராசரமுந் தானே தானாய்த்
தன்னுள்ளே காணுமடா தன்னைக் காணே. 1204

தன்னைத்தான் தானறிந்து தன்னைக் கண்டு
சவுமியமாய் நின்றசா கரத்தைப் போற்றி
விண்ணைத்தா னோக்குதற்கு மணிநா வுன்னி
வேதாந்தச் சுளினையிலே வாசி பூட்டி
உன்னைத்தான் மனதுன்னி அண்டத் தேறி
ஓம்சிவா வென்றுகுரு பாதம் போற்றிக்
கண்ணைத்தா னறிந்துவெளி ஒளிகண் ணோடே
கலந்துகொண்ட சவுமியசா கரந்தான் முற்றே. 1205

முத்தான சாகரந்தான் மைந்தா மைந்தா
முழுதுமதை யாதியந்தம் நன்றாய்ப் பார்த்துச்
சித்தான சித்துவிளை யாடு தற்குச்
சிவசிவா குருநூலாய்த் தெரிந்து கொண்டு
சுத்தான சுத்திற்குச் சோதி யாகிச்
சோதிமய மானசிவ சூட்சந் தன்னைப்
பத்தான திசதீட்சை முற்றுப் பெற்றுப்
பரமபதத் தெல்லையிலே பதிவாய் முற்றே. 1206

முற்றும்

எமது வெளியீடுகள்

ஆலம்நபி கதைப்பாட்டு	15-00
தணிகைக் கலம்பகம்	25-00
சிவபாரத சரிதம்	16-00
இராசகோபாலமாலை	18-00
திருவேட்டைநல்லூர் ஐயனார் பள்ளு	26-00
குந்தமாலை	40-00
வெள்ளைப்பிள்ளையார் குறவஞ்சி	8-00
நாலுமந்திரி கும்மி	15-00
நாலடியார் உரைவளம் (பாகம்-I)	90-00
நாலடியார் உரைவளம் (பாகம்-II)	75-00
தனிப்பாடல் திரட்டு (பாகம்-I)	30-00
தனிப்பாடல் திரட்டு (பாகம்-II)	40-00
திருக்குறள் பழைய உரை	25-00
கணக்கதிகாரம்	150-00
ஆஸ்தானகோலாகலம்	80-00
பொன்னர் சங்கர் அம்மானை	40-00
திருக்குறள் ஜைன உரை	75-00
வைத்தியநாதஸ்வாமி திருவிளையாடல்	8-00
நாகை கனகசபைநாதன் உலா	50-00
மரியாதைராமன் கதைகள்	22-00
குசலவன் கதை	15-00
ஞானக்குறவஞ்சி	20-00
களாபூர்ணோதயம்	40-00
பரசமயகோளரியார் பிள்ளைத்தமிழ்	14-00
சுந்தரி அம்மானை	12-00
குமரேச சதகம்	65-00
அருகிரி அந்தாதி	12-00
பதிப்புநெறி முறைகள்	10-00
புல்லையந்தாதி	12-00
சோமயாகப் பெருங்காவியம்	19-00

OUR OTHER PUBLICATIONS

Nauka Charitram	Sanskrit & Tamil	30-00
Sita Kalyanam	Sanskrit & Tamil	35-00
Gayatri Kosam	Sanskrit & Tamil	30-00
Ragaratnakaram	Sanskrit & Tamil	15-00
Dhanyakumaracharitram (Dharmaneri Kathai)	Sanskrit & Tamil	44-00
Kandukapura Mahatmyam	Sanskrit & Tamil	25-00
Ramachinthamani Aaruudam (Nandinagari Catalogue)	Sanskrit & Tamil	25-00
Vruttaratnavali (Chandas Sastram)	Sanskrit & Tamil	30-00
Kalanandakam	Sanskrit & Tamil	55-00
Prabodha Chandrika (Grammer)	Sanskrit & Tamil	70-00
Sirungarakosam	Sanskrit	12-00
Vedasara Siva Sahasram	Sanskrit	80-00
Stotra Ramayanam	Sanskrit	25-00
Mukunda Vilasam	Sanskrit	35-00
Vinatananda Vyayoga	Sanskrit	40-00
Kumaresa Satakam	Tamil	65-00
Lokaswarupam	Tamil	75-00
Kanakkathikaram	Tamil	150-00
ThiruvappanurPuranam	Tamil	50-00
Sowmiya Sagaram	Tamil	70-00
Jatakachandrika	Tamil	40-00
Marathi Lavani Songs	Marathi	35-00
Nakshatra Chinthamani (Part - I)	Tamil	200-00
Nakshatra Chinthamani (Part - II)	Tamil	100-00